12-06 p.m. * SRI C. KANDASAMY : கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கட்சி தலைவரால் அறிவிக்கப்பட்ட சபை நடவடிக்கை agenda சம்பந்தமாக ஒரு விஷயத்தை நான் சர்க்கார் தரப்பின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இப்போது இந்த சபை கூட்டத்தில் விவாதத்திற்கு வரஇருந்த நியாயவார மசோதா, இந்த agenda வில் இடம் பெறவில்லை. சபையின் தற்போதைய கூட்டத்தில் அந்த நியாயவார மசோதா ஏன் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை, எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்பதற்கு ஒரு உத்திரவாதத்தைப்பற்றியும் இந்தப் பக்கத்தில் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். எனென்றால், ஏற்கனவேயே அந்த மசோதா நீண்ட காலம் தவக்கப்படுத்தப்பட்டிருக்கிறது. அதை மேலும் தவக்கப்படுத்துவதானது கிராமப்புறங்களில் நிலைமையை எக்கச்சக்கம் ஆக்குகிறது. பொறுக்குக் கமிட்டியில் இந்த மசோதாவின் எல்லா விஷயங்களும் பரிசீலிக்கப்பட்டு, அதனுடைய அறிக்கையும் இன்றைய தினம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும்கூட, மசோதா சபையின் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாததற்கு காரணம் என்ன, என்பதும், திட்ட வட்டமாக எப்போது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதற்கு ஒரு உத்திரவாதமும் சர்க்கார் தரப்பிலிருந்து கிடைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த மசோதா எவ்வளவு சீக்கிரம் அமுலுக்கு வரவேண்டுமோ, அவ்வளவு சீக்கிரம் அமுலுக்கு வர வேண்டும் என்பது தான் சர்க்காருடைய நோக்கமும். அடுத்த செப்டெம்பரில் சபைகூடும்போது, இந்த மசோதாவை சட்டசபை முன் விவாதத்திற்கு வைப்பதாக சர்க்காருடைய உத்தேசம். உடனடியாக சபையின் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாததற்கு காரணம், 18-ம் தேதியன்று அசெம்பிளி கூடிய வேண்டியதாக இருக்கிறது. எனென்றால் அடுத்து " ஓணம் " விழா வருகிறது. அதற்கு மலையாளத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் தங்கள் வீட்டுக்கு போகவேண்டியிருக்கும். 18-ம் தேதிக்கு பிற்பாடு சட்டசபையின் தற்போதைய கூட்டத்தை தொடர்ந்து நடத்த முடியாத நிலையில் இருக்கிறது. செப்டம்பர் மாதத்தில் சபை மீண்டும் கூடும்போது, இந்த நியாய வார மசோதா சபையின் விவாதத்திற்கு வரும் என்று சர்க்கார் எதிர்பார்க்கிறது.

* SRI M. NARAYANA KURUP : Sir, I do not object to the programme as such. The recommendations of the Business Advisory Committee come before the House so that the Members may offer such opinion as they like on them. As the Programme has not been circulated to us, we are not in a position to give our opinion.

THE HON. SRI C. SUBRAMANIAM : The Business Advisory Committee consists of Leaders of all Parties and they are expected not only to consult the members of their respective parties but also to inform the party members as to what has happened in the meeting of the Business Advisory Committee. We have arrived at these decisions with the consent of the leaders concerned.

MR. SPEAKER : The Business Advisory Committee met yesterday. Hon. Members know that yesterday was declared a holiday and, therefore, the office could not work and send the necessary circulars to hon. Members. But, all the Leaders of Parties were present at the meeting when and the business was arranged. The hon. Members will all be getting presently the copies of the Programme of business as arranged all arranged at the meeting of the Business Advisory Committee.

* SRI M. NARAYANA KURUP : Sir, we are not objecting to the Programme and we note the circumstances under which notice of the same could not be circulated to us. But, I am unable to agree with the argument of the Hon. the Leader of the House that as we were represented by the leaders of parties, we should have known the arrangement. Suppose a matter was decided at 5 o'clock in the evening, how can the leader of the party send a whip to the members of his party? The Hon. Speaker has now explained the circumstances under which notice could not be circulated. My only suggestion is that wherever possible, at least in future, such notices may be circulated to the Members. We cannot delegate these things to the leaders of parties. Whenever a decision is taken on such matters, it is better to circulate it to all the Members. The mere fact that it is stated in the rule that the recommendations of the Business Advisory Committee must come before the House denotes something more than mere consultation with the Leaders of Parties.

MR. SPEAKER : Ordinarily these are circulated to hon. Members but yesterday, as I said, the Government declared it a public holiday and I thought that it would be quite improper to ask the office to work on that day. So it was not circulated.

12-10 p.m. SRI S. RAMALINGAM : நியாய வார மசோதாவை கூடிய சீக்கிரம் அமுலுக்கு கொண்டு வரவேண்டுமென்று சர்க்கார் விரும்புவதாக கனம் நிதி மந்திரி அவர்கள் சொன்னார்கள். சபையின் இந்த கூட்டத்தில் இந்த மசோதாவை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாததற்கு காரணம் சொல்லும்போது, "ஓணம் விழா வருகிறது, ஆகையால் சபையின் இந்தக்கூட்டத்தை 18-க்கு மேல் தொடர்ந்து நடத்த முடியாது, ஆகையால் செப்டம்பர் மாத கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்" என்றார். ஆனால், இப்போது எடுத்துக் கொண்டிருக்கிற சில மசோதாக்களுக்கு பதிலாக, நியாயவார மசோதாவை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு, நிறைவேற்றிவிட்டு, செப்டெம்பர் மாதக் கூட்டத்தில் அந்த மசோதாக்களை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று நான் பேசினை கூற விரும்புகிறேன். செப்டெம்பர் கடைசியில் சபை கூடி, நியாயவார மசோதாவை விவாதித்து நிறை வேற்றினால், அதன் பிறகு அந்த மசோதா ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற்று சட்டமாக அமுலுக்கு வருவதற்குள் குறுவை அறுவடை முடிந்து விடும். ஆகையினால், இந்த சட்டத்தினால் இலாக்கக்கூடிய பலன் எழை விவசாயிகளுக்கு கிடைக்காமல் போகுமோ என்ற அச்சமும், ஐயமும் ஏற்படுகிறது, ஆகையால், இந்த

[Sri S. Ramalingam] [9th August 1956

நியாயவார மசோதாவை இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றி விட்டு, செப் டெம்பர் கூட்டத்தில் மற்ற மசோதாக்களை விவாதம் செய்து கொள்ளலாம் என்பது என்னுடைய யோசனை. அதை சர்க்கார் தரப்பினர் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRI V. BALAKRISHNAN : Sir, I am not able to hear the Chair very clearly. Is the elaborate time-table read out by the Hon. the Leader of the House going to be circulated to hon. Members of the House?

MR. SPEAKER : Yes.

* SRI M. NARAYANA KURUP : Of course, I am not speaking as a represenative but personally I am of opinion that Onam need not stand in the way of the Fair Rent Bill being taken up. (Cheers.) As far as we are concerned, we want to participate in the discussion on the Bill though it does not directly affect our district. Moreover, I think that the Government want to bring that measure after the Malabar Members are not here. That is the impression formed just now and therefore the excuse that the Onam festival stands in the way, is not fair, proper and charitable.

SRI E. L. RAGHAVA MUDALIAR : Since the Malabar Members are going home for Onam and are not interested in that legislation which would not be applicable to them, I do not think that there is any objection for extending the meeting beyond the 18th instant.

MR. SPEAKER : Every Member has got the right to discuss any matter concerning any part of the State. Therefore, the hon. Member is not in order in saying that some particular hon. Members are not interested in any part of the State.

* SRI T. C. NARAYANAN NAMBIAR : On the 18th instant, only two hours are allotted for the transaction of non-official business. In this connection, I would submit that there is already a Non-official Bill pending before the House. I mean the Marumakkathayam Amendment Bill which had been referred to the Select Committee and a unanimous report was submitted by that Committee. Also, notice has been given to move a Non-official Bill for amending the Malabar Tenancy Act. Since these Bills are very important, it is very necessary that a Non-official Day should be allotted to enable hon. Members to move those Bills which affect the lives of lakhs and lakhs of people. They are of greater importance than the celebration of Onam as far as that part of the State is concerned. So, I would request the Hon. Minister to allot the necessary time for taking up those Bills and getting them passed.

MR. SPEAKER : The House does not seem to be unanimous in respect of this matter. May I ask the Hon. the Leader of the House, whether he would consider it desirable to have another meeting of the Business Advisory Committee on another day so that there could be unanimity regarding the Bills to be taken up first.

9th August 1956]

THE HON. SRI C. SUBRAMANIAM : After all, they cannot force the Government to take up a particular Bill when they think that it would have to be taken up a little later. So far as the Cultivating Tenants Protection Bill is concerned, it is being taken up now. It is only the Fair Rent Bill which is being postponed to the next meeting in September for good reasons. The Planning Commission wants to have further discussion on this matter and Hon. Revenue Minister is proceeding to Delhi to have a discussion with the Planning Commission. Therefore, it will have to be taken up a little later and unfortunately it cannot be taken up now. Unless we are prepared to sit after the 22nd of this month, it would not be possible to consider it at this meeting. Further, we have fixed up other engagements and it would not be possible to have a sitting in the end of August. Therefore, we have to sit in September to consider that Bill and I may assure the hon. Member, Sri Kurup, that there is no question of trying to evade this issue. On the other hand, we are much more interested in this issue than the hon. Member and, therefore, we are not afraid of Malabar Members being present. On the contrary, they are always welcome here and they can consider the Bill when it comes up in September.

SRI V. R. KRISHNA AYYAR : Sir, I want to mention one point. The Hon. the Leader of the House was so very considerate towards the Malabar Members in respecting their sentiments regarding the Onam festival. I feel that most of the Members from Malabar would only be too glad to celebrate their Onam festival here by contributing their share in seeing that the Fair Rent Bill is taken up on that day and subsequent days so that the peasants of Tamil Nad would have a fair deal. The meeting with the Planning Commission and other commitments of Hon. Ministers may be put off to a later date and the Bill can be taken up now and passed. So, the Onam festival does not stand in the way of the Bill being considered at this meeting itself.

THE HON. SRI C. SUBRAMANIAM : I know the attitude of the hon. Member with regard to Onam because he confessed his ignorance of the date when the Onam was falling. He may not have respect for the Onam festival but we have to respect the sentiments of the Malabar people. But apart from this, I have already explained the reasons why the Fair Rent Bill could not be taken up just now. We will have further discussion in respect of this matter and it will be taken up when we meet again in September.

MR. SPEAKER : The question is—

" That this House agrees with the recommendations of the Business Advisory Committee regarding the order in which the business of the House is to be transacted from 9th to 18th August 1956."

The motion was put and carried.

IV.—GOVERNMENT BILLS.

THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Speaker, Sir, I beg to present the following Reports :—

(1)[b] The Report of the Joint Select Committee on the Madras Money-lenders Bill, 1955 (L.A. Bill No. 38 of 1955);

(2)[a] The Report of the Select Committee on the Madras General Sales Tax (Third Amendment) Bill, 1955 (L.A. Bill No. 39 of 1955); and

(3)[b] The Report of the Joint Select Committee on the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Bill, 1956 (L.A. Bill No. 4 of 1956).

Sir, the Report on the General Sales Tax (Third Amendment) Bill has been placed on the table of the House. The other two Reports will be placed on the table of the House as soon as they are printed and available.

SRI M. NARAYANA KURUP : Sir, can a Report which is not printed be placed on the table of the House?

MR. SPEAKER : It has already been published in the *Fort St. George Gazette* and it is known to hon. Members.

Now, the Governor's Address will now be discussed.

V.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS.

* SRI P. G. KARUTHIRUMAN : Mr. Speaker, Sir, I move—

" That an humble Address be presented to the Governor that the Members of the Madras Legislative Assembly thank him for the Address delivered to the Members of the Legislature on the 8th August 1956."

12-20 p.m.

சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் நமது சட்டசபையில் நிகழ்த்திய பிரசங்கத்தில், நமது ராஜ்ய மக்கள் எவ்வளவு சிறந்த முறையில் சர்க்காருடைய கொள்கைகளை கடைப்பிடித்து, சர்க்கார் போடும் திட்டங்களை வரவேற்று, நிறைவேற்றி பயனடைகிறார்கள் என்பதை விரிவாகவும், மிக அழகாகவும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். முதன் முதலில், ராஜ்யபுனரமைப்பிற்குப் பின் ஏற்பாடயிருக்கிற நிலைமையை உத்தேசித்து, வெகு நாட்களாக, பல ஆண்டுகளாக, நமது மக்கள் கனவு கண்டு கொண்டிருந்த, நமது மக்கள் பேசக் கூடிய தமிழ் மொழியிலேயே, தாய் மொழியிலேயே, அரசாங்கம் நடத்துவதற்கு வேண்டிய உருவான சூழ்நிலையை ஏற்படுத்த, தாய் மொழியை அரசாங்க பாஷையாக ஆக்க வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ள இருக்கிறது என்று ஒரு உத்திரவாதம் கொடுத்திருக்கிறார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்க அம்சம்.

தமிழ் மொழி வளரவேண்டுமென்றால், தூய தமிழ் என்ற ஒரே நோக்குடன் சென்றால் பயன்தராது. உலகில் உள்ள எனைய மொழிகளிலிருந்தும், பழக்கத்தில் உள்ள சொற்களையும் சேர்த்துக்கொண்டு, சிறந்து வளம் உள்ள மொழியாக ஆக்கப்பட வேண்டும். இன்றைய தினம், ஆங்கிலம் சிறந்த மொழியாக விளங்குகிறது என்றால், ஜெர்மன், கிரீக்,

[a] Printed as Appendix III on pages 100–140 infra.
[b] Printed as appendix to proceedings, dated 10th August 1956.

பிரெஞ்சு, லத்தின் ஆகிய பல்வேறு மொழிகளிலிருந்து சொற்கள் எடுத்துக் கொள்ளப்பட்டமையால் தான். அதே மாதிரி நிலைமையில், தமிழ் மொழி அரசாங்க மொழியாகும்படியான அருகதை உடையதாக செய்யவேண்டுமென்றால், நீண்ட காலமாக இதர மொழிகளிலிருந்தும் நம்மிடையே படிக்க பழக்க வழக்கத்தில் இருக்கும்படியான சொற்களையும் எடுத்துக் கொள்ளவேண்டும். கல்லூரிகளிலும், பல்வேறு சாஸ்திர சம்பந்தமாக இன்று பழக்கத்திலுள்ள இதர மொழிச் சொற்களையும் சேர்த்துக் கொண்டு, தூய தமிழ் என்ற ஒன்றிலேயே நாட்டம் செலுத்தாமல், தமிழ் மொழியை உயர்ந்த மொழியாக்க சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்று நினைக்கிறேன்.

மற்றும், சமீபத்தில் சென்ற வருடம் புயலால் பாதிக்கப்பட்ட ராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை ஆகிய பிராந்தியங்களில் சர்க்கார் எடுத்துக் கொண்ட கஷ்ட நிவாரண நடவடிக்கைகள் மிகவும் பாராட்டிற்கு உரியதாகும். மூன்று கோடி ரூபாய் வரையிலும் கடனாக கடந்த மூன்று மாதங்களில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுக்கப்பட்டிருப்பதோடு மட்டுமில்லாமல், புயல் வீசிய இரண்டு மாதத்திற்குள்ளாகவே, புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் சீர்திருத்தம் செய்யப்பட்டு, அப்பிரதேசங்கள் புயலால் பாதிக்கப்பட்டனவா என்றே ஐயமுறும்படியான முறையில் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கின்றன. அதுமட்டுமல்ல. நமது ராஜ்ய முதலமைச்சரும், எனைய அமைச்சர்களும், மத்திய அரசாங்க அமைச்சர் ஸ்ரீ. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களும் நேரில் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு, மக்களை கண்டு பேசி, உடனடியாக தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டதை பாராட்டாமல் இருக்கமுடியாது. மேலும், மற்றொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், புயலால் பாதிக்கப்பட்டு உடைந்த குளங்களை, வரிகளை எல்லாம் உடனடியாக மராமத்து செய்தது. அடுத்த வெள்ளாமை வரும்படியான நிலைமைக்கு, 1½ கோடி ரூபாய் செலவு செய்து கால்வாய்களை சீர்படுத்தி, அதில் தீவிர கவனமும், முழு பொருப்பும் கொண்டு பணியாற்றிய அதிகாரிகளுக்கும், ஒத்துழைத்த மக்களுக்கும் இந்த சட்டசபை நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுவது அவசியமென்று கருதுகிறேன்.

அதோடு மோசமாக பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் 5,000 வீடுகள் ஏழை ஹரிஜனங்களின் உபயோகத்திற்காகவும், மற்றும் இதர ஏழை மக்களின் உபயோகத்திற்காகவும், கட்டிக் கொடுக்க போடப்படும் திட்டம் வரவேற்கக்கூடிய ஒரு அம்சமாகும். மேலும், இவ்வருடம் பருவ மழை சரியாக இருந்தால், மேட்டூர் நீர்தேக்கத்திலும், மற்றும் எந்தெந்த இடங்களில் தண்ணீர் தட்டு இருந்ததோ, அந்த இடங்களில் எல்லாம் தண்ணீர் வசதி ஏற்பட்டிருப்பதால் இனி வர இருக்கும் வருடம் சிறப்பான வருடமாக இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதோடு இன்னுமொரு முக்கியமான அம்சம் என்னவென்றால், முதல் ஐந்தாண்டு திட்டம் முடிந்து, இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் அமுலாக்கப்படுகிற முதல் வருடத்தில் நாம் இருக்கிறோம். முதலாவது ஐந்தாண்டு திட்டம் மக்களுடைய உடனடிப் பிரச்னையான உணவு பிரச்னையை தீர்க்கவும், வேலையில்லா திண்டாட்டத்தை ஓரளவு போக்கவும் வகுக்கப்பட்டது. அந்தத் திட்டம் நல்லமுறையில் வெற்றியாக முடிந்து இருக்கிறது. முதல் ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட திட்டங்களெல்லாம் மக்களுக்கு நல்லமுறையில் பயனளித்துக் கொண்டிருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்துகொண்டிருந்த நாம், இப்போது உணவு உற்பத்தி பெருக்கின் காரணமாக அதை நிறுத்தி விட்டதோடு மட்டுமில்லாமல் சுயதேவை பூர்த்தியையும் அடைந்து விட்டோம். என்றாலும் நாம் உற்பத்தி செய்யும் 12-25 படியான உணவுப் பொருள்தரத்தில் சக்தி உடையதாக இல்லை. மற்றும் p.m. இங்குள்ள சாதாரண ஏழை கிராம மக்களுக்கு நல்ல வேலை கொடுப்பதற்கும், வேலையில்லாத்திண்டாட்டத்தை நீக்குவதற்காகத்தான் இந்த 2-வது 5 ஆண்டுத் திட்டம். முதல் 5 ஆண்டுத் திட்டத்தின் மூலம் பல வசதிகள் ஏற்பட்டது. 2-வது திட்டத்தை உருவாக்கி, அதாவது 2-வது 5 ஆண்டு திட்டத்தில், கிராம மக்கள் உழைப்பின் பயனை கிராம மக்களே அனுபவிக்கவேண்டும் என்ற முறையில் இந்தத் திட்டங்கள்

போடப்பட்டு இருக்கின்றன. அதாவது, முதல் 5 ஆண்டுத் திட்டத்தில் எவ்வளவு பயன் அடைந்தாலும் கூட, நமது அங்கத்தினர்கள் அல்லது வெளியில் இருப்பவர்களும் தவறுக பிரச்சாரம் செய்யும்படியான நிலைமையால் பல இடங்களில் மறைத்துக் கூறி, என்னவோ ஆபத்து வந்து விட்டதாகவும், இந்த திட்டங்கள் இல்லாவிட்டால் மிகவும் நல்லது, இதனால் ஏதோ நெருக்கடி ஏற்படும் என்ற முறையில் இரண்டாவது 5 ஆண்டுத் திட்டத்தைப்பற்றித் தப்பாகப் பிரசாரம் நடந்து கொண்டு இருக்கிறது. முதலில், முதல் 5 ஆண்டுத் திட்டத்தில், கோவை ஜில்லாவில், நாம் முடித்த ஒரு திட்டத்தை எடுத்துக் கொள்வதானால், மேற் பவானித் திட்டம்தான் முதல் 5 ஆண்டுத் திட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்ட திட்டம். அந்த திட்டத்தில் எவ்வளவு தூரம் செலவழித்து இருக்கிறார்கள் ? அரசாங்கம் எவ்வளவு வரி போட்டார்கள் ? மக்களிடமிருந்து எவ்வளவு வசூலித்து இருக்கின்றனர் என்பதைச் சரியாகச் சொல்லாமல் உண்மைகளை எல்லாம் மறைத்துப் பிரசாரம் செய்கின்றார்கள். அரசாங்கத்தைக் குறை கூறுவதற்குத்தான் பிரசாரம் நடந்து கொண்டிருக்கிறது. 10, 11 கோடி ரூபாய் செலவில் செய்யப்பட்டது இந்தக் கீழ் பவானித் திட்டம். இந்தத் திட்டத்தில், அந்தப் பகுதி மக்கள், ஒரு சில பகுதி மக்கள், சுமார் 3 லட்சம் பேர்தான் பயன் அடைந்தார்கள். கோவை ஜில்லாவில் ஒரு லட்சம் பேர் பயன் அடைகிறார்கள். சில வேறு இடங்களில் உள்ள ஏழை பாட்டாளி மக்கள் வரி கொடுத்தார்கள். அந்த வரியைக் கொண்டு தான், 10 கோடி ரூபாய் செலவில், அணைகட்டி முடித்தார்கள். ஆனால் விரோதமான பிரசாரம் செய்கின்ற அங்கத்தினர்கள் என்ன சொல் கிறார்கள் என்றால், சர்க்கார் பணம் என்றால் தனிப்பட்ட பணம் என்று நினைத்துக்கொண்டு, அதிகமான வரியை, அக்ரமமான வரியைப் போடு கின்றனர் என்று சொல்கின்றனர். ஒரு திட்டம் போட்டால், முதலில் என்ன வருவாய் கிடைக்கும் என்று கவனிப்பது மிக மிக அவசியம். 10 கோடி ரூபாய் செலவு செய்வதென்றால், இராமநாதபுரம் ஜில்லா, வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம் ஜில்லாக்களில் உள்ள ஏழை விவசாயி கள் கொடுக்கும்படியான வரிப்பணத்தை வைத்துக் கொண்டுதான் கட்டப்பட்ட திட்டம், அதில் பயன் அடையும் மக்கள், அந்தப் பகுதியோடு மட்டுமல்லாமல், அண்டைப் பிரதேசங்களின் செளகரியத்தையும் கருதி, அனுபவிக்கும் மக்கள் கொஞ்சம் வரியைக் கொடுத்து அந்த திட்டத்தை உபயோகிக்கும்படி சர்க்கார் சொல்கிறார்களே தவிர, மக்களுக்குக் கஷ்டம் உண்டுபண்ணுவதற்காகவோ, மக்களிடம் இருந்து வரியைக் கசக்கிப் பிழிந்து எடுக்கின்றனர் என்று சொல்வதோ நல்லது அல்ல. பொதுமக்களிடம் கடன் வாங்கித் திட்டம் கொண்டு வருகிறார்கள். ஆனால் நடைமுறையில் சில கஷ்டங்கள் இருக்கலாம். அந்தக் கஷ்டங்களைத் தீர்த்துக்கொள்ள மக்க ளிடம் பிரச்சாரம் செய்து, நல்லதொரு வழி காணுவதற்கு முயற்சி செய்யவேண்டுமே தவிர, அவர்களிடத்தில் இருக்கும்படியான அதிருப்தி யைப் பெருக்கி, சில கஷ்டங்களை முதலீட்டாக வைத்து, வியாபாரமாக பிரச் சாரம் செய்வது அவ்வளவு உகந்தது அல்ல என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். லோயர் பவானி அணைத் திட்டம் நடந்திருக்கிறதில் 10, 11 கோடி ரூபாய் செலவு ஆகிவிட்டது. இரண்டு மூன்று வருஷமாகத் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. முதலில் விதிக்கப்பட்ட சூழ்நிலை பிரகாரம், ஒரு பயிரை அடிப்படையாக வைத்து அந்தப் பயிரைச் சாகுபடி செய்யவேண்டும் என்று உத்தரவிட்டார்கள். பருத்தி பேரரடால் மிகவும் நன்றாக விளையும் என்று நினைத்து, அந்த விதமாக நடத்த ஒரு லட்சம் ஏக்கராவில், பருத்தி போடவேண்டும் என்றும், பாக்கி ஒரு லட்சம் ஏக்கராவில் கம்பு, சோளம், கேழ்வரகு முதலிய தானியங்களைப் பயிராக்கவேண்டும் என்றும், அப்போது உணவுப் பற்றாக்குறையாக இருந்த, பருத்தி மிகவும் அதிகமாகத் தேவையாயிருந்த காலத்தில், அந்தத் திட்டத்தில் போட்ட ஒரு பயிர்க் கட்டுப்பாட்டை வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், இப்போது நாளை டைவில், அந்தக் கஷ்டம் நீங்கியிருப்பதன் காரணமாக, சர்க்கார் ஹக்கமாக, இந்தப் பிரச்சனைகளை கவனமாக, கவனித்துக்கொண்டு வருகிறார்கள். அதில் போடப்பட்ட வரி மிகவும் அனுவசியம், அது மிகவும் அக்ரமம் என்று பிரச்சாரம் செய்து கொண்டிருக்கின்றனர். அந்த நில வரியை ஏற்கும்படியான சமயத்தில், அந்நாட் பொறுக்குக் கமிட்டியில் யார் அங்கத்தி

னர்களாக இருந்தார்களோ, அப்போது யாரால் எகமானதாகத் திர்மானிக் கப்பட்டதோ, அவர்களே போய், அந்த நில வரியைப் போட்டது தப்பு என்று சொல்வது தான் மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. அதில் போடப்பட்ட வரி, ஏற்கனவே பாசன வசதி உள்ள இடத்தில் இவ்வளவு வரி போடுகிறார்கள், இப்போது காங்கிரஸ் சர்க்கார் எவ்வளவு போடுகிறார்கள் என்று சொல்கிறார்களே தவிர, ஆனால் ஏற்கனவே பாசன வசதி உள்ள பூமியில், இதற்கு முதலீடு போடுவதற்கு எவ்வளவு பணம் வாங்கினார்கள்? மேட்டூர் அணை, காளிங்கராயன் கால்வாய் அணை, கொடிவேரி அணை, ஆகிய இந்த அணைத் திட்டங்களில் கணக்குப் போட்டுப் பார்த்தால், 100-க்கு 10 சதத்துக்குக் குறைவில்லாமல் அங்கு வரும்படி வந்து கொண்டிருக்கிறது. எந்த அளவுக்கு அவைகளால் நன்மை அடைகிறார் களோ அந்த அளவு வரி அதிகமாகப் போடப்படுகின்றது, அதில் வசதிகள் இருக்கின்ற காரணத்தால். ஆனால் இப்பொழுது இருக்கும் நிலைமையில், அரசாங்கம் மக்களிடமிருந்து கடன் 4 சதத்துக்கு வாங்கி, 10 கோடி ரூபாய் முதலீடு போடும்படியான நிலைமையில், குறைந்தது 40 லட்சம் ரூபாய் வட்டியாக, இந்த முதலீட்டுத் திட்டத்திற்குக் கொடுக்க வேண்டும். ஆனால், இந்த நீர் தீர்வையைப்பற்றி குறை சொல்கின்றனர். 40 லட்சம் ரூபாய் வட்டி கொடுக்கிறது அரசாங்கம். அது யாருடைய பணமும் அல்ல, அது ஏழை விவசாயிகளுடைய வரியைத்தான் எடுத்துக் கொண்டு கொடுக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில், கோயம்புத்தூர் ஜில்லாவில் 3 லட்சம் பேர் திட்டத்தால் பயன் பெறுகிறார்கள். அதிகமாக வசதி பெற்றுப் பயன் அடைகிற விவசாயிகளுக்கு தரளவுக்கு வரி போட வேண்டியது அவசியமாகும். இந்தக் கீழ்பவானித் திட்டத்தில், கொடி லேரி அணை, காளிங்கராயன் அணைகளுக்காக 4, 5 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கலாம். பாசன வசதியால் 3, 4 லட்சம் ரூபாய் வருவாய் வருகின்றது. ஆனால் கீழ்பவாணி வாய்க்கால் பாசனத்தில் இப்போது 2, 3 வருஷமாக இதற்கென்று வரும்படி வந்ததா என்ன வென்றால், 6, 7 லட்சம் ரூபாய்கூட வருவாய் ஆக வரவில்லை. தண்டத் தீர்வை என்று சொல்கிறார்கள், தவறுமல் பயிர் செய்தால் தண்டத் தீர்வை போடுகின்றார்கள், சர்க்காரும் விவசாயிகளுக்கு சில வசதி செய்து இருக்கிறார்கள். கீழ்பவாணி திட்டத்தால் எவ்வித நன்மையும் எற்பட வில்லை என்று சொல்ல முடியாது. கோபிசெட்டிப்பாளையம் தாலூக்காவில் மட்டும் எவ்வளவு லாபம் வந்திருக்கிறது, மக்கள் அனுபவித்து இருக்கிறார் கள் என்று கோபி முனிசிபல் சேர்மன் சொல்லியிருக்கிறார். அவர் காங்கிரஸ்காரர் அல்ல சர்க்காரை எதிர்க்கும் நபர். பருத்தியினால் எவ் வளவு தூரம் லாபம் வந்திருக்கிறது என்று சொன்னார். காமராஜ நாடார் அவர்கள் அங்கு வந்தபோது, காங்கிரஸ் மெம்பர் அல்ல, காங்கிரஸை எதிர்க்கும் மனிதர் கொடுத்த ஒரு புள்ளி விவரத்தை நான் சொல்கிறேன். "இந்தக் கீழ்ப்பவாணித் திட்டம் வந்ததால், கோபி செட்டிப்பாளையம் தாலூக்காவில் மட்டும் 1 கோடி ரூபாய் மதிப்பு உள்ள பருத்தி நமக்குத் தந்திருக்கிறது, இதில் லாபம் அடைந்திருக்கிறோம்" என்று சொல்கிறார். கீழ்பவாணித் திட்டம் போடப்பட்டதால், கோபியில் மட்டும் 30, 35 ஆயிரம் ஏக்கராக்களுக்குத் தண்ணீர் பாய்வதால், இது உண்டானால் பூரா திட்டமான 2 லட்சத்து 16 ஆயிரம் ஏக்கராவில் எவ்வளவு தூரம் பேர்கள் பயன் அடைவர் ? பருத்தியால் மட்டும் ஒரு கோடி ரூபாய் வரவு வந்து இருக்கிறது என்று எங்களுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்பவர், அந்த முனிவிபல் சேர்மன் அவர்கள் எழுதிக் கொடுத்திருக்கி றார்கள். ஆகவே, அந்தக் கணக்குகளைக் கவனித்துப் பார்ப்போமானால், பருத்தியில் மட்டும் இவ்வளவு தூரம் லாபம் வருமேயானால், வரும்படி வருமானால், 25, 30 லட்சம் ரூபாய் என்று வரி போட்டால், அது மற்றவர்களின் நலனுக்கும் மிக நல்லது. ஒரு லட்சம் ஏக்கராவில் போடும் பருத்தியின் லாபத்துக்கு தக்க வரி போடப்படுகிறது. அடுத்தப் படியாக தீர்வை பற்றி தப்புப் பிரச்சாரம் நடந்து கொண்டிருக்கிறது. வேய் வரி, பிசாசு வரி என்று சொல்கிறார்கள் நீர் அபிவிருத்தி வரி சென்னை சர்க்காரால் விதிக்கப்பட்ட வரியல்ல. அது இந்திய சர்க்காரின் கொள்கை. இதில் மற்ற மற்றப் பகுதியினர், இத்திட்டங்களை உபயோகிக் கும்படியான வேறு பகுதி மக்கள், 4-ல் 1 பங்கு முதலீட்டில் கொடுக்க

12-35 p.m.

வேண்டும். இது இந்திய சர்க்காருடைய கொள்கையாகும். இது மிகவும் நியாயம் என்று தான் நாங்கள் கருதுகிறோமே தவிர வேறு ஒன்றுமே கிடையாது. வரி கொடுக்க வேண்டாமென்றால் எல்லோரும் சந்தோஷந் தான் படுவார்கள். லாபம் வந்தால் யாரும் வேண்டாமென்று சொல்ல மாட்டார்கள் அல்லவா? போடப்பட்டு வசூலிக்கப்பட்ட வரி மக்களுக்கு நல்ல முறையிலே பயன்படுகிறதா அல்லது வேறு இடத்திலே வீணுகப் போகிறதா என்றுதான் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சர்க்காருடைய கொள்கையினால் மக்களுக்கு நன்மை உண்டா இல்லையா என்று பார்த்தால், உதாரணமாக மதுவிலக்குத் திட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள். கீழ்பவாணி அணைக்கட்டுத் திட்டப் பகுதியில் வேலை செய்யும் தொழிலாளிகள் ஒரு வருஷத்திற்கு மணியார்டர் மூலமாக தங்களுடைய சுற்றத்தாருக்கு அனுப்பியுள்ள தொகை இருபது லட்சம் ரூபாய் என்று தபாலாபீசிலிருந்து தெரிகிறது. தாங்கள் செலவு செய்தது போக அவ்வளவு தொகை அவர்கள் மதுவிலக்குத் திட்டத்தின் காரண மாக மிச்சம் செய்ய முடிந்திருக்கிறது. மதுவிலக்குத் திட்டம் இல்லா விட்டால் இவ்வளவு தொகையும் கள்ளுக் கடைக்கும், உடம்பையும், அறிவையும் கெடுத்துக்கொள்வதற்கு போயிருக்குமே தவிர மக்கள் சுபீட்ச மாக, நல்ல முறையிலே இருந்திருக்க முடியாது என்பதை சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எதோ ஒரு சில இடங்களில் தவறுகப் போவதினால் கொள்கையே தவறிவிட்டது என்று சொல்லிவிட முடியாது.

வட நாட்டிலே ஏராளமாகச் செலவு செய்துவிட்டார்கள், தென்னாட்டிலே ஒன்றும் செய்யவில்லை என்ற தவறான பிரசாரமும் நடக்கிறது. எந்த இடத்திலே குறைந்த செலவிலே அதிக விஸ்தீரணத்திற்குப் பாசன வசதி செய்து கொடுக்க முடியுமோ அங்குதான் திட்டங்களை எடுத்து நடத்த முடியும். எங்கெங்கே தண்ணீர் வசதி அதிகமாக இருக்கிறதோ அங்கு தான் அதிகப்படியான திட்டங்களை எடுத்து குறைந்த செலவில் நடத்த முடிகிறது. வட நாட்டிலுள்ள பக்ரா நங்கல் திட்டத்தை நான் பார்க்கும் படியான வாய்ப்பு ஏற்பட்டது. பக்ரா நங்கல் திட்டம் இந்தியாவிலேயே மிகவும் சிறந்த திட்டம். உலகத்திலேயே இருக்கும்படியான மிகப் பெரிய திட்டங்களில் இரண்டாவதாக பக்ரா நங்கல் திட்டம் விளங்குகிறது. அதற்குச் செலவழிக்கும்படியான தொகை 150 கோடி ரூபாய். தென்னிந் தியாவிலுள்ள திட்டங்களுக்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால், கீழ்பவாணித் திட்டத்திற்கு பத்து கோடி ரூபாய் செலவழித்து இரண்டு லட்சம் எக்கருக்கு பாசன வசதி கிடைக்கிறது. அதுவும் தோட்டக் கால் பயிர் சாகுபடி செய்வதற்கு வருஷத்திற்கு ஐந்து மாதங்களுக்குத் தான் தண்ணீர் கிடைக்கும். ஆனால், 150 கோடி ரூபாய் செலவு செய்யப் பட்ட பக்ரா நங்கல் திட்டத்தின்மூலம் 80 லட்சம் எக்கருக்கு வருஷத்தில் 9 மாதத்திற்குத் தண்ணீர் கிடைக்கிறது. கீழ்பவாணித் திட்டத்தின் அடிப் படையில் கணக்குப் போட்டுப் பார்த்தால் பக்ரா நங்கல் திட்டத்திற்கு 40 புங்கு செலவு ஆகும். அதாவது சுமார் 400 கோடி ரூபாய் போட்டு கட்டுவதாக இருந்தால்தான் முடியும். அதுமாத்திரமல்ல. பக்ரா நங்கல் திட்டத்தில் பத்து லட்சம் கிலோவாட் மின்சாரம் தயாரிப்பதற்கு ஆகும் செலவும் இந்த 150 கோடி ரூபாய்க்குள் அடங்கியிருக்கிறது. சென்னை ராஜ்யத்திலே மட்டும் மூன்று லட்சம் கிலோவாட்டுகள் வசதி ஏற்படுவதற்கு 35 கோடி ரூபாய் முதலீடு போட்டிருக்கிறார்கள். இன்னும் குந்தா மின்சாரத் திட்டத்தில் 1½ லட்சம் கிலோவாட்டுகளுக்கு 35 கோடி ரூபாய் முதலீடு போட வேண்டியதாக இருக்கிறது. வட நாடு, தென்னாடு என்று பேதம் இல்லாமல், இந்தியா தேசம் முழுவதும் ஒன்று என்ற கண் ணோட்டத்தில் பிரச்னைகளைப் பார்க்கவேண்டும். இந்தியா தேசத்தில் எந்த ஒரு பகுதியில் எந்த திட்டம் போட்டாலும் மற்ற பகுதியினருக்கும் அதனால் பலன் ஏற்படும். எங்கெங்கு குறைந்த செலவில் அதிக பலன் கிடைக்குமோ அங்கெல்லாம் திட்டங்களை எடுத்து நடத்தவேண்டும். நமது ராஜ்யத்திலுள்ள திட்டங்களுக்கு 90 கோடி ரூபாய் வரை இந்திய சர்க்கார் கடனுக அளித்திருக் கிறார்கள். நெய்வேலித் திட்டத்தை 60 கோடி ரூபாய் செலவில் எடுத்து

நடத்தப்போகிறார்கள். இப்படியிருக்கும்போது வட நாடு, தென்னாடு என்று பேதப்படுத்தி வீண் பிரசாரம் செய்வதைவிட உண்மை நிலையை தெரிந்து பேசுவது நல்லது. ரஷ்யாவிலிருந்து உதவி அளிப்பதாகச் சொன்னார்கள் என்றும், ஆனால் இங்கிருப்பவர்கள் வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள் என்று சிலர் சொல்லிக்கொள்கிறார்கள். இப்படியெல்லாம் சொல்லி மக் களை ஏமாற்றப் பார்க்கிறார்கள்.

சேலத்தில் அலுமினியம் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு நடவடிக் கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படியிருக்கும்போது பேச்சளவிலே மக்களை ஒரு சிலர் ஏமாற்றுமல் புள்ளி விவரத்தையும் எடுத்துப் பார்க்க வேண்டும். தென்னாட்டினர்கள் அறிவாளிகள் என்று சொல்லிக்கொள் கிறார்கள். அப்படியிருக்கும்போது வடநாட்டினர் தென் நாட்டினரை ஏமாற்று கிறார்கள் என்றால் அதில் என்ன உண்மை இருக்க முடியும்? தென் நாட்டினர் வடநாட்டினருக்கு என் பயந்து போய்விடுவார்கள்? அப்படிச் சிலர் சொல்வதை எப்படி நாம் ஏற்றுக்கொள்ள முடியும்? அறிவாளி களாக இருக்கும் தென் நாட்டவர்கள் வடநாட்டினருக்கு பயந்து இருக்கவே முடியாது. இங்கிருக்கும் பிரதிநிதிகள் மேல் இடத்திற்குச் சென்று, சென்னை மாகாணத்திற்குச் சேரவேண்டிய தொகையைப் பெற்றிருக்கிறார் கள். இனியும் பெறுவார்கள். அதில் எந்தவிதமான சந்தேகமும் இருக்க வேண்டிய அவசியம் கிடையாது.

ஆங்கில அரசாங்கம் நம் நாட்டை ஆண்டு வந்த காலத்திலே பட்டணப் பகுதிகளிலேதான் திட்டங்கள் எடுத்து நிறைவேற்றப்பட்டு வந்தன. ஆனால், சுதந்திர சர்க்கார் ஏற்பட்டு, முதல் ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்ட போது கிராமங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. கிராம மக்களுக்கு வேண்டிய ரோடு வசதிகள் போன்ற இன்னும் அநேக வசதிகளைச் செய்து கொடுக்கக்கூடிய முறையில் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்கள், சமூக நலத் திட்டங்கள், தேசிய அபிவிருத்தித் திட்டங்களெல்லாம் கொண்டு வந்தார்கள். இத்திட்டங்களிலே மக்கள் நல்ல முறையிலே உற்சாகமாக ஒத்துழைப்பு தந்துவந்ததன் காரணமாக, கிராமங்களிலே புரட்சி ஏற்பட்டிருக்கிறதென் றால் அது மிகையாகாது. கிராமத்திலே மக்கள் வெகு ஊக்கமாக திட்டங் களை நிறைவேற்ற ஒத்துழைப்பு தந்துவருகிறார்கள். குடிதண்ணீர் திட்டங் களுக்காக 'ஓவர்ஹெட் டாங்குகள்' கட்டப்பட்டு, கிராமக் குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது. அநேக கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் திறக் கப்பட்டிருக்கின்றன. இதனால் கிராம மக்களிடையே புத்துணர்ச்சி ஏற் பட்டிருக்கிறது. கிராம அபிவிருத்திக்காக சர்க்கார் ஒதுக்கி வைத்திருக்கும் பணத்தைப் பெற்றுக்கொண்டு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக கிராம மக்கள் தங்களுடைய பணத்தையும் உழைப்பையும் கொடுத்து உதவ முன்வருகிறார்கள். இது மிகவும் வரவேற்கத் தகுந்த அம்சமாகும். ஸ்தல அபிவிருத்திக்காக 150 லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்திருப்பது கிராம மக்களிடையே புத்துணர்ச்சியை உண்டுபண்ணுவதற்கு மிகவும் நல்ல முறையில் இருக்குமென்று நினைக்கிறேன்.

திட்டங்களினால் விவசாய மக்கள் பயன் பெறவேண்டுமானால், புதிய புதிய விவசாய முறைகளை கையாண்டு மக்கள் பயன்பெறவேண்டுமானால், அதற்கெல்லாம் அடிப்படையாக மக்களின் கையிலே ரொக்க வசதி ஏற்பட வேண்டியதவசியம். அதற்காக கிராமாந்திரங்களில் கடன் வசதி (rural credit)-க்காக சர்க்கார் ஒரு திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். சில இடங்களிலே ஒரு எக்கருக்கு ரூ. 200 சாகுபடிச் செலவாகுமென்றால், சர்க்கார் 25 சத விகிதம் கணக்குப்படி, ரூ. 50 கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. ஒரு சில இடங்களில் intensive cultivation முறையில் பூராச் செலவையுமே சர்க்கார் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகக் கொடுத்து வருவது வரவேற்கத்தகுந்த விஷயம். கிராம மக்கள் விவசாயத் தொழிலைச் செய்யும்படியான காலத்திலே கூட்டுறவு சங்கங்களின் மூலமாக வேண்டிய பண உதவியைச் செய்து, தானிய உற்பத்தியைப் பெருக்கு வதற்கு வழி செய்தால் கிராம மக்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கு சௌகரிய மாக இருக்கும். கிராம மக்களின் கூட்டுறவு சங்கங்களிலே ஏழை நடுத்தர

விவசாயிகளையும் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொண்டு, அவர்களிடத்திலும் பொறுப்பைக் கொடுத்து காரியங்களைச் செய்யவேண்டிய முறை மிகவும் நல்லது. ஆனால், சிலசமயங்களிலே சிவப்பு நாடா முறையினால் காலாகாலத்தில் பணம் கிடைப்பதில்லை. காலாகாலத்தில் உரம் வாங்க பணம் கிடைக்காமல் திட்டங்களெல்லாம் பல சந்தர்ப்பங்களிலே தவறி விடுகின்றன. ஆகவே, சர்க்காருடைய உதவியானது உரிய காலத்திலே, தேவையான சமயத்திலே கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் மிக மிக அவசியம் செய்து கொடுத்தாகவேண்டும்.

மின்சார வசதியைப் பொறுத்தமட்டில் நமது சென்னை ராஜ்யம் மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வந்திருக்கிறது. இந்தியா பூராவி லுள்ள 7,000 கிராமங்களில், நமது ராஜ்யத்தில் மட்டும் 3,500 கிராமங்களில் விஸ்தரிப்பு நடந்திருக்கிறது. அது மறுக்க முடியாத விஷயம். அப்படியிருக்கும்போது நமது ராஜ்யத்தைப் பார்த்து வடநாட்டவர்கள் பொருமைப்படமாட்டார்களா என்று நான் கேட்கிறேன். ஆகவே, வடநாடு. தென்னாடு என்று பிரித்துப் பேசுவதில் அர்த்தம் இல்லை. 3,500 கிராமங்களுக்கு மின்சார வசதி ஏற்பட்டிருக்கிறதென்றால், இங்கு இருக்கும்படியான மக்கள் நல்ல முறையிலே மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள முன்வந்திருக்கிறார்கள் என்று கருதவேண்டும்.

முப்பது ஆயிரம் இணறுகளில் மின்சார பம்புசெட்டுகளை நமது ராஜ்யத்தில் விவசாயிகள் உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் இருபது ஆயிரம் இணறுகளுக்கு மின்சார பம்புசெட்டுகள் தேவை இருப்பதாக பிரதம இன்ஜினீர் (மின்சாரம்) ரிபோர்ட்டிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். குந்தா திட்டம் போன்ற பெரிய திட்டங்களெல்லாம் இல்லாவிட்டாலுங்கூட மிகவும் உபயோகப்படக்கூடிய முறையிலே சென்னை ராஜ்ய விவசாயிகள் நல்ல முறையிலே மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆறுயிரம் மின்சார பம்புசெட்டுகள் வைப்பது அதற்கு அடுத்த திட்டத்திலே இருக்கிறது. எவ்வளவு தூரம் இந்தத் திட்டத்தைச் செய்தாலுங்கூட மிகவும் நல்ல முறையிலே இம்மாதிரி திட்டங்கள் நடைபெறுவதற்கு ஒரு விஷயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இம்மாதிரி திட்டங்கள் போடுவதிலே பொதுமக்களோடு வியாபாரிகள் ஒத்துழைக்கவேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான பொருள்களை சப்ளை செய்வதற்கு வியாபாரிகள் அனுசரணையாக இருந்தால்தான் திட்டங்கள் வெற்றிபெற முடியும். அதிகமான பம்புசெட்டுகளை விவசாயிகள் வைத்துக்கொள்வதற்கு வேண்டிய மின்சார வசதியை சர்க்கார் செய்துகொடுக்கப்போவதாகச் சொல்லும்போதே வியாபாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால், மோட்டார்களின் விலைகளையும், ஸ்விச் ஸ்டார்ட்டர்களின் விலைகளையும் ஒன்றுக்கு இரண்டு மடங்காக ஏற்றிவிட்டார்கள். தங்களுடைய சுய லாபத்தை மட்டுமே வியாபாரிகள் நினைத்துக்கொண்டிருக்கிறார்களேயொழிய தேசத்தின் மொத்த அபிவிருத்தியில் கண்ணோட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. எப்படியாவது தாங்கள் லாபம் அடைந்துவிடவேண்டுமென்ற எண்ணம் இருந்தால், விவசாயிகளுக்குத் தேவையான மின்சார மோட்டார்கள், ஸ்விச் ஸ்டார்ட்டர்களெல்லாம் நியாயமான விலைக்குக் கிடைக்காமற் போய்விடுகிறது. அதனால், விவசாயம் தடைப்பட்டுவிடும். ஆகவே, நியாயமான லாபத்தை மட்டும் அடைந்து, நாட்டின் அபிவிருத்தியில் வியாபாரிகளும் பங்குகொள்ளவேண்டிய முறையைச் செய்யவேண்டும்.

12.45 p.m. பரீக்ஷார்த்தமான நிலையிலே இருந்த நெய்வேலி திட்டம் இப்பொழுது நிச்சயமான ஒரு நல்ல முறையிலே உருவாகியிருக்கிறது என்று கவர்னர் அவர்கள் தன் உரையிலே தெரிவித்திருக்கிறார்கள். இதனால் அதோடு சம்பந்தப்பட்ட தொழில்களெல்லாம் மிகவும் அபிவிருத்தி அடையும். விவசாயத்துக்கு மிக மிக முக்கியமான தழைச் சத்து அதிகமாக இருக்கும் அமோனியம் சல்பேட்டு அதிகமாக உற்பத்தி செய்ய முடியும். அறுபது கோடி ரூபாய் முதலீடு போடும் பட்சத்தில் இந்தப் பகுதியிலே இருக்கும் படியான மக்களுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்பு அதிகரிக்கும். விவசாயத் துறையிலே பெரும் அபிவிருத்தி அடைவதற்கு இதுபோன்ற திட்டங்கள் உதவியாக இருக்கும். இதனால் நமது சென்னை மாகாண அமைப்பில் கூட மாறுதல் ஏற்பட்டுவிடலாம்.

பரீக்ஷார்த்த திட்டங்களை எல்லா இடங்களிலும் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். என் தொகுதியிலே வாணிப்புத்தூரிலே இடைக்காஞ்சி என்ற மலை இருக்கிறது. அங்கே இரும்புக் கனி பொருள்கள் 100-க்கு 90 சத விகிதம் கிடைப்பதாக நிபுணர்கள் சொல்லுகிறார்கள். உலகத்திலேயே இம்மாதிரி இல்லை. மற்ற இடங்களில் 100-க்கு 60 சத விகிதம்தான் கனி பொருள்கள் கிடைக்கும். இம்மாதிரி சோதனைகள் செய்யப்படாமல் இருக்கும் இடங்கள் பல இருக்கின்றன. அந்த இடங்களில் உடனடியாக சோதனை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சர்க்காரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். சேலம் ஜில்லாவில் அலுமினிய தொழிற்சாலை ஏற்படுத்த இருப்பது ஒரு மிகவும் நல்ல அம்சம். அது நீண்ட நாளாக எதிர்பார்த்த விஷயமாதலால் அதை உடனடியாக காரியத்திலே செய்துகாட்ட வேண்டும். இம்மாதிரி கனரகத் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவது மிகவும் அவசியம். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

சிறு கைத்தொழில் விஷயமாக கிண்டி, விருதுநகர், ஈரோடு முதலிய இடங்களில் இண்டஸ்டிரியல் எஸ்டேட்கள் அமைக்கப்படுவதாக கவர்னர் அவர்கள் உரையில் கூறப்பட்டிருக்கிறது. சிறு கைத்தொழில்கள் பெருகுவது மிக மிக அவசியம். கிராமத்தில் இருக்கக்கூடிய தச்சர்கள், கொல்லர்களுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். சாதாரண ஏழை விவசாயிகள் குறைந்த வேலையிலே தங்கள் காரியங்களை முடித்துக்கொள்வதற்கும், தொழிலாளிகள் சீக்கிரமாக அதிகமாக சம்பாதிப்பதற்கும் இது ஒரு வழியாக இருக்கும். இயந்திரங்களை உபயோகப்படுத்தாதன் காரணமாக ஒன்றுக்கு நான்கு பங்கு கூலி கொடுக்காமல் விவசாயிகள் வேண்டிய சமயத்தில் நல்ல பலனை அடைய முடியும். கைத்தொழில் எஸ்டேட்கள் சிறு கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு கிராமத் தொழிலாளிகளுக்கு ஒரு நல்ல வாய்ப்பு அளிக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இப்பொழுது சபையின் முன் விவாதத்தில் இருக்கும் கவர்னர் அவர்களின் உரையில் சொல்லப்பட்டுள்ள சர்க்கார் கொள்கைகளை மக்களிடையே நன்றாகப் பரப்பி நாம் எல்லோரும் சேர்ந்து தேச மக்களுடைய நல்வாழ்வுக்கு வேண்டிய ஒத்துழைப்பைக் கொடுத்தால்தான், எதிர்பார்த்த அளவுக்கு நாம் முன்னேற்றம் அடைய முடியும். நடைமுறையிலே ஏதாவது தவறுகள் இருந்தால் நாம் அதைத் திருத்திக்கொள்ளலாம். சட்ட சபை அங்கத்தினர்கள், இருப்பதை மறைத்து மக்களிடையே வீண் பிரசாரம் செய்து அதிருப்தியையும் சங்கடமான நிலைமையையும் உண்டாக்கி வேறு வழியிலே அரசியல் சூதாட்டத்தில் இறங்காமல், மக்களுடைய நன்மைக்காகவே நல்ல முறையிலே திட்டங்களை கொண்டு வருவதற்கும், அவைகளை அமுலாக்குவதற்கும் ஒத்துழைக்க வேண்டுமென்றும், நாம் எனைய மாகாணங்களுக்கு இது விஷயத்தில் வழிகாட்டியாக இருக்கவேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்குப் பேச அவகாசம் அளித்த கனம் சபாநாயகருக்கு என்னுடைய வந்தனத்தைத் தெரிவித்துக் கொண்டு, கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறேன்.

(The Deputy Speaker in the Chair.)

SRI R. M. PALANIAPPAN : Sir, I second the motion moved by hon. Member Sri P. G. Karuthiruman.

DEPUTY SPEAKER : Motion moved—

" That an humble Address be presented to the Governor that the Members of the Madras Legislative Assembly thank him for the Address delivered to the Members of the Legislature on the 8th August 1956."

12-48 p.m. **SRI R. M. PALANIAPPAN :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நண்பர் ஸ்ரீ கருத்திருமன் அவர்களின் தீர்மானத்தை ஆமோதித்து சில வார்த்தைகள் பேச முன் வந்துள்ளேன். முதலில் கவர்னர் அவர்கள் உரையில் நமது மலையாள கன்னட சகோதர அங்கத்தினர்கள் நமது மாகாணத்தை விட்டுப் போகப் போகிறதைப்பற்றி பிரஸ்தாபித்திருக்கிறார்கள். எந்தக் கட்சியைச் சேர்ந்தவராயிருந்தாலும், நாம் அவர்களிடையே ஐந்து வருஷ காலமாக ஒரு நல்ல சுமுகமான சூழ் நிலையில் பழகி வந்திருக்கிறோம். ஆதலால், அவர்கள் நம்மைவிட்டுப் போகிறார்களே என்ற வருத்தம் நமக்கு ஒரு பக்கம் இருக்கத்தான் இருக்கிறது. ஆனால் அவர்கள் இந்தச் சட்ட சபையின் தமிழ் அங்கத்தினர்களின் ஆசியோடு செல்கிறார்கள். புதிதாகத் தோன்றவிருக்கும் அந்த மாகாணத்தில் பலவிதமான பிரச்னைகள் எற்படலாம். நாட்டினுடைய நலனை நன்முக கவனித்து அவர்கள் தேச சேவை செய்வார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, பிரிந்து போகக்கூடிய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு அவர்களுடைய உரிமைகளுக்குப் பாதகமில்லாமல் அவர்களுக்கு எல்லா சலுகைகளும் அளிக்கப்படும் என்று கவர்னர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அது மிகவும் வரவேற்கத்தக்க விஷயம். பிரிந்து போகக்கூடியவர்கள் தங்களுடைய நிலைமையைப்பற்றி கொஞ்ச நாளாக சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இம்மாதிரி கவர்னர் அவர்கள் உறுதி கூறியிருப்பது அவர்களுக்கு மிகவும் மன நிம்மதி அளிக்கும் என்று நான் நினைக்கிறேன்.

நம்முடைய மாகாணத்தோடு புதிதாக இணைக்கப்படும் திருவாங்கூர்-கொச்சியைச் சேர்ந்த ஐந்து தாலுகாக்கள் பற்றியும் கவர்னர் அவர்கள் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டு மக்கள் அவர்களை மகிழ்ச்சியுடனும் ஆதரவுடனும் வரவேற்பார்கள். புதுக்கோட்டையிலிருந்து வந்திருக்கிற பிரதிநிதியாகிய நான் இதை முக்கியமாக வரவேற்கிறேன். புதுக்கோட்டையை ஒரு ஜில்லா தலைமை ஸ்தானமாக மாற்ற வேண்டுமென்று கேட்டபொழுது "ஐந்து தாலுகாக்கள் நம்முடன் சேரும் காலத்தில் ஜில்லாக்களையெல்லாம் மாற்றி அமைக்கவேண்டிய ஒரு சூழ் நிலை ஏற்படும். அந்த சமயத்தில் நான் புதுக்கோட்டையை மனதில் வைத்துக் கொள்ளுகிறேன்" என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். ஆகவே இந்த சந்தர்ப்பத்தில் புதுக்கோட்டையை மனதில் வைத்துக்கொண்டு அதை ஒரு ஜில்லாத் தலைமை நகரமாக ஆக்குவார்கள் என்று நான் நினைக்கிறன்.

அடுத்தபடியாக, நமது மாகாணத்தில் கொஞ்சம் கொஞ்சமாக நிர்வாகத்தை தமிழிலே கொண்டுவருவதற்கு வேண்டிய முயற்சிகளையெல்லாம் சர்க்கார் செய்து வருவதாக கவர்னர் அவர்கள் சொன்னார்கள். அதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. அதை எல்லோரும் வரவேற்கிறார்கள். அதே சமயத்தில் தமிழை படிப்படியாகத்தான் கொண்டு வரவேண்டுமென்றும் கவர்னர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் வரவேற்க வேண்டிய விஷயம். நாம் இப்பொழுது 2, 3 ஜில்லாக்களிலே தமிழிலே பரீக்ஷார்த்தமாக நிர்வாகம் நடத்திக் கொண்டிருக்கிறோம். அதில் எந்த விதமான கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை நன்முகத் தெரிந்துகொள்ள வேண்டும். மற்ற மொழிகள் பேசக்கூடிய மக்களும் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமையையும் நன்முக சீர்தூக்கிப் பார்த்து அவர்களுக்கு பாதகம் விளைவிக்காத வகையில் நிர்வாகத்தை தமிழில் படிப்படியாகக் கொண்டுவர வேண்டும். இந்த விஷயத்தை யோசித்து படிப்படியாக தமிழில் நிர்வாகத்தைக் கொண்டு வந்தால் அது நன்முக இருக்கும்.

அடுத்தபடியாக, புயலினால் பாதிக்கப்பட்ட விஷயத்தைப்பற்றி கவர்னர் அவர்கள் பிரஸ்தாபித்தார்கள். புதுக்கோட்டை, ராமநாதபுரம், தஞ்சை போன்ற புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் சர்க்கார் உடனடியாக எடுத்துக் கொண்ட நிவாரண நடவடிக்கைகளை பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த இடங்களிலே கலெக்டர், சப்-கலெக்டர் போன்ற உத்தியோகஸ்தர்கள் சைகிளிலும் கால்நடையாகவும் சென்று மக்களுக்கு வேண்டிய உணவு

வசதிகளை துரிதமாக செய்து கொடுத்தார்கள். கிராமங்களில் போக்கு வரத்து எற்படுவதற்கு ரோடுகளை சீர்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொடுத்தார்கள். தமிழ் நாட்டு மக்கள் அந்த உதவியை என்றும் மறக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடன் வசதி அளிப்பதை இன்னும் கொஞ்ச காலத்துக்கு சர்க்கார் நீடித்தால் அது மிகவும் நன்முக இருக்கும்.

மேட்டூர் நீர் தேக்கத்தில் தண்ணீர் நிறைய இருக்கிறது என்று கவர்னர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இது எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிக்கிறது. சென்ற வருஷம் மாதிரி தமிழ் நாட்டில் புயல் ஒன்றுமில்லாமல் விவசாயம் நல்ல முறையில் நடக்க வேண்டுமென்று நாம் கடவுளை பிரார்த்திப்போம்.

அடுத்தபடியாக ஒரு மூன விற்பனை வரியைப்பற்றி நமது கவர்னர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி யாருமே ஒன்றும் குறை சொல்ல முடியாது. அதை வரவேற்க வேண்டியதுதான். இப்பொழுது எட்டு சாமான்களுக்கு அந்த மாதிரி வரி போடப்போவதாகச் சொல்லியிருக்கிறார். அவைகள்மீது இம்மாதிரியான வரியை விதித்து சோதனை செய்த பிறகு பாக்கியுள்ள எல்லாப் பொருள்களுக்குமே ஒரு மூன விற்பனை வரி விதிக்க சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். 12-5 p.m

அடுத்தபடியாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். அந்த ஐந்து வருட காலத்திற்குள் நாட்டின் வருமானம் கால் பங்கு கூடுதலாகும் என்றும் சொல்லியிருக்கிறார். இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு சிக்கனமாகச் செலவு செய்ய முடியுமோ அவ்வளவு சிக்கனமாகச் செலவு செய்து திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கு வேண்டியவைகளை யெல்லாம் சர்க்கார் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக விவசாயத்திற்குப் பல இடங்களில் பணம் ஒதுக்கியிருப்பதைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. நானூறு விதைப் பண்ணைகள் திறக்கப் போகிறார்கள் என்றும், அவைகளிலிருந்து விவசாயிகளுக்கு விதைகள் முதலியன வழங்கப் போகிறார்கள் என்றும் சொல்லியிருப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. விவசாயிகளுக்கு விதைகள் கொடுத்துதவும் விஷயத்தில், ஜனங்களுக்கு நன்முக விஷயம் தெரியும்படியாக 'போஸ்டர்'கள் ஒட்டியோ பத்திரிகைகளில் அறிவித்தோ விளம்பரம் செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் விவசாயிகள் அந்தப் பண்ணைகளுக்குப் போய் விதைகளை வாங்கிக்கொள்வார்கள். ஆகவே இது விஷயமாக சர்க்கார் போதிய விளம்பரம் செய்யும் என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக நமது பிரதேசத்திலுள்ள திட்டங்களைப்பற்றி கவர்னர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவைகளில் மலம்புழாத் திட்டம் அனேகமாக முடிந்துவிட்டது. மணிமுத்தாறு திட்டம் முடியப்போகிறது. கட்டளை, புள்ளம்பாடி திட்டங்களை சீக்கிரம் எடுத்துக்கொள்ளப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இவையெல்லாம் வரவேற்கத் தகுந்தவைதான். தமிழ் நாடு தனியாகப் பிரிந்துவிட்டால் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும். ஆகவே இன்னும் எந்த எந்தத் திட்டங்களில் மூலம் தண்ணீர் கொண்டுவர முடியுமோ அந்தத் திட்டங்களை யெல்லாம் நன்முக ஆராய்ந்து சர்க்கார் வேண்டியதைச் செய்வார்கள் என்று ஜனங்கள் எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள்.

அடுத்தபடியாக நெய்வேலித் திட்ட விஷயத்தில், ஓரளவு மேலேயிருந்த தண்ணீரை மேலே கொண்டுவந்து, திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்ற முடியும் என்ற நிலைமையை எற்படுத்தியதற்காக ஜனங்கள் எல்லோரும் மகிழ்ச்சியடைகிறார்கள். தண்ணீரை அப்படி எடுத்து நிலக்கரியை உபயோகப்படுத்த முடியுமா என்று ஏற்கெனவே சந்தேகம் இருந்தது. இப்போது அது சரியாக வந்துவிட்டது குறித்து ஜனங்கள் மிகவும் சந்தோஷ மடைகிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் எற்படுத்தக்கூடிய மின்சார்த் தொழிலாலும் இதர சிறிய தொழில்களாலும் சுற்றியுள்ள மக்கள் பயனடையும்படி செய்வதற்காக சர்க்கார் அவர்களுக்குக் கடன் உதவியும் வேண்டிய ஆதரவும் கொடுக்க வேண்டும். சர்க்கார் அவ்விதம் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

[Sri R. M. Palaniappan] [9th August 1956

அடுத்தபடியாக தொழில் பயிற்சி நிலையங்களை நான்கு இடத்தில் திறந்திருக்கிறார்கள். தொழில் பள்ளிகளை, இப்போது கட்டிடம் கட்டாத தினுல், வாடகை கட்டிடங்களில் நடத்துகிறார்கள். இந்தப் பயிற்சியின் பலன்களை நன்முக ஆராய்ந்து பெரிய பெரிய ஊர்களிலெல்லாம் இந்த மாதிரிப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த சர்க்கார் அடுத்த வருஷங்களில் முயற்சி எடுத்துக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக நமது கல்வித் திட்டம் புதிதாக மாற்றியமைக்கப்பட வேண்டியதைப் பற்றியும் கவர்னர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ஒரு கமிட்டியும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே எத்தனையோ கமிட்டிகள் நியமிக்கப்பட்டன. இந்தக் கமிட்டியும் அவைகளைப் போல இல்லாமல் சீக்கிரமாகவே ஏதாவது ஒரு நல்ல திட்டத்தை சர்க்காரிடம் கொடுக்கவேண்டும். சர்க்கார் அதை உடனடியாக நிறைவேற்றி வைக்கவேண்டும். நாம் புதிது புதிதாகத் தொழில்களை நிறுவி வருகிறோம். நாட்டின் மூன்னேற்றம் வெகு சீக்கிரமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே இப்போதிலிருந்தே நல்ல கல்வியளித்து நாட்டின் குழந்தைகளைத் தயார் செய்தால்தான் பதினைந்து அல்லது இருபது வருடங்களிலாவது நம்முடைய குழந்தைகள் நல்ல நிலைமைக்கு வந்து நாட்டிற்குப் பயன்படக்கூடியவர்களாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

என்னுடைய தோழ அங்கத்தினர்களை யெல்லாம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிவைக்கும்படி கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri C. KANDASAMY :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் நிகழ்த்திய பிரசங்கம் சம்பந்தமாக சில அபிப்பிராயங்களை நான் இப்போது பொதுப்படையாகச் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பிரசங்கத்தைப் பூராவும் நன்முகப் படித்துப் பார்க்கக்கூடிய காலத்தில், நாட்டிலுள்ள குடிமக்களுடைய யதார்த்த நிலைமையைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் அரசாங்கம் செய்திருக்கக் கூடிய அல்லது செய்யப்போகிற சில காரியங்களைப்பற்றி மேலெழுந்த வாரியாகக் கொடுக்கப்பட்ட ஒரு புள்ளி விவரத்தைப் போலத்தான் அந்தப் பிரசங்கம் இருப்பதாக நான் கருதுகிறேன். நான் ஏன் இதைக் கூறுகிறேன் என்முல், எந்த ராஜ்யமும் அந்த ராஜ்ய மக்களின் வாழ்க்கைத் தரத்தில் என்ன மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை கணிப்பதைக் கொண்டுதான் அந்த ராஜ்யத்தில் நடந்திருக்கும் வேலைகளையும் அங்கு நடந்த ஆட்சியையும் மதிப்பிட முடியும் என்பது அரசியல் சாஸ்திரம். அப்படிப் பார்க்கும்போது கவர்னர் அவர்களுடைய பிரசங்கம் மேலெழுந்த வாரியாகத்தான் இருக்கிறது என்று கூறுகிறேன்.

முதலில் மொழிவாரி ராஜ்ய அமைப்பின்படி இன்றைய தினம் ஏற்பட்டிருக்கக்கூடிய மாறுதலைப்பற்றி கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ் மாநிலம் சீக்கிரம் அமையப்போவது குறித்து நாங்கள் எல்லோரும் பெருமிதமடைகிறோம்; அதை வரவேற்கிறோம். அது மட்டுமல்ல. நமது நாட்டிலுள்ள பல்வேறு பாஷை பேசக்கூடிய மக்களும் எந்த ஒரு ஜனநாயக லட்சியத்திற்காகப் போராடினர்களோ, அந்த லட்சியம் பூர்த்தியாவதற்கான மொழிவழி ராஜ்யங்கள் வெற்றிகரமாக ஏற்படப் போவதுபற்றி கவர்னர் அவர்கள் சொல்லியிருப்பதைப் பாராட்டுகிறேன். அதோடுகூட இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். ஆட்சியாளர்களிடத்தில் தயக்கம் இருப்பது, முதலாவதாகச் செய்த தீர்மானத்தை ஒத்தி வைக்கலாமா என்று யோசிப்பது முதலியவற்றை யெல்லாம் குறித்து வருத்தப்படுகிறேன். பெரிய பல மொழி ராஜ்யங்களை ஏற்படுத்துவதை எதிர்த்து நேற்றைய தினம் அஹமதாபாதில் நடந்திருக்கும் சம்பவம் இந்த பன்மொழி ராஜ்ய அமைப்பு யோசனைக்கு இருக்கும் எதிர்ப்பை எடுத்துக்காட்டுகிறது.

தமிழ்நாடு வரப்போகிறது என்பதால் தமிழ்நாட்டை பலப்படுத்துவதற்கும், தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டுவருவதற்கும் நாங்கள் எல்லோரும் பாடுபடுவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

9th August 1956] [Sri C. Kandasamy]

படிப்படியாக நடவடிக்கை எடுத்துத்தான் தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டுவர முடியும். இது தமிழை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதையும் பொருத்திருக்கிறது. அதற்கான வகையில் அரசாங்கத்தார் செயலாற்றுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, புயல் நிவாரணத்திற்காக அரசாங்கம் துரிதமாக நடவடிக்கைகள் எடுத்திருப்பதை நான் பாராட்டுகிறேன். புயல் நிவாரண விஷயத்தில், ரூ. 3 கோடி கடன் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்க அம்சம். ஆனல் இதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. எனக்குத் தெரிந்த வரையில், தஞ்சை ஜில்லாவிலும், ராமனுதபுரம் ஜில்லாவிலும் கடன் கொடுப்பதில் பாரபட்சம் காட்டப்படுவதாகப் புகார்கள் செய்யப்படுகின்றன. சில பிரதேசங்களில் மேலெழுந்தவாரியாகச் சிலருக்குக் கடன் கொடுக்கப் படுகிறது. சில பிரதேசங்களில் அங்குள்ள காங்கிரஸ் தலைவர்களின் செல்வாக்கை வைத்துக்கொண்டு ஏதோ காங்கிரஸ் பிரசாரத்திற்குப் பணம் கொடுப்பதுபோல் கடன் கொடுக்கப்படுகிறது. எந்தக் கட்சியாக இருந்தாலும் ஆட்சியிலிருக்கும்போது கிடைக்கும் சந்தர்ப்பங்களை அநியாயமாகப் பயன் படுத்திக் கொள்வதானது ஜனநாயக ஆட்சிக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய செய்கை என்பதை எடுத்துக்காட்ட நான் விரும்புகிறேன். இங்குள்ள மந்திரிகளோ அல்லது பொறுப்பிலுள்ளவர்களோ இம்மாதிரி செய்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனல் இத்தகைய செய்கைகள் நடக்கின்றன என்பதை சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். பாரபட்சமற்ற முறையில் கடன் கொடுக்கப் படுவதற்கு சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்திருக்க வேண்டும். இத்தகைய செய்கைகள் மீண்டும் நடக்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு மாத காலம் நிவாரண கடன்கள் கொடுக்கப்படும் அவகாசம் நீடிக்கப்பட்டிருக்கிறது என்று நான் தெரிந்து கொண்டேன். குறித்த காலத்தில் அவதிப்படும் பகுதிகளுக்கு இந்த கடன் தொகை போய் சேரும் என்பதற்கு உத்திரவாதம் ஏற்படுத்த சர்க்கார் தக்க நடவடிக்கைகளை இனிமேலாவது எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். 1-05 p.m.

அதுமட்டுமல்ல. இன்றைய தினம் குறிப்பாக என்னுடைய தொகுதியில் முத்துப்பேட்டை, பட்டுக்கோட்டை ரோடுக்கு இடையே உள்ள பாலம் புயலின் போது இடிந்து விட்டது. இந்த பாலம் மிகவும் கேந்திர முக்யவத்துவம் வாய்ந்தது. இது இடிந்து போனபிறகு 10 ஆயிரம் ரூபாய் கண்டிராக்டில் தாற்காலிகமாக போடப்பட்ட அணையானது தண்ணீர் வந்தவுடன் அடித்துக் கொண்டு போகப்பட்டிருக்கிறது. இந்த பாலத்தை சீக்கிரம் போட ஏற்பாடு செய்வதன்மூலம், பட்டுக்கோட்டை தாலூக்காவுக்கும், திருத்துறைப்பூண்டி தாலூக்காவுக்கும் இருக்கக்கூடிய போக்குவரத்து சாதனம் துண்டிக்கப் பட்டிருப்பது நீங்குவதுடன், சரக்குகள் போவதற்கு வசதி சீக்கிரம் ஏற்படும். ஆகவே சர்க்கார் இந்த வகையில் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக விலைவாசிகள் ஏற்றத்தைப்பற்றி கவர்னருடைய பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது சரியல்ல. அது உள்ள நிலைமையை மிகவும் குறைத்து மதிப்பிடுகிற முறையில் இருக்கிறது. விலைவாசிகள் ஏறுமுகம் தென்படுகிறது **(Tending to rise)** என்றும், நியாய விலைக்கடைகள் **"Vulnerable areas"** தாக்குதலுக்கு இலக்காகி இருக்கக்கூடிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்றும், இதன் காரணமாக **"Steadying effects"** ஏற்பட்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த வார்த்தைகளை வைத்துப்பார்க்கும்போது, விலைவாசி ஏற்றத்தால் ஏற்பட்டு இருக்கக்கூடிய பெரிய நெருக்கடியை குறைத்து மதிப்பிட்டுருக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன். சில மாதங்களாக எல்லா பொருள்களின் விலையும் 30 முதல் 50 சத விகிதம் வரை ஏறியிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. காலையில் விவாதத்தின்போது, அரிசி விலை ஏற்றத்தோடு, எல்லா சரக்குகளின் விலையும் ஏறியிருக்கிறது என்று ஒப்புக் கொள்ளப்பட்டு இருக்கிறது. தஞ்சையை எடுத்துக்கொண்டால் இன்று நெல், கலம் 10 ரூபாய் வரை

விற்கிறது. கலம் 9½ ரூபாய் விற்கிறது என்று பத்திரிக்கையில் வெளியிடப்பட்டிருக்கிற விலையை வைத்துக்கொண்டு பார்க்கும்போது, 50 சத விகிதம் விலை வாசி ஏறியிருப்பது நன்கு தெரிகிறது. நகர புறங்களில் மட்டுமல்ல, கிராமப்புறங்களிலும்கூட வேலையில்லாமல் திண்டாடும் மக்கள் அதிகரித்து கொண்டிருக்கிறார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது. மேலும், இன்றைய தினம் குறிப்பாக நில பாத்தியதை முறை என்பதை அடிப்படையாக வைத்துக்கொண்டு பார்க்கும்போது, நிலப்பிரபுத்துவத்தின் ஆதிக்கம் ஒங்கியிருப்பதை கணக்கில் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, நகரப்புரத்தை சார்ந்த தொழிலாளிகள், வேலைகளில் இருப்பவர்கள் மட்டுமல்ல, கிராமத்தில் உள்ள ஏழை விவசாயிகள், குத்தகைக்கு சாகுபடி செய்யும் விவசாயிகள், விவசாய கூலிகள் இன்னும் கிராமத்தில் இருக்கிற இதர தொழிலாளிகள் எல்லோரும் அரிசி வாங்கிச் சாப்பிட வேண்டிய மக்களாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே, இந்த விலைவாசி ஏற்றப்பிரச்சினை நமது ராஜ்யம் பூராவும் நெருக்கடியை ஏற்படுத்திக்கொண்டு வருகிற ஒரு முக்கிய பிரச்சினை.

The Railway Administration has been permitted to dig a well in the very bed of the river and because of that all the spring channels in the area have dried up. Not only that, even the wells in the *ayacut* have dried up and in spite of the pumping sets and other pumping apparatus, the whole area is dry now. The ryots are not able to raise the seasonal crops. Even the coconut gardens are drying up. There have been protests for the past so many years, but in spite of the loud protests of the ryots, we do not hear anything from the Government. Recently we heard that the representatives of the two State Governments and an official of the Union Government met at Bangalore and discussed about the question of the sharing of Palar waters as between the two States and they appear to have given a verdict that the Mysore Government have not exceeded their rights in using the water. The conditions have not changed for the past thirty years, but the condition of the river has changed. It is not as if the rainfall in the

3-20 p.m

[Sri E. L. Raghava Mudaliar] [9th August 1956

catchment area has down gone too much. There are no doubt seasonal changes, but there is no drastic cut in the rainfall in the catchment area. In spite of it, we are not getting the usual flow of water in the Palar river. Though there have been representations so far, we have not heard anything from the Government as to what they are going to do. I am not very anxious to share the scarcity of water or to share the insufficient water that is available. If it is not possible to meet the needs of Madras and Mysore with the available supply of water, then it is up to the Government to investigate into the possibility of letting in the surplus waters of other rivers into this river. Now that the officers have given their verdict that the Mysore Government have not exceeded their rights in taking water from the Palar river and that the available water is not sufficient to irrigate these two districts, I hope the Government will now at least take steps to investigate into the possibility of getting the surplus water from the other rivers.

Apart from that, the prices of foodstuffs and other essential commodities are going up. The daily wage-earners are not able to make both ends meet. Complacently the Address States that at vulnerable points something has been done. On the question of increase of prices, I am not able to understand what the expression "vulnerable points" means. What happens is this. There may be scarcity in one part or one corner of the State. When there is such a scarcity, the merchants rush to other places and purchase commodities to export them to places where there is scarcity so that they may get the benefit of the higher price. Because of the unprecedented rush in the purchase by the merchants, the scarcity spreads to other places and the general price level rises. It is not as if the prices have gone up in only one part of the State and at that vulnerable point, the Government have opened fair-price shops. When there is scarcity in one part of the State, the price level goes up throughout the State, if not throughout the country. Therefore, if the fair-price shops are to give real relief to the people, they should be opened in all urban areas at least, so as to bring down the price level to a certain extent. That has not been done. At least now I hope the Government will take steps to see that fair-price shops are opened in every urban area so that the labourers may not suffer much.

With regard to legislative programme, I find that the life of the Tenants Protection Act is to be extended. It was passed as a temporary measure and it is bristling with all sorts of difficulties. Because it was a temporary measure, nobody thought about it at the time of passing it. It has not taken into account lands temporarily leased but which are required by the owners now. Under the provisions of the present Act, the owner cannot get possession of the land at any time if the tenant has paid the rent or at least pleads that he has paid the rent. Now the Revenue Divisional Officer is the Tribunal. There is no appeal against the order of the Tribunal and one cannot think of a revision. As the Revenue

9th August 1956] [Sri E. L. Raghava Mudaliar]

Divisional Officer is overburdened with all sorts of executive functions, he is not able to dispose of these petitions expeditiously. Therefore, the Tribunal itself must be changed. Before introducing this enactment, I hope the Government will consider the possibility of transferring the cases to the Subdivisional Magistrates or to the District Munsifs as they have recently done with regard to Rent Control petitions. Last month, petitions relating to rent control were transferred to the District Munsifs. Likewise, these petitions can be easily transferred to the Subdivisional Magistrates most of whom are now without any work, as under the new Procedure Code the appellate powers have been taken away from them. They can be usefully employed to do this work and the Executive Officers can be relieved of much of their work. Further, the petitioners will get expeditious relief.

Now, while dealing with the Second Five-Year Plan, the Address deals with rapid industrialization with special emphasis on basic industries. This may be true with regard to the country as a whole. But we have been complaining that the South has been neglected with regard to industrialization and that it is very backward. Of course, the Opposition are charged with stating so many things. Recently, the Hon. the Leader of the House, while addressing the Merchants' Chamber, said that no doubt the South has been neglected or is backward. I am not able to cite the very words. He has quoted figures. He stated that the per capita expenditure on industries in the country is Rs. 26 whereas it is Rs. 19 for this State and if we compare with Bengal or Bombay, there it is five or six times more than the per capita expenditure in Madras State. I think no more authoritative pronouncement is necessary to show that the South has been neglected. I hope that our Finance Minister, having said that, will take steps to see that this State is brought on a par with the other leading States in the country.

With regard to the conditions of the ryots, the Address itself recognizes that the average ryot is not able to meet the cultivation expenses and is not able to do intensive cultivation on account of that and therefore he should be provided with easy credit facilities. This has been very often said during the past ten or twelve years. Credit has been controlled and so many relief measures have been passed, but simultaneously with the relief measures, the Government ought to have provided the alternative machinery. They have not done that. They have passed only certain relief measures. Because of that, the credit position of the ryots has been frozen in the rural areas, and the co-operative movement has not even touched the fringe of the problem. Therefore, I submit that before they think of relieving the agriculturists of their debt burden, they must provide easy and expeditious relief measures before they spoil this credit position in the rural areas.

Though the Address is very complacent about the monsoon position in North Arcot district, the position is not so good. There have not been seasonal rains. Besides, even dry crops are affected

with pests. The entire groundnut crop is affected with a new pest and all the fields are withering. The Agriculture Department has not moved in the matter to afford relief to the ryots and to see that the pest is eradicated.

3-30 p.m. Sir, we were expecting that the Fair Rent Bill will be passed this session. When the Business Advisory Committee proceedings were read out, I thought that the whole thing will be postponed. But, anyway the Hon. the Leader of the House has promised that he will take steps to see that the Bill is taken up in the September session at least.

THE HON. SRI C. SUBRAMANIAM : It is the same session. But, we will take it up in the September sitting.

SRI E. L. RAGHAVA MUDALIAR : Well Sir, I hope that the Bill will be passed at least in September. Thank you, Sir, for the opportunity given to me to speak.

* SRI W. J. FERNANDEZ : Mr. Speaker, Sir, I have great pleasure in supporting the Motion of Thanks to the Governor for his illuminating and interesting Address to both Houses of the Legislature. One cannot but feel a sense of deep regret at the thought that our beloved, amiable and charming Governor who has won the affection and esteem of the citizens of this State by his genial and charming personality, and the deep interest he has evinced in their welfare, will be leaving us early next year. He will undoubtedly carry with him the good wishes of the peoples of this State for health and a long lease of life so that he may give of his rich and ripe experience as administrator to some other State in the Union to which he may be sent as Governor.

The Address is a succinct account of the fine achievements of this Government in their endeavour to improve the lot of the millions for whose welfare they are responsible. Rapid strides have been made since 1952 in the provision of irrigational facilities and the supply of electricity to the rural parts of the country. Large areas will undoubtedly be brought under cultivation and incidentally improve the lot of the agriculturist. Much remains to be done in this direction. But, let credit be given where credit is due. The magnitude of the problem is such that it will mean years of effort before that idealistic state of affairs which critics of the Government expect, can be attained. The various steps being taken will undoubtedly in the long run bring happiness to millions in this State. Meanwhile, our congratulations are due to this Government on their fine record of work for the amelioration of the lot of the millions in this State.

I notice, Sir, that with the reorganization now under way, this Government are considering how best the language for the purpose of administration can be changed over from English to Tamil. This, I suppose, would be a natural consequence of converting this composite State into a linguistic State. I am, however, glad to note a word of caution in the Address that " the transition

would have to be gradual and well thought-out to avoid hardship and controversy." I have a feeling that better counsels will prevail at a later date and that the wisdom of having a strong Southern State will be realized after this linguistic fanaticism dies out, and that there will then be a clamour for a Dakshina Pradesh or something near it, so that it might be necessary to retain English for some time until a national language can replace the English language. Undoubtedly, a strong Southern State would be a greater asset to the Indian Union than several smaller States.

Sir, I notice also that with regard to the rise in prices, this Government are trying to meet the situation by opening fair price shops in vulnerable areas. Relief has not certainly come to the majority in the City of Madras where prices are still soaring. I wish the Government will give this matter their pointed attention and see that the people of this City get relief.

There is one more point which I would like to dwell on and that is with regard to the non-gazetted officers. They have come very much in the limelight of late. Sir, I was once a non-gazetted officer for about twenty years and I can sympathise with the lot of those people. With their small salary and high cost of living, life is really a problem for them. Those in the higher strata of life, cannot realize what the hardships of these low-paid men are. After all, the non-gazetted officers are the backbone of the administration. Nobody will gainsay that. It is very necessary to keep them contented. Without a contented staff you cannot expect good and speedy work. There are ways by which they can express their dissatisfaction to the detriment of the administration. They want some relief and I am sure if this Government make up their mind, they can do something as a bona fides of their intention to help them. I do hope that the question of finance will not stand in the way of giving them some relief and that this Government will find ways and means of giving them the much needed relief.

Thank you, Sir.

SRI M. S. SELVARAJAN : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி கூறும் முகத்தான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கவர்னர் அவர்கள், இந்த ராஜ்யம் முழுவதிலும் நல்ல பருவ மழை இருக்கிறதென்று, தனக்கு இந்த ராஜ்யத்திலுள்ள அபிமானத்தின் பேரால் கூறினார். வாஸ்தவத்திலே மேட்டூர் அணையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடினாலும், திருநெல்வேலியைத் தொடர்ந்திருக்கும் பாபநாசம் மின்சார நிலையத்திற்கு மின்சார சப்ளை கடன் வாங்கும் அளவிற்கு திருநெல்வேலியை அடுத்த பகுதிகளில் பருவ மழை முற்றிலும் தவறியிருக்கிறதென்பதைச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரத்தான் வேண்டியிருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் தாம்பிரபரணி பாசனப் பிரதேசத்தை ஒட்டிய பகுதிகளில் சரித்திரத்திலேயே என்றும் இல்லாத அளவுக்கு இன்றைய தினம் பருவ மழை தவறியிருக்கிறது. ஏண்பதாயிரம் ஏக்கரா நிலம் பாசனம் உடைய தாம்பிரபரணி பிரதேசத்தில் சர்க்காரின் சட்டதிட்டத்திற்கு அல்லது அவர்களுடைய வார்த்தைக்கு இணங்கி பயிர் செய்யப்பட்ட 40 ஆயிரம் ஏக்கராக்களில் உள்ள பயிர்கள் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் நிலை அங்கே தென்படுகிறது. திருநெல்வேலியில் இன்னும் சில பகுதிகளிலும் இத்தகைய வாட்டம் தென்படுகிறது. அதை ஓரளவு சரி செய்வதற்கு அரசாங்கத்தின் 3-38 p.m.

கடன் உதவி, மான்யம் எல்லாம் உதவியிருக்கிறது வாஸ்தவமெனினும், சங்கரன்கோயில், சிவகிரியை அடுத்த பகுதிகள் குடி தண்ணீருக்காக ஏங்கி நிற்கக்கூடிய நிலையில் இருக்கின்றன. அடுத்த ஊர்களுக்குக்கூட சென்று தண்ணீர் எடுத்துக் கொண்டுவர வேண்டிய நிலையில் இருக்கின்றனர். திருச்செந்தூர் தாலூகாவில் பெரும் பகுதி, நாங்குநேரி தாலூகாவில் பெரும் பகுதியில் வறட்சி நிலை மேலும் நீடித்துக் கஷ்டத்திற்கு உட்பட்டிருக்கிறது. அங்கு சர்க்கார் நல்லெண்ணம் கொண்டு, நஞ்சை நிலத்தில் இருக்கக்கூடிய இணறுகளுக்கு ஆயிரம் ரூபாய் கடன் உதவி, ரூ. 500 மான்யம் என்று லட்சம் ரூபாய் அனுமதித்தார்கள். எனினும், அடுத்து புஞ்சைப் பயிர் செய்யக்கூடிய இணறுகளுக்காகவும் கூட இம்மாதிரி கடன் உதவி அவசியம் தேவை. அந்த இடத்தில் உள்ள விவசாயிகளின் கஷ்டத்தைப் போக்குவதற்கு உதவவேண்டும் என்று அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது அனுதாபத்தோடு கவனிக்கப்பட வேண்டிய விஷயம். இவ்வளவு கஷ்டமான நிலையில் இருக்கக்கூடிய அந்த ஜில்லாவை அடுத்து இராமனுதபுரம் ஜில்லாவில் நல்ல மழை பெய்தாலும் புயல், வெள்ளம் எல்லாம் ஏற்பட்டபின் இராமனுதபுரம் ஜில்லாவில்கூட வறட்சி நிலை நீடித்திருக்கிறது. இதுபோன்று நம்முடைய ராஜ்யத்தின் வட பகுதி ஜில்லாக்களில் நல்ல மழை பெய்தாலுங்கூட, மதுரை, இராமனுதபுரம், திருநெல்வேலி பகுதியில் பருவ மழை முற்றிலும் தவறி கஷ்டமான நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது. அங்கு ஆரம்பிக்க இருக்கக்கூடிய ஸ்தல அபிவிருத்தித் திட்டங்கள், சமுதாய நலத்திட்டங்கள், தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள் இவைகளையெல்லாம் அவசரம் அவசரமாக ஆரம்பித்து முடித்தால் தான் அப்பகுதிகளிலுள்ள மக்களுடைய கஷ்டங்களை ஓரளவேனும் போக்க முடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

திருநெல்வேலி, இராமனுதபுரம் ஜில்லாக்களிலே இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்ட 30, 35 ஆயிரம் ஜனங்கள் மிகவும் கஷ்டமான நிலையில் ஒதுங்கியிருக்கிறார்கள். இலங்கையிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானமெல்லாம் தடைபட்டது ஒருபுறமிருக்க, வாழ்க்கை நடத்துவதற்கே வழி தெரியாது கஷ்ட முற்றிருக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். சட்டப்படி, புஸ்தகப்படி, ரிஜிஸ்தர்படி 90 சத விகிதத்தினர் கையிலே பணத்தோடு திரும்பியிருப்பதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தினுடைய கவனத்திற்கும், மாகாண அரசாங்கத்தினுடைய கவனத்திற்கும் அதுதான் தெரிகிறது. ஆனால், வாஸ்தவத்திலே பத்து சத விகிதத்தினர் தான் நல்ல நிலைமையில் பணத்தோடு திரும்பியிருக்கிறார்களேயொழிய, பாக்கி 90 சத விகிதத்தினர் கஷ்டமான நிலைமையிலே வாழ்க்கையை எவ்விதம் துவக்குவது என்றுகூடத் தெரியாத நிலையில் அல்லலுற்றுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பரிதாபக் காட்சி தான் திருச்செந்தூர் பகுதியிலே இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசாங்கம் எவ்வளவு சீக்கிரத்தில் கடனுதவி கொடுக்க முடியுமோ, வர்த்தக சலுகை முதலிய ஊக்கம் கொடுக்க முடியுமோ அவ்வளவும் உடனடியாகச் செய்தால், அந்தப் பகுதியினர் அரசாங்கத்தைப் பாராட்டத் தகுந்தவர்களாவார்கள்.

3-43 p.m. பள்ளிக்கூடத்தில் படிக்கக்கூடிய குழந்தைகளுக்கு மத்தியான உணவு கொடுப்பதற்கு மக்களுடைய உதவி தேவை, இதற்கு மாகாண அரசாங்கமும் உதவி செய்யும் என்ற எண்ணத்தை சர்க்கார் வெளியிட்ட மாத்திரத்தில் எங்கள் ஜில்லாவில் கஷ்டம் ஒருபுறம் இருந்தாலும் ஜில்லா போர்டு, மானேஜ்மெண்ட் நிர்வாகத்திலிருக்கும் நூற்றுக் கணக்கான பள்ளிகள் மாணவர்களுக்கு மத்தியான உணவு கொடுக்கும் நல்ல திட்டத்தை மேற்கொண்டிருக்கின்றன என்பது பெருமை படக்கூடிய விஷயம். இந்த விஷயத்தை மாகாண சர்க்கார் கருத்தில் கொண்டு, மாகாணம் முழுவதும் இந்தத் திட்டம் நீடிப்பதற்கான முயற்சிகள் செய்தால், அந்த எண்ணம் பூர்த்தியாகக்கூடும். இது நமது அரசாங்கத்தின் தலையான கடமை என்று எண்ணுகிறேன்.

மேட்டூர் புதுக் கால்வாயினால் தண்ணீர் பொழிந்து சேலம் ஜில்லா செழிப்புறப் போவதாக கவர்னர் அவர்கள் சொன்னார்கள். இதற்கு முன்பே சமீபத்தில் மத்திய அரசாங்க மந்திரியின் திருக்கரத்தால் மேட்டூர்

கால்வாய் திறக்கப்பட்டு சேலம் ஜில்லா செழிப்படைந்து கொண்டிருப்பது எல்லோருக்கும் நினைவு இருக்கும். மணிமுத்தாறு திட்டம் இந்த வருஷக் கடைசியில் முடிவடையும் தருவாயில் இருப்பதாக கவர்னர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அணைகட்டில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்ட வேலைகள் நிறைவேற்றப்பட்டும்கூட, கால்வாய் வேலை மிகவும் தடைப்பட்டிருக்கிறது. கால்வாய் வேலைகளை நிறைவேற்றுவதற்கு மின்சாரம் வேண்டியதில்லை, கருவி கரணங்கள் தேவையில்லை. ஆள் பலத்தைக் கொண்டே கால்வாய் வேலையை அவசர அவசரமாக நிறைவேற்றலாம். இதை துரிதமாகச் செய்தால் தான் கவர்னர் அவர்களின் வாக்கும் பொய்யாகாமல் இருக்கும், அரசாங்கத்தின் எண்ணமும் ஈடேறும்.

ஆத்தூர் முதலிய 11 கிராமங்களிலே இணைப்புத் தண்ணீர் திட்டம் ஒன்று 1948-ம் வருஷத்தில் உருவாக்கப்பட்டு டாக்டர் ராஜன் அவர்களின் திருக்கரத்தால் ஆரம்பிக்கப்பட்டது. இது 8 வருஷங்களாக நடந்துகொண்டிருக்கிறது. சரியே பெரும் மேஜர் பஞ்சாயத்துக்களில் உட்பட்டுள்ள குக்கிராமங்கள் தெருக்கள் விடப்படாத அளவுக்குப் பார்த்துக் கொள்ளுவது அரசாங்கத்தின் அவசியமான கடமையாகும். திருச்செந்தூர் காயல் பட்டினம் ஆறுமுகனேரி முதலிய மேஜர் பஞ்சாயத்துக்களின் சில பகுதிகள் விடுபட்டு பஞ்சாயத்துக்களில் வரி வசூலிப்பதிலே சிரமம் ஏற்பட்டிருக்கிறது, ஆகவே பஞ்சாயத்துக்களின் முழு பகுதிக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படவேண்டும். 37½ லட்ச ரூபாய் செலவிடும் போது, இன்னும் சில ஆயிரம் சில லட்ச ரூபாய் அதிகம் செலவழித்தேனும் மேஜர் பஞ்சாயத்துக்களிலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைக்கும்படி ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அதைப் போலவே தான் மின்சார இணைப்புத் திட்டமும். தேசத்திலுள்ள 7 லட்சம் கிராமங்களில் 3 லட்சம் 4 லட்சம் 55 கிராமங்கள் பூராவுக்கும் 5 வருஷ காலத்தில் மின்சார வசதி அளிக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. 66 ரூபாய் விலையாக இருந்த ஒரு கம்பம் 112 ரூபாயாக உயர்ந்திருக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. 5 வருஷ கால திட்டம் 10 வருஷ கால திட்டமாக இருந்தாலும்கூட அது **Remunerative** திட்டமாக இருக்க வேண்டும் என்ற முறைப்படி ஒரு திட்டத்தை எடுத்துக்கொண்டால் இப்பொழுது இருப்பது போல் ஒரே பஞ்சாயத்தில் சில உப கிராமங்கள் விடப்படுவதற்கு இடமில்லாமல், எல்லாப் பகுதிகளையும் சேர்த்து இணைக்கும்படியான மின்சார திட்டத்தை அரசாங்கம் மேற் கொள்ளுவதன் மூலம், மக்களின் குறைகளைத் தவிர்ப்பதற்கு முடியும். அதுபோக ஒன்று **connection** பெறுவதற்கு அதிகப்பணம் பெற்று இந்தத் திட்டங்களை குறித்தபடி நிறைவேற்ற அரசாங்கம் திட்டமிட வேண்டும் அல்லது (மின்சார கம்பங்கள் **rails**) அதிக விலை விற்பதற்கு என்ன காரணம் என்பதைத் துருவி ஆராய்ந்து பரிகாரம் காணவேண்டும்.

திருச்செந்தூர் தாலூகாவில் புன்னக்காயல் முதலிய கடற்கரை பிரதேசத்தில் 30 லட்ச ரூபாய் செலவில் கன்னடியன் ஸ்கீமைஞல் பல்ன் எதிர்பார்க்கப்பட்டது. முதல் ஐந்தாண்டு திட்டத்தில் எதிர் பார்க்கப்பட்ட கனனடியன் ஸ்கீம் 2-வது ஐந்தாண்டு திட்டத்தில் கைவிடப்பட்டிருக்கிறது. ஆகவே தொடர்பற்ற கடற்கரைப் பகுதிகளின் விருத்தி எதிர்பார்த்தபடி கடந்த வருடங்களில் நிறைவேறவில்லை. அவைகளுக்கெல்லாம் பயன் படும்படி எந்தெந்தத் திட்டங்களை அவசரமாக நிறைவேற்றலாம் என்று கவனிப்பது அரசாங்கத்தின் கடமை என்று கருதுகிறேன்.

மீன் இலாகா மேற்குப் பகுதியில் **Fishery** பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தியிருப்பது போல், கிழக்குப் பகுதியிலும் ஏற்படுத்தினால் அங்குள்ள வர்களுக்கும் உற்சாகம் அதிகமாகும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

பன்னம்பாரையில் சிமெண்டுக் குறிய **limestone** கிடைப்பதாக 25 வருஷ காலமாக **geological** நிபுணர்கள் கூறி வருகிறார்கள். இந்த பகுதியிலுள்ள மக்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 100-க்கு 50 சத விகிதம்கூட பணம் கொடுத்து உதவத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை அரசாங்கம் அவசரமாக பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

[Sri M. S. Selvarajan] [9th August 1956

கருப்பெட்டிக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்த போதிலும் அதே முறையில் தயாராகும் கல்கண்டுக்கு விலக்களிக்கப்படவில்லை. இதை ஒரு சிறு **clarification** மூலம் செய்யலாம். கல்கண்டு தயாரிப்பதும் ஒரு குடிசை தொழில் தான். ஆகவே, கல்கண்டுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வழிவகை செய்ய வேண்டும்.

விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக **Fair Rent Bill** கொண்டு வரப்போவதாக சொல்லப்படுகிறது. மத்தியில் இருக்கக்கூடியவர்களுக்கு கட்டுக் குத்தகைக்காரர்களுக்கு பயன் அளிக்கக்கூடிய அளவுக்கு இந்த சட்டம் இருக்கக்கூடாது. உழைப்பவர்களுக்கே அதாவது **actual tillers**-க்கு நன்மை பயக்கக்கூடியதாக இருக்க வேண்டும். எந்த எண்ணத்துடன் அரசாங்கம் இந்த சட்டத்தைக் கொண்டு வருகிறதோ அது ஈடேறும் வகையில் சட்டம் அமைய வேண்டும். ஆகவே நில சீர்திருத்தச் சட்டத்துடன் விவசாயிகளுக்குக் குறைந்த பட்சக் கூலியை நிர்ணயம் செய்யும் சட்டம் ஒன்றும் நிறைவேற்றப்பட வேண்டுமென்பது என்னுடைய ஆசை. கவர்னர் பார்வையை இளமையிலேயே இழுக்க நேரிடும் உப்புத் தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்சக்கூலி நிர்ணயம் செய்யக் கூடிய சட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் வெகு சீக்கிரம் வழி செய்ய வேண்டும்.

பதனியை மாலை இரண்டு மணிக்கு மேல் வைத்திருக்கக் கூடாது என்று மது விலக்குச் சட்டம் கூறுகிறது. இதை அநேக மக்கள் சத்துள்ள உணவாக சாப்பிடுகிறார்கள். இரண்டு மணிக்கு மேல் பதனியை வைத்திருக்கக் கூடாது என்று சட்டமிருப்பதால் அதற்குள் சளிக்க வைப்பதற்கு இதனுடன் சில விஞ்ஞான பொருள்களைச் சேர்க்கிறார்கள். இதனால் அதிலுள்ள வைட்மின்கள் எடுபட்டுப் போகின்றன. எங்கள் பகுதியில் பதிவு செய்யப்பட்டிருக்கிற பெருவாரியான மதுவிலக்குக் கேசுகள் பதனியை இரண்டு மணி நேரத்திற்கு மேல் வைத்திருந்த காரணத்துக்காகத்தான். இதற்காக அரசாங்கம் அதிகமான சிப்பந்திகளை நியமித்து பதனியை கள்ளாக மாற்றுகிறார்களா என்பதைக் கண்காணிக்க வழி செய்ய வேண்டுமே தவிர, மணித் திட்டத்தின் பேரில் கேசுகள் பதிவு செய்யக்கூடாது. இதனால் அவர்கள் நல்ல சத்துள்ள உணவை தயாரிக்க முடியாமல் போகும் அபாயம் ஏற்படுகிறது என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கவர்னர் அவர்கள் உரையில் இந்த மாகாணத்திலுள்ள ஜனங்களின் பேரில் நம்பிக்கை வைத்து நல்ல சொற்கள் சொல்லியிருக்கிறார்கள். புயல் பகுதியில் ஜனங்களின் கஷ்டங்களுக்கு அரசாங்கம் குறிப்பாக முதன் மந்திரி அவர்கள் நேரிடையாகவும், அளித்த உதவி மக்கள் மனதில் பதிந்திருப்பதையும் அவர்கள் அதனால் ஆறுதல் அடைந்திருப்பதையும் கவர்னர் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். முன்பு அரசாங்கம் எழுப்பிய 7 கோடி ரூபாய் கடனுக்கு மக்களிடமிருந்து எதிர் பார்த்த அளவுக்கு மேல் இரட்டிப்பு ஆதரவு கிடைத்திருப்பதையும், சமீபத்தில் மக்களின் நலனுக்காக அரசாங்கம் எழுப்பவிருக்கும் கடனுக்கும் மக்கள் முன்மாதிரியே ஆதரவு அளிக்கத் தயாராக இருப்பார்கள் ஒன்று நம்புவதாக கவர்னர் வாயால் சொல்லக் கேட்டிருந்தால் நான் சந்தோஷமடைந்திருப்பேன். ஜனங்கள் ஓரளவுக்கு நிம்மதியாக இருக்கிறார்கள் என்றும், செய்ய வேண்டிய நல்ல காரியங்களுக்கு அவர்களிடமிருந்து எல்லா உதவியும் கிடைத்து வருகிறது என்றும் கவர்னர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றி.

3-53 p.m. **Sri S. THINAKARASAMI THEVAR :** கனம் சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பிரான் அவர்கள் நிகழ்த்திய பிரசங்கம் ரொம்ப அழகான முறையில் இருந்தது. உயர்ந்த கருத்துக்களைப் புகுத்தி இந்த ராஜ்யத்தில் என்ன என்ன காரியங்கள் எந்த எந்த அளவுக்கு நடந்து வருகின்றன, என்ன என்ன காரியங்கள் எந்த எந்த அளவுக்கு நடைபெறப் போகின்றன, மக்களுடைய பொறுப்புகள் என்ன என்பதைப் பற்றியெல்லாம் தெளிவாக அவர்களுடைய பிரசங்கத்தில் கூறியிருக்கிறார்கள். ஒரு முக்கியமான விஷயம் சொல்ல விரும்புகிறேன். இந்த சபையிலிருந்து நமது மலையாள மெம்பர்கள் விலகும் தருணத்தில் இருக்கிறார்கள்,

9th August 1956] [Sri S. Thinakarasami Thevar]

அதே மாதிரி கன்னட மெம்பர்களும் விலக விருக்கிறார்கள். அவர்களுக்கு நம்முடைய ஆசியைத் தெரிவித்துக் கொள்கிறேம். அவர்களுடைய ராஜ்யங்களை நல்ல முறையில் அமைத்து நன்முக நடத்தும்படியாக அவர்களுக்கு நம்முடைய ஆசியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

அடுத்தாற்போல், இந்தப் பிராந்தியத்தில் முக்கியமாக மதுரை ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அங்கே கள்ளர் சீர்திருத்த இலாகா என்ற இலாகா இருக்கிறது. அது பல வருஷங்களாகப் பணியாற்றி வருகிறது. சுமார் 8 லட்சம் மலைக் கள்ளர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களை கல்வி, பொருளாதாரம் முதலிய எல்லாத் துறைகளிலும் முன்னேற்ற மடையச் செய்வதற்காக சர்க்கார் விசேஷ முயற்சி எடுத்துக் கொண்டு பணியாற்றி வருகிறார்கள். இருந்தாலும் கூட, சர்க்கார் அவர்களுக்கு ஒரு சில விஷயங்களில் போதுமான அளவு உற்சாகம் காட்ட முடியாத நிலையில் இருக்கிறது. அதாவது, கடந்த முப்பது வருஷ காலத்தில் சுமார் 8 லட்சம் ஜன சமுதாயம் கொண்ட இந்த மக்களிடையே ஒரு சிலர் தான் படித்திருக்கிறார்கள். ஒரு சிலரே படித்திருந்தாலும் கூட, அந்த ஒரு சிலரிலும் ஒருவர் கூட பெரிய சர்க்கார் உத்தியோகங்களில் (கெஜட் பதிவு பெற்ற உத்தியோகங்களில்) இல்லை. அதற்கும் காரணம் அவர்களுக்கு விசேஷ சலுகை கொடுக்கப்படாதது தான். 1935-ம் வருஷம் வரை அவர்களுக்கு விசேஷ சலுகை இருந்தது. 1935-ம் வருஷத்திற்குப் பின்னர் அவர்களுக்கு விசேஷ சலுகை கொடுக்கப்பட வில்லை. அவர்கள் பிராமணரல்லாதார் ஹிந்து என்ற **(Non-Brahmin Hindu category)**-இல் சேர்க்கப் பட்டிருப்பதால் அவர்களுக்கு விசேஷ சலுகை கொடுக்கப்பட வில்லை. தனிச் சலுகை கொடுக்கப்பட வில்லை என்ற ஒரு காரணத்தால்தான் மாஜி குற்ற பரம்பரையினராக இருந்தாலும் கூட அவர்கள் கெஜட் பதிவு பெற்ற உத்தியோகப் பதவிகளுக்கு வர முடிய வில்லை. ஆகவே உத்தியோகங்களைப் பொருத்த அளவில் அவர்களுக்கு தனிச் சலுகை வழங்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும், கள்ளர்களுக்காக பல ஸொஸைட்டிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. இப்போது சுமார் 300 கள்ளர் ஸொஸைட்டிகள் இருக்கின்றன. இந்த 300 ஸொஸைட்டிகளிலுமாக மொத்தம் எற்படும் வரவு செலவைப் பார்த்தால் அது ரூபாய் 10 லட்சத்திற்கு உப்பட்டுத்தான் இருக்கிறது. இவை சாதாரணமாக சர்க்காரால் நிறுவப்பட்ட ஸொஸைடிகள். உதாரணமாக, கள்ளர் ஸொஸைடி அல்லாத ஸொஸைடிகளில் ஒரு ஸொஸைடிக்கு ரூபாய் 4 லட்சத்திற்குக் குறைவாக வரவு செலவு கொண்ட ஸொஸைடியே கிடையாது. ஆனால் இந்தக் கள்ளர் ஸொஸைடிகள் விஷயத்தில், 300 ஸொஸைடிகளிலுமாக மொத்தம் உள்ள தொகை ரூபாய் பத்து லட்சம் தான். இப்படி இருந்தால், இந்த ஸொஸைடிகள் எந்த முறையில் நடக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். சாதாரணமாக ரூபாய் 2 கோடி, ரூபாய் 3 கோடி வைத்து நடத்தப்பட வேண்டிய ஸொஸைடிகள் ரூபாய் 10 லட்சத்தில் நடத்தப்படுகின்றன என்றால் எந்த விதமான காரியமும் செய்ய முடியாது. பேச்சளவில் 300 ஸொஸைடிகள் எற்படுத்தியிருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ளலாமே தவிர உண்மையில் மக்கள் எந்த விதமான நன்மையும் அடைய முடியாது. இது சம்பந்தமாக இந்த சட்ட சபையில் நாங்கள் நான்கு வருஷங்களாக பல கேள்விகள் கேட்டிருக்கிறோம். மதுரை சென்ட்ரல் பாங்குக்கு சர்க்கார் அவசியம் நிதி உதவி செய்து இந்த ஸொஸைடிகளுக்கு பண உதவி செய்ய வேண்டுமென்று நாங்கள் பன்முறை கோரியிருக்கிறோம். இது சம்பந்தமாக சர்க்கார் இதுவரை எந்த விதமான முடிவும் செய்ததாகத் தெரியவில்லை. ஆகவே சென்ட்ரல் பாங்குகள் மூலமாக இந்த ஸொஸைடிக்கு பண உதவி செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்கள் பக்கத்தில் வைகை நீர்த்தேக்கத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டமும் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டம் சம்பந்தமாக ஒரு முக்கியமான விஷயத்தை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தத் திட்டத்தால் சுமார்

14 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த 14 கிராமங்களும் ஆயிரம் குடும்பங்கள் கொண்டவை. ஆயிரம் குடும்பங்களும் 6,000 ஜனத் தொகை கொண்டவை. இந்த 1,000 குடும்பங்களும் இந்தத் திட்டத்தால் பாதிக்கப்பட்டு வேறு இடங்களுக்குச் சென்று குடியேற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புன ரமைப்பு விஷயமாக பரிசீலனை செய்வதற்காக மதுரை ஜில்லா கலெக்டர் தானும் எ. எஸ். சுப்புராஜ், எம்.எல்.ஏ., கே. ராஜாராம், எம்.எல்.ஏ., மூக்கையாத் தேவர், எம்.எல்.ஏ., கள்ளர் ஸ்பெஷல் டிப்டி கலெக்டர் உள்பட ஐந்து பேர்கள் கொண்ட ஒரு கமிட்டியை நிறுவியிருக்கிறார். இந்தக் கமிட்டி அங்கத்தினர்கள் அந்தப் பிரதேசத்தில் ஆங்காங்கு சென்று எந்த எந்த இடத்தில் எவ்வளவு நிலங்களை ஜாரி செய்யமுடியும் என்பதையெல்லாம் கவனிப்பதற்கு அந்தக் கமிட்டி நிறுவப்பட்டது. அவ்விதமே நாங்கள் அங்கே சுற்றுப்பிரயாணம் செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு எங்கெல்லாம் எவ்வளவு பூமி கொடுக்கலாம் என்று பரிசீலனை செய்தோம். அப்படிப் பரிசீலனை செய்ததில் பெரியார் திட்டத்தில் பல கண்மாய்களின் ஆயக் கட்டுகள் பெரியாற்று தண்ணீரை கொண்டு, கண்மாய்களை பெருக்காமல் நேரடி கால்வாய்கள் மூலம் பாசன வசதி செய்திருப்பதன் காரணமாக அந்த கண்மாயி (tank bed)-ன் நீர்பிடிக்கும் எல்லா பிரதேசங்களும் எந்த விதமான உபயோகமின்றி வீணாக கிடக்கின்றது. ஆகவே இந்த உபயோகமற்ற (waste lands) பல கண்மாய்களின் ஆயக்கட்டுகள் நேரடியான பாசன வசதிகள் உள்ளவைகளாய் இருப்பதால் பல waste lands இருப்பதையும், பல தரிசு நிலங்கள் இருப்பதையும் பார்த்தோம். அந்த நிலங்களைப் பெறுவதற்கு கமிட்டி சர்க்காருக்கு ரிப்போர்ட் சமர்ப்பித்திருக்கிறது. அந்த நிலங்களை அவசியம் ஜாரி செய்து வைகை நீர்த்தேக்கத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுக்க வேண்டும். அந்தப் பிராந்திய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள், மேலும் அவர்கள் மாஜி குற்ற பரம்பரையினர். ஆகவே அவர்களுக்கு போதுமான அளவு நிலங்களை ஜாரி செய்து கொடுக்கவேண்டும். மேலும், அங்குள்ள ஆயிரம் ஏக்கர் நிலத்தில் ஒரு நபருக்கு 2 ஏக்கர் நஞ்சை நிலம் வீதமும் 5 ஏக்கர் புஞ்சை நிலம் வீதமும் கொடுத்தால் அவர்கள் விவசாயம் செய்வதற்கும் அனுகூலமாக இருக்கும் என்றும் சர்க்காருக்கு ரிப்போர்ட் சமர்ப்பித்தோம். ஆனால் இது விஷயத்தில் சர்க்கார் இது வரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. மேலும் இவர்களைப்பற்றி பல விதமாகப் பேசப்படுகிறது. இவர்கள் பல துஷ்டத்தனங்கள் செய்பவர்கள் என்று அந்தப் பிராந்திய த்தில் மக்கள் பேசிக்கொள்கிறார்கள். உண்மையில் அவர்கள் துஷ்டத் தனங்கள் செய்வதற்குக் காரணம் வறுமைதான். அவர்களை சீர்திருத்தம் செய்யவேண்டுமானால் அவர்களுடைய வறுமையை நீக்கவேண்டும். அவர்களை விவசாயத்தில் ஈடுபடச் செய்வதற்காக அவர்களுக்கு நிலங்களைக் கொடுத்தால் அவர்களை சீர்திருத்தம் செய்ய முடியும். அம்மாதிரிச் செய்தால் அவர்கள் சீர்திருத்தம் ஆவதோடுகூட அந்தப் பிராந்திய மக்களும் அமைதியாக வாழ முடியும். ஆகவே இந்த விஷயத்தில் சர்க்கார் விசேஷ கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளர் சீர்திருத்த இலாகாவில் சுமார் 300 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஆனால் அங்கே உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இல்லை. நம்முடைய சர்க்காரின் கொள்கை என்ன? இன்றைக்கு எந்தப் பிராந்தியத்தை எடுத்துக் கொண்டாலும், உயர்தரப் படிப்பைப்பற்றி கவலை இல்லை, கல்லூரிப் படிப்பைப்பற்றியும் கவலை இல்லை. எல்லோருக்கும் உயர்தர ஆரம்பக் கல்வியாவது கொடுக்க வேண்டும் என்பதுதான் சர்க்காரின் முக்கியமான திட்டம். இந்தப் பிராந்தியம் 750 சதுர மைல் கொண்ட பிராந்தியம். இங்குள்ள 300 பள்ளிக்கூடங்களில் 30 பள்ளிக்கூடங்களாவது உயர்தர ஆரம்பப் பாடசாலைகளாக இருக்கவேண்டாமா? அங்கே 10 உயர்தர ஆரம்பப் பாடசாலைகள் கூட இல்லை. அங்கே நிறைய உயர்தர ஆரம்பப் பாடசாலைகளை அமைக்க வேண்டும் என்று நாங்கள் அடிக்கடி சர்க்காரைக் கேட்கிறோம். அங்குள்ளவர்கள் பி. ஏ. படிக்காவிட்டாலும், பெரிய உத்தியோகஸ்தர்கள் கிடைக்கா விட்டாலும், அவர்கள் உயர்தர ஆரம்பக் கல்வியையாவது பெற வேண்டாமா! அங்கே 6-வது அல்லது

8-வது வகுப்பு வரை கொண்ட உயர்தர ஆரம்பப் பாடசாலைகளையாவது அமைக்க வேண்டும் என்று சர்க்காரை நாங்கள் அடிக்கடி கேட்டோம். இந்த வருடத்தில் அங்கே பல உயர்தர ஆரம்பப் பாடசாலைகளை அமைப் பதற்கு சர்க்காரை அனுமதி கேட்டோம். அனுமதி கிடைக்கவில்லை. அதோடு கூட, அங்கே இரண்டொரு ஹைஸ்கூல்களையும்—உடனடியாக ஏற்படுத்தா விட்டாலும், முதலில் மத்தியப் பள்ளிகளாக (Middle Schools) ஆரம் பித்து பிறகு அடுத்தடுத்த வருடங்களில் நான்காவது பாரம், ஐந்தாவது பாரம் என்று ஒவ்வொரு வகுப்பாக உயர்த்தியாவது—ஏற்படுத்துவதற்கு சர்க்காரை அனுமதி கேட்டோம். சர்க்காரை மன்றாடிக் கேட்டுக் கொண் டோம். சர்க்கார் அனுமதி கொடுக்கவில்லை. இது விஷயத்தில் சர்க்கார் ஒன்றுமே செய்யவில்லை. ஆகையால் எங்கள் பிராந்தியம் படிப்பில் பிற்பட்ட பிராந்தியமாக இருக்கிறது. பல லட்சக்கணக்கானவர்கள் உள்ள கூட்டத் திலிருந்து ஒரு சிலர் தான் படித்து வந்திருக்கிறோம். ஆகவே அங்கே உயர்தர ஆரம்பக் கல்வியையாவது எல்லோருக்கும் அளிப்பதற்கு சர்க்கார் அவசியம் வழி செய்ய வேண்டும். எந்த அளவுக்கு சாத்தியமோ அந்த அளவுக்கு அங்கே உயர்தர ஆரம்பப் பள்ளிகளை அமைக்க வேண்டும் என்று சர்க்காரை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வருஷம்கூட எஞ்சினியரிங் காலேஜில் படிக்க வைக்க மிகுந்த பிரயாசைப்பட்டு நான்கு பிள்ளைகளை தயார் செய்தோம். ஆனால் ஒரு பிள்ளைக்குக் கூட admission கிடைக்க வில்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மெடிகல் காலேஜில் படிக்க வைக்கவும் முயற்சிகள் எடுத்து வருகிறோம். என்னதான் செல் வாக்கு இருக்கிற பக்கம் தான் காரியம் வெற்றியடைகிறதே ஒழிய நாங்கள் எதைச் செய்தாலும் வெற்றியடைய முடிவதில்லை. The most backward class of the backward class ஆகிய நாங்கள் ex-criminal tribes என்ற வரையறையுடன் நிற்கின்றோம். சர்க்கார் special concession காட்டியதில் ஒழிய ஒரு inch-கூட நாங்கள் முன்னேற முடியாது. ஆகவே, சர்க்கார் இந்த மாதிரி மிகவும் பாதிக்கப்பட்ட சமுதாயத்தினருக்கு ஓளவு தனிச் சலுகை காட்ட வேண்டியது மிகவும் அவசியம் என்று வற்புறுத்த விரும்புகிறேன். அப்படி காட்டவில்லையெனில், நாங்கள் முன்னேற எடுத்துக்கொள்ளுகிற முயற்சி, செய்யும் பணச் செலவு எல்லாம் வீணாகும் அளவிற்கு போய் சேரும் என்பதை சர்க்காரிடத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், சமுதாய நிலத் திட்டங்கள், கேசிய அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் எங்கள் பிராந்தியத்தில் நன்கு வெற்றியடைந்தி ருக்கின்றன என்பதை பெருமையுடன் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். இந்தத் திட்டங்கள் உடல் உழைப்பை அடிப்படையாகக்கொண்டவை. உழைப்புத்தான் இந்த நாட்டின் உண்மையான செல்வம், பணமில்லை, நோட்டு இல்லை, என்பதை நாங்கள் நன்குணர்ந்து, இந்த திட்ட வேலைகளில் ஆர்வம் கொண்டு, உழைப்பை நல்கி எங்கள் தாலுக்காவில் அவைகளை வெற்றியடைய செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் அப்படி வெற்றியடைய செய்வதிலும் ஒரு சிறிய சங்கடம், தடங்கல் இருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சர்க்காரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அது என்னவென்றால், சில இடங் களுக்கு B.D.Os. (Block Development Officers) கெட்டிக்காரர்களாகவும், திறமையானவர்களாகவும் வந்து சேருகிறார்கள். மற்றும் சில இடங்களுக்கு போடப்படுபவர்கள் சொத்தையான திறமையற்றவர்களாக இருக்கிறார்கள். இந்த கிராம முன்னேற்ற அதிகாரிகளாக போடப்படுபவர்களுக்கு கிராம மக்களோடு சகஜமாகப் பேசி, அவர்களை கவர்ச்சி செய்யக்கூடிய திறமை இருக்கவேண்டும். இந்த வேலைகளுக்கு, பெயின்டு டியார்ட்மெண்டைச் சேர்ந்த ஆட்களைத்தான் போடவேண்டுமென்று கொள்ளாமல், திறமையான ஆட்கள் எந்த இலாகாவில் இருந்தாலும், அவர்களை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த முன்னேற்ற அதிகாரி உத்தியோகத்திற்கு, சாதாரண ஜனங்களோடு, அதாவது விவசாயிகள் மற்றும் உள்ள இதர தொழி லாளிகள் இவர்களோடு சகஜமாக படிக்கக்கூடிய குணம், திறமை உடைய ஆட்களாக இருக்க வேண்டும். வேறு எந்த qualification-ம்

தேவையில்லை என்பதையும் சர்க்காருக்கு தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். இந்த விஷயத்தையும் சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டி ருக்கிறார்கள்போல் தெரிகிறது.

மணிமுத்தாறு திட்ட வேலை முடியும் தருவாயில் இருக்கிறது. போன மாதம் 24-ம் தேதி நான் சென்று பார்த்தேன் அப்படிப் பார்க்கும் போது இந்த அணைக்கட்டினால் தண்ணீர் போதுமான அளவுக்கு இடைக் குமா என்ற சிறு சந்தேகம் எழுந்தது. சர்க்கார் இதனை பரிசீலனை செய்திருப்பார்கள் என்றே நம்புகிறேன். இந்த திட்டத்தை துரிதமாக நிறைவேற்ற எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளுக்காக சர்க்காரை நாம் பாராட்ட வேண்டியது கடமையாகும்.

அடுத்தாற்போல் **Periyar Hydro-Electric Scheme**-ம் விசேஷ முறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. எங்கள் பிராந்தியத்திற்கு தற்போது செய்யப்பட்டிருக்கிற மின்சார விஸ்தரிப்பு போதாது. இந்தியாவை எடுத்துக்கொண்டால், சென்னை மாகாணத்தைப் போல் வேறெங்கும் மின்சார விஸ்தரிப்பு விசேஷமான முறையில் செய்யப்பட வில்லை. சென்னை மாகாணம்தான் இந்த இனத்தில் முதல் ஸ்தானம் வகிக்கிறது. அதை புகழ்கிறேன். ஆனால் அதே சந்தர்ப்பத்தில், சென்னை சர்க்கார், மிகவும் பிற்போக்கான பிரதேசங்களுக்கு விசேஷ சலுகை காட்டி, மின்சார விஸ் தரிப்பு செய்வது அவசியம் என்று சொல்லிக் கொண்டு, எனக்கு பேச இந்த சந்தர்ப்பத்தை அளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*** Sri B. K. NALLASWAMI** : கனம் சபாநாயகர் அவர்
4-06 p.m. களே, கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆத ரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இன்னும் சிறிது காலத் தில் நம்மிடையே இருந்து மலையாள நண்பர்கள் பிரிந்து செல்ல இருக்கி றார்கள். அவரவர் மொழி அடிப்படையில் ராஜ்யங்கள் சீரமைக்கப்பட்டு இயங்க வேண்டு மென்று மக்களெல்லாம் இன்று விரும்பக்கூடிய நிலை யில் இருக்கிறார்கள். அந்தந்த ராஜ்ய மக்கள் புரிந்து கொள்ள கூடிய தாய் மொழியில் அரசாங்கம், கோர்ட்டு முதலியவற்றின் நடவடிக்கைகள் நடப்பது நல்லதென்று வினோபாஜீ போன்ற பெரியோர்கள்கூட சொல்லி யிருப்பது மிக்க மகிழ்ச்சிக்குரிய விஷயம். இந்த முறையில் பிரிந்து போவதில், சில நண்பர்களுக்கு சிறிது மனக்கசப்பு சமீபத்தில் ஏற் பட்டு இப்போது மறைந்திருக்கிறது.

காலையிலே உணவுப்பற்றுக்குறைய பற்றியெல்லாம் நாம் பேசிக் கொண்டிருந்தோம். மலையாளத்தில் உணவுப் பற்றுக்குறை அதிகமாக இருக்கிறது என்று கூறினார்கள். இந்த சந்தர்ப்பத்தில் சபையின் கவனத் திற்கு ஒரு விஷயத்தை கொண்டு வர விரும்புகிறேன். அதாவது மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, திருவாங்கூர் கொச்சி ராஜ் யத்திற்கு பயன்படாது, கடலில் வீணாக வடிகிற நதிகளின் நீரை, நமது தமிழ் நாட்டுக்கு உபயோகப்படுத்தும் வகையில், பிரிந்து செல்லக் கூடிய மலையாள நண்பர்கள் தங்களுடைய செல்வாக்கை உபயோகப்படுத்தி ஒத் துழைத்தால், மலையாளத்தில் பஞ்சம் வரக்கூடிய காலத்தில் அண் டையில் இருக்கிற தமிழ் நாட்டு எல்லைப் பிரதேசம் உதவிக்கு வரும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அத்துடன் இது இரண்டு ராஜ்யங்களுக்கும் உள்ள நல்லுறவை பலப்படுத்த மிகவும் ஏதுவாக இருக்கு மென்பதை தெரி வித்துக் கொள்ளுகிறேன்.

மேட்டூர் நீர் தேக்கத்தில் தண்ணீர் நிறைந்திருக்கிறது 45, ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதிளிக்கும் என்ற சந்தோஷம் ஒரு புறம் இருந்த போதிலும்கூட, பவானி தாலூக்காவில் பருவ மழை தவறி விட்டதால் கால் நடைக்கு தீவனம் இல்லாத நிலைமையில் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. மேலும் வெளி ஜில்லாக்களிலிருந்து கொண்டு வர வேண்டிய வசதிகள் இல்லாமலிருப்பதால், விவசாயிகள் கஷ்டப்படக்கூடிய

நிலையில் இருக்கிறார்கள். கால்நடைக்கு தீவனம் கொண்டு வர குறைந்த சலவில் போக்கு வரத்து வசதி செய்து சர்க்கார் உதவியினால், பவானி தாலூக்காவில் இருக்கிற விவசாயிகள் சந்தோஷம் அடைவார்கள்.

மேட்டூர் வாய்க்காலில் தண்ணீர் விட்டதால் மகிழ்ச்சி யடைந்தாலும் கூட, நீர் தீர்வை விஷயத்தில் பவானி வாய்க்கால் சாகுபடி பிரதேசத் திற்கும், மேட்டூர் வாய்க்கால் சாகுபடி பிரதேசத்திற்கும் பாரபட்சம் காட்டப் படுகிறது என்பது மிகவும் வருத்தத்தை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. பவானி வாய்க்கால் சாகுபடி பிரதேசத்தில் முதல் ஆண்டு ¼ தீர்வையும், இரண்டாவது ஆண்டு அரைத் தீர்வையும், மூன்றாவது ஆண்டு முக்கால் தீர்வை யும், நான்காவது ஆண்டு முழுத் தீர்வையும் வசூலிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சென்ற **Mettur Canal Irrigation Cess Select Committee** கூட்டத்தில், அமைச்சர்களும் மூன்று வரு ஷத்திற்கு நீர் தீர்வை சலுகை காட்டப்படும் என்று சொல்லியிருந்தும் கூட, இன்று மேட்டூர் வாய்க்கால் சாகுபடி பிரதேசத்தில் முழுத் தீர்வை பலவந்தப்படுத்தி வசூலிக்கப்படுவது மனதை வருத்துகிறது. இருந்தாலும், சர்க்கார் முழுத் தீர்வை வசூலிப்பதை தடை செய்து உத்திரவு போட்டிருக்கிறார்கள். நிலைமை அங்கு இன்னும் சீர்படவில்லை. பூமியை சீர் திருத்துவதற்காக மூன்று வருஷத்திற்கு நீர் தீர்வை விஷ யத்தில் சலுகை கொடுக்கவேண்டும் என்று செலெக்ட் கமிட்டியில் தீர்மானம் எழுத்து மூலமாக செய்யாவிட்டாலும் கூட, அமைச்சர்கள் இருந்து ஒப்புக்கொண்ட ஒரு விஷயம், இன்று மறந்த விஷயமாக போய்விட்டது என்பதை கவனிக்கும்போது, மிகவும் வருத்தத்தை அளித்துக்கொண்டிருக்கிறது.

பவானி வாய்க்காலில், அங்கே சீர்திருத்த ஏற்பாடு செய்வற்கு, 3 வருஷ சலுகை கொடுக்கவேண்டும் என்றால், மேட்டூர் வாய்க்கால் பிரதேசத்தில், இங்கே, எப்படியிருக்கிறது என்பதைச் சற்று சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். அதற்கும் இதற்கும் இந்த வித்தியாசம் ஏன்? அதற்கு மட்டும் ஏன் அந்த சலுகை, மேட்டூருக்கு ஏன் இல்லை என்பதுதான் எனக்கு மிக வருத்தத்தை அளிக்கின்றது. இந்த வித்தியாசத்தை கவர்ன் மெண்டார் கவனித்து நியாயம் வழங்க கடமைப்பட்டிருக்கின்றார் என் பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நாம் உற்பத்திப் பெருக்கை பற்றி எல்லாம் பேசிக் கொண்டு வந்தோம். பவானி நதித்தீரத்தில், ஆயிரக் கணக்கான ஏக்கரா பூமிகளுக்கு மாடுகளை இழுத்துத் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. ஜில்லா கலெக்டர் அவர்கள் இப்பொழுது தண்ணீர் பாயக்கூடிய நிலங்களுக்கெல் லாம் பம்பு ஸெட்டுகள் வைத்துக்கொள்ள அனுமதி கொடுத்து விடலாம் என்று சிபார்சு செய்திருந்தும் கூட, ஒரு வருஷமாகியும் கூட, இன்றைய வரையிலும் அது சம்மந்தமான எந்த உத்தரவும் ரிவின்யூ போர்டி லிருந்து வந்ததாகத் தெரியவில்லை. அரசாங்கம் அதைப்பற்றிக் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. அதுவும் கால்நடைத் தீவனம் கஷ்டமாக இருக்கக்கூடிய இந்தக்காலத்தில், ஏற்கனவே தண்ணீர் எடுத்துக்கொள்ள உரிமை பெற்ற ஆயக்கட்டுக்காரர்கள், பம்பு ஸெட் வைத்துக் கொள்வதை, அனுமதிப்பதில் எந்தக் கஷ்டம் இருக்கிறது என்பதுதான் எனக்கு புரியவில்லை. ஆகையினால், பம்பு செட்டுகள் ஆயக் கட்டுதாரர்களாகிய நீர்ப் பிரசனையில் உரிமை உள்ளவர்களுக்கு கிடைப் பதில் அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்தினால் கால்நடை களுக்கு தீவனம் கிடைக்காத இந்நிலையில் மிகவும் நல்லது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அடுத்தபடியாக, விற்பனை வரி பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விற்பனை வரியில், ஒரு முனைவரி போட மசோதா வந்திருக்கிறது. வியாபார சமூகத்தினருக்கு ஓரளவு திருப்தி அளிக்கும். இருந்தாலும் கூட, முக்கியமான இனத்தில் மில்துணியை ஒரு முனை விற்பனை வரியும் ரொம்ப சுலபமாகச் சேர்த்து இருக்கலாம். ஆனால் அது சேர்க்கப்பட்டில்லை. புகையிலை வியாபாரிகள், ரொம்ப காலமாக இந்த விற்பனை வரியை, சென்டரல் எக்ஸைஸோடு வசூல் செய்து எடுத்துக்கொண்டால், நமக்கு விற்பனை வரித் தொந்தரவு

இல்லாமல் இருக்கும் என்று இளர்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், அது ரொம்ப நியாயமானது. நமக்கு, சென்னை அரசாங்கத்துக்கு எந்தவிதத்திலும் விற்பனை வரி தப்பி விடாமல் கிடைத்துவிடும். அந்த வழி முறையைப் பின்பற்றினால், மிகவும் நல்லது. புகையிலை வியாபாரிகள் அத்தனை பேரையும் திருப்திப்படுத்துவது ஆகும் என்பதையும் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கரும்பு வெல்லத்தை ஒரு மூன்று வரியில் சேர்க்க வேண்டுமென்று இன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ½ அணா ஒரு ரூபாய்க்கு வரி போடுவதாகப் பத்திரிகையில் பார்த்தேன். வெல்லம் சாதாரணமாக, 1, 2 கைகளுக்கு மேல் மாறுவது இல்லை. எனினும், கிராமப் பிரதேசங்களில் வழக்கமாக, இப்போது இருக்கும்படியான பழுப்புச் சர்க்கரைக்கு வரியிலிருந்து விதிவிலக்குக்கொடுத்து இருக்கிறோம். வெல்லத்திற்கு வரி என்றால் விவசாயிகள் வெல்லத்தை உற்பத்தி செய்யாமல் இருப்பார்கள். பழுப்பு சர்க்கரை தயாரிக்க முடியாத கரும்புச் சாற்றை வெல்லமாக விவசாயிகள் மாற்றுகிறார்கள். இந்த வரி விதிப்பினால் இந்த விவசாயிகளை ரொம்பவும் பாதிக்கக்கூடிய விஷயமாக வந்து சேரும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஏற்கனவே, சட்டத்தை புரிந்துகொள்ளாத சில விற்பனை வரி அதிகாரிகள், விவசாயிகளிடம் சென்று "கணக்கு காட்டு" என்றெல்லாம் தொந்தரவு செய்திருக்கிறார்கள் எங்கள் தாலூகாவில் என்பதையும் நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். வெல்லத்துக்கு ஒரு மூன்று விற்பனை வரி போட்டால், வருமானம் வருமென்ற நினைப்பில் அநேக விதங்களுக்கு நல்லது என்பது அரசாங்கத்தின் எண்ணமாய் இருக்கலாம். விவசாயிகளுக்கு வெல்லத்திற்கு ஒரு மூன்று வரி போடுவதன் மூலம், வெல்ல உற்பத்தி பண்ணமுடியாது போகலாம் என்பதையும் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை விஸ்தரிப்பதாய் இருக்கின்றார்கள். அதிலும், எங்கள் தாலூகாவிலே ஒரு சில கிராமங்களுக்கு மட்டும் தான், சமுதாய அபிவிருத்தித் திட்டம் பரவியிருக்கிறது. அது மேட்டூர் வாய்க்கால் பிரதேசத்துக்கும் இவ்வருஷம் விஸ்தரிக்கப்பட்டால், வாய்க்காலால் நன்மையடையும் கிராம மக்கள் இந்தத்திட்டம் ஓரளவுக்கு வெற்றிகரமாக நடத்திக் கொண்டு, அங்கே அவர்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொள்ள, ரொம்ப சௌகரியமாக இருக்கும் என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கிராமக் கடன் வசதிகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. விவசாயிகளுக்கு, கிராமக் கடன் வசதி, ரொம்ப உபயோககரமாக இருக்கும், அதிலும், முக்கியமாக, வெள்ளாமையின் பேராலே, கடன் உதவியை, விவசாயிகளுக்கு, ரொம்ப உதவியாய் இருக்கும். பயிரின் பேரில் வட்டிக் கடன் திட்டம் இந்தத் திட்டத்தில் இருக்கிறதா என்பது தெரியவில்லை. சொந்த பூமியில்லாத விவசாயிகளுக்குக் கோவாபரேடிவ் சொஸைடியில் கடன் கிடைப்பதே கிடையாது. ஆகையால்தான், பயிர்களின் பேரில் கடன் கொடுப்பதற்கு விவசாயிகளுக்கு ஏற்பாடு செய்தால், ஒத்தாசையாய் இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் கடைசியாக ஒன்றே ஒன்று, வீடு கட்டும் திட்டத்தைக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் பேப்பரில் படித்தேன், சில நாட்களுக்கு முன்னால் மத்திய அரசாங்கம் கொடுக்க இருந்த 123 கோடி ரூபாய் கடன் உதவும், வீடு கட்டும் திட்டம் கவனிக்கப்படாமல் போனதால், அதை உபயோகப்படுத்தாமல் போய்விட்டதாகப் படித்தேன். இது உண்மையாய் இருக்குமென்று நான் நினைக்கிறேன். என் என்றால் அதுபற்றி மறுப்பு எங்கேயிருந்தும் வரவில்லை. அப்படியிருந்தால் . . .

The Hon. Sri C. SUBRAMANIAM : மறுப்பு பேப்பரில் வந்து விட்டது. நீங்கள் பார்க்கவில்லை.

Sri B. K. NALLASWAMI : அப்படியானால் நான் திருத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, பவானி நீர், வாய்க்காலில் பாய ஆரம்பித்து விட்டால் அங்குள்ள சில சேரி

களுக்கு பாதுகாப்புக்கு, ஒன்றுமில்லை. பூமி உரம்பெடுத்துப்போனால், பவானி சாகர் மேட்டூர் வாய்க்கால் பிரதேசங்களில் 40, 50 சேரிகளை அப்புறப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படுமாதலால், அவைகளை மாற்றி அமைப்பதற்கு, இந்த வீடு கட்டும் திட்டம் அமுலுக்கு வரவேண்டும். மேட்டூர் கால்வாய் பிரதேசத்தில், 3, 4 சேரிகள், குடும்பம் குடும்பமாக, பாதுகாப்பதற்கு, இந்தத் திட்டம் உடனே வந்து ஆகவேண்டும். தண்ணீர் நின்றவுடனே அவர்களுடைய தொல்லை ஓரளவு நீங்கி விடுகிறது. தண்ணீர் வந்தவுடனே அவர்களுக்கு வீட்டு பிரச்னை மறுபடியும் உண்டாகிவிடுகிறது. எந்தவிதமான நடவடிக்கையும் இன்னும் எடுக்கப்படாமல் இருப்பதுதான் ரொம்ப வருந்தத் தக்க விஷயம். மத்திய அரசாங்கம் கடன் உதவி செய்கிறது. ஜனங்கள் தவணைகளிலேயே பணத்தை கட்டுவதற்கு தயாராக இருக்கிறார்கள். ஆனால் உரிய காலத்திலே, போதுமான அதிகாரிகள் இருந்து இதைக் கவனிக்காமல் இருப்பதுதான் அந்த திட்டம் நிறைவேறாமல் இருப்பதற்குக் காரணம் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அந்த முறையிலேயே இப்பொழுது புதிதாக வாய்க்கால் வெட்டி தண்ணீர் வந்த பிறகு ரொம்ப கஷ்டம் எற்பட்டு இருக்கிறது. நிதி மந்திரி அவர்கள் நேற்றுதான் அந்த வாய்க்காலைத் திறந்து விட்டு வந்திருக்கிறார்கள். இந்த இரண்டு நாட்களிலே அங்கு உரம் எடுத்து இருக்கும். ஆகவே வீடு கட்டும் திட்டத்தை கவனிப்பதற்கு யாராவது ஒரு அதிகாரியை நியமித்து காரியங்களைச் செய்தால் பிரதேச மக்கள் அரசாங்கத்தை வாழ்த்துவார்கள். அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகையால் உடனடியாக ஏற்பாடு செய்வதற்கு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக, எங்கெங்கோ இருந்து எல்லாம் பெர்டிலைசர்களை கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் ஒரு சிறிய விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். மலைப்பிரதேசங்களில் இயற்கையாக உரம் இருக்கும். கால்நடைகள் இருக்கும். சாணம் கிடைக்கும். உள் கணக்கில் வீணாகிறது. எங்கள் தாலூகாவிலே அறுபது சத விகித விஸ்தரணம் மலைப் பிரதேசம். அதிலே அநேக டன் சாண உரம் வீணாகிக்கொண்டு இருக்கிறது. அதை மலைவாசிகள் உபயோகப்படுத்தினால் அதிக இயற்கை வளம் காரணமாக பயிர் அதிகமாக வளரும் போது காய்ந்துவிடுகிறது. அவைகளை எல்லாம் விவசாய இலாகா கீழே கொண்டு வந்து விவசாயிகளுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்தால் நல்ல உற்பத்தி பெருக முடியும். விவசாயிகளுக்கு பெரிய உதவியாக இருக்கும் என்று தெரிவித்துகொண்டு இந்த சந்தர்ப்பத்தை கொடுத்ததற்காக தலைவர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*** Sri T. C. NARAYANAN NAMBIAR :** Mr. Speaker, I am very happy to hear from His Excellency that some of the Members of the House will be going to Karnataka and Kerala. It is particulary significant at this time. Since yesterday and day before-yesterday, news has appeared in the Press that some of the defeated Gods were trying to create a new heaven, that is "Dakshina Pradesh" and were attempting again to sabotage the formation of the new Kerala and other linguistic States. We hear such news from Delhi. Anyhow, I am happy to note that His Excellency—though advised by his Council of Ministers—has stated that in the transition period everything will be done to make the transition smooth and easy. In this connexion, I have to point out—I am sorry for doing that—that in paragraph 2 he has made certain remarks. He has stated therein, "Under the proposed reorganization, some of the predominantly Tamil-speaking areas of the Travancore-Cochin State will merge with this State". He has stated, "some of the predominantly Tamil-speaking areas". From

[Sri T. C. Narayanan Nambiar] [9th August 1956

this, it is conspicuously clear that there are some other predominantly Tamil-speaking areas which are not included in the Reorganization Bill. It is very clear. I do not object to it. There may be such places and disputes relating to those areas could be settled. When one side of the problem is mentioned, it is just and courtesy also demands that the other side of the picture should also be mentioned. He should have made mention of the predominantly Malayalam1speaking areas which are to be included in the proposed Kerala State. I am confident that these boundary disputes can be settled and should be settled amicably by fraternal methods. When one side is mentioned, the other side should also be mentioned. It is only to point out that aspect of the matter I make a reference to the relevant portion of the Governor's Address. (Interruption.) Yes, yes, that could be rewritten without any difficulty and without doing injustice to the language also. I wish to refer to another fact which may be unhappy to the Hon. Leader of the House and to me also. Anyway, I have to refer to it, because, it is only by frank discussion and placing of facts that misunderstandings can be removed. Then only fraternity and unity between the people of the neighbouring States can be maintained. About the allocation of properties, even elephants, livestock, etc., are transferred from Malabar area to Tamil area. Hon. Members may feel that I am referring to some small, petty, mean things. It may be so. But, opinion in Malabar is very strong in such matters. The Hon. the Leader of the House, in his reply, may even say that all these are exaggerated statements created and concocted by the Communist Party. I may tell him that it is not like that. The contradictory statements issued by the Hon. Ministers themselves have also been responsible for the whole confusion. For instance, it was recently reported in the *Mathruboomi* that the Government have ordered the cutting away of teakwood from about 600 acres of Thannikkadavu Reserve Forests in Malabar and the Forest Department have invited tenders on 1st July 1956 to remove and transport 50,000 cubic feet of teakwood from Thannikkadavu to Pollachi. Further five elephants from Nilambur forest were also ordered to be removed to Coimbatore division. Afterwards, when the news appeared in the Press, it was contradicted. When representatives approached the Hon. Minister Sri A. B. Shetty and told him about the matter, he said that he did not know anything about the matter and that he would take suitable measures to see that nothing of that sort happened. We were informed that the Chief Secretary has issued instructions to Collectors and Heads of Departments to see that properties are not carried away, especially from areas which are to be merged with other States at this tim without giving wide publicity in the Press.

4-30 p.m. It was only then to the Hon. Minister for Finance had told that he had already issued telegraphic orders to stop the cutting of trees. Subsequently the Malayalee Pradesh Congress Committee Chief, Mr. Vasu Menon, Sri P. Narayanan Nair, Member of Parliament, and some others went to the spot and saw the trees being cut and removed. This news has also appeared in the

9th August 1956] [Sri T. C. Narayanan Nambiar]

(2) the need to cancel the crop control now in force in Lower Bhavani Project ayacut of about 2,07,000 acres which is very seriously affecting the ryots economically;

(3) the need to remove the penalty levied on the ryots who cultivated paddy utilizing the seepage water in the Lower Bhavani Project ayacut area;

(4) the need to fix a fair price for commercial crops such as tobacco, groundnut, cotton, turmeric, etc.;

(5) the relief measures to be taken to wipe out rural indebtedness;

(6) the need to exempt from sales tax food articles and to levy sales tax at single point for all other commodities.' "

SRI T. C. NARAYANAN NAMBIAR : I second the amendment.

SRI K. KUNHI MOHAMED SHAFEE : Sir, I move the following amendment :—

" *Add* at the end, the following :—

' but regret—

(*a*) that no mention is made of the future of the Members of Malabar district and of Kasaragod taluk of South Kanara district of this House immediately after the Reorganization of the States;

(*b*) that no suggestions have been offered in order to avoid extension of President's Rule from the Travancore-Cochin State to Malabar district and to Kasaragod taluk;

(*c*) that no suggestion has been made to associate the people of Malabar through their elected representatives in the division of assets and liabilities and other vital matters connected with the separation of Malabar from Madras State;

(*d*) that no mention has been made about the adequate and effective representation of the Muslims and other minority communities in the Legislatures, local bodies and Administrative Services; and

(*e*) that no protection has been suggested to afford relief to the Muslim community from the handicaps resulting from the enforcement of the provisions of the Madras Building Rules regarding the construction, extension and repairs of mosques, madrassas and similar religious institutions.' "

The amendment was duly seconded.

MR. SPEAKER : The hon. Member Sri C. Kandasamy who has given notice of amendment No. 9 is not in his seat.

The hon. Member Sri S. Ramalingam who has given notice of amendment No. 10 is not also in his seat.

SRI K. MADHAVAN NAMBIAR : Sir, I move the following amendment :—

" *Add* at the end, the following :—

' but regret to note that—

(1) the Address has failed to mention anything about complaints raised by certain responsible persons in Malabar regarding transfer of movables such as machines, elephants, etc., from Malabar in view of the impending reorganization of the States;

(2) the Address has failed to recommend the formation of a popular Government and State Legislature for Kerala after the reorganization of the States, consisting of elected members from Malabar district and Kasaragod taluk in the present Madras Legislature and Members of the dissolved Travancore-Cochin Legislature from those areas which are to be the part of Kerala State;

(3) the Address has failed to mention anything about the recent flood and cyclone that worked havoc in the West Coast;

(4) the Address has failed to mention anything about the rise in prices of daily necessaries of life other than rice and has also failed to point out the failure of the Government to open fair price shops in all localities so as to bring down the price of rice;

(5) the Address has failed to mention anything about the fall in the price of pepper, jaggery, etc.;

(6) the Address has failed to recommend single point sales tax for all food articles;

(7) the Address has failed to mention anything about the grievances of the non-gazetted officers in the State and the remedial measures;

(8) the Address has failed to mention anything about the grievances of village officers and the remedial measures;

(9) the Address has failed to mention anything about fixing minimum wages for agricultural labourers;

(10) the Address has failed to mention anything about the crisis that may arise in the employment situation on account of introduction of power-looms in the handloom sector;

(11) the Address has failed to mention anything about the condition of workers engaged in the beedi industry;

(12) the Address has failed to mention anything about implementing the recommendations of the Land Reform Panel of the Planning Commission; and

(13) the Address has failed to state anything about nationalization of private forests in Malabar.' "

The amendment was duly seconded.

SRI T. C. NARAYANAN NAMBIAR : Sir, I move—

" *Add* at the end, the following :—

' but regret to note—

(1) that the Governor was ill-advised by the Council of Ministers when it is stated in paragraph 2 of the Address that ' some of the predominantly Tamil-speaking areas of Travancore-Cochin State will merge with this State ', which will embitter the feelings of the people of the predominantly Malayalam-speaking areas of this State to be included in the proposed Kerala State;

(2) that the Address is unrealistic when it did not take into consideration the agitation of the village officers and failed to assure them that suitable measures will be taken to grant them at least the educational and medical concessions given to non-gazetted officers and teachers pending final decisions as regards improving their conditions of service, etc.;

(3) that the Address has not mentioned about the step taken for granting an *Ad hoc* increase of at least 25 per cent in the emoluments of all non-gazetted staff under the State Government and also to appoint a Pay Commission to enquire and report on the need to revise their scales of pay, etc.;

(4) that the Address has not mentioned the measures the Government propose to take to remove the apprehension and anxiety among the Malavalees caused by the alleged cutting of trees, removal of livestock including five elephants and valuable properties from Malabar;

[Sri T. C. Narayanan Nambiar] [10th August 1956

(5) that the Address has not assured the minority sections of the people in the future Madras State, especially Malayalees that justice will be done to the minorities in matters of appointment, service, etc.;

(6) that the Address has not mentioned anything about the stand of this Government about the position of the M.L.As. from Malayalam-speaking areas to be merged in Kerala till the next elections and as long as the present Madras Legislature continues;

(7) that the Address under-estimated the situation when it stated that only the urban areas are vulnerable to the increase in the price of food articles and not the villages especially in Malabar where fair price shops should be opened in all villages;

(8) that the Address has ignored the sufferings of the large sections of people including Harijans especially on account of the recent heavy floods in Malabar district and Kasaragod taluk of South Kanara district and did not mention what relief measures Government contemplate to adopt for them;

(9) that the Address has not mentioned about the fact that " Malabar district split-up plans " for the Second Five-Year Plan are not completed yet and not distributed among the M.L.As. from that area;

(10) that the Address has not mentioned about—

(*a*) the regional disparity in the matter of selection of development schemes;

(*b*) the necessity to include Irikkoor firka in the National Extension Scheme;

(*c*) the justness of the need to sanction more development schemes in Ernad taluk and Attappady area of the Walluvanad taluk;

(*d*) the sanction and allocation of rural health centres to Changalazi and Narath villages of Taliparamba Block Development area;

(*e*) the construction of a causeway to Ayappoza river in Irikkoor and the construction of bridges over Kattampalli and Pavannoor ferries of the Baliapatam river;

(*f*) the establishment of a high school in Eravasi village;

(*g*) organization of a dispensary at Payyanoor;

(*h*) extension of electricity to all the villages in the Taliparamba Block Development area from Pappinisseri; and

(*i*) the grant of 15 cents of land for all Harijans in Malabar with an interest-free loan of Rs. 900 for construction to be returned in 30 annual instalments;

10th August 1956] [Sri T. C. Narayanan Nambiar]

(11) that the Address has not mentioned the necessity of taking up certain legislative measures regarding Malabar tenancy, Malabar Marumakkattayam, Malabar education, viz., the private management system, etc.;

(12) that the Address has not mentioned anything about the measures to be adopted by the Government to wipe off the arrears of debt of the peasantry which stands in the way of their active participation in national reconstruction;

(13) that the Address has not mentioned about the alleged eviction of Adivasis in large numbers in Attappady area of Walluvanad taluk with the connivance of landlords and Police;

(14) that the Address has not mentioned anything about the labour discontent, especially in Feroke and Pappinisseri areas of Malabar where certain managements of factories like the Malabar Tile Works and Western India Cottons, respectively, violate the rules and regulations governing the factories resulting in misery among the workers; and

(15) that the Address has not mentioned that all political prisoners will be ordered to be released in view of the reorganization of the States '."

Sir, I also move the following amendment to the motion standing against my name. The name of the village ' Payyanoor ' noted against item 10 (*g*) of my amendment should be ' Payyavoor '.

SRI K. T. RAJU : I second the amendment.

SRI C. H. KANARAN : Sir, I move the following amendment :—

" *Add* at the end, the following :—

' but regret to note that—

(1) the Address has failed to point out the failure of the Government to grant at least educational concession to the children of village officers pending decision on the other grievances and demands made by them;

(2) the Address has not mentioned anything about the grievances of N.G.Os. of the State and the remedial measures proposed by the Government;

(3) the Address has not mentioned the necessity of constituting an enquiry committee consisting of the members of the Legislature both from Malabar and Tamil areas of the State to enquire into the serious allegations made by responsible persons from Malabar regarding the felling and removal of trees from the forests of Malabar and transfer of valuable machinery and other movables from Malabar on the eve of the reorganization of States;

(4) the Address has not considered the gravity of the situation arising from the abnormal rise in price of rice and other daily necessaries of life affecting the life of the people without any

distinction as to whether they live in the villages or in towns and the failure of the Government to open at least one fair price shop in each village despite the representations from the people of Malabar and also from the Food Conference held at Kozhikode recently;

(5) the Address has not mentioned the failure of the Government to take adequate steps for rendering relief to the people affected by the recent flood in Malabar and Kasaragod taluk; and

(6) the Address has not mentioned anything about the necessity of immediately amending the Malabar Tenancy Act so that—

(i) the provision for payment of rent be suitably amended in order to safeguard the interests of the tenants;

(ii) rule 3-A of the Fixation of Fair Rent Rules held to be void by a recent decision of the High Court be amended suitably;

(iii) the procedure adopted by several Rent Courts in Malabar consequent upon a decision of the Ottapalam Sub-Court not to deduct the harvest expenses from the gross produce but to add 10 per cent more on the plea that 20 per cent of the produce had been deducted from the produce in classifying lands, be rectified by suitable amendments and other necessary amendments also be made.' ''

The amendment was duly seconded.

MR. SPEAKER : Sri S. P. Thangavelu who has given notice of amendment No. 14 is not in his seat.

Sri P. Rangaswami Reddiar who has given notice of amendment No. 15 is not in his place.

Sri K. C. Gopalan Unni who has given notice of amendment No. 16 is not in his seat.

9-58 a.m.

SRI K. T. RAJU : கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினம் கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை பிரேரேபித்துப் பேசுகையில் எனது நண்பர் ஸ்ரீ கருத்திருமன் அவர்கள். கீழ்ப் பவானிப் பிரதேசத்தில் 10 கோடி ரூபாய் செலவுசெய்து ஆயக்கட்டு கால்வாய் வெட்டி அதன் மூலமாக இந்தப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் நன்மை அடைந்திருந்தும், அவர்கள் இப்பொழுது கொடுக்கும் வரியைவிட மேலும் அபிவிருத்தி வரி கொடுக்காமல் இருப்பதற்கான இளர்ச்சியை எதிர்க் கட்சிக்காரர்கள் செய்துகொண்டிருப்பதாகக் கூறினார்கள். இந்த விஷயத்தைப் பற்றி கவர்னர் அவர்களின் பிரசங்க விவாதத்தின்போது பேசவேண்டாம் என்று நான் நினைத்தேன். ஆனால் நேற்றைய தினம் ஸ்ரீ கருத்திருமன் அவர்கள் இதுபற்றிப் பேசியதால் நானும் சில விஷயங்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக எதிர்க் கட்சிக்காரர்கள் மட்டும் எதோ இதுபற்றி இளர்ச்சி செய்து விவசாயிகளை வரி கொடுக்காமல் இருக்கும்படி தூண்டுகிறார்கள் என்பது அல்ல. இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் சென்ற ஜூன் மாதம் 7-ம் தேதி தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி ஸ்ரீ பி. எஸ். ரெங்கசுவாமி,

எம்.எல்.ஏ. அவர்கள் இதுவிஷயமாக ஈரோடில் தினமணி நிரூபருக்கு அளித்த பேட்டியில் கூறியதுதான். கீழ்பவானி ஆயக்கட்டுதாரர்கள் ஏன் இன்னும் அதிக வரி கொடுக்க மறுக்கிறார்கள் என்பதை ஸ்ரீ கருத்திருமன் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்து அதோடு இந்த விஷயத்தை நான் முடித்துக்கொள்ளுகிறேன். தினமணி 9-6-1956 வெளியூர் பதிப்பில் ஸ்ரீ ரெங்கசுவாமி அவர்கள் தினமணி நிரூபரிடம் பின்வருமாறு கூறியிருக்கிறார்: " கீழ்பவானி விவசாயிகளின் குறைகள் நியாயமானவை. ஆயக்கட்டுப் பிரதேசத்தில் இப்பொழுது தண்ணீர் தீர்வையே அதிகமாயிருப்பதால் அதனுடன் அபிவிருத்தி வரி வேறு விதித்தால் கஷ்டம் ஏற்படும்." அது மட்டுமல்லாமல் அவர் சென்னைக்கு வந்து இது சம்பந்தமாக முதல் மந்திரி, நிதி மந்திரி, ரெவின்யூ மந்திரி ஆகியோர்களை சந்தித்து விவாதித்திருக்கிறார். அவர்களிடம் இந்தப் பிரதேசத்தில் தண்டத் தீர்வை வசூலை உடனடியாக நிறுத்திவைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார். ஏற்கனவே தண்ணீர்த் தீர்வை இந்தப் பிரதேசத்தில் அதிகமாக விதிக்கப்பட்டிருக்கிறது. கனம் கருத்திருமன் அவர்கள் இந்த விஷயத்தை எப்படி கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்கக்கூடாது என்று நினைக்கிறாரோ அந்தமாதிரிதான் நானும் கருதுகிறேன். உண்மையிலேயே இந்தப் பிரதேசத்தில் மற்ற இடங்களில் ஏற்பட்டுள்ள நீர்ப்பாசன வசதியைவிட அதிகமான வசதி ஏற்படவில்லை. இங்கு புன்செய் நிலத்துக்குள்ள நீர்ப் பாசன வசதிதான் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. பருத்திக்கு ஒரு ஏக ருக்கு ரூ. 20 அல்லது ரூ. 30 தீர்வை செலுத்த வேண்டியிருக்கிறது. காரணம் செஸ் ரூ. 6-4-0. அதுபோக புதிதாக விதிக்கப்பட்டிருக்கும் ஸர்சார்ஜ் ரூபாய்க்கு 2 அணு. இது தவிர ஏற்கனவே உள்ள நில வரி வேறு இருக்கிறது. ஆகவே இங்குள்ள விவசாயிகள் பருத்திக்கு ஒரு ஏகருக்கு ரூ. 30 வரி கொடுக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். 6 மாதங்களுக்குத்தான் தண்ணீர் விடப்படுகிறது. 18 முறைகள் தான் தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம். அதுவும் கூட கடைக்கோடி நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும் என்ற உத்திரவாதமும் கிடையாது. மேற் கொண்டு இந்தப் பகுதியிலே பயிர் கட்டுப்பாடு என்ற முறையிலே விவசாயிகள் அனுபவித்துவந்த உரிமைகளும் தடை செய்யப்பட்டிருக்கின்றன. புதிதாக இணறு வெட்டப்படுவதற்கும் அனுமதி கொடுப்பதில்லை. ஆகவே இந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளின் குறைகள் தீர்க்கப்படவேண்டுமென்று நான் சொல்லுகிறேனே தவிர, கட்சிக் கண்ணோட்டத்தோடு நான் இதை எடுத்துக்கூறவில்லை. கட்சிப்பற்றில்லாமல் இந்தக் குறைகளைத் தீர்ப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். உண்மையாகவே குறைகள் இல்லாவிட்டால் ஸ்ரீ ரெங்கசுவாமி அவர்கள் தினமணி நிரூபருக்கு அளித்த பேட்டியில் மேலே சொன்னபடி கூறியிருக்கவேண்டிய அவசியமில்லை. செப்டம்பர் 2-ம் தேதி ஈரோடில் கட்சிப்பற்றற்ற விவசாயிகள் மகாநாடு ஒன்று நடக்கப்போகிறது. அதில் 20,000 விவசாயிகள் கூடுவார்கள். இந்த விஷயத்தை கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்கவில்லையென்றால், ஸ்ரீ கருத்திருமன் அவர்கள் இந்த மகாநாட்டுக்கு வந்து விவசாயிகளிடம் இந்த அபிவிருத்தி வரியைக் கொடுக்கும்படி சொல்லட்டும். கனம் ரெவின்யூ மந்திரி அவர்களையும் இந்த மகாநாட்டுக்கு வரும்படி கேட்டுக்கொள்கிறேன். அவர்களும் இந்த அபிவிருத்தி வரி விதிப்பதில் என்ன நியாயம் இருக்கிறது என்பதை விவசாயிகளிடையே எடுத்துச் சொல்லட்டும்.

மற்றொரு விஷயத்தைப் பற்றியும் நான் இங்கு குறிப்பிடுகிறேன். 1952-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 23-ம் தேதி அபிவிருத்தி வரி மசோதா செலக்ட் கமிட்டிக்குப் போன நேரத்திலே அங்கு அது ஒரு வோட்டு வித்தியாசத்தில் நிறைவேறவில்லை. அதனால் அதை சபை முன்பு கொண்டுவரவில்லை. அடுத்தமாதம் பவானி ரிசர்வாயர் சம்பந்தமான தண்ணீர் தீர்வை மசோதா வந்தபொழுது அது உண்மையாகவே அபிவிருத்தி வரியாக இருந்தபோதிலும், அபிவிருத்தி வரி இல்லை. அது தண்ணீர் தீர்வைதான் என்றும், செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டிய தேவையில்லை என்றும் சொல்லப்பட்டது.

கீழ்பவானி அயக்கட்டு விவசாயிகளின் உண்மையான குறைகளைத் தீர்ப்பதில் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும். அதை விட்டுக்கட்சிக்

கண்ணோட்டத்தோடு எதிர்க்கட்சிக்காரர்கள் அவர்களே அபிவிருத்தி வரி கொடுக்கவேண்டாமென்று தூண்டுகிறார்கள் என்று சொல்லுவதில் பிரயோஜனமில்லை. அந்த அளவுக்கு ஏன் வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்கிறேன். இதற்கு வாய்ப்புக் கொடுக்காமல் சர்க்கார் அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு முன் வருவார்கள் என்று நினைக்கிறேன்.

கவர்னர் அவர்கள் உரையிலே 8 பொருள்களுக்கு ஒரு முனை விற்பனை வரி விதிக்கப்படுமென்று சொன்னார். ஆனால் எல்லாப்பொருள்களின் மீதும் ஒரு முனை வரி விதிக்கவேண்டுமென்று ராஜ்யத்திலுள்ள வியாபாரிகள் செய்து வரும் இளைச்சிக்கு அது ஒரு பரிகாரம் ஆகாது. காரணம் ஒரு முனை வரி விதிக்கப்படும் பொருள்கள் மோட்டார்கார்கள், ரசாயன உரங்கள், காபி, டீ, சிமெண்ட் முதலியவைதான். இன்னும் ஒரு முனை வரி விதிக்கப்படவேண்டிய நூற்றுக்கணக்கான பொருள்கள் இருக்கின்றன. உதாரணமாக பருத்திக்கொட்டை, சாக்கு, இரும்புப்பொருள்கள், புண்ணாக்கு இவைகளுக்கு ஒரு முனை வரி விதிக்கலாம். இந்த எட்டு பொருள்களின் மீது ஒரு முனை வரி விதிப்பதால் மட்டும் வியாபாரிகளின் கஷ்டம் தீர்ந்துவிடாது. இதனால் ஒரு சாதகமும் ஏற்பட்டுவிடாது.

10-06 a.m. மேலும், உணவுப் பொருள்களுக்கு அம்மாதிரி விற்பனை வரி விதிக்கக் கூடாது என்று பொது மக்களாலும் மற்றவர்களாலும் பலத்த கிளர்ச்சி செய்யப்பட்டது. அதைப்பற்றி கவர்னர் அவர்கள் தமது உரையில் குறிப்பிடவில்லை. இந்த எட்டு பொருள்களுக்கு ஒரு முனை விற்பனை வரி போட்டிருப்பது சரியானதுதான். ஆனால், எல்லாப் பொருள்களுக்கும் ஒரு முனை விற்பனை வரி விதிக்க வேண்டுமென்றும், அப்படி விதிப்பதால் சர்க்காருக்கு இப்போது கிடைக்கும் வருமானம் எந்த வகையிலும் குறையாது என்றும் வியாபாரிகள் தங்களுடைய ஸ்தாபனங்கள் மூலமாக அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கும்போது, இந்த எட்டு சாமான்களுக்கு மட்டும் ஒரு முனை விற்பனை வரி போட்டுவிட்டதால் ஒரு பெரிய காரியத்தைச் செய்து விட்டதாகச் சொல்லமுடியாது.

அடுத்தபடியாக, நமது ராஜ்யத்தில் விவசாயிகள் மிகவும் கடன்பட்டிருக்கிறார்கள். கவர்னர் அவர்கள் தமது உரையில், பரீட்சார்த்தமாக் சில பிளாக்குகளைத் தேர்ந்தெடுத்து அவைகளிலுள்ள விவசாயிகளுக்குக் கடன் வசதிகள் அளிக்கப்போவதாகக் கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே பல ஆண்டுகளாக கடன் பட்டிருப்பவர்களுக்கு அவைகளிலிருந்து நிவாரணம் கிடையாது. அவற்றிற்கான வட்டிகளையும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பல திட்டங்களின் மூலமாக சர்க்கார் விவசாயிகளுக்கு ரசாயன உர உதவியும், நீர்ப்பாசன வசதியும் அளிக்கிறார்கள். ஆனால் விவசாயிகள் பல ஆண்டுகளாகப்பட்டிருக்கும் கடன்களிலிருந்து நிவாரணமடைவதற்கு வழி செய்தால் தான் இந்தத் திட்டங்களினால் அவர்கள் உண்மையாகவே நன்மையடைய முடியும். கவர்னர் அவர்களுடைய உரையில், இந்தக் கடன் வசதிகள் செய்யப்பட்டாலும் அந்த விவசாயிகளுக்கு 25 சத விகிதம் தான் உதவிசெய்ய முடியும் என்று கூறப்பட்டிருக்கிறது. பாக்கி 75 சத விகிதத்திற்கு நிவாரணம் இல்லை. ஏற்கெனவே உள்ள பழைய கடன்களிலிருந்து அவர்களுக்கு நிவாரணம் கிடைத்தால்தான் அவர்கள் உண்மையில் பயனடைவார்கள். இல்லாவிட்டால் சர்க்காரால் இந்தத்திட்டங்களின் மூலம் செலவழிக்கப்படும் கோடிக்கணக்கான ரூபாய்கள் இடையில் இருக்கும் லேவாதேவிக்காரர்களுக்கோ மற்றவர்களுக்கோதான் போய்ச்சேரும். ஆகவே நமது சர்க்கார் உண்மையிலேயே விவசாயிகளின் நலத்தில் அக்கறைகொண்டிருக்குமானால் அவர்களுடைய பழைய கடன்களிலிருந்தும் அவர்களுக்கு நிவாரணமளிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கனம அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது ராஜ்ய எஸ்.ஜி.ஓ.க்கள் சம்பந்தமாக பல அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். சர்க்கார் அவர்களுக்கு எந்த அளவுக்கு உதவி செய்யமுடியுமோ அந்த அளவுக்காவது உதவி செய்ய வேண்டும். ஒவ்வொரு எஸ்.ஜி.ஓ வுக்கும் ரூ. 1 வீதம் சம்பளத்தை

அதிகரித்தாலும் ரூ. 24 லட்சம் தேவைப்படும் என்று நேற்று கனம நிதி மந்திரி அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்குக் கட்டாயம் உதவவேண்டும். மேலும், புதிய வரிகளைப்போட்டு அவைகளின் மூலம் கிடைக்கும் பணத்தை அவர்களுக்கு அதிகச் சம்பளமாகக் கொடுக்கலாம் என்றும், எந்த புதிய வரிகள் போடலாம் என்று அங்கத்தினர்கள் யோசனை சொன்னால் உதவிகரமாக இருக்குமென்றும் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாய மக்களுக்குச் சர்க்கார் உதவவேண்டுமென்றும், எஸ்.ஜி,ஓ-க்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கவேண்டும் என்றும் நாங்கள் சொல்லும்போது, சர்க்கார் எப்படியாவது போகட்டும், பணம் கிடைத்தால் போதும் என்ற எண்ணத்தில் நாங்கள் சொல்லவில்லை. நேற்றைய தினம் கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள், தோட்ட வரியின் மூலம் ரூ. 1 கோடியே 12 லட்சம் கிடைத்திருப்பதாகச் சொன்னார்கள். சர்க்கார் தங்கள் கையிலிருந்து செலவழிக்க முடியாது என்பது உண்மை. ஆனால் இம்மாதிரி வரி கொடுக்கக்கூடிய சக்தியுடையவர்களிடமிருந்து வசூலிப்பதற்குத் தகுந்த வரியைப் போட்டு பணத்தை அடையலாம். அப்படிப்பட்ட எதாவது சில வரிகளைப் பற்றி குறிப்பிட்டு, அவைகளை விதிக்கலாம் என்று நாங்கள் இந்தச் சபையில் சொன்னால், அப்போது அந்த யோசனைகளை பாராளுமன்றத்தில் கொடுக்க வேண்டுமேயல்லாது இந்தச் சட்டசபையில் கொடுக்கவேண்டியது இல்லை என்று சொல்லப்படுகிறது. முடிந்த வரைக்கும் எஸ்.ஜி.ஓ.க்களுக்கு சம்பள உயர்வு கொடுத்து அவர்களைத் திருப்தி செய்யவேண்டும். எஸ்.ஜி.ஓ.க்களுக்கும் விவசாயிகளுக்கும் உதவி செய்யவேண்டும் என்று எதிர்க் கட்சிக்காரர்களாகிய நாங்கள் சொல்லும்போது, ஒரு நியாயமான நோக்கத்தோடுதான் அப்படிச் சொல்கிறோமே தவிர விரோத-குரோத பாவத்தோடு அப்படிச் சொல்லவில்லை. ஆகவே எஸ்.ஜி.ஓ.க்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் பிரசங்கத்தை முடிக்கும் முன்பு, ஸ்ரீ கருத்திருமன் அவர்களை கீழ் பவானிப் பிரதேசத்தில் செப்டம்பர் 2-ம் தேதி நடக்கும் விவசாயிகள் மகாநாட்டிற்கு வந்து பங்கெடுத்துக்கொண்டு, நாங்கள் சொல்வதில் தவறுகள் இருந்தால் அவற்றை எடுத்துக்காட்டவேண்டும் என்று மறுபடியும் கேட்டுக்கொள்கிறேன். அந்த மகாநாட்டிற்கு வந்து எதிர் கட்சிக்காரர்களாகிய நாங்கள் சொல்வது தவறு என்று எடுத்துக்காட்டி, அதை அந்த விவசாயிகள் உண்மையில் ஒப்புக்கொள்வார்களானால், எங்களுடைய தவறைத் திருத்திக்கொள்ளத் தயார் என்பதையும் ஸ்ரீ கருத்திருமன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்யாமல், கவர்னர் பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும்போது, போகிற போக்கில் எதிர்க் கட்சிக்காரர்கள் தூண்டிவிடுகிறார்கள் என்று குற்றம் சாட்டுவது சரியல்ல என்று ஸ்ரீ கருத்திருமன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

10-13 a.m. *Sri V. C. PALANISWAMI GOUNDER: கனம சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையைப் பாராட்டி ஸ்ரீ கருத்திருமன் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை ஆதரிக்கும் முறையில் நான் சில வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன். அந்த உரையில் இந்த சர்க்காருடைய முன்னேற்றத் திட்டங்களும், இந்த நாட்டின் முன்னேற்றத் திட்டங்களும் செவ்வையாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்களையெல்லாம் பார்க்கும்போது இந்த நாட்டில் எவ்வளவு அபிவிருத்தித் திட்டங்கள் அமைந்திருக்கின்றன என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

நம்முடைய சர்க்காருடைய இந்த முன்னேற்றத்திட்டங்களில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வரக்கூடிய பல திட்டங்கள் இருக்கின்றன. நம்முடைய ராஜ்யத்தில், முக்கியமாகத் தஞ்சாவூர், ராமநாதபுரம் ஆகிய இரண்டு ஜில்லாக்களிலும் புயலின் கஷ்டம் இந்த ஆண்டில் இந்த தலைக்கட்டில் என்று சொன்னால் கூட மிகையாகாது. இரண்டு தரம் வந்துவிட்டது. அதன் காரணமாக அங்குள்ள மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். அந்தக் கஷ்டத்திலிருந்து அவர்களுக்கு நிவாரணமளிப்பதற்காக ஏராளமான பணம் அங்கு செலவழிக்கப்பட்டது. ரூ. 3 கோடி விவசாயிகளுக்குக் கடனுக் கொடுக்கப்பட்டதென்றால் அது எவ்வளவு பெரிய செலவு என்று சொல்லவேண்டியதில்லை. ஆனால் இவ்வளவு

ரூபாய் கடனுகக் கொடுக்கும்போது நிர்வாக இயந்திரம் சீர்திருத்தப்பட வேண்டும், சீர்திருத்தப்பட்டிருக்கவேண்டும். அதில் எவ்வளவோ ஊழல்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டு நான் வருத்தப்படுகிறேன். நமது நாட்டிற்கு சுதந்திரம் வந்த பிறகு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தாலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தாலும் நாட்டு மக்களிடத்தில் ஒரு எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. தங்களுடைய அபிவிருத்திக்காக சர்க்காரோடு சம்பந்தம் வைத்துக்கொண்டு மக்கள் பாடுபடுகிறார்கள். இந்த அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக சர்க்கார் அதிகாரிகளுக்கு வேலை அதிகமாகியிருக்கிறது. இல்லா அதிகாரிகள் எல்லோருக்கும் வேலை அதிகரித்திருக்கிறது. அப்படியிருக்கும்போது நிர்வாக இயந்திரம் நல்ல முறையில் அமைக்கப்பட வேண்டும். அதற்காக நிர்வாக அதிகாரிகளை அதிகப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் எதோ ஒரு விதமாக இயந்திரம் சுற்றிக்கொண்டிருக்குமே தவிர நல்ல முறையில் இயங்காது என்பது என் அபிப்பிராயம். ஆகையால் நிர்வாக அதிகாரிகளுக்கு அதிகமான வேலை இருப்பதால் ஏராளமான உத்தியேகஸ்தர்களை நியமிக்கவேண்டும்.

கவர்னர் அர்களுடைய உரையில் கலெக்டர் களுடைய **Personal Assistant** களுக்கு சட்ட பூர்வமாக சில அதிகாரங்கள் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அவர்கள் ஆர அமர்ந்து பைல்களை பார்த்து நியாய அநியாயங்களை கண்டு உத்திரவை கொடுக்க வேண்டும். எனக்குத் தெரிந்த **I.C.S.** உத்தியோகஸ்தரோடு சென்ற காலத்தில் நான் பேசிக்கொண்டிருக்கும்போது அவர் சொன்னர் " உங்களுக்கு தெரியாதா, அரசாங்கமெல்லாம் குமாஸ்தாக்களால்தான் நிர்வகிக்கப்பட்டு வருகிறது " என்று. இந்த வார்த்தையை கேட்டபோது எனக்கு தூக்கிவாரிப்போட்டது. குமாஸ்தாக்கள் தான் நிர்வாகம் செய்கிறார்கள் என்றால், பொறுப்புள்ள அதிகாரிகள் எவ்வளவு தூரம் நடவடிக்கைகளை ஆழ்ந்து பார்க்கிறார்கள் என்பதை நான் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, கவர்னர் உரையில் கலெக்டர்கள் **Personal Assistant** களுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருப்பதை மீண்டும் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது விவசாயத்துறையில் மக்களுடைய கவனத்தை கவர்ந்து இருக்கும் முக்கியமான விஷயம், நியாயவார மசோதா. இந்த நியாயவார விஷயத்தில் என்ன விதிதாசாரம் பூமிக்காரனுக்கும் உழுகிற குடியானவனுக்கும் கொடுப்பது என்பது முக்கியமாய் ஆலோசிக்கப்பட்டு பொறுக்குச் சமிட்டியில் ஒரு முடிவு காணப்பட்டிருக்கிறது. அந்த முடிவில் 40, 35, 33-1/3, 25 என்று விதிதாசாரங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பிரச்னை சம்பந்தமாக என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் தோட்டக்கால், புஞ்சைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் படியான விதிதாசாரம் போதாது. நஞ்சை சர்க்காருடைய தண்ணீர் வசதிகளைக்கொண்டு சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால் தோட்டக்கால் நிலமோ அப்படியில்லை. அந்த பூமிதார் 5,000, 10,000 ரூபாய் செலவு செய்து, கிணறுவெட்டி, பம்பு செட்டுகள் வைத்து சாகுபடி செய்கிறார். அவர்கள் **investment-க்கு** (முதலீட்டிற்கு) தகுந்த ஊதியம் இல்லை. ஆகவே தோட்டக்காலுக்கு **33-1/3** விதிதாச்சாரம் கொடுப்பது நியாயமில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். அதை மறுபடியும் சர்க்காருடைய கவனத்திற்கு வைக்கிறேன். தவிர, புஞ்செய்க்கு 25 சத விதம் என்று சொல்லுகிறார்கள். புஞ்சை நிலம் திருத்தப்படும் விஷயங்களை எல்லாம் பார்க்கும்போது 25 சத விதம் போதாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

இரண்டாவதாக, கைத்தொழில் அபிவிருத்தி விஷயத்தில், முதல் ஐந்தாண்டு திட்டத்திலும், இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் சரியாகக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. பெரிய தொழிற்சாலைகளும், கனரக தொழிற்சாலைகளும் நாட்டில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதை வரவேற்கிறேன். ஆனால் நமது நாட்டில் கிராமங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தை தவிர்க்கவேண்டுமென்றால், சிறு கைத்தொழில்களும், குடிசை தொழில்களும் மிகவும் அவசியம். கிராமாந்திரங்களில் பெரிய ஆலைகளை வைக்கும்போது, எல்லோரும் அந்த ஆலை வேலைக்குப் போகிறார்களை ஒழிய

விவசாயத்தில் ஈடுபடுவதில்லை. ஆலை வேலையில் நல்ல ஊதியம், போனஸ் கிடைக்கிறது. ஆகவே, வாலிபர்கள் எல்லாம் அந்த வேலைக்குச் சென்று விடுகின்றனர். விவசாயத்தில் ஈடுபடக்கூடியவர்கள் 50, 60 வயதிற்கு மேற்பட்ட உழைப்பாளிகளாக இருக்கிறார்கள். இந்த நாட்டின் உணவுப் பிரச்னை தீரவேண்டுமானால், விவசாயம் அபிவிருத்தி அடையவேண்டும். விவசாயம் அபிவிருத்தி அடைய விவசாயிகளுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து தரவேண்டியது சர்க்காரின் கடமை. அவர்களுக்கு விவசாயத்தில் ஊக்கம் கொடுக்கும் முறையில், நல்ல ஊதியம் கொடுத்து, ஆலைத் தொழிலாளர்களுக்குச் சமமான நிலையில் வைக்கவேண்டும், அவர் களுடைய உற்பத்திப்பொருள்கள் சரியான விலையில் விற்க சௌகரியம் செய்து தரவேண்டும். இன்றைய தினம் **cultivating tenant** என்றால் நேரிட நிலத்தை உழுபவர்கள் தான் என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையில் அவர்களுக்கு நல்ல ஊதியம் கொடுக்கவேண்டியது அவசியம். இன்றைய தினம் அனேகம் பேர் நடுவிலிருந்து கொண்டு, விவசாய கூலிகளை வைத்துக்கொண்டு, முக்கியமாக ஹரிஜனங்களை வேலைக்கு வைத்துகொண்டு, விவசாயம் செய்கிறார்கள். அப்பேர்ப்பட்ட ஹரிஜனக் கூலிகளுக்குக் கொடுக்கிற கூலி குறைவு. இந்த முறையில் நடுவில் வருகிறவர்கள், யாதொரு உழைப்புமில்லாமல், லாபமடைகிறார்கள். இன்றைய தினம் விவசாயம் ஓங்கவேண்டுமானால், விவசாய கூலிகள் விவசாயத்தில் ஈடுபடவேண்டுமானால், அவர்களுக்கு சரியான ஊதியம் கொடுக்கப்படவேண்டும். அந்த முறையில் சட்டத்தில் ஷரத்துகள் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இன்றைய தினம் சோஷியலிஸ்டிக் பாணி சமுதாயத்தை அமைப்பது நமது நோக்கமாக இருக்கும்போது, எல்லோருக்கும் சம அந்தஸ்து, வாய்ப்புகள் கொடுக்கப்படவேண்டும். மக்கள் சுகவாழ்வு எய்த வேண்டுமென்று நாம் சொல்லும்போது, விவசாய கூலிகளின் நிலைமையை பார்த்தால் மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. சட்டப்படி **tenant** களுக்கு பாதுகாப்பு என்று இருக்கிறது. ஆனால் **tenant** என்ற தலைப்பின் கீழ் உண்மையாகப் பாடுபடாத ஆட்களும் வரக்கூடிய நிலைமையில் இருக்கிறது. இதை நான் சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டுவரக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

விவசாயத்துறையில் பல திட்டங்களை சர்க்கார் போட்டிருக்கிறார்கள். இரண்டாது ஐந்தாண்டு திட்டத்தில் விவசாயம் ஓங்கவேண்டுமென்கிற நோக்கத்தில் விவசாயிகளுக்கு விவசாயம் செய்யப் போதுமான கடன் வசதி கிடைக்கவேண்டுமென்பதற்காக கூட்டுறவு முறையில் சில பாங்குகளை அமைத்து, போதுமான கடன் கொடுக்க திட்டம் போட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் பொது ஜன அபிவிருத்திக்காக கூட்டுறவு சங்கங்கள் இருக்கவேண்டுமென்றால், அதன் சட்டதிட்டங்களை திருத்தி அமைக்கவேண்டும். சர்க்கார் இதில் போதிய அக்கறை செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

கவர்னர் உரையில், சென்னை ராஜ்யத்தில் புதிதாக 400 அரசாங்க விதைப் பண்ணைகள் (**State seed farm**) வைக்க சர்க்கார் உத்தேசித்து இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இவற்றை எவ்விதம் நல்ல முறையில் இயக்கப்போகிறார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை. ஏற்கனவே பல இடங்களில் சர்க்கார் வினியோகிக்கும் வித்துக்கள் சம்பந்தமாகப் புகார்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அனேக இடங்களில் சர்க்கார் விதைகளை விதைப்பதில்லை. எனென்றால் சர்க்காரால் விநியோகிக்கப்படும் வித்துக்கள் தரமாக இருப்பதில்லை. என்னுடைய சொந்த அனுபவமும் அதுதான். விதையானது நல்ல முறையில் பொறுக்கப்பட்டு உலர்ந்த முதிர்ந்த விதையாக இருக்கவேண்டும். அப்படியில்லாமல், பச்சையான தும், முதிர்ச்சியில்லாததுமான வித்துக்களை வாங்கி சேகரித்துவைக்கும் பட்சத்தில், அது குடியானவர்களுக்கு வழங்கப்பட்டால், அவர்களுக்கு மிகுந்த நஷ்டத்தைத் தான் உண்டாக்கும்.

அடுத்தபடியாக, பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் சர்க்கார் செய்து முடித்தாகிவிட்டது என்று சொல்லப்படுகிறது. உண்மைதான். நமது நாட்டில் பெரிய அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள் எல்லாம் ஏற்படுத்தியாகி

விட்டது. இனி நமது நோக்கம் சிறு நீர்ப்பாசனத் திட்டங்களாகத் (Minor Irrigation schemes) தான் இருக்கமுடியும். அதுவும் முடிந்து விட்டால் பூமிக்கு அடியில் இருக்கும்படியான நீரை மேலேகொண்டு வரும் திட்டங்கள், அதாவது bore wells (குழாய் கிணறுகள்) filter points (வடி முனை குழாய்கள்) எற்படுத்தும் திட்டங்கள் ஆரம்பிக்கிறார்கள். இந்த வடிமுனை குழாய் திட்டங்கள் delta area, சமுத்திரக் கரை, நதி முகத்துவாரங்கள், இப்படிப்பட்ட இடங்களில் தான் வெற்றிகரமாக நடக்கின்றன. ஆனால் மேட்டுப்பாங்கான கோயம்புத்தூர், சேலம் ஜில்லா போன்ற பிரதேசங்களில் வடிமுனைக் குழாய்த் திட்டங்கள் அவ்வளவு வெற்றிகரமாக இருக்கமுடியாது. 5,000 ரூபாய் 10 ஆயிரம் ரூபாய் செலவு செய்து bore-hole wells (குழாய் கிணறுகள்) போட்டால் வெற்றிகரமாக ஆனாலும் ஆகும். இல்லா விட்டால் இல்லே என்ற நிலையில் இருக்கிறது. ஆகவே, பூமிக்கு அடியில் ஜலம் இருக்கும் இடங்களைக் கண்டு பிடிக்க சாஸ்திர ரீதியாக ஆராய்ச்சி செய்தால் நன்றாக இருக்கும். அன்னிய நாடுகளிலிருந்து நிபுணர்கள் வந்து, மண்ணெண்ணே பெட்ரோல் இருக்கும் இடங்களே கண்டுபிடித்தார்கள். அதே போல் கனிவர்க்கங்கம் இருக்குமிடங்களும் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த முறையில் ஜலம் இருக்குமிடங்களைக் கண்டு பிடித்து விவசாயிகளுக்குச் சர்க்கார் உதவி செய்யலாம் என்று கருதுகிறேன். வடநாட்டில் Gangetic plain -ல் bore-hole wells (குழாய் கிணறுகள்) வெற்றிகரமாக இருக்கின்றன. அமெரிக்கர்களுக்கும் இது அன்னியநாட்டு கண்டிராக்டர்களுக்கும் bore-hole wells அமைத்து நஞ்செய், புஞ்செய் நிலங்களுக்கு சாகுபடி வசதி செய்யத் திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நெய்வேலி மில் ஆர்டிஷியன் (artesian) கிணறுகள் வெற்றிகரமாக இருக்கின்றன. வரட்சிமிக்க இடமான எங்கள் கோயம்புத்தூர் ஜில்லாவிற்குத் தான் கதி மோட்சமில்லே. எங்கள் ஜில்லாவின் நிலைமை மந்திரிகளுக்கு தெரிந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லே. எங்கள் ஜில்லா விவசாயிகள் விவசாயத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்த போதிலும், அவர்கள் முயற்சியும், பொருட் செலவும், தகுந்த நீர்ப்பாசன வசதி யில்லாததால், சில சமயம் வெற்றியும், பெரும்பாலும் தோல்வியும் அடைகிறது. ஆகவே சர்க்கார் பூமியின் அடியிலிருக்கும் தண்ணீரை மேலே கொண்டுவர தக்க திட்டங்கள் வகுத்து, விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டியது மிகவும் அவசியம்.

10-26 a.m. அடுத்தாற் போல், இப்போது கடைசியாக எனக்கு முன்னால் பேசிய மெம்பர்கள், கீழ்பவானித் திட்டத்தைப்பற்றி விவாதம் நடத்தினார்கள் அதிலே எனக்கு ஒரு செண்ட் நிலம் கூட இடையாது. அது பற்றி நான் பாரப்பட்சமில்லாமல் சொல்லலாம் என்று நினைக்கிறேன். ஆனால் என்னுடைய அனுபவம் சற்றுக் கம்மியாய இருக்கலாம். நேரடியான கஷ்டநஷ்டம் தெரியாமல் இருக்கலாம். பொதுவாகப் பார்க்கும்போது இந்தக்கீழ்ப் பவானித் திட்டத்தைப் பார்க்கும் போது, அந்தப் பிராந்தியத்தில் இத்திட்டம் வேகமாக அமுலாக்கப்பட்டது. அந்த அளவுக்கு மேல் பவானித் திட்டம் வந்ததா ? கீழ் பவானி திட்டம் படிப்படியாக வந்துவிட்டது. மேல் பவானித் திட்டத்துக்காக, நாங்கள் அந்தக் காலத்தில் ரொம்பக் இளர்ச்சி செய்தோம். ஆனால், கீழ்ப் பவானித் திட்டம், அது ரொம்ப சுலபமானது, அதிக நீர்த்தேக்கம் உடையது என்று என்ஜினியர்கள், மந்திரிகள் சொன்னதாலும், அங்கிருந்தவர்களுடைய அந்த அபிப்பிராயத்தை ஒப்புக் கொள்ள வேண்டிய தன்மை ஏற்பட்டுவிட்டது. பூமி நிலைமையைப்பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டது. அந்த கீழ் பவானித் திட்டபூமியானது எத்தகைய வசதியுள்ள நிலைமையிலும், கம்மியான நிலம், அது அவ்வளவு உயர்ந்த நிலம் அல்ல என்று என்ஜினியர்கள் சொன்னது எனக்கு தெரியும். மேல் பவானித் திட்டம் வந்திருந்தால், இவ்வளவு போராட்டம் இருக்கவே இருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம். அது வந்தது எனக்குப் பொறுமை இல்லே. என், அதற்கு இவ்வளவு எதிர்ப்பு சர்க்காருக்குக் காட்டுகிறார்கள் என்பதுதான் தெரியவில்லே. இன்றைய தினம் கோயம்புத்தூரில், ஒரு எக்கரில், கிணற்றிலிருந்து தண்ணீர் பாயவேண்மென்றால் 100 ரூபாய் ஆகிறது pumping-க்கு. ஆனால், ரூ. 20, ரூ. 15, ரூ. 7½ என்று செலவாகக்கூடிய இடங்களில், என் அத்தனை போராட்டம் செய்கிறார்கள் என்பது தான் புரியவில்லே. நிர்வாக யந்திரத்தில்,

ஊழல்கள் இருந்தால் அதை நிவர்த்தி செய்வது அவசியம் என்பதில் சந்தேகமில்லே. இன்றைய தினம் கேட்கிறேன். கீழ் பவானித் திட்ட குடியானவர்கள், மேல் பவானித் திட்டத்துக்கு வந்து, மேல் பவானித் திட்டக் குடியானவர்கள், கீழ் பவானித் திட்டத்துக்கு போவார்களேயானால் பாகிஸ்தான் ஹிந்துஸ்தான் மாதிரி, எந்தப் புரட்சி நிலைமையும் ஏற்படாமல் இருந்தால், நான் மனமுவந்து, கீழ் பவானித் திட்ட ஊருக்குப் போவதில் சந்தோஷமாகத் தயார் என்று சொல்லிக்கொள்கிறேன். மின்சாரத்தினால், ஜலம் கிடைக்கும்படியான கஷ்டம் எது என்பது எனக்குத் தெரியும். இன்றைய தினம், மேல் பவானித் திட்டத்தில், குந்தாதிட்டத்தில் எதாவது, ஜலம் வரும் பட்சத்தில் , எக்கருக்கு ரூ . 20 அல்ல, நான் சொல்கிறேன், இன்றையதினம், எக்கருக்கு ரூ. 50 கொடுக்கவும், அங்குள்ள விவசாயிகள் முன் வருவார்கள் என்று நான் சவால் விடுகிறேன். இப்போது, பல ஆறுகள் மூலமாக, ஜலத்தைத் தேக்கி, மின்சார உற்பத்தியைச் செய்கிறார்கள். அதை வரவேற்கிறேன். நாட்டின் அபிவிருத்திக்கு நல்லது. நாங்கள் இந்தக் கீழ்ப்பவானித் திட்டத்தின் பேரில், அந்த ஊருக்குப் போய் விவசாயம் செய்தால், நாங்கள் சண்டை போட்டுக் கொள்ள மாட்டோம். சர்க்கார் கேட்கும்படியான, வரி என்னவோ அதை நாங்கள் கொடுக்கிறோம் பூமி அபிவிருத்தித் திட்டம், அதாவது Betterment Fee கொடுக்கவும், தயாராய் இருக்கிறோம் என்று நான் சொல்லிக் கொள்கிறேன். Betterment Fee கேட்பதில் என்ன தவறு என்று கேட்கிறேன். 10 கோடி ரூபாயில் கட்டப்பட்ட, கீழ்பவானித் திட்டத்தில், யார் பணம் ? கோயம்புத்தூர், சேலம் விவசாயிகள் பணமும் அல்லவா ? புயலால் பாதிக்கப்பட்ட, ராமநாதபுரம், தஞ்சை ஜில்லா விவசாயிகள் பணமும் அல்லவா ? நீங்கள் என் கிளர்ச்சி செய்கிறீர்கள் என்று கேட்கிறேன். வரி வேண்டாம் என்று சொல்லாதீர்கள். இதன் பயனே, இந்தத் தலை முறையோடு அல்ல, அடுத்த தலை முறையிலும் காணலாம். இந்த சர்க்காரும், எங்க சர்க்காரும், இதை அபிவிருத்தி செய்ய திட்டம் போட்டிருக்கிறார்கள். அடுத்த தலைமுறையினர், இத்திட்டம் கொண்டு வந்த வர்களைக் கும்பிடுவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லே. நான் சொல்வது முகஸ்துதிக்கு அல்ல, நானும் வாழ வேண்டும், நீயும் வாழ வேண்டும் என்கிற அந்த முறையில் நான் சொல்ல வேண்டியதே தவிர, பொறுமைப்படுவதால் அல்ல. அதாவது, சர்க்கார் மனமுவந்து, விரிவாக, கோயம்புத்தூரில், அவினாசி, பல்லடம் இப்பேற்பட்ட இடங்களுக்கு, ஒரு நீர்ப்பாசனம் கொண்டு வரமாட்டார்களா ? என்பது தான் என்னுடைய ஆவல். இப்போது இதற்கு முன்னால், இந்த பரம்பிகுளத் திட்டத்தைப் பற்றி மிகப் பரவலாகப் பேசினார்கள். மந்திரியும் பேசினார். என்ஜினியர்களும் போய் ஆராய்ச்சி செய்தார்கள். இப்போது எல்லாம் silent ஆக இருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : வேலே நடக்கிறது, காரியமெல்லாம் நடக்கிறது,

* SRI V. C. PALANISWAMI GOUNDER : ரொம்ப சரி, காரியம் நடக்கிறது என்றால் மேற்கு தொடர்ச்சியிலிருந்து வீணாகிப் போகும் ஜலம், நமக்கு உபயோகமாவது பற்றிய விஷயத்தில், திருவாங்கூர்-கொச்சியோடு, இங்கு சம்மந்தப்பட்ட இலாக்கா, என்ன முடிவுக்கு வந்தார்கள் என்று தெரியவில்லே. அதாவது நம் நாட்டில் அணைக் கட்டிக்கொண்டு வந்தால், ஒரு லட்சம் எக்கருக்குத் தான் பாய முடியும். அது போதாது. இன்னும் 2, 3 லட்சம் எக்கராக்களுக்குப் பாயவேண்டும் முக்கியமாகப் பல்லடத்தைப் பற்றிப் பேசவிரும்புகிறேன். பல்லடம், பஞ்சப் பிரதேசம் என்பது தெரியும். அதிலும், இந்தப் பரம்பிகுளத் திட்டத்தில் தண்ணீர் கொண்டு வந்து லெவல் இல்லாவிட்டால், pumping செய்து, வறண்ட இடத்துக்கு பயன்படுத்துவது நல்லது. இதற்கு மசோதா கொண்டு வரும்படி, மந்திரி கனம் மாணிக்கவேலு அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அமெரிக்காவில், வரட்சியான இடங்களில், 400 மைல் தூரத்துக்கு, Pumping line கொண்டு வந்து, விவசாயிகளுக்கு தண்ணீர் இட்டும்படியாகச் செய்கிறார்கள். அது எவ்வளவு முன்னேற்ற கரமான காரியம் என்று கேட்கிறேன், பிரம்பிகுளத்திட்டத்தில் முதல் ஆரம்பித்த மாதிரி, இனிமேலும் ஈடுபட்டால் இந்த பல்லடம், தாராபுரம்

தாலுக்காக்கள் வரட்சி, பஞ்சப் பிரதேசங்கள், உற்பத்தியைப் பெருக்க முடியும். நீங்கள் பணத்தைப் பார்க்க வேண்டாம், உற்பத்தியைப் பாருங்கள். அந்த முறையில் செய்தால் வெற்றிபெறும். அதற்கு சர்க்காருடைய பணம், நூற்றுக்கு 40, 60, வட்டி ஆனாலும் கொடுப்பர்கள் என்று நான் இங்கே சொல்லத் துணிகிறேன். ஆகையினாலே, இப்படிப்பட்ட விஷயங்களைச் சர்க்கார் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன் என்று கேட்டுக் கொண்டு, கவர்னர் பிரசங்கத்தை, நான் மனமுவந்து ஆதரிக்கிறேன்.

10-36 a.m.

Sri M. PALANIYANDI : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் உரையில் பேசும் காலத்தில், நமது சென்னை மாகாணமானது தமிழ் மாகாணம் என்று அழைக்கப்படாமல் இருந்தாலுங்கூட தமிழ் மொழி ஆட்சிமொழி ஆவதற்கு சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று சொல்லியிருப்பது மிகவும் வரவேற்கத் தகுந்த விஷயமாகும்.

எல்லைப் பிரச்னையைப் பற்றி ஆந்திர கவர்னர் செய்துள்ள பிரசங்கமானது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் இருக்கிறது என்று தான் சொல்லமுடியும். எல்லைப் பிரச்னையைத் தீர்ப்பது பற்றி பண்டித ஜவஹர்லால் நேரு உறுதிமொழி கொடுத்திருக்கிறார். ராஜ்யச் சீரமைப்புக் கமிஷன் ரிபோர்ட்டில் 395, 396-வது பாராவில் நேரிடைப் பேச்சு வார்த்தையின் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டதன் பேரிலும் நேருஜியின் வாக்குறுதியின் பேரிலும் இளர்ச்சியை விட்டு விடலாம் என்று சொல்லப்பட்டது. இருந்தும் கூட ஆந்திர மாகாணத்தைச் சுற்றிய எல்லைப் பிரச்னை பெரிய அளவு இருக்கிற காரணத்தை வைத்துக்கொண்டு இந்தப் பிரச்னையை ஆந்திரா அரசாங்கம் தட்டிக் கழிக்கப் பார்ப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். உண்மையாக நிதி மந்திரி அவர்கள் மத்திய அரசாங்கத்துடன் வாதாடி, எல்லைப் பிரச்னையைத் தீர்க்க, உடனடியாக எல்லைக் கமிஷன் நியமிக்கப்படுவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அவருக்கு இந்தக் காரியத்தில் இச் சட்டசபை பூராவும் ஆதரவு கொடுக்க தயாராக இருக்கிறது. இதுபோல் பல விஷயங்களில் இந்தச் சபை ஆதரவு கொடுத்து வந்திருக்கிறது. ஆகையால், அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு எழுதி, எல்லை கமிஷனை உடனடியாக நிறுவுவதற்கு வேண்டிய வழிவகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனென்றால் எல்லைப் பிரச்னை இன்னும் தீராமல் இருப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எல்லைப் பிரச்னையைத் தீர்த்தாக வேண்டும் என்று இளர்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அரசாங்கமும் " செய்வோம் செய்வோம் " என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஆந்திர அரசாங்கம் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி, இல்லாத விஷயங்களைப் பேசி பிரச்னையைத் தட்டிக் கழித்து வருகிறது என்று நான் கருதுகிறேன். ஆகையால் மந்திரி அவர்கள் மத்திய அரசாங்கத்தினிடம் எடுத்துச் சொல்லி நிச்சயமாக எல்லைக் கமிஷனை சீக்கிரமாக அமைப்பதற்கு வேண்டிய வழிவகை செய்ய வேண்டுமென்று மன்றுடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை சர்க்காருக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். புள்ளம்பாடி, கட்டளை வாய்க்கால் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சர்க்கார் இந்த ஆண்டிலேயே எடுத்துக்கொண்டு விட்டார்கள். நான் முக்கியமாக சர்க்காருக்கு ஒரு விஷயத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல ஆண்டுகளாக அந்தப் பகுதி மக்கள், பிற்பட்ட மக்கள், விரும்பிக்கொண்டிருந்த ஒரு திட்டத்தை இப்பொழுது அரசாங்கம் எடுத்துக்கொண்டு நிறைவேற்றுவதானது பிற்பட்ட மக்களின் மீது இந்த சர்க்காருக்கு இருக்கக்கூடிய அக்கறையைக் காட்டுகிறது. ஆனால், இதை 6 ஆண்டுகளுக்குள் முடிக்கப்போவதாகச் சொல்லப்படுகிறதுதான் வருந்தத்தக்க விஷயம். எனென்றால் அங்குள்ள மக்கள் அதிகமாக ஒத்துழைக்க காத்துக்கொண்டிருக்கும்போது, வெகு காலமாக திட்டம் நிறைவேற எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது அதைச் சீக்கிரமாக முடிப்பதற்கு அரசாங்கம் வழி வகுக்க வேண்டுமென்று மிகவும் மன்றுடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயிகளுக்கு வசதி செய்ய தேசிய விஸ்தரிப்புத் திட்டப்பகுதிகளில் கடன் கொடுக்கப்போவதாக கவர்னர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதுமட்டும் போதாது என்று நான் கருதுகிறேன். விவசாயிகளுக்குக் கூட்டுறவு பாங்குகள் கடன் கொடுக்கமுடியும். உதாரணமாக திருச்சி கூட்டுறவு மத்திய பாங்கிலே 70 லட்சம் அல்லது 80 லட்சம் ரூபாய் வரையில் பணம் இருக்கிறது. மக்கள் " டெபாசிட் " செய்யும் பணத்தைக் கூட "ஸ்க்ரூடினல்" பண்ணி தான் வாங்கிக்கொள்ளுகிறார்கள். அந்தப் பணத்தை விவசாயிகளுக்குக் கடனுகக் கொடுக்கலாம். கூட்டுறவு இயக்கத்திலோ அல்லது வேறு எங்கேயோ தவறு இருக்கிறது. மத்திய கூட்டுறவு பாங்கில் பணம் இருக்கிறது. கிராம மக்களுக்குக் கடன் வேண்டும். ஆனால் கடன் கிடைக்கவில்லை யென்றால் நிர்வாக இயந்திரத்திலோ கூட்டுறவு இலாகாவிலோ அரசாங்கத்திலோ தவறு இருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். தேசிய விஸ்தரிப்புத் திட்டப் பகுதிகளில் மட்டும் தான் கடன் வசதி தேவை என்பது அல்ல. மாகாணத்தில் எல்லாப் பகுதிகளிலும் உள்ள விவசாயிகளுக்கும் கடன் வசதி அத்யாவசியம். விவசாயிகள் அதிக வட்டிக் கொடுத்து பணம் கடன் வாங்குவதோடு மட்டுமல்லாமல் தங்கள் முதலையே இழந்து விடக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமையை முன்னேற்றுவதற்கு நீண்டகாலக் கடன், குறுகிய காலக் கடன், முதலிய வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொழில் வளம் பெருகவேண்டுமென்று நமது அரசாங்கம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கன ரக இயந்திரத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். அது வரவேற்கத்தகுந்த விஷயம். நமது மாகாணத்தைப் பொறுத்தமட்டில் ஜனத்தொகை அடிப்படையில் எடுத்துக்கொண்டாலும் சரி, பிற்பட்ட நிலையை எடுத்துக்கொண்டாலும் சரி எந்த விதத்தில் பார்த்தாலும் இங்கு தொழில் அபிவிருத்தி ஏற்பட வேண்டுமென்று கேட்க உரிமை இருக்கிறது. தேசிய அபிவிருத்திக் கவுன்சிலிலே நிதி மந்திரி அவர்கள் வாதாடினால் இந்த சபை ஆதரவாக இருக்கும். நாட்டுமக்கள் எல்லோரும் ஆதரவு கொடுக்க காத்துக்கொண்டிருக்கிறார்கள். இருநூற்று முப்பது கோடி ரூபாய் நமக்கு வேண்டுமென்றால் 170 கோடி ரூபாய் தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அது போதாது, அதிகமாக வற்புறுத்தி வாங்குவதற்கு வழி வகை செய்யவேண்டும்.

நெய்வேலித் திட்டத்திற்கு 60 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டு சீக்கிரமாக நிறைவேற்றப்படும் என்று கவர்னர் உரையிலே இருக்கிறது. பூமிக்கு கீழ் இருக்கும் தண்ணீரை மேலே இறைத்து, அதற்குமேல் இருக்கக்கூடிய பழுப்பு நிலக்கரியை எடுத்தால் தமிழ்நாட்டில் தொழில் வளம் நிச்சயமாக வளரும். சேர்வராயன் மலையில் கிடைக்கும் பாக்ஸைட்டைக் கொண்டு சேலத்தில் அலுமினியம் தொழிற்சாலையை பத்து கோடி ரூபாய்ச் செலவில் ஆரம்பிப்பதோடுகூட, அங்கு இருக்கக் கூடிய இரும்புக் கனியையும் பயன்படுத்த முன்வரவேண்டும். மூலப்பொருள்கள் நம் நாட்டில் கிடைக்கிறது. குந்தா மின்சாரத் திட்டம் போன்றவைகளிலிருந்து மின்சாரமும் கிடைக்கும். நெய்வேலித் திட்டத்திலும் மின்சாரம் உற்பத்தி செய்யப்படபோகிறது. நெய்வேலியில் கிடைக்கும் நிலக்கரியையும், சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனியையும் கொண்டு இரும்புத் தொழிற் சாலையை ஆரம்பிப்பதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அடிப்படை கனரகத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு நிதி மந்திரி அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்த வேண்டும். தமிழ்நாடு தொழில் வளத்தில் பிற்பட்ட பகுதியாக இருப்பதால், தொழில் வளம் பெருக வேண்டியதவசியம். பல ஆண்டுகளாக தமிழ் நாட்டு மக்கள் இந்த முறையில் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மக்களுடைய எண்ணத்தைக் கருத்திற்கொண்டு நிச்சயமாக பெரும் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு மத்திய சர்க்காரை நமது சர்க்கார் தூண்டவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிறு தொழில்களுக்குத் தொகை ஒதுக்கப்பட்டிருந்தாலும் அந்தத் திட்டங்களெல்லாம் சரியாக அமல் நடத்தப்படவில்லை. தமிழ் நாட்டில் தொழில்வளம் பெருவதற்கு சிறு தொழில்கள் ஏராளமாக ஆரம்பிக்கப்பட

[Sri M. Palaniyandi] [10th August 1956

வேண்டும். சிறு சிறு தொழில்களை மக்கள் ஆரம்பிப்பதற்கு வேண்டிய உதவியை அரசாங்கம் செய்துகொடுக்கவேண்டும். கடனும் தாராளமாகக் கொடுத்துதவவேண்டும். பாராளுமன்றத்திலும் காங்கிரஸ் எம்.பி.க்கள் வற்புறுத்தி வருகிறார்கள். கடன் கொடுப்பதிலுலே சிறிது நஷ்டம் ஏற் பட்டாலும் பரவாயில்லை. எப்படியாவது சென்னை ராஜ்யத்தில் தொழில் வளம் பெருகுவதற்கு வழிவகைகளை ஆராய்ந்து காரியங்களைச் செய்யவேண் டும். தக்காவிக் கடன் வாங்கி நிலத்தை உழுது வளப்படுத்துவது போல வே சிறு தொழிலுக்கும் கடன் உதவி அவசியம் கடன் கொடுப்பதிலே ஆங்காங்கே பலகஷ்ட நஷ்டங்கள் ஏற்படலாம். இருந்தாலும், ஆங்காங்கே ஏராளமான **unskilled and semiskilled workers** இருப்பதால் அவர் களைத்தேர்ந்தெடுத்து நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்குப் பயன் படுத்தவேண்டும், சட்டசபை உறுப்பினர்களையோ, பஞ்சாயத்து தலைவர்களை யோ, இன்னும் மற்ற நல்லவர்களையோ நியமித்து, அவர்கள் மூலமாக சிறந்த தொழிலாளர்களைத் தேர்ந்தெடுக்கச்செய்து அவாகளைப் பயன் படுத்தலாம்.

சமீபத்தில் நிதி மந்திரி அவர்கள் கோயமுத்தூரில் பேசியபோது நமது மாகாணத்தில் நல்ல தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று பெருமைப்பட்டுச் சொன்னார்கள். உண்மையிலேயே அது பெருமைப்படக் கூடிய விஷயந்தான். நம்நாட்டில் பெருமைபடத்தக்க முறையில் வேலை செய்யக்கூடிய நல்ல தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஜெர்மனியிலிருந் தும், டென்மார்க்கிலிருந்தும் வந்துள்ள இன்ஜினீர் இங்கு 100 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை செய்யும் தொழிலாளியின் வேலையைப் பார்த்து வியந்திருக்கிறார்கள். ஒரு படித்த இன்ஜினீர் செய்யக்கூடிய வேலையைக்கூட தன்னுடைய பரந்த அனுபவத்தின்காரணமாக செய்யக் கூடிய, தொழிலில் ஆர்வம் உள்ளவர்களும் இருக்கிறார்கள். ஆகையால், நாம் சிறு சிறு தொழில்களை நடத்தக்கூடியவர்களுக்கு கடன் வசதி அதிகமாகக் கொடுத்தால் நாட்டிலே தொழில்கள் வளருவதற்கு முடியும். நமது நிதி மந்திரி அவர்கள் இது விஷயமாக ஆலோசனை செய்து சிறு தொழிலுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தொழிலாளிகளுடைய நிலை இன்னும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. தொழிலாளருடைய விஷயமாக இயற்ற வேண்டிய சட்டங்களை மத்திய அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கமும் இயற்றலாம் என்று அரசியல் சட்டத் தில் சொல்லப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு இருக்கும்படியான பல சட்டங்களைப் பரிசீலனை செய்து முன்னேற்றமான முறையில் திருத்தி யமைக்கவேண்டும். தொழில் கோர்ட்டு வசதி செய்திருக்கிறார்கள். அதைப்போன்று இன்னும் பல வசதிகள் செய்துகொடுத்து அவர்களுடைய நிலையை முன்னேற்றவேண்டும். ஒரு தொழிலாளி வேலையிலிருந்து நீக் கப்பட்டால் அதைத் தொழில் கோர்ட்டுக்கும் மேல் கோர்ட்டுக்கும் எடுத்துக் கொண்டு போவதில் பலவித கஷ்டம் ஏற்படுகிறது. அவன் நீக்கப்பட்டது சரியா தப்பா என்பதை முடிவு செய்வதற்கு ட்ரிப்யூனல் தீர்ப்பு வரை காத்துக்கொண்டிருக்கவேண்டியிருக்கிறது. உதாரணமாக டன்லப் கம் பெனியார் போன்ற ஏகபோக கம்பெனிகள் கோடிக் கணக்கான ரூபாய் லாபம் அடைந்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனல், தொழிலாளிகளின் நிலைமை முன்னேறவில்லை. சாதாரண தொழிலாளி தொழிற்சங்கம் அமைப்பதன் காரணமாக வேலையைவிட்டு நீக்கப்பட்டால், தொழில் கோர் ட்டுக்குப் போய் பரிகாரம் காணுவதில் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. நடுத்தர குமஸ்தாக்கள் முதலியவர்கள் சங்கம் அமைப்பதற்குக்கூட முடி யவில்லை. ஆகவே, தொழிலாளிகள் விஷயமாக உள்ள சட்டங்களெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களுக்கு நன்மை செய்யக்கூடிய முறையில் சட்டங்கள் திருத்தியமைக்கப்படுவதோடு கூட முன்னேற்றமான சட்டங் கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொழிலாளர்களுக்கு வீடுகட்டும் திட்டம் (**Industrial Housing Scheme**) இன்னும் அதிகமாக உபயோகப்படவில்லை என்ற குறை இருந்துவருகிறது. இதை நான் சொல்லவில்லை. பார்லிமெண்டு உருப்பினர்களும் மற்றவர்

10th August 1956] [Sri M. Palaniyandi]

களும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். மத்திய அரசாங்கம் அளிக்கும் உதவித் தொகையை நமது அரசாங்கம் முழுதும் உபயோகப்படுத்துவதில்லை என்ற குறையும் சொல்லப்படுகிறது. தயவுசெய்து ஒதுக்கப்பட்ட பூராப் பணத்தையும் பயன்படுத்த நமது அரசாங்கம் முன்வர வேண்டும். மத் திய அரசாங்கம் ராஜ்ய அரசாங்கத்திற்கு இந்த இனத்திற்காக 50 சத விகிதம் 'ஸப்ஸிடி' தருகிறார்கள். 50 சதவிகிதம் கடன் தருகிறார்கள். எல்லாவற்றையும் உபயோகப்படுத்தி தொழிலாளிகளுக்கு ஜில்லாக்களின் பல பாகங்களில் ஆயிரம் இரண்டாயிரம் என்று வீடுகளைக் கட்டிக்கொடுத் தால் தொழிலாளிகளுடைய வீட்டுப் பிரச்னை தீருவதோடுகூட, நகரத்திற்கு அப்பாலுள்ள கிராமப்பகுதிகளிலும் வீடு கட்டும் திட்டம் நிறைவேறும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். மத்திய அரசாங்கம் ஒதுக்கிய பணத் தை என் தொழிலாளிகளின் நன்மைக்குப் பயன்படுத்தாமல் விட்டுவைக்க வேண்டுமென்று நான் கேட்கின்றேன். தொழிலாளி வீடு கட்டும் சங்கத் தைக் அணுகி கடன் கேட்டாலும் 600, 700 ரூபாய் வரையில் தொழிலாளி முதலில் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இப்படி முதலில் செலவு செய்யக்கூடிய தொழிலாளிகள் குறைவு. 100 ரூபாய் சம்பளமாவது வாங்கக்கூடிய நடுத்தர தொழிலாளிகள் தான் இந்தமுறையில் கடன்பெற்று வீடு கட்டிக்கொள்ளமுடியும். ஆனல், பெருவாரியாக இருக்கக்கூடிய சா தாரண எழைத் தொழிலாளிகளுக்கும் பயன்படக்கூடிய முறையில் வீடு கட்டுக்கொடுக்கும் திட்டம் செய்யப்படவேண்டும். அத்துடன் தொழிலாளர் கள் வீடு கட்டும் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் தொகை பூராவும் உபயோகப் படுத்த வழி வகை செய்யவேண்டுமென்று கனம் நிதி அமைச்சரவர்களை நான் மன்றுடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். மற்ற மாகாணங்களில் இந்தத் துறையில் லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனல், நமது மாகாணத்திலே அதிகமாக உபயோகப்படுத்தவில்லை என்பதையும் மந்திரி அவர்கள் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஒவ்வொரு ஆண்டிலும் நான் சொல்லக்கூடிய பிரச்னை ஒன்று இருக் கிறது. நிதி மந்திரி அவர்கள் இதில் கவனம் செலுத்தவேண்டும். ஹரி ஜனங்களிலிருந்து இருஸ்தவ சமூகத்திற்கு மதம் மாறியவர்களுடைய நிலை மை மோசமாக இருக்கிறது. இருஸ்தவ சமூகத்திலும் ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. ஹரிஜனக் இருஸ்தவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவே தான் இருக்கிறார்கள். ஐயர் இருஸ்தவர்கள், உடையார் இருஸ்தவர்கள், ரெட்டியார் இருஸ்தவர்கள், பிள்ளை இருஸ்தவர்கள் போன்ற முற்போக்கான வர்கள் ஹரிஜனக் இருஸ்தவர்களை கோயில்களுக்கூட அனுமதிக்காத நிலை மை அங்கும் இருக்கத்தான் செய்கிறது. அவர்கள் விரட்டப்படுவதும் கா ணப்படுகிறது. இருஸ்தவ சமூகத்தில் மட்டும் ஏற்றத்தாழ்வில்லாமல் சம தர்மம் இருக்கிறதென்று சொல்லிவிட முடியாது. ஹரிஜனக் இருஸ்தவர் களுக்கு கல்விச் சலுகையளிக்க ஆந்திர அரசாங்கம் முந்திக்கொண்டுவிட் டார்கள். சென்னை அரசாங்கம் இந்தச் சலுகையை அளிப்பதில் முதன்மை யாக இருக்கவேண்டியிருக்க அந்தக் காரியத்தை ஆந்திர அரசாங்கம் செய்துவிட்டார்கள். உத்தியோக விஷயங்களில் ஹரிஜனக் இருஸ்தவர்க ளுக்கு சலுகை அளிக்காவிட்டாலும்கூட கல்விச் சலுகையாவது மற்ற பிற்பட்ட வகுப்பினர்களுக்கு அளிப்பதுபோல் கட்டாயம் கொடுக்கவேண் டும். இது விஷயத்தில் நமது அரசாங்கம் புனராலோசனை செய்யவேண் டும். மதச்சார்பற்ற அரசாங்கம் (**secular state**) என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கும்போது உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட நிலையிலுள்ள ஹரிஜனக் இருஸ்தவர்களுக்குள், மதம் மாறியதன் காரணமாக அரசாங்கச் சலுகைகள் இன்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு சலுகை அளிக்கப்படவேண்டுமென்று பிற்பட்ட வகுப்பினர் கமிஷன் வந்திருந்த போதும் தெரிவித்திருக்கிறோம். அவர்களும் அதைப் பரிசீலனை செய்துக் கொண்டிருக்கிறார்கள். நமது அரசாங்கம் இவர்கள் விஷயத்தில் கருணை யுடன் நடந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கெஜெட் பதவியிலாதவர்களின் கோரிக்கை சம்பந்தமான கேள்விகள் பலவற்றிற்கு நேற்றையதினம் கனம் நிதி மந்திரி அவர்கள் பதில்

[Sri M. Palaniyandi] [10th August 1956

A.—A statement[c] showing the District Munsifs' Courts and the Sub-Courts that existed in Malabar on 31st March 1956 and those that were sanctioned since that date together with the reasons therefor is placed on the table of the House.

Revenue received in certain Sub-Registrar's offices

5 Q.—SRI K. MADHAVAN NAMBIAR: Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state the revenue received from the following Sub-Registrars' offices for the financial year ending 31st March 1956: (1) Fort Cochin, (2) Uliyil and (3) Kumaranallur?

A.—The particulars are furnished below:—

Name of the office.	Revenue received during the financial year ending 31st March 1956.
	RS.
1 Fort Cochin	5,434
2 Uliyil	10,584
3 Kumaranallur	6,159

[a] Printed as Appendix I on page 593–infra.
[b] Printed as Appendix II on page 594 infra.
[c] Printed as Appendix III on pages 594–595 infra.

Lands in Vriddhachalam taluk

6 Q.—SRI M. KATTIMUTHU: Will the Hon. the Minister for Revenue be pleased to state how many acres of patta lands, how many acres of waste lands and how many acres of forest lands are available in Vriddhachalam taluk of South Arcot district?

A.—Patta lands—237,659 acres.

Waste lands—

(a) Assessed waste—37,409 acres.

(b) Unassessed waste—1,198 acres.

Forests—17,731 acres.

New schemes introduced in First Five-Year Plan in Vriddhachalam taluk

7 Q.—SRI M. KATTIMUTHU: Will the Hon. the Minister for Finance be pleased to state the improvements effected and the new schemes introduced by the Government in the First Five-Year Plan in Vriddhachalam taluk in South Arcot district?

A.—The First Five-Year Plan was drawn up taking into consideration the needs of the State as a whole. The Government have therefore not drawn up any special schemes for Vriddhachalam taluk or for any other taluk in particular.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—STATEMENT UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* HARDSHIP FELT BY STUDENTS OF PADAYACHI COMMUNITY.

MR. SPEAKER: I have received notice under Rule 40 from Sri K. R. Viswanathan calling attention of the Hon. Minister for Finance and Education to a matter of urgent public importance, viz., the hardship felt by the students of the Padayachi community due to the withdrawal of the full-fee concession in schools given to them. Sri Viswanathan may explain his point. 10-10 a.m.

* SRI K. R. VISWANATHAN: Mr. Speaker, Sir, full-fee concession was granted under G.O. No. 1081, Education, dated 2nd August 1954 to the students of the Padayatchi community in the districts of Salem, Tiruchirappalli, Tanjore and South Arcot. This was because this community was included in the list of former criminal tribes circulated along with memorandum No. 34123-D/51/9, Education, dated 28th November 1952. Sir, it is a fact that at one time this community in the four districts was declared as 'a Criminal tribe' and that is why it finds a place in the list referred to by me. In answer to my question on the floor of the House, in July 1953, the then Minister for Law had categorically stated that this community was eligible for full fee concession. I would like to make it clear here that the concession was granted

[Sri K. R. Viswanathan] [13th August 1956

to this community, not because it is now a criminal tribe, but because it was once declared as a criminal tribe. In Independent India, there is no community which is called a criminal tribe. On or about 20th July 1956, the Government issued a Press Note to the effect that the full-fee concession is restricted to the students of only two villages, viz., Tennore in Tiruchirappalli district and Vellayankuppam in South Arcot district. The issue of this Press Note has struck a catastrophic blow on the life of the students belonging to that community who have been studying in the colleges and schools without any fee and they have now to discontinue their studies. Many of them are asked to pay a lumpsum of fee as arrears for the past two years or so. The hardships felt by these students are unexpected and unbearable. I therefore request the Government not to restrict the full-fee concession only to these two villages, but to extend the same to all the students who could produce the necessary nativity certificate under Government Order No. 1081. Thank you, Sir.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, this question has been discussed on the floor of this House many times. But, there are certain doubts still persisting. Therefore, I would like to give the history of the concessions which were granted to the students belonging to certain communities.

In order to get the reclamation of criminal tribes and habitual offenders, the Government had undertaken several ameliorative schemes in the past which included full-fee concessions to the children of the criminal tribes in schools. This question was considered along with other existing scholarships and stipends by the Retrenchment and Reorganization Committee in 1948 and the Committee recommended that the full-fee concessions should be extended to all boys and girls belonging to the Kallar and other similarly situated communities who were aided through the Police Department as members belonging to the criminal tribes. The same Committee had also recommended that boys and girls of backward communities as listed in the Educational Rules should be given half-fee concession. The recommendations of the Committee were accepted and orders were issued in Government Order Ms. No. 3915, Home, dated 28th September 1949.

As these orders were of a general nature, certain doubts were raised by some managements which were not prepared to implement the terms of the Government Order without getting a list of the so-called eligible tribes for full-fee concession. On a consideration of the matter, Government issued orders in Memo. No. 34123-D/51-9, dated 28th November 1952, giving in an annexure the details of the communities and the districts where they were chiefly found.

Subsequent to the issue of these orders, Sri K. R. Viswanathan, M.L.A., raised the point that children of the eligible communities were not being given the benefit of the concessions on the ground that these pupils described themselves as Vanniyakula

13th August 1956] [Sri C. Subramaniam]

Kshatriyas. The Director of Public Instruction referred the matter to Government and added that the Collector of Tiruchirappalli district observed that 'Vanniyakula Kshatriyas' are considered to be equivalent to Padayachis. The President, District Board, Tiruchirappalli, also made a reference to Government and observed that in parts of the district, Padayachis and Vanniyakula Kshatriyas were one and the same. A reference to the three volumes of Thurston's Castes and Tribes of Southern India showed that Padayachis and Vanniyakula Kshatriyas were synonymous terms describing one and the same community. In view of the fact that the children of these criminal tribes described themselves as belonging to the Vanniyakula Kshatriya community, it was proposed and ordered that the children of the Vanniyakula Kshatriya community in the four districts where they were regarded as equivalent to Padayachis or Criminal Tribes Padayachis should be given the benefit of the full-fee concessions and the orders were accordingly issued.

It will be seen from the above that the intention of Government has been to ensure that the children of the former Criminal Tribes are not denied the benefit of the full-fee concessions intended by Government on the ground that they described themselves as Vanniyakula Kshatriyas. It has, however, been represented to Government that not each and everyone of the Vanniyakula Kshatriya community should be regarded as belonging to the old criminal tribes of Padayachis or Criminal Padayachis and that, therefore, the orders contained in G.O. Ms. No. 1081 are likely to convey the benefit to a larger section of this community. In order to clarify the exact intention and purport of the Government Order, revised orders were issued in G.Os. No. 429, Education, dated 21st March 1955 and No. 430, Education, dated 22nd March 1955, directing that the children of Vanniyakula Kshatriyas of the four districts whose parents were members of the former "Criminal tribes" alone should get the full-fee concessions. It was also ordered that it would be necessary for the children to produce a certificate in the form prescribed in the Madras Educational Rules to the effect that the parent of the boy or girl is a member of the former "Criminal tribes" as specifically stated in the Memo. No. 34123-D/51-9, Education, dated 28th November 1952. It was also made clear that the children of the Vanniyakula Kshatriya community other than those belonging to the former "Criminal tribes" would be eligible only to get the benefit of half-fee concessions admissible to backward communities in all those districts.

In the memorandum, dated 4th September 1955, Sri K. R. Viswanathan, Member of the Legislative Assembly, pointed out the difficulties which pupils belonging to Vanniyakula Kshatriya community at present experienced in getting nativity certificates for the grant of full-fee concessions and requested—

(1) that the authorities who issue nativity certificates for the grant of full-fee concessions to the Vanniyakula Kshatriya pupils

belonging to the former Criminal tribes, i.e., the Tahsildars and Deputy Tahsildars, should be supplied with all the relevant Government Orders declaring the above communities as eligible for full-fee concessions;

(2) that the authorities may also be informed where these communities or groups belonging to the former Criminal Tribes live, i.e., the names of villages, taluks and districts where the communities live may be furnished to the authorities;

(3) that the only duty of the village officials should be to certify that the students belong to a certain community living in such and such a village;

(4) that the responsibility of fixing whether the student belongs to a former Criminal tribe or not should be left to the Tahsildar or Deputy Tahsildar who will be guided by the records at his disposal; and

(5) that in the alternative the Members of the Legislature may be authorized to issue such nativity certificates.

The Director of Public Instruction who was consulted submitted the following remarks :—

Requests 1 *and* 2 : The Director of Public Instruction stated that a copy of the orders in Government Memo. No. 34123-D/51-9, Education, dated 28th November 1952 wherein the tribes hitherto known as Criminal Tribes eligible for full-fee concession have been specified might be communicated to the Collectors concerned for necessary action. He also suggested that the information as to the names of the villages where they live might be obtained from the Deputy Inspector-General of Police, Railways and C.I.D., and also in consultation with the District Collectors. An up-to-date list of villages and areas in the districts of Salem and South Arcot where the Vanniyakula Kshatriyas belonging to the former criminal tribes are found was obtained from the Deputy Inspector-General. The Deputy Inspector-General stated that the Tennore Padayachis are the only Vanniyakula Kshatriyas belonging to former criminal tribes in Tiruchirappalli district and that there are no ex-criminal tribes belonging to Vanniyakula Kshatriyas in Tanjore district.

10-20 a.m. The matter was examined in detail with the available Government Orders on the subject. It was considered not possible after a lapse of 22 years to trace the descendants of the various individuals scattered in various villages in the various taluks of the districts of South Arcot and Tiruchirappalli who were declared as members of the criminal tribes. Hence the grant of full-fee concessions under G.O. No. 1081, Education, dated 2nd August 1954 to the descendants of various convicted criminal tribe members was considered impracticable. It was also found that Padayachis living in Tennore in the Tiruchirappalli district and Padayachis living in Vellayankuppam village of South Arcot district alone belonged to the ex-criminal tribes as a class, and that the Padayachis of Tanjore and Salem were never declared as belonging to criminal tribes.

Orders were therefore issued in Government Order No. 1339, Education, dated 12th July 1956 directing that the full-fee concessions be confined to the children of Vanniyakula Kshatriyas or Padayachis belonging to the villages of Vellayankuppam in South Arcot district and Tennore in Tiruchirappalli district. This is the history of the case. I have tried to explain in detail as what all had happened and I have already emphasized that the policy of the Government has been to give the full-fee concession only to children belonging to the members of the ex-criminal tribes and it is restricted only to those cases. We have tried our best to locate where these criminal tribes were residing and are residing and these two villages are mentioned as villages where these criminal tribes are now living. Therefore, under those circumstances, I do not see any hardship caused to any particular community because of this. If it is any hardship, it is a general hardship which applies to every backward community and that question is now under the consideration of the Government with reference to the Report of the Backward Classes Commission. Certainly we cannot single out any particular community within the group of backward classes and give special concessions to them.

III.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER : Now the discussion on the Governor's Address will be continued. The hon. Leader of the Opposition will now speak.

SRI P. RAMAMURTHI : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களின் பிரசங்கத்தின்மீது விவாதத்தை துவக்கிவைத்த நண்பர் ஸ்ரீ கருத்திருமன் அவர்கள் துரதிருஷ்டவசமாக ஆரம்பத்திலேயே கொஞ்சம் காரசாரமாக மற்ற கட்சிக்காரர்களைத் தாக்க ஆரம்பித்தார்கள். அவருக்கு வேறு ஒன்றும் கையில் கிடைக்கவில்லை போலும். கீழ்பவானிப் பிரதேசத்திலுள்ள விவசாயிகளை யாரோ தூண்டிவிடுவதாக ஒரு பெரிய குற்றச்சாட்டு செய்து, தகராறைக் கிளப்பினார். அவர் ஏன் இந்த சண்டைக்குக் கிளம்ப வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. போன தடவை இந்த விவகாரம் சட்ட சபைக்கு முன் வந்தபொழுது, இது விஷயமாக பல சர்ச்சைகளுக்குமேல் சர்ச்சைகள் வந்தபொழுது, சர்க்கார் தரப்பில் அங்கு இருக்கக் கூடிய ஒரு நிலைமை பரிதாபகரமான நிலைமை, அது ரொம்பவும் சிக்கலான ஒரு நிலைமை என்றெல்லாம் ஒப்புக்கொள்ளப்பட்டது. நாங்கள் இது விஷயமாக வெளியிட்ட யோசனையும் ஒப்புக்கொள்ளப்படவில்லை. அது வசியமாக விவசாயிகளின் தலையில் தண்டவரி போடுவது தப்பு. இந்த நிலைமை அங்கு ஏற்படுவதற்குக் காரணமென்ன ? அங்கே கால்வாய்கள் வெட்டும்பொழுது சாதாரணமுறையில் கால்வாய்கள் வெட்டக்கூடாது. பக்கத்தில் "லெனிங்" கொடுத்து கால்வாய் வெட்டவேண்டும். இந்த விஷயத்தை சம்பந்தப்பட்ட என்ஜினியர்கள் சரியாகப் பரிசீலனை செய்து யோசனை கூறவில்லை. தண்ணீர் கசிவு ஏற்படாத அளவுக்கு என்ஜினியர்கள் யோசனை கூறியிருக்கவேண்டும். அவர்களின் தவறுக்காக விவசாயிகளின் தலையில் இந்த வரியைச் சுமத்துவது தவறு. பிரச்னையை நன்றாக பரிசீலனை செய்து பார்த்து ஒரு சரியான முடிவுக்கு வரவேண்டும். கட்சி வித்தியாசமில்லாமல் ஜனங்களின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எம். எல். எக்களைகூட்டி, அல்லது ஒரு கமிட்டியை ஏற்படுத்தி, இந்த சிக்கலான பிரச்னையை பரிசீலனை செய்து ஒரு சரியான முடிவுக்கு வர முன்வரவேண்டுமென்று நாங்கள் யோசனை கூறியுள்ளோம். இதில் கட்சி நோக்கம் ஒன்றுமில்லை. பிரச்னை தீர்க்கப்படவேண்டுமென்பதற்காக நியாய

[Sri P. Ramamurthi] [13th August 1956

மான ஒரு யோசனையைச் சொன்னால் அதை ஏற்கக்கூடாதா? நிலைமை மோசமாக இருக்கும்பொழுது அதைப் பரிசீலனை செய்து சுமுகமாகத் தீர்க்க முன்வரவேண்டும். நான் மீண்டும் சொல்லுகிறேன். இந்தப் பிரச்னையை சுமுகமாக தீர்க்கவேண்டுமென்று அக்கரை கொண்டு இந்த யோசனையைச் சொல்லுகிறேன். அவசியமாக தகராறுகளைக் கிளப்ப வேண்டாம்; இல்லாத விவகாரத்தை உருவாக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கவர்னர் பிரசங்க ஆரம்பத்திலே மாகாணப் பிரிவினையைப் பற்றி கூறப்பட்டது. மலையாள தமிழ் மக்களிடையே சுமுகமான உறவு மேலும் மேலும் வளரவேண்டும். மலையாளிகள் பிரிந்துபோய் ஒரு தனி மொழி ராஜ்யத்தை அமைத்துக்கொண்டாலும், நாம் எல்லோரும் ஒரே நாட்டில் வாழவேண்டிய மக்கள். நமக்கிடையே ஒத்துழைப்பு இருக்கவேண்டியது அவசியம். இந்த நேரத்திலே நமக்கிடையே மனக்கசப்பைப்போக்க உடனடியாக முயற்சி செய்யவேண்டுமென்பது என் அபிப்பிராயம். அங்கே மரங்கள் வெட்டப்படுகின்றன. இங்கே மெஷனரிகள் அகற்றப்படுகின்றன என்றெல்லாம் சொல்லப்படுவதால் மக்களிடையே சந்தேகங்கள் எழுகின்றன. உதாரணமாக மரம் வெட்டப்படுவதை எடுத்துக்கொள்வோம். இதுபற்றி சர்க்கார் நிலைமையைத் தெளிவாக்கி ஒரு அறிக்கை வெளியிட்டார்களா என்றால், இல்லை. 1954-ம் வருஷத்தில் இது விஷயமாக சர்க்கார் கொள்கை என்ன? நிலைமை மோசமாகாமல் இருப்பதற்குவேண்டி சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்றெல்லாம் விஷயத்தை நன்றாக விளக்கி ஒரு அறிக்கை வெளியிடவில்லை. மொட்டையாக விட்டார்கள் ஒரு அறிக்கையை. சர்க்காரின் நோக்கத்துக்கு விரோதமாக ஸ்தல அதிகாரிகள் தவறுதலாக நடந்துகொண்டிருந்தால் அதையெல்லாம் திருத்துவதற்கு முன்வரவேண்டியது நமது சர்க்காரின் கடமை. மலையாளிகளுக்கு இதுவிஷயமாக ஆத்திரம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆத்திரத்தை சமப்படுத்துவதும் அதைத் தடுப்பதும் முக்கியமான கடமை. நான் யோசனை கூறுகிறேன். சர்க்கார் இந்த யோசனையை ஏற்கவேண்டும் என்பது என்னுடைய விருப்பம்.

10-28 a.m. இந்த சபையில் இருக்கும்படியான பல கட்சிக்காரர்கள், குறிப்பாக மலையாளத்திலிருந்து வந்திருப்பவர்கள் தமிழ்நாட்டிலிருந்து வந்திருப்பவர்கள், எல்லோரையும் கூட்டிவைத்து **formal committee** யாக சொல்லவில்லையா? சர்க்கார்தரப்பிலிருந்து நிதியமைச்சர் உட்கார்ந்து கொண்டு, இருக்கக்கூடிய நிலைமை முழுவதையும் விளக்கி, வேறு ஏதாவது புகார்கள், விசாரணை செய்யவேண்டிய விஷயங்கள் அந்தக்கூட்டத்தில் எழுப்பப்பட்டால், அவை குறித்து விசாரணைசெய்து, அதன்மேல் ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டிவந்தால், அதற்கும் உத்திரவாதமளித்து, தற்போது ஏற்பட்டிருக்கும் மனக்கசப்பை உடனடியாக போக்குவதற்குவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று நான் இன்றைக்கு சென்னை சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த சந்தர்ப்பத்தில் கனம் பக்தவத்சலம் சொன்னதுமாதிரி, இதற்கு ஒரு பரிகாரம் நவம்பரில் பிரிந்து போவதுதான் என்று சொல்லாமல், பிரிந்துபோகக்கூடிய நேரத்தில் ஒற்றுமை மனோபாவம் வளர்க்கப்படவேண்டும, மனக்கசப்பு ஏற்படவிடக்கூடாது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, இந்த பிரச்னையில் மனக்கசப்பை போக்குவதற்கு வழி தேடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது கவர்னர் பிரசங்கத்தின் மற்ற பகுதிகளுக்கு வருவோம். கவர்னர் பிரசங்கத்தில், பட்ஜெட் கூட்டகாலத்தில் சர்க்காரால் சொல்லப்பட்ட சில திட்டங்கள் நிறைவேறிவரும்படியான விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவேயொழிய, பட்ஜெட் கூட்டம் முடிந்து, மூன்று மாதத்திற்கு பிறகு கூடுகிற கூட்டத்தில் இந்த மாகாணத்து ஜனங்களை பாதிக்கும்படியான பல சம்பவங்கள் நடைபெற்று இருந்தபோதிலும், அவைபற்றி **ஒன்றும்** சொல்லப்படவில்லை. இந்த மூன்று மாத காலத்தில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. குறிப்பாக, இந்த மாகாணத்தில் மட்டுமல்ல, இந்தியா பூராவிலும், விலைவாசி ஏறியிருக்கிறது. இது ஒரு முக்கியமான பிரச்னை. இந்த விலைவாசி ஏற்றத்தை தொட்டும் தொடாததுமாக, சர்க்கார் இதைப்பற்றி கவனித்துக்கொண்டுவருகிறது என்றுமட்டும் சொல்லி

13th August 1956] [Sri P. Ramamurthi]

யிருக்கிறார். கவனிக்கிறது! கவனிக்கிறது என்றுகூட கூறாமல் என்ன பண்ணுவது? இதைத்தவிர வேறு எந்தவிதமான யோசனையோ, இது சம்பந்தமான நிலைமையைப்பற்றிய பரிசீலனையோ, அல்லது அதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய விளைவுகளைப்பற்றியோ, ஒரு வார்த்தைகூட தொடவில்லை. இந்தப் பிரச்னையில் எவ்வளவு அசிரத்தை மனோபாவம் இருக்கிறது என்பதற்காக இதை இங்கு குறிப்பிடுகிறேன்.

இரண்டாவதாக, இந்த ராஜ்யம், கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கக்கூடிய ராஜ்யம். இந்த கைத்தறி நெசவாளர்களிடையே பெரும் பீதியை உண்டுபண்ணி இருக்கிறது. சமீபத்தில் மத்திய சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற ஜவுளிக் கொள்கை. இந்த கொள்கைக்கு சென்னை சர்க்கார் உடந்தையாக இருந்து வருகிறார்களா, அது சம்பந்தமாக சென்னை சர்காருடைய நிலைமையென்ன, மத்திய சர்க்காருக்கு சென்னை சர்க்கார் என்ன யோசனை கூறிற்று என்ற விஷயங்கள்பற்றியெல்லாம் எடுத்துக் கூறவில்லை. இது மிகவும் முக்கியமாக இன்று ராஜ்யத்தில் இருக்கக்கூடிய கைத்தறி நெசவாளர்களின் எதிர்கால வாழ்க்கையைப்பற்றிய பிரச்னை. இதைப்பற்றி ஒரு வார்த்தைகூட கிடையாது கவர்னர் பிரசங்கத்தில். அவர் பிரசங்கத்தில்தான் சொல்லவில்லையென்றாலும், சர்க்கார் தரப்பில், சட்ட சபை இப்போது கூட்டம் கூடுகிற காலத்தில் இந்த பிரச்னையை விவாதிக்க வேண்டும். இது விஷயமாக என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது சம்பந்தமாக சபையில் இருக்கும்படியான அங்கத்தினர்களின் யோசனை கேட்டு தெரிந்துகொள்ளவேண்டுமென்ற அவா சர்க்காருக்கு இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவாவது, இந்த சட்டசபை அனுவல் கமிட்டி எடுத்துச் சொல்லாமலே, அவர்களாகவே உத்தியோகமுறையிலேயே இந்த விஷயங்களைப்பற்றி விவாதிக்க சில மணி நேரத்தை ஒதுக்கினார்களா என்றால் அதுவும் கிடையாது. ஏதோ பேச்சுப்போக்கில் கவர்னர் பிரசங்கத்தில் பேசிக்கொள்ளட்டும் என்ற நிலைமை இருக்கிறதென்றால், இந்த முக்கியமான பிரச்னையில் சபையை கலந்து ஆலோசிக்க வேண்டுமென்ற நிலைமையில்லை என்றால், சபை எவ்வளவு மதிக்கப் படுகிறது என்பதுதான் கேள்வி.

முதலில் விலைவாசி பிரச்னையை எடுத்துக்கொள்வோம். நமது நாட்டில் இன்று இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் அமுலில் இருப்பதாகச் சொல்ல படுகிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் இறுதியாக புத்தக ரூபத்தில் வெளி வந்துவிட்டது. அதனுடைய லட்சியம் குறிப்பாக என்னவென்று சொல்லப்படுகிறதென்றால் "**Reduction of inequalities in income and wealth and a more even distribution of economic power**" நாலு லட்சியங்களில் குறிப்பாக ஒரு லட்சியம் நாட்டில் இருக்கும்படியான வருமானத்திலும், செல்வத்திலுமுள்ள ஏற்றத் தாழ்வை குறைப்பது; குறைத்து பணத்தால் ஏற்படக்கூடிய அதிகாரம் சிலர் கையில் இன்றைக்கு சிக்கியிருப்பதை நிவர்த்து, பொருளாதார அதிகாரத்தை மேலும் மேலும் ஜனங்களிடையே சமமாக பங்கிடுவதற்கு முயற்சி செய்வது என்று கூறப்பட்டிருக்கிறது. இன்று இந்த ராஜ்யத்தில் மட்டுமல்ல, நமது நாட்டில் நடைபெறும் படியான காரியங்கள், இந்த லட்சியம் நிறைவேறுவதற்கான பாதையில் போய்க்கொண்டிருக்கின்றனவா, விலைவாசி ஏற்றமென்பது இந்த லட்சியம் நிறைவேறும்படியான பாதையில் போகிறதா, அல்லது இதற்கு நேர்மாறான விளைவுகளில் நாட்டை கொண்டு விடப்போகிறதா என்பதை நாம் கவனிக்கவேண்டும். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற லட்சியத்திற்கு மாறுக இருக்கக்கூடிய நிலைமைக்கு இது கொண்டுசெல்லுமேயானால், அந்த லட்சியம் நிறைவேற்றப்படாது என்றால், பின்பு எதற்கு இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் என்ற நிலைமை ஏற்படும். ஆகவே நாம் இதை யோசித்துப் பார்ப்போம். இரண்டாவது ஐந்தாண்டு நகல் திட்டம் இந்த சபையில் விவாதிக்கப்பட்டகாலத்தில், நான் அன்றைக்கு ஒரு விஷயத்தை எடுத்துக் காண்பித்ததன். "இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் கிட்டத்தட்ட 1,200 கோடி ரூபாய் **deficit financing**-க்கு ஏற்பாடு செய்யப் போகிறார்கள். இந்த நாட்டில் **deficit financing** செய்யவே கூடாது என்று நான் சொல்லவில்லையா, இதில் பல ஆபத்துக்கள்

நிறைந்திருக்கின்றன. குறிப்பாக பண வீக்கம் ஏற்படும்படியான ஆபத்து மிகவும் அதிகமாக நிறைந்திருக்கிறது. இந்த மாதிரி பண வீக்கம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம், இந்த deficit financing மூலமாக ஏற்படக்கூடிய bank and credit facilities. இந்த நாட்டில் பணத்தை கொண்டு சூதாட்டம் ஆடுகிறவர்கள், அந்த bank and credit facilitiesஐ உபயோகப்படுத்திக்கொண்டு, சாமான்களை வாங்கி சேமித்துவைக்க, தாராள மாக வகை செய்யும். ஆகவே இந்த வசதிகளை தடை செய்ய சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்காமற்போனால், பண வீக்கத்தால் மிகப் பெரிய ஆபத்து ஏற்படும்" என்று அல்லவைக்கே குறிப்பிட்டேன். நமது நிதியமைச்சர் அன்று இது சரியான யோசனைதான் என்று இந்த இடத்தில் தான் சொன்னார். இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் விலைவாசி சம்பந்தமாக, deficit financing சம்பந்தமாக என்னபோடப்பட்டிருக் கிறது.

If we assume that the ratio between currency in circulation and deposit money remains unaltered money supply would show something like a 66 per cent increase over the plan period. National income over this period is expected to increase by 25 per cent and we may assume that an increase of the same order in money supply would in any case be safe. Some allowance must also be made for the increased monetisation of the economy and for the increased demand for cash as levels of living improve and the convenience of holding cash comes within the reach of a large proportion of the people. Even so, the expansion of money supply of the order mentioned cannot but be regarded as the outside limit.

இந்த காலகட்டத்தில் இப்போது நாணயச் செலாவணி எவ்வளவு புழக்கத்தில் இருக்கிறதோ, அதைப்போல் மூன்றில் இரண்டு பங்கு அதிக மாகிவிடவேண்டியிருக்கும். நாட்டில் உள்ள வருமான உயர்வு 25 சத விகிதம்தான் அதிகமாகியிருக்கும். ஆகவே பெரிய ஆபத்தை விளைவிக்கும். அந்த அளவிற்கு " deficit financing is outside the limit ", வரம்புக்கு அதிகமாக தாண்டியிருக்கிறது என்று தான் கூறவேண்டும் என்று அவர்களே ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். அதன் பிறகு இன்னும் சொல்லுகிறார்கள்.

Deficit financing will augment the ability of banks to extend credit to the private sector. Such expansion will be needed and will be beneficial up to a point. Care will, however, have to be taken to prevent excessive credit expansion which may react adversely on prices and to ensure that credit does not flow into speculation to the detriment of productive activity.

இந்த மாதிரி deficit financing செய்தால் பாங்குகளுக்கு கிடைக்கக் கூடிய பொருள் வசதிகளை speculator கள் உபயோகப்படுத்திக் கொண்டு விலை வாசிகளை தூக்கி விடாமல் பாதுகாக்கவேண்டிய நடவடிக்கை எடுத் துக்கொண்டாக வேண்டுமென்று planning commission திட்டவட்டமாக கூறி யிருக்கிறது. ஆனால் நடந்தது என்ன என்பதுதான் இன்றைக்கு இருக்கும் படியான கேள்வி. விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. சர்க்கார் கூறுகிறார்கள் நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோமென்று என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்? நியாய விலைக் கடைகள் திறந்திருக்கிறோம். சென்னையில் கோவாப்ரேடிவ் ஸ்டோர்கள் மூலமாக ஐந்து மூட்டை தினம் விற்க ஏற்பாடு செய்திருக்கிறோம், கும்ப கோணத்தில் தினம் 15 மூட்டை விற்க ஏற்பாடு செய்திருக்கிறோம், மலே யாளத்தில் தினம் 10 மூட்டை விற்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள். இதுதான் அவர்கள் எடுத்த நடவடிக்கை. இந்த நட வடிக்கை எடுக்க எடுக்க விலை வாசி ஏற்றம் நின்றபாடில்லாமல், மேலே

ஏறிக்கொண்டே போகிறது. ஆகவே இந்த விலையேற்றம் ஏற்படக்கூடிய காலத்தில் இப்போது கேள்வி வந்து விட்டது. "பணவீக்கம் ஏற்பட்டு விட்டதா? விலைவாசி ஏற்றம் எதைக் குறிப்பிடுகிறது" என்பது பற்றி பிரமாதமான சர்ச்சை பார்லிமெண்டில் எழுந்திருக்கிறது. பண வீக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று எவ்வாறு மதிப்பிடுவது என்று பேசுகிறார்கள். புள்ளி விவரங்கள் எதைக் காட்டுகின்றன? சர்க்கார் கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களைக் காட்டுகிறேன். அந்தப் புள்ளி விவரத்தை எடுத்துக் கொள்வோமானால், **Index of the wholesale prices of food articles**, அதா வது உணவுத் தானியங்களுடைய மொத்த விலையின் புள்ளி விவரம், 1939-ல் 100 என்று வைத்துக்கொண்டால், சர்க்காருடைய புள்ளி விவரத்தை எடுத்துக்கொண்டு பார்ப்போமானால், 1955-ம் வருஷத்தில் பிப்ரவரியில் 304, மார்ச்சில் 297, ஜூனில் 281, ஜூலையில் 309, ஆகஸ்டில் 317, செப்டம்பரில் 315, நவம்பரில் 326, டிஸம்பரில் 327 என்று இருக்கிறது. 1956-ல் ஜனவரியில் 353, பிப்ரவரியில் 357, மார்ச்சில் 358, எப்ரலில் 360, ஜூனில் 370, ஜூலையில் 378·7. கொரியா யுத்தம் நடந்த காலத்தில் மட்டும்தான், இந்த மாதிரி ஒரே வருஷத்தில்தான் விலை ஏறியிருக்கிறது. 1950-51-ல் கொரிய யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்தில் 398, அதற்கு அடுத்த வருஷம் 357 ஆகக் குறைந்து விட்டது. ஆனால் இன்று, கொரியா யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்தில் விலை வாசிகள் எந்த அளவு ஏறிற்றோ, அந்த அளவுக்கு, வரிசையாக ஏறிக் கொண்டிருக்கின்றன, சர்க்காருடைய புள்ளி விவரம். இந்த ஆண்டில் எட்டு மாத காலத்துக்குள்ளாக, இந்த விலைவாசிகள் ஏறிவந்திருக்கிறது என்பதைப் புள்ளி விவரத்துடன் காட்டுகிறது. இந்தப் புள்ளி விவரங்கள் எதைக் காட்டுகின்றன? ஒரு கால கட்டத்தில் வழக்கமாக ஏறக்கூடிய அளவாய் இல்லை. மிகவும் அதிகமாக, 1955 மே மாதத்திலிருந்து, இந்த 1956 ஜூனுக்குள்ளாக 35 சத விகிதம் வரையில் விலைவாசிகள் ஏறிவிட்டது. எந்தக் காலத்திலும் இந்த அளவு ஏறவில்லை. கொரியா யுத்த காலத்தில் தான் ஏறியிருக்கிறது. இந்த ஆபத்தைப் பார்க்காமல் இருக்க முடியுமா? என் இப்போது திடீரென்று விலைவாசி ஏற்றம் ஏற் பட்டிருக்கிறது? இதைக்கூட பரிசீலனை செய்யாத அளவுக்கு, "நாங்கள் கவனித்துக்கொண்டுதான் வருகிறோம்" என்று மீண்டும் மீண்டும் பிரச் சாரம் நடந்துகொண்டிருக்கிறது. சர்க்கார் இன்று இந்த எரிமலையின்மீது விழுந்து கொண்டிருக்கிறது. இந்த விலைவாசி ஏற்றம் இதே ரீதியில் தொடர்ந்து கொண்டே போகுமானால், இந்தத் திட்டமே தோற்றுப்போய் விடும். "விலைவாசி ஏற்றத்தை கவனித்தோம், எறிக்கொண்டேபோகும் நிலையில்கூட, இந்தத் திட்டம் நிறைவேற்றுவது அவசியமானது" என்ற வாதம் இருக்கிறது. ஆனால் அந்தத் திட்டம் போட்டு ஆறு மாதத்துக்குள் விலைவாசி இந்த அளவுக்கு ஏறிக்கொண்டு வருகிறது. இது சர்க்காருடைய மொத்தப் புள்ளி விவரக் கணக்கு, நமது மாகாணத்தில் பார்ப்போமானால், விலைவாசி எப்படி ஏறிக்கொண்டு வருகிறது? அரிசி, ஒரு வருஷத்துக்கு முன்பு படி 9 அணாவாக விற்றது, 10 அணா, 15 அணா என்று ஏறிக் கொண்டு, ஒரு ரூபாய்க்கு வந்தது, குறைந்த விலைக்கு விற்ற அரிசி. (Blackgram dhall) உளுந்து 8½ அணாவாக இருந்தது, இன்றைக்கு 11-க்கு வந்து, 14 அணாவுக்கு வந்தது, Dhall 10 அணாவாக இருந் தது, 14 அணாவுக்கு அளவுக்கு ஏறிவிட்டது. நல்லெண்ணெய் 3 ரூபாய்க்கு வந் தாச்சு, 1½ ரூபாயிலிருந்து, மிளகாய் (Chillies) ரூ. 1-12-0 ஆக இருந் தது இன்று ரூபாய் 3-4-0-க்கு வந்து விட்டது. விலைவாசி ஏற்றத்தை எடுத்துக்கொண்டால், இது சாதாரண விலைவாசி ஏற்றமல்ல. இது ஆறு மாதத்திற்குள்ளாக, 100-க்கு 75 சத விகிதம் என்று சர்க்காருடைய புள்ளி விவரம் காட்டுகிறது. கொஞ்சம் தான் ஏறியிருக்கிறது என்று சொல்வார்கள். ஆனால் உண்மையில், ஜனங்கள் வாங்குகின்ற பொருளைப் பார்ப்போமானால், விலைவாசி ஏற்றமானது, கிட்டதட்ட 100-க்கு 75 சத விகிதம், இந்த எட்டு மாதம், ஒரு வருஷத்துக்குள் ஏறி விட்டது. போன தடவை நான் இதே சட்ட சபையில், பேசுகின்றபோது, இன்றைக்கு விவ சாயிகளுக்கு நியாய விலை கிடைக்கவேண்டும் என்று வற்புறுத்தினேன். தஞ்சாவூரில் போன வருஷத்தில் நெல், கலம் ரூ. 10 ஆகக் குறைந்த காலத்தில், "அது மிகக் குறைவாக இருக்கிறது" என்று கூக்குரல்

10 38 a.m.

எழுப்பினேன். அதே சமயத்தில் ஸ்ரீமான் பக்தவத்ஸலம் அவர்கள் கூறினார் "13 ரூபாய்க்கு விற்றால், நியாயமான விலை" என்று சொன்னார். நாங்களும் ஒத்துக்கொள்கிறோம், 13 ரூபாய்க்கும், 15 ரூபாய்க்கும் விற்றால் நியாயமான விலை என்று. அண்மைக்கு தஞ்சாவூர் ஜில்லாவில், குற்றாலத்தில், நெல் மூட்டை ரூபாய் 19-ல் இருந்து ரூபாய் 20 வரை நெல் விற்கப்பட்டது. ஆகவே இது சாதாரண விலையேற்றமல்ல, அசாதாரண விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஜூலைவரி மாதத்தில், பிப்ரவரி மாதத்தில், விவசாயிகளுக்குக் கொடுத்த விலை அது அல்ல. சாதாரண விலையில், பண்டங்கள் விற்ற அந்த காலத்தில் அவர்களுக்கு, ரூபாய் 12 லிருந்து ரூபாய் 14 வரை கொடுத்தார்ச்சு, அவர்கள் இன்று விற்கிற விலை 19, 20 ரூபாய். இதனால், சாதாரண விவசாயிகளுக்கு நன்மைகளுக்கு ஏற்பட்டதாகச் சொல்ல முடியாது. ஆனால் ஒரு சில தனி நபர்களுக்கு நன்மை ஏற்பட்டுத்தான் இருக்கிறது என்று சொல்லுகிறேன். அவர்களுக்கு விரோதமாக, சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதுதான் question. என் ஐயா இப்படி ஏற்பட்டது? இப்படி இருக்கக்கூடிய கால கட்டத்தில், சர்க்காருடைய deficit financing ஏற்பட்டதின் காரணமாக, போன வருஷம் 290 கோடி ரூபாய் ஆக இருந்தது, இந்த வருஷத்தில் 390 கோடி யாகிவிட்டது. Deficit financing ஏற்பட்டதால், சர்க்காருடைய நோட்டுச் செலாவணிப் புழக்கம் அதிகப்படி விஸ்தரிக்கப்பட்டது. இதே கால கட்டத்துக்குள்ளாக, கிட்டத்தட்ட 15 சத விகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, Reserve Bank கொடுக்கக் கூடிய கணக்குகளை எடுத்துப் பார்ப்போமானால் 1953-ம் வருஷத்தில், மார்ச் மாதம் 1,764 கோடி என்று இருந்தது, 1955-ம் வருஷத்தில் 1,920 கோடி நோட்டு அச்சடிக்கப்பட்டும், மே மாதம், இன்றைக்கு 2,240 கோடி வரை, இன்று புழக்கத்தில் இருக்கிறது. ஆகவே 300 கோடி வரையில் நோட்டு அச்சடித்து விடப்பட்டிருக்கிறது. இந்த அளவு deficit financing ஏற்பட்டுநோட்டுக்கள் செலாவணி அதிகமாக வினியோகப்படுத்தினார்களானால், இங்கு ஆபத்து ஏற்படும் என்று யோசித்தார்களா? யோசித்து அதற்குத் தகுந்த நடவடிக்கை உடனடியாக எடுத்தார்களா? குறிப்பிட்டு இதைச் சொல்லவேண்டுமானால், பதுக்கல்காரர்களுக்கு இதனால் சௌகர்யம் செய்திருக்கலாம். அந்தமாதிரியான பதுக்கலை உடனே தடைசெய்ய வேண்டி, ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்தார்களா? சென்னை அரசாங்கம் அம்மாதிரி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரைத் தூண்டினார்களா? என்ன நடந்தது. போன வருஷம் 9 கோடி ரூபாய் மார்ச் மாதத்தில், அவர்களுக்குக் கடன் கொடுக்கப்பட்டது பாங்குகள் மூலமாக. இந்த வருஷத்தில் 19 கோடியே 40 லட்சம் ரூபாய் பாங்குகளால் அவர்களுக்குக் கடன் கொடுக்கப்பட்டது. இந்த அளவுக்கு, மத்ய சர்க்காரின் மூலம். இன்றைக்கு, அவர்களுக்கு அதிகம் கடன் கொடுக்கப்பட்டது. ஆகவே, பதுக்கல்காரர்களுக்கு மேலும் மேலும் பதுக்குவதற்கு, அந்தக் கடன் உதவுகிறது, பாங்குகள் அவர்களுக்குக் கடன் கொடுக்கிறது. பதினைந்து ரூபாய்க்கு நெல் மூட்டை வாங்க வேண்டுமென்று சொன்னால் 25 சத விகிதம் அதாவது, 3, 3¾ ரூபாய் அவர்கள் கையில் முதல் இருந்தால், அந்த நெல்லை வாங்கி கையிருப்பு செய்யமுடியும். பாக்கி பூரா தொகையும் பாங்கியிலிருந்து கிடைக்கும். அப்படி நெல் மூட்டைகளை வாங்கிப் பதுக்கி வைக்கிறார்கள். இந்தக் கால கட்டத்தில், இந்தப் பதுக்கல் காரர்கள் பண வீக்கத்தைக் கொண்டு வருகிறார்கள். பண வீக்கம் இருக்கிற காலத்தில் (deficit financing), பதுக்கலைத் தடுக்க வேண்டும் என்று சர்க்கார் ஒப்புக்கொள்கிறார்கள். அதே காலத்தில், அவர்களுக்கு, இந்தச் சமயத்தில், கடன் வசதிகள் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, விளைவு என்ன இன்றைக்கு? நெல் பதுக்கப்பட்டிருக்கிறது. குற்றாலத்தில் இருக்கக்கூடிய மில்காரர்களின் கையில், 12,000 மூட்டை நெல் இன்றைக்கும் இருக்கிறதைப் பார்க்கிறோம். இன்றைக்கு அந்த 12 ஆயிரம் மூட்டை நெல், மூட்டை ஒன்று ரூபாய் 13-க்கு வாங்கினால், அதாவது 1 மூட்டை அரிசி 26, ரூபாயாகும், அந்த அரிசியின் விலை இட்டத்தட்ட 4 கோடி ரூபாய் ஆகும். ஆகவே 26, 27 ரூபாய்க்கு வாங்கினால், இன்றைக்கு 4 கோடி ரூபாய்க்கு விற்பதற்கு, வசதி இருக்கிறது. அதை 13 ரூபாய்க்கு வாங்கி, இப்படி விற்றால், ஒரு லட்சத்துக்கு மேல் லாபம் கிடைக்கும். இந்த லாபம் சம்பாதித்துத் தருவதற்கு, அவர்களுக்குப் பாங்கிகள் கைவசத்திலிருந்து கடன் கொடுக்கின்றன. ஆனால் அவர்களுக்கு வசதியில்லையா, பாங்கிகள் கடன் கொடுத்துத்தான், இவர்கள் வாங்க வேண்டுமா? இந்த வகையில் credit facilities கொடுத்துவிட்டு, அவர்கள் லாபம் சம்பாதித்த பின்னால், Civil Supplies Commissioner அவர்களை அனுப்பி வைக்கிறது சர்க்கார். அவர், அவர்களிடத்தில் போய்க் காவேப்பிடித்து கெஞ்சி "ஒரு 5 சத விகிதம் குறைத்துக் கொண்டு, எப்படியாவது மார்க்கெட்டில் கொடுப்பதற்கு வாருங்கள்" என்று கேட்கிறார். அங்கே ஒருவர் பேசுகிறார், பத்திரிகையில் வந்தது. மிராசுதார் வக்கீல் ஒருவர் "நிலச் சீர்திருத்தம் கொண்டு வருவதால் தான் விலைவாசி ஏறிப்போச்சு" என்று பேசுகிறார். வாயில் வந்ததைப் பேச ஆரம்பிக்கிறார்கள். அவர்களிடம் பல்லைக் காட்டுவதைத் தவிர வேறு எந்த விஷயமும் சர்க்காருக்குத் தோன்றவில்லை என்று நான் தைரியமாகச் சொல்ல விரும்புகிறேன். முதலாளிகள் பத்து சத விகிதம் கொடுப்பார்களானால் நிலை சீர்திருந்திவிடும் என்று ஸ்ரீமான் பக்தவத்சலம் அவர்கள் கேட்டிருக்கிறார். முழுவதையுமே எடுத்துக் கொள்வதற்கே சர்க்காருக்கு அதிகாரம் கிடையாதா என்று நான் கேட்கின்றேன். அப்படிப்பட்ட அதிகாரம் இல்லை யென்றால், சபையைக் கேட்டால் சபை கொடுக்கமாட்டேன் என்கிறதா? கட்டாயம் கொடுக்கும். ஆனால், கண்ட்ரோல் முறையை நாங்கள் கொண்டுவர வேண்டுமென்று சொல்லவில்லை. இந்த நிலைமையைச் சீர்திருத்துவதற்கான முறையில் நாட்டில் ஜனங்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பாதிக்கக்கூடிய இந்தப் பிரச்னை இருக்கும் காலத்தில் உடனடியாக என் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று நான் கேட்கின்றேன்.

ஒவ்வொரு பாங்கியிலிருந்தும் யார் யாருக்கு எவ்வளவு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று தெரிந்து கொள்ளலாம். யார் யாரிடத்தில் எவ்வளவு நெல் "ஸ்டாக்" இருக்கிறதென்பதும் பணம் கடன் கொடுத்த பாங்கிகளிலிருந்து தெரியும். பாங்கிகளில் இருக்கும் ஸ்டாக் பூராவையுமே சர்க்கார் நியாயமான விலை கொடுத்து, அதாவது கலம் ஒன்றுக்கு 13 முதல் 14 ரூபாய் வரையில் கொடுத்து வியாபாரிகளின் கைவசமுள்ள நெல் பூராவையும் சர்க்கார் எடுத்துக் கொள்ளலாம். இதனால் அவர்களுக்கு ஒரு சிறிய நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. அப்படி நஷ்டம் ஏற்பட்டால் அதிலிருந்து அவர்கள் பாடம் கற்றுக்கொள்வார்கள். மறுபடியும் இனிமேல் அவர்கள் இந்த மாதிரி "ஸ்பெகுலேஷன்" செய்து விலையை அதிகமாக்குவதில் இறங்கமாட்டார்கள். ஸ்பெகுலேஷனில் இறங்கினால் அவர்களுடைய ஸ்டாக்குகள் சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்பட்டுவிடும் என்ற பயம் அவர்களுக்கு இருக்கும். நடவடிக்கை எடுத்தால் ஸ்பெகுலேஷன் குலைந்துபோகும். ஆனால், ஸ்பெகுலேட்டர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கத் தயங்கி, மேலும் மேலும் அவர்களிடம் சென்று, "கொஞ்சம் கொடுங்கள், கொஞ்சம் கொடுங்கள்" என்று கெஞ்சிக் கேட்கும் முறையை இந்தச் சர்க்கார் கையாளும் வரையில், நிலைமை எப்படிச் சீர்திருந்தப் போகிறது? எந்தக் காலத்தில் சீர்திருத்தப் போகிறது?

எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், 12 ஆயிரம் மூட்டை களை வியாபாரிகள் வைத்துக்கொண்டு அதிக விலைவைத்து விற்பதன் காரணமாக சுமார் ஒன்றரை லட்ச ரூபாய் வரையில் அவர்கள் கையில் போய்ச் சேருகிறது என்பதற்காகத்தான். இப்படியே லாபம் அவர்களுக்குப் போய்க் கொண்டிருந்தால் ஏழை மக்களின் நிலைமை என்ன ஆகும்? சென்னை நகரத்தை உதாரணமாக எடுத்துக்கொள்ளுங்கள். சென்னையில் இன்றைக்கு 15 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களில் சுமார் மூன்று லட்சம் பேர்கள் கொஞ்சம் நன்றாக வாழ்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளலாம். பாக்கி 12 லட்சம் ஜனங்கள் தினசரி கால் படி அரிசிதான் சாப்பிடுகிறார்கள் என்று வைத்துக் கொண்டாலும் 12 லட்சம் பேர்களுக்கு மூன்று லக்ஷம் படி அரிசி தேவைப்படும். நியாய விலைக்கு அதிகமாக ஒரு நாளைக்கு நான்கணா வீதம் சாதாரண மக்கள் கொடுக்க வெண்டியிருக்கிறதென்றால், 50 ஆயிரம் ரூபாய் வரையில் சாதாரண ஜனங்களின் கையிலிருந்த பதுக்கல்காரர்களின் கைக்குப் போகிறது. ஒரு வருஷத்திற்குக் கணக்குப் போட்டுப் பார்த்தால் இரண்டு கோடி ரூபாய் வரையில் சென்னை

10-45 a.m.

மக்களிடமிருந்து சில குறிப்பிட்ட பதுக்கல்காரர்களின் கையில் போய்ச் சேருகிறது. நாட்டின் பொருளாதாரத்தை, நாட்டின் வருமானத்தை எல்லோருக்கும் சரி சமமாகப் பங்கிட வேண்டும், அப்படிச் செய்வதுதான் சர்க்காரின் லட்சியம், நோக்கம் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஆனால், அவர்கள் சொல்லிவருகிற லட்சியங்களுக்குப், நோக்கத்திற்கும் நேர் விரோதமாக சாதாரண மக்களுடைய பொருளாதார வசதி குறிப்பிட்ட சில பதுக்கல்காரர்களின் கையில் போய்ச் சேரும்படியான முறையில் காரியங்கள் செய்யப்படுகின்றன. இந்த நிலைமையே போய்க் கொண்டிருந்தால் எல்லைக்குத்தான் சர்க்கார் சொல்லி வருகிற லட்சியமும் நோக்கமும் நிறைவேறப் போகிறது என்பதைக் கவனிக்கவேண்டும். லட்சியத்தை மட்டும் சொல்லிக்கொண்டே யிருந்தால் பிரயோஜன மில்லை. லட்சியத்தை காரியத்தில் நிறை வேற்றுவதற்கு உடனடியாக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். தீவிரமான நடவடிக்கை எடுக்காமல், 5 சத விகிதம் கொடுங்கள், 10 சத விகிதம் கொடுங்கள் என்று முதலாளிகளைக் கேட்பதினாலோ 15 மூட்டை, 10 மூட்டை அரிசியை நிலவரங்கள் கண்காணியில் வைப்பதாலோ நிலைமை சீர்திருந்தி விடாது. உடனடியான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்.

உணவு தானியங்களின் விலை அதிகமாகிக் கொண்டு வருவது ஒரு புறமிருக்க, துணியின் விலையும் மறுமுகமாகவே இருக்கிறது. மில் காடாத் துணியின் விலை சென்ற வருஷம் ஜூலை மாதத்தில் கஜம் 12½ அணாவாக இருந்தது, இப்பொழுது ரூ. 1-1-0-ஆக உயர்ந்திருக்கிறது. வெளுக்கப்பட்ட 81-ம் நெம்பர் நடுத்தர ரக மில் துணி சென்ற வருஷம் ஜூன் மாதத்தில் ரூ. 15-10-0 ஆக இருந்தது, இந்த வருஷம் ரூபாய் 18-3-10 ஆக உயர்ந்திருக்கிறது. மோட்டர் லாங்கிளாத்—வெளுக்கப் பட்டது—சென்ற வருஷம் ரூ. 22-11-0-ஆக இருந்தது, இந்த வருஷம் ரூ. 25-6-0 ஆக உயர்ந்திருக்கிறது. அதேபோல எட்டு முழ வெளுத்த வேஷ்டி ஜோடியொன்று ரூ. 7-6-0-ஆக இருந்தது, இந்த வருஷம் ரூபாய் 9-9-6 ஆக உயர்ந்திருக்கிறது. துணியின் விலை இந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறதேயொழிய அதை உற்பத்தி செய்யும் தொழிலாளிகளுக்கு ஊதியம் உயரவில்லை. துணியின் உற்பத்தி அளவு எப்படியிருக்கிறதென்றால், ஒரு மாதத்திலே என்றுமே இல்லாத அளவுக்கு 48 கோடி கெஜம் உற்பத்தியாயிருச்சிறது என்று பத்திரிகையிலே வந்திருக்கிறது. துணி உற்பத்தி ஜாஸ்தியாகயிருக்கிறதேயொழிய தொழிலாளர்களின் சம்பளம் ஜாஸ்தியாக வில்லை. பருத்திவிலை குறைந்திருக்கிறது. ஆனால், துணியின் விலை எறிக் கொண்டே போகிறது. இம்மாதிரி ஏறிக்கொண்டே போவது பொருளாதாரம் சமமாக பங்கிடப்படுகிறது என்றதற்கு அத்தாட்சியாகாது. இப்படி யிருந்தால், சாதாரண மக்களுடைய வாழ்க்கைத்தரம் இன்றைக்கு இருக்கும்படியான அளவில் அவர்களுக்கு எப்படி கட்டுப்படியாகும்?

விலைவாசிகள் ஏறிக் கொண்டே போகும் காலத்தில் சர்க்கார் சிப்பந்திகள் "இந்த அநியாய விலையில் நாங்கள் வாழ முடியாது, எங்களுக்குப் பரிகாரம் வேண்டும்" என்று கேட்டால், "நாங்கள் என்ன செய்வது" என்று சர்க்கார் சொல்கிறது என்றால் இதைப்பற்றி நாம் என்ன சொல்வது? விலைவாசிகள் இப்படி ஏறிக்கொண்டு வருவதைப் தடுப்பதற்குப் பதிலாக நாங்கள் என்ன செய்வது என்று சர்க்கார் சொல்வார்களானால், விலைவாசியைக் கட்டுப்படுத்த திராணியில்லாத, திறமையில்லாத ஒரு சர்க்கார் என்றுதான் சொல்ல வேண்டும். விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு எங்களுக்குத் திறமையில்லை, எங்களால் ஆகாயாலாகாது என்று சர்க்கார் பகிரங்கமாகவாவது ஒப்புக் கொள்ள வேண்டும். அன்று விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டும், அல்லது எங்களால் கட்டுப் படுத்த முடியாது என்பதை பகிரங்கமாக ஒத்துக் கொள்ள வேண்டும். இந்த இரண்டில் ஒன்றைத்தானே செய்ய வேண்டும். இதைச் சொல்லும்போது எனக்குக் கோபமாகக்கூட இருக்கிறது. நாங்கள் என்ன செய்வது என்று சர்க்கார் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டே இருப்பதில் என்ன பிரயோஜனம்? நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என்று சொல்லிக் கொண்டே

யிருப்பதில் என்ன அர்த்தம் இருக்க முடியும்? சர்க்காரால் நடவடிக்கை எடுக்க முடிய வில்லை என்றால், நடவடிக்கை எடுக்கப்போவதில்லை என்று திட்ட வட்டமாகச் சொல்லிவிடுங்கள். விலைவாசிகள் ஏறிக் கொண்டேதான் போகும், நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது, ஏழை மக்களின் பணம் பதுக்கல்காரர்களின் கைக்குப் போய்க்கொண்டேதான் இருக்கும் என்ற நிலைமையே நீடித்து இருந்தால், பதுக்கல்காரர்களின் கையில் இந்த நாட்டையும் விட்டு விடப் போகிறீர்களா என்று கேட்கின்றேன். ஆகவே, சர்க்கார் திட்ட வட்டமாக தங்களுடைய கொள்கையைத் தெரிவித்து விட வேண்டும். விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதைத் தெரிவித்துவிடவேண்டும்.

பதுக்கல்காரர்களின் மேல் தீவிர நடவடிக்கை எடுப்பதற்கு சர்க்கார் மறுத்துக் கொண்டிருக்கும் நிலையில் சர்க்காரின் கீழ் வேலை பார்க்கும் சர்க்கார் சிப்பந்திகள் ஆறு மாதங்களுக்குள் விலைவாசி 60 சத முதல் 70 சத விகிதம் வரை ஏறிக் கொண்டே வருகிற தென்பதையும், அரிசி முதல் வாழ்க்கைக்குத் தேவையான சகல சாமான்களின் விலையும் உயர்ந்து வருகிற தென்பதையும் எடுத்துச் சொல்லி, தங்களால் வாழ்க்கை நடத்துவதற்கு முடிய வில்லை யென்றும், தங்களுக்கு அதிகமாக சம்பளம் கொடுக்க வேண்டும். அல்லது ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டுமென்றும் கேட்டால், முதல் மந்திரி அவர்கள் என்ன சொன்னார் என்பதே நமக்குத் தெரியவில்லை. சபைத் தலைவர் ஒன்று சொல்கிறார். பத்திரிகையிலே ஒரு செய்தி வருகிறது. கனம் முதல் மந்திரி உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவர் பதில் சொல்லமாட்டேன் என்கிறார். முதல் மந்திரி என்ன சொன்னார் என்பதற்கு நிதி மந்திரி ஏதோ சொல்கிறார். ஆனால், பத்திரிகையிலே மறுப்பு வருகிறது. இப்பொழுது கனம் முதல் அமைச்சரோ வாய்மூடி மௌனியாக இருக்கிறார். இப்படியே நிலைமை இருக்குமேயானால் என்ன பிரயோஜனம்? அங்கத்தினர்கள் ஏதாவது வழி சொல்ல வேண்டுமென்று சொல்லப்படுகிறது. நாங்கள் ஏற்கனவே வரி போடுவதற்கான பல வழிகளை எடுத்துக் காட்டியிருக்கிறோம். இனியும் எடுத்துக் காட்டுவதற்குத் தயார். சர்க்கார் அவைகளை ஏற்றுக் கொள்வார்களா? மாட்டார்கள். விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு சர்க்கார் தயாரா என்றால், விலை ஏறிக் கொண்டே யிருந்தால் நாங்கள் ஜவாப்தாரியா? என்று கேட்கப்படுகிறது. சர்க்காருக்குப் பணம் கிடைப்பதற்கு வழிவேண்டுமென்று கூறுகிறார்கள். பல வழிகளைச் சொன்னோம் நாங்கள் சொன்ன யோசனைகள் நன்றாக இருக்கிறதாகவும் அப்பொழுது நிதி மந்திரி அவர்கள் சொன்னார்கள். தூரதிருஷ்ட வசமாக கனம் நிதி அமைச்சரவர்களால் மத்திய சர்க்காரை அந்த வழியில் போகும்படி திருப்ப முடியவில்லை. அங்கு வேறு சக்திகள் வேலை செய்கின்றன. அப்பேர்ப்பட்ட நிலைமையில் இந்த நாட்டிலுள்ள என். ஜி. ஒ. க்களின் பிரச்னையை நம்முடைய சர்க்கார் எப்படித் தீர்க்கப் போகிறார்கள்? சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரைப் பார்த்து வேண்டு மென்றால் கேட்கவும் தயங்கக் கூடாது. எங்கள் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எங்கள் சிப்பந்திகள் நல் வாழ்வு வாழ வேண்டியதவசியம். அவர்களுடைய பிரச்னையைத் தீர்க்க வேண்டியது அவசியம், அவர்கள்தான் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஜீவாதாரமானவர்கள், அவர்களுக்குச் சரியான சம்பளம் கொடுப்பதற்கு எங்களுக்கு வழி செய்து கொடுங்கள் என்று மத்திய சர்க்காரை நமது சர்க்கார் கேட்கட்டும். யார் வேண்டாமென்று சொன்னார்கள்?.

தோட்டக் காடுகளுக்கு விவசாய வருமான வரி விதிக்கும்போது சுமார் 75 லட்சம் ரூபாய்தான் வசூலாகும் என்று சென்ற பட்ஜெட்டிலே கணக்கிடப் பட்டது. ஆனால், ஒன்றரை லட்சத்திற்குமேல் ? வசூலாயிற்று. ஆகவே, எதிர்பார்த்ததற்கு அதிகமாக இந்த இனத்தில் சர்க்காருக்கு வருமானம் வந்திருக்கிறது. விலைவாசி ஏற்றத்தால் விற்பனை வரி மூலம் அதிகப்பணம் கிடைக்கத்தான் செய்யும். அந்தப் பணத்தையாவது வைத்துக் கொண்டு இவர்களுக்கு உடனடியாக ஏதாவது நிவாரணம் அளிக்கக்கூடாதா? அவர்கள் நிலைமையை சர்க்கார் உணர்ந்திருக்கிறது என்ற ஒரு அத்தாட்சிக்காகவாவது ஏதாவது உடனடி நிவாரணம் அளித்தால்

10-58 a.m.

என்.ஜி.ஓக்கள் மனம் கொஞ்சம் திருப்தி அடையும். வேண்டுமென்று அவர்களே திண்டாட விட்டுவிட்டு இப்பொழுது சர்க்கார் இப்படி பதில் சொல்லுவது நியாயமா? அவர்களே இந்த நிலைமைக்கு உள்ளாக்கி விட்டு இப்பொழுது அதை சமாளிக்க முடியாமல் திண்டாடுவதற்குப் பதிலாக, அவர்களுக்கு முன் கூட்டியே ஏதாவது பரிகாரம் அளித்திருக்கக்கூடாதா? இம்மாதிரி ரசாவாசமாக விகாரங்களே வைத்துக் கொண்டு என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொண்டிருப்பது நல்லது அல்ல. (Interruption.) 'பார்க்கலாம்' என்று முதல் மந்திரி சொல்லவில்லையா என்று கேட்டபொழுது, 'இல்லை' என்றும் பதிலளிக்கப்பட்டு விட்டது. இந்த ரசாவாசமான நிலைமையை மாற்ற உடனடியாக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நெசவுத் தொழிலாளர்கள் பிரச்னை மிகவும் ஒரு முக்கியமான பிரச்னை. இது சம்பந்தமாக நான் கொடுத்திருக்கக்கூடிய உத்தியோகப் பற்றற்ற ஒரு தீர்மானத்தை வருகிற சனிக்கிழமை 18-ம் தேதியன்று விவாதிக்க, கனம் நிதி மந்திரி அவர்கள் ஒத்துக் கொண்டது பற்றி நான் சந்தோஷ மடைகிறேன். அவர் தானாக ஒரு தீர்மானம் கொண்டு வரா விட்டாலும் இந்த விஷயத்தில் ஒத்துழைக்க ஒப்புக் கொண்டது பற்றி சந்தோஷம். இது பற்றி சில முக்கியமான விஷயங்களை மட்டும் தொட்டு விடுகிறேன். ஸ்ரீமான் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் இது விஷயமான கொள்கையை விளக்குகையில் எல்லோருக்கும் திருப்தி ஏற்படும்படி சொல்லி விட்டார். 170 கோடி கெஜத்தில், 30 கோடி கெஜம் மில்களுக்கும், 30 கோடி கெஜம் விசைத் தரிகளுக்கும், பாக்கி 110 கோடி கெஜம் கைத் தறிக்கும் ஒதுக்கி யிருப்பதாகச் சொல்லி விட்டார். ஆனால் நடப்பது என்ன? நடக்கப்போவது என்ன? எந்த அடிப்படையில் அவர் இந்தக் கணக்கு போட்டாரோ அந்த அடிப்படையே தோளாறு என்பதற்கு இன்றைக்கு பத்திரிகையில் வந்திருக்கக்கூடிய ஒரு செய்தியே சான்று. இன்று நமது நாட்டில் இருக்கக்கூடிய மில்களின் சக்தியைக்கொண்டு 600 கோடி கெஜம் உற்பத்தி செய்ய முடியும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேலும் 140 கோடி கெஜம் மக்களுக்கு தேவைப்படுமென்றும், 30 கோடி கெஜம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிக்காக தேவைப்படுமென்றும், ஆக மொத்தமாக 170 கோடி கெஜம் தேவைப்படும் என்று கணக்கு போடப்பட்டிருக்கிறது. நேற்றைய தினம் "மெயில்" பத்திரிகையில் வந்திருக்கக்கூடிய சர்க்கார் செய்தியைப் பார்த்தால், ஜூலை மாதத்தில் மட்டும் மில்களின் மூலமாக 48 கோடி கெஜம் உற்பத்தியாகியிருப்பதாகத் தெரிகிறது. ஒரு மாதத்தில் 48 கோடி கெஜம் உற்பத்திச் செய்யக்கூடிய சக்தி மில்களுக்கு இருக்கிறது என்றால், 12 மாதங்களில் அவைகள் எவ்வளவு உற்பத்தி செய்யக்கூடும்? ஒரு வருஷத்துக்கு 500 கோடி கெஜத்துக்கு மேல் உற்பத்தி செய்ய முடியாது என்று சொல்லப்பட்டதே? மில்களுக்கு 30 கோடி கெஜம் உற்பத்தி செய்வதற்குத்தான் லைசென்ஸ் கொடுத்தார்கள். கிட்டத்தட்ட வருஷத்துக்கு 630 கோடி கெஜம் உற்பத்தி செய்யக் கூடிய சக்தி மில்களுக்கு இருக்கிறது. 1954-ல் அஹமதாபாத்தில் தகராறு வந்தபொழுது, இன்னும் அதிகமாக துணி உற்பத்தி செய்வதற்கு லைசென்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்ட பொழுது மில் முதலாளிகள் 500 கோடி கெஜத்துக்கு மேல் உற்பத்தி யில்லை என்று உறுதி கூறினார்கள். இப்பொழுது லைசென்ஸ் கிடைத்த பிறகு அடுத்த மாதமே உற்பத்தி அதிகரித்து விட்டது. லைசென்ஸ் கொடுத்ததற்கு அதிகமாக மில்கள் உற்பத்தி செய்தால் கைத்தறித் துணிகள் விற்பனை யாகாமல் போய்விடலாம். கனம் ஸ்ரீ சி. சுப்ரமணியம் சென்ற மாதம் கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள் மகர் நாட்டுக்குப் போயிருந்தார். கூட்டத்திற்கு வந்திருந்த ஒவ்வொரு பிரதிநிதிகளும் எங்களுடைய கூட்டுறவு சங்கத்தில் 6 மாதங்களாக ஸ்டாக்குகள் வளர்ந்துக்கொண்டே இருக்கின்றன. குறைந்த பட்சம் எங்களிடம் இருக்கக்கூடிய ஸ்டாக்கில் மூன்றில் ஒரு பங்கையாவது மாகாண கூட்டுறவு சங்கம் எடுத்துக் கொண்டு விற்பனைக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லி அது மாதிரி தீர்மானம் கூட நிறை வேற்றினார்கள். ஆனால் மாகாண கூட்டுறவு சங்கம் அதற்கு ஒத்துக் கொள்ளாமல், நஷ்டத்துக்கு மற்ற சங்கங்கள் விற்பதற்குத் தயாராக யிருந்தால் எடுத்துக் கொள்ளுவதாகச் சொல்லி விட்டது,

இந்த நிலைமை இன்றைக்கே ஏற்பட்டு விட்டது. நிலைமை இப்படி இருக்கும் பொழுது, மில் முதலாளிகள் காட்டிய பொய் கணக்கை சரியாக பரிசீலனை செய்யாமல், மேலே சொன்னபடி கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக இதனால் நம் மாகாணத்தில் இருக்கக்கூடிய கைத் தறி நெசவாளர்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே இந்தக் கணக்கு பொய்க் கணக்கு என்று மெய்ப்பிக்கப்பட்டு விட்டது. இது மிகப் பெரிய ஆபத்தில் கொண்டு போய் விடும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பரிசீலனையில் இருக்கும் பொழுது ஜூன் வரையில் இந்தக் கொள்கை வகுக்கப்பட வில்லை. பார்லிமெண்டில் இந்தத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட காலத்தில் நிச்சயமாக ஒன்றும் தெரியவில்லை. போன மாதத்தில் தான் இந்தக் கொள்கை உறுவாக்கப்பட்டது. இது விஷயமாக கைத்தறி போர்டுடன் கலந்து ஆலோசிக்கவில்லை. ஆகையால் இப்பொழுது நிலைமை என்ன, நிலைமையை சமாளிக்க என்ன செய்யவேண்டும், எந்தத் திட்டத்தை வகுத்தால் நலனுயிருக்கும் என்று ஆலோசிக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம். இது விஷயமாக பின்னால் பேசிக் கொள்ளலாம்.

(Mr. Speaker in the Chair.)

கடைசியில் கவர்னர் அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தில் நாட்டில் பொதுவாக ஒழுங்கு அமைதி நிலைமை நன்றாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் டெல்டா பிரதேசங்களில் கொஞ்சம் நிலைமை நவறியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். ஆனால் நிலைமை அப்படித் தவறியதற்கு என்ன காரணம் என்பதைமட்டும் அவர் சொல்லவில்லை. உதாரணமாக சிதம்பரம் தாலூகாவில் ஏற்பட்டுள்ள விவசாயத் தகராறை எடுத்துக்கொள்ளலாம். அங்கு இருக்கக்கூடிய மிராசுதார் விவசாயிக்கு சட்டபூர்வமாக என்ன வாரம் கொடுக்கவேண்டுமோ அதைக் கொடுக்காத தால் தகராறு மூண்டது. கடைசியில் செடில்மெண்டுக்கு வரும்போழுது சட்டபூர்வமாக என்ன வாரம் கொடுக்கவேண்டுமோ அதைக் கொடுக்க வேண்டுமென்றுதான் ஏற்பட்டது. ஏதாவது தகராறு வந்தால் முதலில் விவசாயிகளுக்குக் கிடைப்பது விசேஷ ஆயுதம் தாங்கிய மலபார் போலீஸ் தான். ஆனால் அதே சமயத்தில் மிராசுதார் என்ன அக்கிரமம் செய்தாலும் கேள்வி முறை கிடையாது. அப்பொழுது எந்த விதத்திலும் போலீஸார் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். மதுரையில் இன்னொரு உதாரணம் கொடுக்கிறேன். அங்கே சோழவந்தானில் ஒரு மிராசுதார்—அவர் பெயரையும் ஊரையும் நான் சொல்ல விரும்பவில்லை—நிலத்தில் இருக்கக் கூடிய விவசாயியை வெளியேற்றவேண்டு மென்று நினைத்தார். ஆனால் அதற்கு சட்டம் இடம் கொடுக்கவில்லை. அவருக்கு சர்க்கார் காரியாலயத்தில் ஒரு சொந்தக்கார ஐ.ஏ.எஸ். ஆபீசர் இருக்கிறார்.

Immediately thereafter, there was a humming sound emanating from the sound equipment.

SRI K. VINAYAKAM : Sir, may I know what is wrong in the House? We just now heard a noise that is almost threatening us. Anything may happen and we are afraid that the fans may fall upon us. (Laughter.)

MR. SPEAKER : The hon. Member can take courage that nothing will happen. (Renewed laughter.)

SRI P. RAMAMURTHI : அந்த ஐ.ஏ.எஸ். ஆபீசர் லீவில் போய் அங்கு இருக்கிற Dy.S.P., D.S.P. முதலிய போலீஸ் உத்தியோகஸ்தர்களே பார்த்திருக்கிறார். உடனே டெபுடி. கலெக்டரிடம் விவசாயி சம்பந்தப்பட்ட வரையில் சமாதானத்துக்கு பங்கம் ஏற்பட்டு விடுமென்று சொல்லி section 145, Criminal Procedure Code-ன் கீழ் மனுச் செய்து கொள்ளப்பட்டது. உடனே 'நிலம் உன் கையில் இருக்கிறது என்பதை ருசுப்படுத்து' என்ற உத்திரவு விவசாயிக்குப் போடப்பட்டது. 11-08 a.m.

[Sri P. Ramamurthi] [13th August 1956

145-வது செக்ஷன் கீழ் அவ்வளவுதான் செய்ய முடியும். ருசுப்படுத்த மனு தாக்கல் செய்வதுதான் சாத்தியம். இந்த உத்திரவு போடப்பட்டவுடனே, மிராசுதாரருக்கு சாதகமாக போலீஸ் அங்கே அனுப்பப்பட்டு, விவசாயி யானவன் நிலத்தில் இறங்கக்கூடாது, விவகாரம் தீருகிறவரைக்கும் சாகு படி செய்யக்கூடாது என்று நடத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

SRI R. V. SWAMINATHAN : எவ்வளவு எக்கர் சமாசாரம் ?

வதற்கான வழி வகையில் இருந்தால், அதை உடனடியாக நிறைவேற்று ஒறதிலே, அதைக் கொண்டு வருவதிலே ஒரு கஷ்டமும் இருக்காது. நல்ல பரிசீலனை செய்து, பல நோக்கங்களில் பார்க்கும்படியான சந்தர்ப் பங்களிலே நாம் கொண்டுவரும்படியான ஒவ்வொரு கட்டத்திலும் சிக்கல் களும் கேடும் வளர்ந்துகொண்டுதான் வந்திருக்கிறது என்பதை மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். முதலாவதாக, இந்த நிலச் சீர்த்திருத்தம் கொண்டு வருவதற்கு முன்னால், இந்தக் குடியானவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றாமல் நடுக்கவேண்டும் என்று நாம் சட்டம் கொண்டுவந்தோம், அது மிகவும் வரவேற்கத் தருந்த அம்சம்தான். சாதாரண நாளில் பருதியில் நாம் போய்ப் பார்ப்போமானால் பெரும் மிராசுதார்கள் யாரும் குடியானவர்களை வெளி யேற்றுவது கிடையாது. ஆனால் அவர்கள் மேல் குற்றம் இருந்து, விவ சாயிகள் ஒழுங்காக வேலை செய்யாமல் இருந்தால், உரம் போடாமல் இருந்தால், அல்லது பூமியை சரியான பாதுகாப்பான நிலைமையில் வைத் துக்கொள்ளாமல் இருந்தால்தான், அவர்களை வெளியேற்றுகிறார்கள், அதாவது அந்தக் கிராமப் பகுதியில், மிராசுதார்களும் நிலச்சுவான்தார் களும் நன்றாக இருக்கவேண்டுமானால் அங்கு இருக்கும்படியான குடியான வர்களை நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ளவேண்டும். அவர்களுடைய வாழ்வும் நல்ல வாழ்வாக இருக்கவேண்டும். குடியானவர்களுடைய நம்பிக் கைக்குப் பாத்திரமாகவும் இருக்கவேண்டும். ஒரு சில இடங்களில்தான் குடியானவர்களைச் சிலர் தூண்டிவிட்டு அவர்களுக்கு இந்த உரிமையை ஊர்ஜிதப்படுத்துவதற்கு சில சிக்கல்கள் ஏற்படுத்திக்கொண்டு வருகிறார் களே தவிர, அது மனதார அல்ல என்பதைப் பல தடவைகள் இந்தச் சட்ட சபையில் எடுத்துச் சொல்லி இருக்கிறேன். இப்போதும் சொல் கிறேன். அவர்களுக்குப் பாத்தியம் கொடுக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அன்பினால், அந்தப் பாத்தியம் இருக்கவேண்டுமே தவிர, அதிகாரத்தால், உரிமையால் அது இருக்கக்கூடாது. அவர்களுடைய நல்லெண் ணத்தை வைத்து சிறந்தமுறையில் இருக்கவேண்டும். நம்பிக்கைக்குப் பாத்திரமாய் இருக்கவேண்டுமே தவிர, துவேஷத்தை மூட்டி, நன்மை பெறவேண்டும் என்பதோ அல்லது பறித்து கொடுப்பது சர்க்கார் கடமை என்றோ நீங்கள் நினைக்கிற மனப்பான்மை அவ்வளவு நல்லது அல்ல. சமீபத்தில் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் ஏற்பட்ட கலவரத்தைப் பார்த்தால், சட்டம், பாதுகாப்பு அமைக்கின்றவர்கள் என்று பொது மக்களைத் தூண்டிவிட்ட நிலைமையில் அங்கு இருக்கும் பெரிய நிலச்சுவான்தார்கள் கிராமக் குடியானவர்கள், இவர்கள் நல்லெண்ணத்தைக் கெடுத்து, மீண்டும் மீண்டும் ஒரு குழப்பமான நிலைமையை உண்டாக்கிக்கொண்டு

10.58 a.m. தான் வந்திருக்கிறார்கள். அதே சமயத்தில் ஒருவருக்குப் பாதுகாப்பு வேண்டு மென்று சொல்லக்கூடியவர்கள் மிராசுதார்களுக்கு ஆபத்து வந்தாலும் விவசாயிகளுக்கு ஆபத்து வந்தாலும் எல்லோருக்கும் நீதியும் சட்டமும் நிலைநாட்டப்படவேண்டும். இப்பொழுது இருக்கும்படியான நிலையிலே சாதாரணமாக குடியானவர்களை வெளியேற்றக்கூடாது என்று சொல்லும் போது, உண்மையாகவே பூமியில் பாடுபடும் குடியானவர்கள் எத்தனை பேர்கள் என்றால், 25 சத விகிதம் பேர்கள் தான் இருப்பார்கள். பாக்கி இருக்கக்கூடியவர்கள் பிறருக்குச் சொந்தமான நிலத்தை உள் குத்தகைக்கு எடுத்துக்கொண்டவர்களாக இருக்கும். நிலச் சொந்தக்காரர்கள் என் நிலத்தை குத்தகைக்கு விட்டார்கள் என்றால், அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஊரிலேயே இல்லாமல் வேறு இடங்களுக்குப் போயிருப்ப தாலே நிலத்தைக் குத்தகைக்கு விட்டிருக்கலாம். வயது வராதகுழந் தைகளுக்கு "கார்டியன்" என்ற முறையிலே சிலர் நிலத்தைப் பிறரிடம் குத்தகைக்கு விட்டிருக்கலாம். நிலத்தைக் குத்தகைக்கு விடுப வர்கள் எல்லாம் நிரந்தரமாகவே இன்னொருவரிடமே விட்டு வைத்திருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. ஐந்து வருஷத்திற்குப் பின்னால்கூட ஒருவருக்கு பூமியின்மேல் அபிமானம் ஏற்பட்டு தானே நேரில் விவசாயம் செய்யலாம் என்ற ஆசை தோன்றலாம். நல்ல நிலையிலே பண்ணையை வைத்து நடத்தவேண்டுமென்ற அக்கரையும் வேலை செய்யக்கூடிய திற னும் இருப்பவர்களுக்கு நிலம் கிடைப்பதற்கு ஒரு சௌகரியம் அவசியம்

செய்தாகவேண்டும். இப்பொழுது இருக்கும் குடியானவர்களையும் இப்பொழுது இருக்கும் பெரிய பெரிய மிராசுதார்களையுமே மனதில் வைத்துக் கொண்டு சட்டம் செய்தால் பிற்காலச் சந்ததிகள் நிச்சயமாக மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் இப்பொழுதே சொல்ல ஆசைப்படு கிறேன். சர்க்கார் கொண்டுவந்திருக்கும் திருத்தமானது மிகவும் பொருத் தமும் அவசியமும் உள்ளதுமான திருத்தம் என்று நான் கருதுகிறேன்.

விதவைகளுக்கு ஜீவனாம்சமாக நிலம் விட்டிருக்கலாம். அந்த நிலத் தை அந்த விதவைகளே உழுது பயிரிடுவது என்பது சாத்தியமா? பிறரிடம் விட்டுத்தானே ஆகவேண்டும்? ஆகவே, "உழுபவர்களுக்குத்தான் நிலம் சொந்தம்" என்பது பொருத்தம் இல்லாத வாதம் என்று நான் சொல்ல முடியும். இந்த நாட்டிலே நிலச் சொந்தக்காரர்களே வேலை செய்தால்தான் நிலம்வைத்துக் கொள்ளலாம் என்று சொல்வது இயலாத காரியம். அப்படிப் பார்த்தால் விவசாயிகளும் தாங்கள் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளும் நிலத்தை தாங்களே, பிறர் உதவியின்றி, பிறருடைய உழைப்பின்றி உழுது பயிரிட்டு அறுவடை செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அவர்களும் பிற ருடைய உழைப்பைப் பெற்றுதான் காரியங்கள் செய்கிறார்கள். ஒரு ஏக்கரா வயலை உழுவதற்கு பத்து கூலி ஆட்கள் வேண்டும். அறுவடை செய்ய வேண்டுமானால் 20 ஆட்கள் வேண்டும். ஆகவே, நிலச் சொந்தக்காரர் கள் தாங்களே நிலத்தில் உழுது பயிரிடவேண்டுமென்ற வாதம் சரியல்ல. விவசாயத்திலே ஈடுபட்டிருக்கும்படியான குடியானவக் குடும்பங்களும்கூட, அதே குடும்பம் எல்லா காரியங்களே செய்துவிடுகிறார்கள் என்று சொல்ல முடியாது. உலகத்திலே எந்த தேசத்திலும் இல்லாத ஒரு சமாசாரம். உழுபவர்களாக இருந்தாலும், தாங்களே எல்லா வேலைகளையும் செய்துவிடு கிறார்கள் என்று சொல்ல முடியாது. அவர்களும் கூலி ஆட்களை வைத்துக் கொண்டுதான் பயிர் செய்யமுடியும். அதேபோல் ஐந்து ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களும் தாங்களே சொந்தமாக வைத்துக்கொள்ள வேண்டு மென்றால், அவர்களே பாடுபடவேண்டுமென்ற அவசியம் இல்லை. மேற் பார்வை செய்துகொண்டிருந்தால் போதும். நல்ல முறையில் நிலத்தை உழுது பண்படுத்தி விவசாயம் செய்பவர்களுக்கு நிலத்தைக் கொடுக்க வேண்டியது நியாயம். நிலத்தைச் சொந்த முறையில் வைத்துக்கொண்டு பயிர் செய்பவர்களுக்கு நிலம் கிடைக்கவேண்டியதவசியம். ஆகவே, தாங்களே நேரடியாக உழுதால்தான் நிலம், இல்லாவிட்டால் நிலம் கிடை யாது என்னும் முறை உலகத்திலே எந்த தேசத்திலும் கிடையாது.

குடியானவனுடைய வருமானத்தையும், விவசாயக் கூலியினுடைய வருமானத்தையும் கணக்கெடுத்துப் பார்த்தால் விவசாயக் கூலிகளுக்குத் தான் ரொம்ப லாபம் வரும் என்று புள்ளி விவரங்களுடன் சொல்ல ஆசைப் படுகிறேன். இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் நஞ்சை சாகுபடி செய்யும் படியான குத்தகைக்காரனே எடுத்துக்கொண்டால் ஒரு ஏக்கருக்கு 50 ரூபாய் என்று சட்டப்படி வைத்துக்கொண்டாலும் 100 முதல் 150 ரூபாய் வரை மிச்சமாகும். அதே நிலையில் ஒரு விவசாயக் குடும்பத்திலே நான்கு பேர்கள் இருந்து அவர்கள் அத்தனை பேரும் விவசாயக் கூலியாக இருந்தால் தினம் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் வீதம், 200 ரூபாய் வரைக் கும் கூலியாக பெறுவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது. ஆகவே, குடியான வனாக இருந்தால்தான் லாபம் பெறமுடியும், விவசாயக் கூலியாக இருந்தால் லாபம் கிடையாது என்ற வாதம் பொருத்தமானதல்ல. ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கும் விவசாயக் குடும்பத்தி லிருக்கும் எல்லோரும் உழைப்பாளர்களானால் அவர்களுக்கு லாபம் அதிக மாக இருக்குமென்பதை நான் வற்புறுத்திக் காட்ட விரும்புகிறேன்.

விவசாயம் செய்யவேண்டுமென்ற ஆசை இருப்பதனால் மட்டும் காரியம் நடக்கமுடியாது. விவசாயத் தொழில் நல்ல முறையிலே நடத்தக்கூடிய முறையும் பூரணமாகத் தெரிந்திருக்கவேண்டும். 365 நாட்களிலே 140 நாட்களுக்குத்தான் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுக்கு வேலை இருக்கும். எனைய நாட்களில் அவர்களுக்கு சிறு கைத்தொழில், கிராமக் கைத்தொழில் ஈடுபடுவதற்கு வசதி செய்து கொடுப்போமானால் இம்மாதிரி பிரச்சினை நீங்குவதற்கு முடியும்; விவசாயம் கட்டுப்படியாகக்

[Sri P. G. Karuthiruman] [16th August 1956

கூடிய முறையில் நடக்கும். இல்லாவிட்டால் விவசாயம் நஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய தொழிலாகவேதான் இருக்கும். விவசாய வேலை இல்லாத நாட்களில் அவர்களுக்கு வேறு வகைத்தொழில் ஏற்படுத்திக் கொடுக்காவிட்டால், விவசாயத்தையே முற்றிலும் நம்பிக்கொண்டிருப்பது மேலும் நஷ்டத்தையே கொடுத்து, நிலைமை மிகவும் கேலிக்கூத்தாகப் போய்விடும், என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நிலத்தில் பயிரிடும் குடியானவர்களோ நிலச் சொந்தக்காரர்கள் அக்கிரமமாக வெளியேற்றக்கூடாது என்பதும், விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்பதும் நியாயம்தான். ஆனால், சட்டத்தினால் மட்டும் பாதுகாப்பு இருந்தால் போதாது. சட்டத்தின் மூலம், அதிகாரத்தின் மூலம், விவசாயிகளுக்கு பாதுகாப்பு கட்டாயம் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. எந்தக் காரியமும் அதிகாரத்தின் பேரால் செய்வது நிச்சயமாக வெற்றிகரமாக இருக்க முடியாது. மிராசுதார்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே நல்ல எண்ணமும் அன்பும் பாதுகாக்கப்பட்டால் தான் எந்த விஷயமும் முடியும்.

இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் திருத்தம் மிகவும் பொருத்தமான திருத்தம். ஏழைக் குடியானவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று சர்க்கார் திருத்தம் செய்வது வரவேற்கத்தக்கது. எல்லாப் பகுதி மக்களையும் காப்பாற்ற வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. எல்லோருக்கும் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும். எல்லா மக்களுடைய நலனையும் காப்பாற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமை. மக்களுக்கிடையே அதிருப்தியை அதிகப்படுத்தி, ஒரு தரப்பினருக்கு ஆபத்தை விளைவிக்கும் நிலையில் இருக்கும் உரிமைகளைக்கூட அனுபவிக்க முடியாத தன்மையிலே எந்த அரசாங்கமும் நடந்துகொள்ள முடியாது. மக்கள் அரசாங்கம் என்றால், தேசத்திலே உள்ள எல்லா மக்களுக்கும் பிரதிநிதிகளாக இருந்து, எல்லா மக்களுடைய நலனையும் பாதுகாக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் அரசியல் சட்டத்திலே வழங்கியிருக்கும் உரிமைகளை எல்லோருக்கும் பாதுகாத்து கொடுத்ததாக இருக்கு மென்று நினைக்கிறேன். ஏழ்மை ஏக்கருக்குட்பட்டு நிலம் வைத்திருக்கும் படியானவர்களுக்கு நிலம் கிடைக்கும்படியான ஒரு முறையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் திருத்தம் மிகவும் அவசியம். நேரடியாக உழுபவர்களுக்குத்தான நிலம் கொடுக்கப்படவேண்டுமென்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வார்களானால் அது சரியல்ல. அப்படிப் பார்க்கப்போனால் எத்தனையோ குடியானவர்களுக்கு வர் பிடித்துக்கூட உழத் தெரியாது. ஆகவே, இந்தத் திருத்தத்தை எல்லாக் கட்சியினரும் மனப்பூர்வமாக ஆதரித்து, பொறுக்குக் கமிட்டியிலும்கூட மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் இதை ஆதரிக்கிறேன்.

11-05 a.m. SRI L. C. PAIS: Mr. Speaker, Sir, I support the Bill and also welcome very enthusiastically the amendment proposed by the Government giving opportunity to the landlord to resume lands for his own purposes. At the same time, I also wish to make it clear that if the move is that the whole matter should go before a Select Committee, I have no objection to that course also provided the matter is dealt with expeditiously and the relief required is given as early as possible.

So far as South Kanara is concerned, we had this sort of protection for the tenants during the last two years. I then assured the Hon. Minister and this House that this measure had been working very satisfactorily and that everybody had proper advantage and benefit out of this measure. The good tenants have been protected and the bad tenants certainly cannot expect protection. I may say also that so far as the landlords are concerned, they were,

16th August 1956] [Sri L. C. Pais]

as a class, not opposed to this measure for the simple reason that they thought that by an enactment of this sort, their rent would be got in time without having to go to the Court of law. So, instead of having stray legislation here and there, it is a very good step which the Government have taken by including South Kanara also under the provisions of the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1956, and I heartily welcome this move.

So far as tenants are concerned, we have been fighting principally for two things. One is security of tenure and the other is fixation of rent. We feel that as a result of this measure and as a result of the measure which is going to be introduced in the near future, the position of the tenants would certainly improve. As was so very correctly pointed out by the Hon. Minister just now, what about the position of the lesser landlords and the poorer landlords? I may say Sir, that so far as South Kanara is concerned, there are many such landlords. On account of the Aliasanthana Act, the partitions and the like, many families have got into troubles and many landlords who once belonged to big families have been made to depend upon their slender income which they get out of their lands. Taking into consideration this aspect, it is absolutely necessary that in any event, whatever legislation may come, they are right in resuming the land whenever it is necessary for their own purposes, provided they actually cultivate the land within a particular year and provided they have not immense acreage to cultivate. This right has to be respected and we are thankful to the Government in having brought forward this amendment in time. Speaking for myself, I have great pleasure in supporting this wise measure.

11-09 a.m. * SRI C. KANDASAMY: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு விடுவதற்கு ஆசாங்கத் தரப்பிலே முடிவு செய்திருப்பதை வரவேற்கிறேன். இருந்தாலும், இன்றையதினம் நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக அரசாங்கத் தரப்பிலேயுள்ளவர்களுடைய போக்கைப்பற்றி சில வார்த்தைகள் நான் சொல்லக்கான் விரும்புகிறேன். நியாய வாத மசோதா செலக்ட் கமிட்டியின் பரிசீலனை முடிந்து வந்து விட்டதாகவும், அடுத்த மாதத்தில் அதை எடுத்துக்கொள்ளப்போவதாக வும் மந்திரி அவர்கள் குறிப்பிட்டார். அந்த சட்டம் முதலில் விவாதிக்கப் படும்போது கனம் நிதி மந்திரி அவர்கள் பங்கெடுத்துக்கொண்டார். ஒரு வேலிக்கு அதிகம் நிலம் வைத்துக்கொண்டு சாகுபடி செய்யக்கூடிய குடியானவர்களுக்கு இந்தச் சட்டத்தினுடைய நன்மை கிடைக்கக்கூடா தென்று திருத்தத்தைக் கொண்டுவந்தார். அப்படிக் கொண்டுவரு வதைப்பற்றி ஆட்சேபணை கிடையாது. ஒரு வேலிக்கு அதிகமாக சாகுபடி செய்யக்கூடியவர்கள் நிலத்தை மீண்டும் நிலச்சுவாந்தார்களிடம் கொண்டு ஒப்படைக்கக்கூடிய இந்த விதி நிலச்சுவான்கள் நிலத்தை மீட்க பயன் படக்கூடிய முறையில் இருந்தால் ஒத்துக்கொள்ள முடியாது என்று கூறினேன்.

விவசாயிகள் பாதுகாப்புச் சட்டத்தை இந்தத் திருத்த மசோதா மூல மாக இரண்டு வருஷத்திற்கு நீடிக்கும்போது, கொள்கை சம்பந்தமான ஒரு விஷயத்தையும் அதில் புகுத்தக்கூடாது. அப்படி புகுத்தியிருப்பதைப் பார்க்கும்போது ஆச்சரியப்படுகிறேன். நிலச் சீர்த்திருத்தம் சம்பந்தமாக சர்க்காருடைய போக்கு எப்படிப்போகுமோ என்று சந்தேகப்படவேண்டியிருக் கிறது. இந்தத் திருத்த மசோதாவை இன்னும் பொறுக்குக் கமிட்டிக்கு மீண்டும் விட்டால் இன்னும் பல நிர்ப்பந்தங்கள் வரலாம் என்ற பயத்தை நிதி மந்திரி அவர்கள் தெரியப்படுத்தியது உண்மையாகவே இருக்குமோ

[Sri C. Kandasamy] [16th August 1956

என்று நினைக்கிறேன். பொறுக்குச் சமிட்டிக்குப் போகும்போது, ஒரு வேலிக்கு, அதாவது 6½ ஏக்கருக்கு உட்பட்டு நிலம் வைத்திருப்பவர்களோ ஐந்து ஏக்கருக்கு உட்பட்டு நிலம் வைத்திருப்பவர்களோ, மீண்டும் நிலத்தை குத்தகைதாரர்களிடமிருந்து எடுத்துக்கொள்வதற்கு உரிமை கொடுத்து விட்டால் இந்தச் சட்டத்தில் மீதம் ஒன்றுமே இருக்காது என்று நிதி மந்திரியே பொறுக்குச் சமிட்டியில் பேசி இருக்கிறார். பதினைந்து நாட்களாக சுதேச மித்திரன், இந்து பத்திரிகைகளில் வந்திருந்த தலையங்கங்களும், அதில் அவர்கள் போட்ட கூப்பாடுகளுக்கும் நிதி மந்திரி அவர்கள் அச்சமடைய ஆரம்பித்துள்ளது ரொம்ப கவனிக்கப்படவேண்டிய விஷயங்கள்.

ஐந்து ஏக்ருக்கு உட்டவர்கள் நிலத்தை சொந்த சாகுபடிக்கு வைத்துக் கொள்வதற்கு உரிமை கொடுத்த 6/2-3 ஏக்கருக்கு அதிகமாக நிலம் வைத்திருப்பவர்களுக்கு சட்டத்தில் என்ன சலுகை கிடையாது என்று செய்து விட்டால் வரப்போகும் நிலச் சீர்திருத்தத்தில் என்னதான் மீதம் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. கஷ்டப்படுகின்றவர்களுக்கு ஆதாயம் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படை இருக்கவேண்டுமென்றால் இரு தரப்பாருக்கும் பொருந்தும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். ஐந்து ஏக்கருக்கு உட்பட்டவர்கள் சாகுபடியாளராக இருந்தால் அவர்கள் அனுதாபத்துக்கும் நிவாரணத்துக்கும் லாயக்குள்ளவர்கள் அல்லவா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இதையெல்லாம் பார்க்கும்போது நிலச்சீர்திருத்தத்தை இவர்கள் கொண்டுவரக்கூடிய விதம் எப்படியிருக்குமோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. விவசாயிகள் பாதுகாப்புச் சட்டத்தை இரண்டு வருஷங்களுக்கு நீடிப்பதும் நியாய வாரு மசோதா வரு இருப்பதும் உச்ச வரம்பைப்பற்றி பேச்சே இல்லாமல் இருப்பதும் இந்தக் குழப்பங்களினால் விவசாயிகளுக்கு ஏற்படும் பல கஷ்டங்களுக்கு பல உதாரணங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டினார். 144, 145 செக்ஷன் எந்த விதத்திலே அமுலாக்கப்படுகிறது என்பதையும் எடுத்துக் காட்டினார். இரண்டு வருஷ காலமாக எத்தனை "ரிட்" மனுக்கள் வந்திருக்கின்றன என்பதை அட்வொகேட்-ஜெனரலைக் கேட்டுப்பார்க்கும்படி அரசாங்கத்தாரை கேட்டுக் கொள்கிறேன். எந்த அடிப்படையில் ரிட் மனுக்கள் போடப்பட்டிருக்கின்றன என்பதையும் அரசாங்கம் சிந்தித்து ஒழுங்கான திருத்தங்களைக் கொண்டுவருவார்கள் என்று நினைக்கிறேன். போன வருஷம் சாம்பசிவய்யர் சொத்தாக இருந்தது அடுத்த வருஷம் அவர் மகன் சொத்தாக இருக்கிறது. இந்த வருஷம் மகன் ரிட் போடுகிறான். விவசாயிகளின் தலையை தடவுவதற்காக மிராசுதார்கள் நிலத்தை துண்டு துக்காணியாக பங்கு போட்டு பிரித்துக்கொண்டு விடுகிறார்கள். உயர் நீதி மன்றத்தில் ரிட்கள் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. இதையெல்லாம் அரசாங்கம் கணக்கில் எடுத்துக்கொண்டு சட்டத்தை திருத்துவதற்கு முன் வராதது வருந்தத்தக்க விஷயம்தான். இந்த மாதிரி சட்டம் செய்தால் அது மிராசுதார்கள் மேலும் 144 உத்தரவு வாங்குவதற்கு சாதகமாக இருக்கும் என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த நிலை விவசாயிகளை எந்த அளவுக்குக் கொண்டுபோய்விடும் என்பதையும் ஆலோசிக்கவேண்டும். ஒரு பக்கத்தில் நிலச்சுவான்தார்களின் நிர்ப்பந்தத்துக்கும் மறுபக்கத்தில் பத்திரிகைகளின் ஓலத்துக்கும் அஞ்சி இம்மாதிரி சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்றே நினைக்கவேண்டியதாயிருக்கிறது. அதேசமயத்தில் சர்க்கார் மக்கள் நாட்டு நலனுக்காக பாடுபடவேண்டும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு உழைக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த சட்டத்தினால் விவசாயிகளுக்கு எந்த வழியில் நிவாரணமிருக்கிறது என்பதைப்பற்றி யோசனை செய்தாகவேண்டும். அரசாங்கம் விவசாயிகளுடைய கஷ்டங்களை உணர்ந்திருக்கிறார்கள். அந்தக் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கு வேண்டிய சட்டங்களைக் கொண்டுவருவார்கள். இரண்டாவது ஐந்து வருட திட்டமும் இந்தப் பணியை அவர்கள் மீது சுமத்தி இருக்கிறது என்று நம்பியிருப்போம். ஆனால் அரசாங்கத்தின் நடைமுறை நடவடிக்கைகளை கவனிக்கும்பொழுது, இந்த சட்டத்தை ஒருவருக்கும் பலன் இல்லாமல் இரண்டு பக்கங்களிலும் செதுக்குவதைப் பார்த்தால், நிச்சயமாக விவசாயிகள் ஒன்றுதிரண்டு தாங்களும் மிராசுதார்களைவிட சக்தி உள்ளவர்கள் என்பதை அரசாங்கத்துக்கு நிரூபித்துக்காட்டவேண்டிய நிர்

11-12 a.m

16th August 1956] [Sri C. Kandasamy]

ஏற்படுகிறது. இதே நிதி அமைச்சர் முன்பு 5 ஏகர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கக்கூடாது என்று சொன்னார். இப்பொழுது 5 ஏகர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு விலக்கு அளிக்கவேண்டுமென்று திருத்தம் கொண்டுவரப்படுகிறது. இதைப் பார்க்கும்பொழுது மிராசுதார்களின் நிர்ப்பந்தத்துக்கு பயந்து இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது என்றுதான் நினைக்கவேண்டியதாய் இருக்கிறது. இந்த மசோதாவில் இன்னும் சில நியாயமில்லாத விஷயங்கள் இருக்கின்றன. 1952-வது வருஷத்திலிருந்து குத்தகை வாரத்தை கொடுக்கவேண்டுமென்பது போன்ற சில விதிகள் நியாயமானதல்ல. இவைகளெல்லாம் பொறுக்குக் கமிட்டியில் விவாதித்துக் கொள்ளலாம். ஆகவே இப்பொழுது என்னுடைய பொதுவான அபிப்பிராயத்தைக் கூறிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI P. B. K. RAJACHIDAMBARAM: கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். சென்ற ஆண்டில் செய்யப்பட்ட இதே சட்டம் எவ்வளவு தூரம் பலன் அளித்தது. அதை நாம் எந்த வகையில் திருத்தவேண்டுமென்பது பற்றி எதிர்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். ஒரு விஷயத்தை நான் சபையின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த சட்டத்தையும் மீறி ஒரு குடியானவன் நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்டால் என்ன செய்வது என்பதற்கு சட்டத்தில் இடமில்லாத காரணத்தினாலே எற்பட்ட தொல்லை கள் நான் நேரிடையாக அறிவேன். எதிர்க் கட்சித் தலைவர் சொன்ன ஒரு சிறிய விஷயத்தைப்பற்றி நான் அவருடன் ஒப்புக்கொள்ள தயாராக இல்லை. போலீஸ் அதிகாரிகள் மிராசுதார்கள் பக்கம்தான் வருவார்கள், குடியானவர்கள் பக்கம் வரமாட்டார்கள் என்று அவர் சொன்னார். அவ்வாறு இல்லை. அம்மாதிரியான போலீஸ் அதிகாரிகள் நம் ராஜ்ஜியத்தில் இல்லை என்பதை நான் எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன்.

SRI P. RAMAMURTHI: நான் அப்படிச் சொல்லவில்லை. 144 செக்ஷன் உத்தரவை பல இடங்களிலே போலீஸ்காரர்கள் வாங்கிக் கொடுக்கிறார்கள் என்றுதான் சொன்னேன். எல்லா போலீஸ் அதிகாரிகளும் அப்படி இருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை.

SRI P. B. K. RAJACHIDAMBARAM: சென்ற ஆண்டு இயற்றிய சட்டத்தில் சட்டத்தை மீறி ஒரு குடியானவன் வெளியேற்றப்பட்டால் அதைத் தடுப்பதற்கு ஏற்ற வசதி இல்லாத காரணத்தினால், திருச்சி ஜில்லாவில் ஏற்பட்ட ஒரு குழப்பத்தை பத்திரிகைகளில் வந்திருக்கக்கூடிய பல செய்திகளின் மூலம் அரசாங்கமும் சென்னை ராஜ்ய மக்களும் அறிந்திருப்பார்கள். சட்டப்பிரகாரம் விவசாயிகள் குத்தகை கொடுக்கத் தவறினால் நிலச்சுவான்தார்கள் ரெண்டு கோர்ட்டுக்கு அவர்களை வெளியேற்ற மனுச் செய்துகொண்டால், 6 மாதங்கள்வரையிலும்கூட மனுக்கள் பைசலாகாத காரணத்தினாலே குத்தகை பாக்கியுள்ள விவசாயிய மீண்டும் நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறான் என்பதை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன். இதற்கு சட்டத்திலே தகுந்த பரிகாரமில்லை. உழுதவன், உழாதவன் தனக்கு நிலம் வேண்டுமென்று ஒரு மனு கொடுக்கலாம். சட்டத்திலே அதிகாரமில்லாத தாசில்தார் அதுபற்றி முடிவு செய்யலாம். அந்த முடிவை போலீஸார் நிறைவேற்றி வைக்கலாம் என்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்த சூழ்நிலைக்கு இடம் கொடுக்காமல் திருத்தம் கொண்டுவரப்படவேண்டும். ஒருவன் நிலத்தை விட்டு வெளியேற்றப்படக் கூடாது என்றிருந்தபோதிலும், வெளியேற்றப்பட்டால் என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று திட்டவட்டமாக சட்டத்தில் கூறப்படவேண்டிய இந்த விஷயத்தில் நான் எதிர்க் கட்சித் தலைவர் சொன்னதை ஒப்புக் கொள்கிறேன்.

ஐந்து ஏகருக்குள்பட்ட நிலம் வைத்திருப்பவர்களுக்கு விலக்களிப்பது பற்றி நண்பர் ஸ்ரீ கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டார். இந்த மசோதா சபையில் சென்ற ஆண்டு விவாதிக்கப்பட்ட போதே உருவான கொள்கை

[Sri P. B. K. Rajachidambaram] [16th August 1956

தான் இது. இது புதிய கொள்கை அல்ல என்பதை நான் அவர்களுக்கு எடுத்தக்காட்ட ஆசைப்படுகிறேன். ஒரு வேலிக்குள்பட்ட நில வைத்திருக் கும் பிறிய பிராகுதார்களுக்கு நிலத்தை சொந்த சாகுபடிக்கு எடுத்துக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டுமென்று சபையிலே ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டதுதான். ஆகவே இது புதிதாக வருக்கப்பட்ட ஒரு கொள்கை அல்ல என்பதை சபையின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

சென்ற ஆண்டிலே அமுலாக்கப்பட்ட இந்த சட்டத்தினால் ஏற்பட்ட கஷ் டங்களையெல்லாம் பொறுக்குக் கமிட்டியில் தீவிரமாக ஆலோசித்து முடிவு செய்யலாம். ஆதலால் இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனைக்கு விடவேண்டுமென்ற யோசனையை நான் ஆதரிக்கிறேன். நாம் எவ்வளவு நல்லெண்ணத்தோடு சட்டத்தை இயற்றினாலும், அதை அமுல் செய்கின்ற அதிகாரிகள் தங்கள் சொந்தக் கருத்துக்களை அதில் புகுத்த இடமில்லாத வகையில் நாம் **fool proof**-ஆன சட்டத்தை இயற்றவேண்டுமென்ற எண்ணத்தை வெளியிட்டுக்கொண்டு, நான் இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

Sri S. VADIVELU : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சென்ற வருஷம் நிலத்தை விட்டு விவசாயிகளே வெளியேற்றக்கூடாது என்பதுபற்றி சட்டம் கொண்டுவந்த பிறகும், நமது சென்னை ராஜ்தியத்தில் எவ்வளவு விவசாயிகள் நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதுபற்றி சர்க்காருக்கு பல ஸ்தாபனங்கள் மூலம் தெரிந்திருக்குமென்று நம்புகிறேன். குறிப்பாக இந்த சட்டத்தைக் கொண்டு வருவதற்கே ஒரு பெரிய போராட்டம் நடத்தவேண்டியதாயிருந்தது. இந்த சட்டத்தை அமுல் நடத்துவதற்கும் பல போராட்டங்கள் நடத்தி பல பேர்கள் சிறை செல்ல வேண்டியிருக்கிறது. சென்ற வருஷம் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு தஞ்சை, திருச்சி ஜில்லாக்களில் போலீஸ்காரர்களையும் அடியாள்களையும் வைத்துக்கொண்டு அநேக விவசாயிகள் நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட் டார்கள் என்பதை சபையின் கவனத்துக்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன். இன்றைக்கு நிலத்தைவிட்டு வெளியேற்றக்கூடாது என்று சட்டமிருந்தாலும் கூட, வெளியேற்றவேண்டுமானால் சட்டப்பிரகாரம் ரெவின்யூ கோர்ட்டுக்கு மனுச் செய்துகொள்ளவேண்டுமென்று இருந்தாலும்கூட, மிராசுதார்கள் சிவில் கோர்ட் அதாவது முனிசீப் கோர்ட்டுக்கு என்னுடைய நிலத்தில் விவசாயி அத்துமீறி பிரவேசிக்கிறான் என்று மனுச் செய்துக்கொண்டு இன்ஜங்ஷன் ஆர்டர் வாங்கி விவசாயியை நிலத்தில் வரவொட்டாமல் தடுத்துவிடுகிறார்கள். சமரஸ கோர்ட் யார் பக்கமும் தீர்ப்புக் கூறுமல் இருக்கும் நேரத்திலே நிலத்தை சாகுபடி செய்துகொண்டிருந்த விவசாயி நிலத்தை உழமுடியாமல் தடுத்து நிறுத்தப்பட்டு, நிலம் தொடர்ந்து மிராசுதார் கையில் இருக்கிறது. இந்த சட்டம் வந்தபிறகும் கூட எச். டி. மாளவியா போன்ற காங்கிரஸ்காரர்கள் நெல் களஞ்சியம் என்று சொல்லப் படும் தஞ்சை ஜில்லாவிலே சித்தமல்லியிலே 300 விவசாயிகள் நிலத்தி லிருந்து வெளியேற்றப்பட்டு வாணடையார் அந்த நிலங்களைச் சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார் என்று தமிழ் நாட்டு காங்கிரஸ் பத்திரிகையிலே எழுதியிருக்கிறார். இந்த நிலைமையைப் பார்க்கும் பொழுது சர்க்கார் சட்டத்திலே இருக்கிற சிக்கல்களை வைத்துக்கொண்டு சட்டத்தையே மிராசுதார்கள் ஒரு முடமாக்குகிறார்கள் என்று ஒப்புக்கொள்ள வேண்டிய நிலைமையிலதான் நாம் இருக்கிறோம்.

11-22 a.m. அடுத்தபடியாக, ஒரு வேலிக்குட்பட்ட நிலக்காரர்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. தஞ்சா வூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் வந்த பிறகு, இந்த விதி விலக்கால் பல குத்தகைதார்களும் வாரம்தார்களும் வெளியேற்றப்படுகிறார்கள் என் பதை தொடர்ந்து எடுத்துக்கூறி வந்திருக்கிறோம். இந்த முறையை சர்க் கார் கையாளக்கூடாது, இந்த விதி விலக்கை சர்க்கார் வாபஸ் வாங்க வேண்டும் என்பதை உணர்ந்து இதை வாபஸ் வாங்கவேண்டும் என்று கூறி வந்திருக்கிறேன்.

16th August 1956] [Sri S. Vadivelu]

அடுத்தபடியாக, தஞ்சாவூரில் பல இடங்களில் போலீஸ்காரர்களை ஆதர வாக வைத்துக்கொண்டே குத்தகைதாரர்களையும், வாரம்தார்களையும் மிரா சுதார்கள் வெளியேற்றி வருகிறார்கள். சென்ற வருஷம் நாகப்பட்டினம் தாலூகாவில் ஒரு கிராமத்தில் சில நரிசு நிலங்களின் சாகுபடி விஷயமாக தகராறு வந்தது. சாகுபடியாளர்களே சாகுபடி செய்யவேண்டுமென்று சமரஸக் கோர்ட்டிலிருந்து தீர்ப்புக் கொடுக்கப்பட்டது. அதற்கு மேல் அப்பீல் செய்ததில் மேல் கோர்ட்டில் மிராசுதார்களே சாகுபடி செய்ய வேண்டும் என்று தீர்ப்புக் கொடுக்கப்பட்டது. ஆகவே குத்தகைதாரர் களும் வாரம்தார்களும் சாகுபடி செய்வதை எப்படி எப்படி தடுக்க முடியுமோ அப்படியெல்லாம் தடுத்துவருகிறார்கள்.

நிலச்சீர்திருத்தம் செய்யப்படும் என்று பல வருஷங்களாகச் சொல்லப் பட்டு பல கமிட்டிகளுக்குப் பொது மக்களின் பணம் செலவழிக்கப்படுகிறது. சுப்பிரமணியம் கமிட்டி, தமிழ்நாடு காங்கிரஸ் நிலச் சீர்திருத்தக் கமிட்டி என்று பல கமிட்டிகளுக்கு லட்சக்கணக்கான ரூபாய்கள் பொது மக்கள் பணத்திலிருந்து செலவழிக்கப்படுகின்றன. அந்தக் கமிட்டிகள் கொடுத்த சிபாரிசுகளோ திருத்தங்களோ அங்கீகரிக்கப்படவில்லை.

திட்டக் கமிஷன் சிபாரிசு செய்திருக்கும் 75 சதவிகித வாரமோ அல்லது அகில இந்திய நிலச்சீர்திருத்தக் கமிட்டி சிபாரிசு செய்திருக்கும் 1/6 பங்கோ சட்டமாக்கப்படாதா என்று ஏழை விவசாயிகள் பார்த்துக்கொண் டிருக்கும்போது சர்க்கார் இரண்டு ஆண்டுகளாக காலம் கடத்திவருகிறது. பொறுக்குக் கமிட்டிக்கு மசோதாவை அனுப்பி பரிசீலனை செய்யவேண்டும் என்பது வேதோ தட்டிக் கழிக்கும் மனப்பான்மையோடு செய்யப்படும் காரிய மாகும். எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் கொடுத்த திருத்தம் ஏற் றுக்கொள்ளப்படவேண்டும்; அந்தத் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் தான் நியாயமான முறையில் சட்டம் அமையும்.

தற்போது உழைப்பவனுக்கும் உழைப்பவனின் ரத்தத்தை உறிஞ்சுப வனுக்கும் போராட்டம் நடக்கிறது. இந்தப் போராட்டத்தில் தாங்கள் எந்தப் பக்கத்தில் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டவேண்டும். சர்க்கார் கஷ்டப்பட்டு உழைக்கும் விவசாயிகளின் பக்கத்தில் இருக்கிறதா அல்லது நிலப்பிரபுக்களாகிய பூதங்களின் பக்கத்தில் இருக்கிறதா என்பதை எடுத்துக் காண்பிக்கவேண்டும். ஆங்காங்கு நிலப்பிரபுக்கள் மகாநாடுகளைக்கூட்டி, "நாங்கள் சர்க்கார் கொண்டுவரும் நிலச்சீர்திருத்த மசோதாவை எதிர்க் கிறோம். வரி கொடா இயக்கம் நடத்துவோம்" என்று பேசி சர்க்காரை மிரட்டுகிறார்கள். ஆனால், லட்சக்கணக்கான ஏழை விவசாயிகள் மகாநாடு கூட்டி தீர்மானம் நிறைவேற்றினால் அது கவனிக்கப்படுவதில்லை. தஞ்சா வூர் ஜில்லா பூராவும் லட்சக்கணக்கான ஏழை விவசாயிகள் மகாநாடு கூட்டி சர்க்கார் கொண்டுவந்துள்ள நிலச்சீர்திருத்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று தீர்மானித்தால் அது கவனிக்கப்படுவதில்லை. அதற்குத் தகுந்தாற்போல் மிராசுதார்களுக்குத் தாளம் போடும் பத்திரிகைகளும், மிராசுதார்களின் மகாநாடுகள் நடந்தால், அப்போது, "ஸ்ரீ நாராயண சாமி மூப்பனார் தலைமையில் ஸ்ரீ சிவசாமி அய்யர் பேசினார்" என்று பத்திரிகைகள் பிரசுரிக்கின்றன. இம்மாதிரியாக ஏழை விவசாயிகளுக்கு பட்டை பட்டையாக நாமம் போடக்கூடிய நிலைமை இருந்துவருகிறது. இப் படிப்பட்ட நிலைமையில், ஏழை சாகுபடியாளர்களை பாதுகாக்க வேண்டுமென் றால், ஒரு வேலிக்கு உட்பட்ட நிலங்களுக்கு விதி விலக்கு அளிப்பதை நிறுத்திவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த கனம் தலைவர் அவர்களுக்கு என்னுடைய வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகி றேன்.

*** Sri V. K. PALANISAMY GOUNDER** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா கொண்டு வந்திருப்பது பொம்பவும் பொருத்த மானது. ஒரு வருஷத்துக்கு குத்தகைதார்களை வெளியேற்றக்கூடாது என்ற சட்டம் சென்ற வருஷம் நிறைவேறிவிட்டது. மீதமுள்ள நிலச் சீர்திருத்தச் சட்டம் வரும் வரையிலும் குத்தகைதார்களை வெளி

[Sri V. K. Palanisamy Gounder] [16th August 1956

யேற்றக்கூடாது என்று திருத்தச் சட்டம் வரவேண்டியது மிகவும் அவசியம். இன்னும் இரண்டு வருஷங்களுக்கு இந்தத் திருத்தச் சட்டம் அமுலில் இருக்கும். இரண்டு வருஷங்களுக்கு மாத்திரம் அமுலில் இருக்கும் என்று சொல்ல முடியாது. இது சாசுவதமாக இருக்கப்போகிற சட்டம்தான் என்று கொள்ளவேண்டும். இந்த திருத்த மசோதாவுக்கு இப்போது சர்க்காரால் கொண்டுவரப்பட்டிருக்கும் திருத்தம் ரொம்பவும் அவசியமானது என்று நான் நினைக்கிறேன். குத்தகைதாரர்களாக இருந்தாலும், அல்லது பூமியின் சொந்தக்காரர்களாக இருந்தாலும் ஏழைகளாக இருப்பவர்களைக் காப்பாற்றவேண்டியது ரொம்பவும் அவசியம். உண்மையிலேயே ஏழைகளாக இருப்பவர்களே பூமியின் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள் என்பதால் கவனிக்கக்கூடாது என்று நினைப்பது சரியல்ல.

ஐந்து எக்கர்களுக்குட்பட்ட உள்ள பூமிகளை குத்தகைக்குக் கொடுத்த பிறகும் சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமானால் அதில் பாதியை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கொண்டுவந்திருக்கும் திருத்தம் அவசியம் வேண்டியதுதான். ஐந்து எக்கர்களுக்குக் குறைவாக உடைய நிலச் சொந்தக்காரர்கள் ஏழைகளாகத்தான் இருக்கிறார்கள். அவர்களை விட பணக்காரர்களாக இருக்கின்ற குத்தகைதாரர்களும் உண்டு. ஆகையால் இந்தத் திருத்தத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு முன்பு கூட்டுக் கமிட்டி போட்டு இதைப் பரிசீலிக்க சர்க்கார் ஒப்புக்கொண்டிருப்பது ரொம்பவும் பாராட்டத்தக்கது. இந்தத் திருத்தம் அவசியம் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

11-28 a.m. * SRI M. NARAYANA KURUP: Mr. Speaker, Sir, I am not surprised at the eleventh-hour amendment tabled by the Hon. the Leader of the House which goes fundamentally against the principle embodied in the original Bill. I sensed some such things when four leading vested landed interests from the Congress Benches tabled an amendment of a similar nature. It has rightly been commented upon that the pace and manner of agrarian legislation in the various States have been consistent with the influence which the landed interests wield in the Congress Organization of the State. We know Bombay is an industrial State where the landlords do not have so much influence. Therefore we find there the fair rent is fixed at one-sixth of the gross produce. In this State, from the speeches we have already had we could have had more or less a clear idea of the influence which the landed interests wield in the Congress set-up of this State and the pressure exercised by them on the Ministry. When the Tenants Protection Bill was under discussion, we pleaded that a comprehensive agrarian reform legislation should be brought forward. But the Minister evaded that issue and said that that Bill was only a temporary measure and that they should think in detail about the reform. If a comprehensive agrarian legislation with provisions for further safeguards had been brought forward, we could consider it. The time chosen for introducing this amending Bill has some meaning. It means that a comprehensive agrarian reform with a ceiling on holdings will come, if at all it comes, at a far-off time. We know not only from Congressmen but even from others that Consistent and persistent propaganda had been carried on to belittle the provisions of this Tenants Protection Bill and to belittle agrarian reforms. Of course, they have powerful vested interests. The Press and the platform had been briefed to conduct this propaganda.

16th August 1956] [Sri M. Narayana Kurup]

The Minister said in very mild terms that he wanted to give protection to small ryots. Does this amendment confine itself to small ryots? He said that as between a small ryot and an equally poor tenant, he chose the owner of the property. As for me, I would prefer the tenant to the owner.

In considering agrarian reform, we must have certain fundamental principles. To-day we find a millionaire earning crores of rupees and paying income-tax or a civil servant having a monthly income of Rs. 3,000 or Rs. 4,000 wants to be landowner. A Government servant, a big businessman, a lawyer, a doctor—everybody wants to pursue his own avocation, amass wealth, and be also a landowner. We know that land is limited. There are many people who cannot do anything; they have been placed by our Government in such an unenviable position that there are no avenues open to them to till the land. When the available land is limited, who has got a better claim for the land? The Minister said that he favoured the owner. I say we must prefer the tiller, because land is intended for tilling, and not a landowner who has invested money on land. We might make it clear that land is not a bank for the investment of money which businessmen and others amass by fleecing the people, but that it is intended for tilling.

An argument was put forward by one of the speakers that the main objective of land reform was increase in production. Those who are for equitable distribution of land have been dubbed as doctrinnaires and idealists. This specious slogan of increased production is trotted out to dispossess the tenant! No doubt we want increased production. In this connection I wish to state that the Union Minister for Agriculture, the Hon. Sri A. P. Jain, has refuted the allegation that agrarian reforms or imposition of a ceiling on land holdings will in any way affect production. Production may be important, but more important is equitable distribution of land. What does it matter if we double our national income and the whole of it goes to a fraction, say, one or two per cent of the population? That is what has actually happened in the course of the First Five-Year Plan. Therefore this question deserves comprehensive consideration. I would like to make my position quite clear. I would say that a person who has other sources of income over a prescribed maximum should not be allowed to have even an inch of land. Simply because a person is a landowner, he should not be allowed to resume his land from the tenant. We must take into consideration the status and the living conditions of the landowner, the tenant and the other people. It is only in that way we can arrive at a fair conclusion as to who is entitled to possess land.

We know that the concept of ownership of property has changed. It has been acknowledged that it is a social concept. Because to-day one happens to be legally entitled to a piece of land or other property, we cannot allow him to deal as he likes with that property, if his manner of dealing with it may result not in social good but in social

[Sri M. Narayana Kurup] [16th August 1956

evil. Simply saying that he is the owner and that therefore he must be allowed to resume his land is quite inconsistent with the socialistic pattern and the Welfare State idea. Anyway, the Hon. Minister has said that the Government are willing to consider in the Select Committee how the poor tenants could be favoured. I say not only to the Government, but also to the Opposition which speaks in this matter for the workmen and peasantry. This is a challenge which, I hope, they will meet.

* SRI T. ANANTA PAI : Mr. Speaker, Sir, The hon. Member Mr. Narayana Kurup who preceded me tried to make out the point that his party, the P.S.P., alone represented the peasants and the workers. I may say that landlords, to whichever party they may belong, are the same, and there are not landlords lacking in the party to which the hon. Member belongs, at least in South Kanara. To-day it is natural that all the landlords of all the parties should conspire together to put off this legislation as far as possible. I know, and I can prove to his satisfaction, that there are many landlords belonging to his party who have sold off their lands in recent months or who want to postpone this issue so that they may get as high a value as possible for their land. It is easy to agitate for tenancy reforms after their lands have been sold away. I do fundamentally agree with many of the points that he raised. To-day if at all our State has lagged behind, I must confess it is in the matter of giving protection and security of tenure to the tenant and in ensuring to him a fair share in the produce of his work. From that point of view, if this temporary protection Bill is going to be replaced by a comprehensive Bill as a result of the labours of the Select Committee to which I would very much like the Government to refer this Bill, I welcome it. But if it is to water down even the privileges that have been extended to the tenants, I do not think I can agree to the reference to a Select Committee, particularly because the Bill, on the suggestion of the Members from South Kanara, is going to be extended to the South Kanara district. I do not want to create the impression that we, the Members hailing from South Kanara, have been responsible for supporting a Bill which will confer on the tenants of that district much less privileges than those they would be entitled to in the Karnataka State under the Mysore Tenancy Act. If this Bill is going to confer lesser privileges, I would rather prefer that it is not extended to South Kanara, because to-morrow we, the Members hailing from South Kanara, should not be accused by the Opposition parties that because the Bill conferred greater privileges on the landlords we supported it. We want protection against eviction being conferred on the tenants.

To some extent, this Amending Bill has got serious implications. Who is going to pay for the improvements by the tenants? It has not been provided that, where improvements have been effected by the tenants, sufficient compensation would be paid to them in case of eviction.

16th August 1956] [Sri T. Ananta Pai]

Where a landlord takes possession of his land saying that he requires it for his personal cultivation and lets it to another tenant, will the original tenant be put back in possession of the land? This is another question that will have to be answered.

Under the Malabar Tenancy Act, tenants who have been in possession of the land for a period of six years and more cannot be evicted at all. In the Mysore Tenancy Act, a similar protection for a period of twelve years has been given to the tenants. I do not understand why we should agree to the principle of eviction of any and every tenant, even though the landlord, who wants to resume it for personal cultivation, may be a poor landlord if the tenant has been on the land for a good number of years. From that point of view, if we are going to give this privilege I would request the Government to consider giving protection to the tenant for a period longer than two years. Rather than being left with a chance of eviction some time afterwards, it is but fair that he must be ensured sufficient tenure of occupation. No doubt the Legislature considers a protection Bill like this with the best of intentions. But it is quite easy to go round the provisions of the Act. In my own district it has been brought to my notice that some landlords do not care to give receipts for the payment they receive from their tenants. Of course the rents could be deposited in a court of law. But it is not easy. There are persons who would conspire together to put out tenants. I would very much wish that the elementary right of not being evicted is continued to be given to the tenants once we have accepted the principle that the man who tills the soil is entitled to the protection of the society. 11-40 a.m.

There are very many instances wherein the tenant has put forth his effort to increase the fertility of the land. By means of the provision that landlords owning less than five acres could resume their lands for personal cultivation, it may happen that a landlord may want a particular land himself for personal cultivation where such improvements have been made thus evicting the tenant. It is quite possible that no compensation may be awarded to the tenant for the efforts he had put in to increase the fertility of the land, unless we specifically provide in the Bill that no tenant would be evicted without sufficient compensation for any reason other than non-payment of rent and even in the latter case compensation should be paid. Otherwise in the name of producing a Tenants' Protection Bill we may be unwillingly producing a Landlords Protection Bill, thus flouting the intentions of the Legislature. I would very much wish that all these things are carefully considered in the Select Committee so that we might decide how well the differences between the landlords and the tenants could be settled amicably and in the best interest of the society thus fulfil the hopes which we have held out before the public.

SRI M. PALANIYANDI : சனம் சபாநாயகர் அவர்களே, நமது அரசாங்கம் 1952-ல் நில வெளியேற்றத் தடுப்புச் சட்டத்தைக் கொண்டு வந்த பிறகு, பலமித நிலச் சட்டங்களைக் கொண்டுவரவேண்டுமென்று

[Sri M. Palaniyandi] [16th August 1956

எல்லா அங்கத்தினர்களும் இந்த சபையில் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். முதலாவதாக தஞ்சாவூர் பண்ணையாள் சட்டத்தை சர்க்கார் கொண்டு வந்ததிலிருந்து, அதன் பிறகு Tenancy Act-உம், அதற்குப் பிறகு நியாய வாரச் சட்டமும் கொண்டுவருவார்கள் என்று எல்லா விவசாயிகளும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் காலத்தில், இப்போது சர்க்கார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தில் ஆயுளை விஸ்தரிப்பதற்கு தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். சென்ற ஓராண்டு காலமாக பல விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். ஆனால் எத்தனை வழக்குகள் பரிசீலனை செய்யப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால் பரிசீலனை செய்யப்பட்டவை மிகவும் குறைவாக இருக்கின்றன. திருச்சி ஜில்லாவில் ஒரு கோர்ட்டிலாவது வழக்குகள் இன்னும் பரிசீலனை செய்யப்படவேயில்லை. பெரிய நிலச்சுவான்தார்களும் சிறிய நிலச்சுவான்தார்களும் வெளியில் சம்பாதித்தும் செய்துகொண்டு, கிராமங்களிலும் தங்களுக்கு நிலம் இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலிருந்தவர்கள் இப்போது சாகுபடியாளர்களை வெளியேற்றிவிட்டு தாங்களே விவசாயம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். காரணம், விவசாயிகளுக்கு குறைந்த பட்ச சம்பளம் விதம் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. புள்ளி விவரங்கள் சரியாகக் கிடைக்காததால் குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப்படவில்லை. இந்த நிலைமையில் சாதாரணமாக கிராமங்களில் 4 எக்கர், 5 எக்கர் நிலம் உடைய நிலச் சொந்தக்காரர்கள் தாங்களே உழுது வருகிறார்கள்; பாலாக குத்தகைக்கு விடுவதில்லை; கூலியாளையோ பண்ணையாளையோ வைத்துக்கொண்டு தாங்களே உழுகிறார்கள். இது விஷயமாக ஸ்ரீ கருத்திருமன் சொன்ன வாதம் சரியல்ல. எனம் நிதி அமைச்சர் அவர்கள் அதை ஒத்துக்கொள்ளமாட்டார்கள் என்று நம்புகிறேன். எனம் நிதி அமைச்சர் அவர்கள் ஐந்தாண்டுத் திட்டம் முதலியவற்றைப் பற்றி பேசுவதைப் பார்க்கும்போது ஸ்ரீ கருத்திருமன் சொல்வதை நிச்சயமாக ஒப்புக்கொள்ள முடியாது. நிச்சயமாக நிலச்சுவான்தார்கள் தங்களுடைய நிலங்களை குத்தகைக்கு விடுவதில்லை.

நமது சர்க்கார், சரியான புள்ளி விவரங்கள் கிடைக்காததால் நியாய வார சட்டத்தைக் கொண்டுவர முடியவில்லை. நமது அரசாங்கம் நியாய வார மசோதா கொண்டுவந்தால் அதிலுள்ள விதிகளைத் தகர்த்தெறிவதற்காக எல்லா பத்திரிகைகளும் ஒரு முகமாக "இது நியாய வாரம் இல்லை, அநியாயமான வாரம்" என்று எழுதுகின்றன. நாங்கள் சொல்வதை யெல்லாம் கொஞ்சம் கூடக் கருதாது ஆளும் கட்சி சட்டத்தை நிறைவேற்றுகிறது. தஞ்சாவூர் பண்ணையாள் சட்டத்தில் நிறை கூடாதென்றுதான் நாங்கள் சொன்னோம். நியாய வார மசோதாவில் கூட விதி விலக்கு கூடாதென்றுதான் நாங்கள் சொன்னோம். எனென்றால், நடுத்தரமாக நிலச் சொந்தக்காரர்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்றால், சரியான புள்ளி விவரங்களைக்கொண்டு நிர்ணயிக்காவிட்டால் பிறகு பல கஷ்டங்கள் வரும். உதாரணமாக திருச்சி ஜில்லாவில் ஒரு கிராமத்தில் ஒரு எக்கர் நிலத்தை ஒரு சாகுபடியாளர் உழுதுகொண்டிருந்தார். அங்கேயிருந்து அவரை நீக்கிவிடவேண்டுமென்று கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. பிறகு அவரே அங்கே இருக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. இம்மாதிரி பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. ஆகவே இந்த மசோதாவை சீக்கிரமாகப் பரிசீலனை செய்து, விதி விலக்குக் கொடுத்தால் விவசாயிகளுக்கு உண்மையாக நன்மை பயக்குமா பயக்காதா, விவசாயிகளுக்குப் பாதுகாப்பு இருக்குமா என்பதை பரிசீலனை செய்து சட்டமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

11.47 a.m.

*SRI R. S. ARUMUGAM: கனம் சபாநாயகர் அவர்களே, விவசாயிகள் பாதுகாப்புச் சட்டம் கடந்த வருடம் செய்யப்பட்டு, அந்த சட்டத்தில் இருந்து வருகிற ஒரு சில குறைகளை கவனித்து, அவைகளை நீக்க வேண்டுமென்று கருத்துடன் தற்சமயம் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த திருத்த மசோதா நம்முன் விவாதத்திற்கு வந்திருக்கக் கூடிய சந்தர்ப்பத்தில், விவசாயிகளுக்கு இருக்கக் கூடிய கஷ்டங்களையும் விவசாயி கோர்ட்டுகளில் வழக்குகள் தாக்கல் செய்ய வேண்டுமானால், அவனுக்கு எவ்வளவு

16th August 1956] [Sri R. S. Arumugam]

கஷ்டங்கள் இருக்கின்றன, எவ்வளவு ரூபாய் செலவாகிறது, இதர குறைபாடுகள் என்னவெல்லாம் இருக்கிறது, என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லலாமென்று எண்ணினேன். ஆனால் அதை, Clause by clause ஆக விவாதிக்கும்போது சொல்லிக் கொள்ளலாம் என்று கருதி, இப்போது புதிதாக ஐந்து எக்கர் வரை சொந்த சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று புதிதாக கொண்டுவரப்பட்டிருக்கும் திருத்த பிரேரணையைக் குறித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

முதலாவதாக இந்தத் திருத்தத்தால் எவ்வளவு பேர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை முன்னிட்டுப்பார்க்கவேண்டிய கடமை நம்மைச் சார்ந்திருக்கிறது. இன்றைக்கு கிராமங்களை எடுத்துக்கொண்டால், ஐந்து எக்கர் நில முள்ளவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்ற விஷயத்தை நமது சர்க்காருக்கும், நிதி அமைச்சருக்கும் தெரியாத தல்ல. இந்த ஐந்து எக்கர்களையும் சொந்த சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளலாம் என்ற விதி விலக்கு அளிக்கப்பட்டால், திருநெல்வேலி ஜில்லாவை பொருத்த வரையில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் நிலத்தை விட்டு வெளியேற்றப்படுவார்கள். அவர்களுக்கு என்ன நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன். இதற்கு முன்னதாகவே பெரிய மிராசுதார்கள் ஏராளமான நிலங்களை சொந்த சாகுபடிக்கு எடுத்து ஆயிரக்கணக்கான விவசாயிகளை நில வெளியேற்றம் செய்திருக்கிறார்கள். ஏற்கனவே அம்மாதிரி ஐந்து எக்கருக்குமேல் சொந்த சாகுபடிக்கு நிலங்களை எடுத்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிலத்தை மீண்டும் கொடுப்பது பற்றி இந்த இடத்தில் ஒன்றும் சொல்லாமல், ஐந்து எக்கர் வரை சொந்த சாகுபடிக்கு சிறிய மிராசுதார்களும் புதிதாக எடுத்துக் கொள்ளலாம் என்ற விதிவிலக்கு மட்டும் கொடுப்போமேயானால், பெரும் பாதகம் ஏற்படும் என்று எடுத்துக் கூற விரும்புகிறேன். இதனால் எந்த விவசாயிக்கு நாம் நன்மை செய்ய வேண்டுமென்று எண்ணுகிறோமோ, அந்த விவசாயி யாதொரு பலனையும் அடைய முடியாமல், அனுபவிக்க முடியாமல் போய்விடும். அதோடு கூட, இன்றைக்கு இருக்கக்கூடிய நிலச்சுவான்தார்கள் ஏன் விவசாயிகளை நிலத்தைவிட்டு வெளியேற்றுகிறார்கள் என்றால், பிற்காலத்தில் நிலச் சீர்திருத்தச் சட்டம் வரப்போகிறது, அதன் மூலம் ஒரு வேளை உழுவர்களுக்குதான் நிலம் சொந்தம் என்று ஆனாலும் ஆகிவிடும், ஆகவே இதற்கிடையில் விவசாயிகளிடத்தில் இருக்கப்பட்ட நிலத்தை எடுத்து அனுபவிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தினாலே தவிர, அதிக வருமானம் வரும் என்ற எண்ணத்தினால் அல்ல என்ற விஷயம் இந்த சபையில் உள்ள அங்கத்தினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் தெரியாததல்ல. இதையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது மாத்திரமல்ல. ஐந்து எக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கிற நிலச்சுவான்தாரை விட, அதிலே ஒரு எக்கர் நிலத்தை சாகுபடி செய்கிற விவசாயி எவ்வளவு வருமைப்பட்டவன், ஏழ்மையானவன், அவனை வெளியேற்றுவது நல்லதா, அப்படி வெளியேற்றினால் அவனுக்கு என்ன நிவாரணமிருக்கிறது, என்பதையும் நாம் நிச்சயமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஐந்து எக்கர் வரை சொந்த சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளலாம் என்ற விதிவிலக்கு அளித்து விட்டு, வாரத்தில் 100-க்கு 60 அல்ல, 100-க்கு 75 விவசாயிகளுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்று சட்டம் போடப்பட்டாலும் கூட, அந்த சட்டத்தால் ஏற்படும் பலனை விவசாயி அனுபவிக்க முடியப் போவதில்லை. எனென்றால், அதற்கு முன்னதாகவே, இந்த விதி விலக்கை வைத்துக்கொண்டு, விவசாயிகளை நிலத்தைவிட்டு வெளியேற்றி விடுவார்கள். ஆகவே அந்தச் சட்டம் பயன்படாது போய்விடும் என்பதை, விவசாயிகளின் நன்மையை சிந்தித்து செய்கிற நமது அமைச்சர் அவர்களுக்கும், சபையில் உள்ள அங்கத்தினர்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எனவே, இந்த திருத்தப் பிரேரணையை இந்த சந்தர்ப்பத்தில் கொண்டுவருவது விவசாயிகளுக்கு மிகவும் பாதகமானது என்பதை அனுபவரீதியாக தெரிவித்துக்கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

11-50 a.m.

*SRI P. VENKATESHA SHOLAGAR: கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற சட்டசபைக் கூட்டத்தில் கனம் நிதியமைச்சர் அவர்கள்,

[Sri P. Venkatesha Sholagar] [16th August 1956

100-க்கு 40 என்ற சட்டம் இயற்றிவிட்டதால் மட்டும் விவசாயிகள் பலன் அடைந்து விட முடியாது. அவர்களுக்கு போதுமான நிலம் சாகுபடிக்கு கிடைக்க எற்பாடு செய்தால்தான் பலன் ஏற்படும் என்பதை ஒப்புக்கொண்டார். ஆனால் இன்று நடைமுறையில் விவசாயிகள் நிலத்தை விட்டு வெளியேற்றப்படுவதையும், நிலத்தை இழக்க நேரிடுவதையும் காண்கிறோம். விவசாயிகள் பாதுகாப்புச் சட்டம் போடப்பட்டிருக்கிறது. ஆனால் இரண்டொரு தாலூக்காக்களுக்குமேல், அதனால் பலன் பெற முடிய வில்லை. அந்த அளவிற்கு சட்டம் அமுல் நடத்தப்படாமல் போயிருக்கிறது. விவசாயிகள் விழிப்புடன் இருந்தால்தான் சரியாக லாபமடைய முடியும் என்று உண்மை நிலை அறிந்து கூறியது மிகவும் வரவேற்கத் தக்கதே. அந்த அளவுக்கு அதைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். விவசாயிகள் விழிப்புற்று, சங்கம் வைத்து, கோர்ட்டுக்குப் போய், சட்டத்தில் உள்ள உரிமைகளை பெற முயற்சிக்கிறார்களோ, அவர்களை முதலில் நிலத்தைவிட்டு வெளியேற்ற, எந்தெந்த விதமான சட்ட நுணுக்கங்களை நுழைப்பது, எவ்வெப்படி வாதங்கள் செய்ய வேண்டுமோ, அவ்வள வையும் எற்பாடுசெய்து வெளியேற்றுகிறார்கள். அந்த மாதிரி வெளி யேற்றப்பட்ட பிறகு, மற்றவர்கள் இதை பார்த்து பயமேற்பட்டு மனுப் போட்டு உரிமைகளைப் பெற முன்வர முடியாத நிலைமை ஏற்படுகிறது. தஞ்சை ஜில்லா பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் போட்டபிறகு, எவ்வளவு விவசாயிகள் நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு சர்க்காரே ஒரு புள்ளி விவரம் எடுத்துப் பார்த்தால், அந்த சட்டத்தின் மூலம் அவர்களுக்கு பாதுகாப்பு ஏற்படுவதற்கு பதிலாக, விவசாய இயக்கங்கள் இல்லாத இடங்களில் விவசாயிகள் நாற்றுக் கணக்கான பேர்கள் நிலத்தைவிட்டு அப்புறப் படுத்தப்பட்டு இன்றைய உழுவதற்கு நிலமில்லாது திண்டாடுகிறார்கள் என்பது நன்கு புலப்படும். குறிப்பாக 1952-ம் வருஷம் நிலம் சாகுபடிக்கு வைத்திருந்த விவசாயிகளுக்குத்தான் நிலம் உண்டு என்று இன்றைய தினம் வியாக்கியானம் செய்யப்படுகிறது. அதே சட்டத்தில், மிராசுதாரர்கள் குத்தகைச் சீட்டு எழுதி அனுப்பாவிட் டால் அபராதம் போடப்படும் என்று கூறியிருக்கிறது. ஆனால் குத்தகை சீட்டு எழுதிக் கொடுக்காத ஒரு மிராசுதாருக்காவது அபராதம் போடப்பட காணோம். குத்தகைச் சீட்டு எழுதி அனுப்பாததோடு மட்டுமில்லாமல், மிகத் தாராளமாக விவசாயிகளை நிலத்தைவிட்டு வெளியேற்றுகிறார்கள்.

அதே சமயத்தில் அந்தப் பக்கத்திலிருந்து மெம்பர்கள் நிறைய நிலம் வைத்துக்கொண்டு சாகுபடி செய்கிறவர்கள் அதிக சௌகரியம் அடைந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து நிலத்தையெடுத்து மற்ற வர்களுக்கு சாகுபடி செய்ய பகிர்ந்து கொடுப்பது பற்றி ஆட்சேபிக்கவில்லை நாங்கள். தாராளமாக இன்னும் பல குடியானவர்களை நிலமுடையவர் களாக்கி, சாகுபடி செய்யச் சொல்வதை நாங்கள் கட்டுப்படுத்த தயாரா யில்லை. எவ்வளவு தூரம் ஒருவன் சாகுபடிக்கு வைத்திருந்தால் போதுமோ, அந்த அளவுக்கு கட்டுப்படுத்தி விட்டு, பாக்கி நிலத்தை மற்றவர் களுக்கு கொடுப்பதுபற்றி நாங்கள் தடுக்கவில்லை. ஆனால் அதே சமயத்தில் நானூறு மா, ஐந்து மா, சாகுபடிக்கு வைத்துக்கொண்டிருப்பவனை இன்றைய தினம் ஒரு வேலிக்கு உட்பட்டவன் என்ற காரணத்திற்காக அவனுடைய உரிமையை பரித்துவிட்டால், அவன் கதி என்னவாகும். அவன் எங்கே போவான். அவன் ஒரு ஜோடி உழவு மாட்டை வைத்துக் கொண்டிருப்பான், அதோடு அவர் வாழ்வே போய்விடும், ஒரு வேலிக்கு உட்பட்ட நிலமுடையவர்கள் ஹைக்கோர்ட்டு ஜட்ஜாக இருந்தாலும், விவ சாயியிடமிருந்து நிலத்தை எடுத்துக் கொள்ளலாம், அவர்கள் சட்டத்திற்கு உட்படாதவர்கள் என்று சொன்னால், விவசாயியின் குடி என்னவாகும். இந்த செய்கையானது கூட்டை கோலால் உடைப்பது மாதிரியாகும்.

அடுத்தபடியாக, ஐந்து ஏக்கர் வரையில் மிராசுதாரர்கள் சொந்த சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னால், விவசாயி முழுப் பாக இருந்தால் அவனிடமிருந்து நிலத்தை பறிக்காமல் இருப்பார்களா? அந்த [illegible] விட்டு போய்விடும் என்ற நிலைமைதான் ஏற்படும். [illegible]

16th August 1956] [Sri P. Venkatesha Sholagar]

இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தத் திருத்த மசோதா, சரியான முறையில் விவசாயிகளுக்குப் பயனளிக்க வேண்டுமானால், ஐந்து ஏக்கர் சொந்த சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளலாம் என்ற திருத்தத்தை எடுத்து விட்டு, விவசாயிகள் நிலத்தைவிட்டு வெளியேற்றப்படாமல் இருக்க எற்பாடு செய்யவேண்டும்.

இறுதியாக, கனம் கருத்திருமன் அவர்கள் விவசாயி குடும்பத்தில் ஐந்து பேர் இருந்தால், ஐந்து பேருக்கும் ஐந்து மரக்கால் நெல் கிடைக்கிறது. ஆகவே அவர்களுக்கு வருமானம் அதிகம் என்ற முறையில் பேசினார். அதே சமயத்தில், முதலாளிகளே எடுத்துக்கொண்டால், ஒரு குடும்பத்தில் அண்ணனுக்கு ஒரு மில், தம்பிக்கு ஒரு மில், ஆளுக்கு 100 வேலி என்று கணக்கில்லாமல் வருமானம் வரக்கூடிய சொத்துக்கள் இருக்கும். இதையெல்லாம் சிந்திக்காமல், விவசாயி வாழ்கிறானு, வீழ் கிறானு என்ற பிரச்னையையே தெரிந்துகொள்ளாமல் மேலேழுந்த வாரி யாக விவசாயிக்கு அதிக வருமானம் வருகிறது என்று பேசியிருக்கிறார் என்பதைக் கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

Sri K. R. NALLASIVAM: கனம் சபா நாயகர் அவர்களே ! இந்த திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிற காங்கிரஸ் சர்க்கார் கடந்த 3 ஆண்டு காலமாக நிலச் சீர்திருத்தம் கொண்டு வருவதாக அறிவித்துக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய அறிவிப்பு க்கும் நடைமுறைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு ஓட்டு மொத்தமான நிலச் சீர்திருத்தம் கொண்டு வந்தால் அல்லது இந்த மாதிரி துண்டு துக்காணியான சட்டங்களினால், ஒரு நன்மையும் ஏற்படப்போவது கிடையாது. இதனால் நிலச் சொந்தக்காரர்கள் இந்தச் சட்டத்தினின்று தப்பித்துக்கொண்டு வருகின்றார்கள். மிகவும் நெருக்கடியான இந்த நிலைமையில் இப்போது இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருகிறார்கள். ஒரு வருஷத்து சாகு படியாளருக்கு பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. அதிலும் ஓட்டை போடு வதற்கு சர்க்கார் முயற்சித்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய முயற்சி யானது அதில் சலுகை காட்டுவது 5 எக்கர் வைத்திருக்கின்ற சிறு நிலச் சுவான்தாருக்கு விலக்கு அளிக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. என்னைப் பொறுத்த அளவில் நான் சொல்கிறேன், விதவைகள், அங்கஹீனர்கள், அநாதைகள், பராரிகளாய் இருந்தால் அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும். அதைப் பற்றி எந்த வீதமான ஆட்சேபணையும் கிடையாது ; 5 எக்கருக்கு கீழே வைத்திருப்பவர்களுக்கும் விதிவிலக்கு கொடுக்கவேண்டு மென்று ஆசைப்படுகிறேன். சாகுபடியாளர் சட்டம் கொண்டுவருவதாக இருக்கிறதே அது சத்து அற்றதாகப் போய்விடும். எனென்றால் இப்போது 2 வருஷமாக நிலச்சீர்திருத்தம், வருகிறது வருகிறது என்று சர்க்கார் சொல்லிக் கொண்டிருக்கிறதால் நிலச்சுவான்தார்கள் அதை மனதில் நன்றாகப் பதியவைத்துக்கொண்டு, பெருவாரியான நிலங்களை எல்லாம், எந்தெந்த அடிப்படையில் துண்டு செய்யலாம் என்று சிந்தித்து மகன், மருமகன், பேரப்பிள்ளை இவர்கள்பேரில் பட்டா எழுதி வைத்து துண்டு செய்து விட்டார்கள். இன்றைக்கு யார் 5 எக்கர் வைத்துக்கொண்டிருக்கி றார்கள் என்றால் விவசாயி அல்லாதவர்கள், வக்கீல்கள், டாக்டர்கள் தங்கள் முன்னோர்கள் சம்பாதித்துவைத்தவர்களோடு உடல் சம்பந்தம் இருப் பதைக் காட்டி தாங்கள்தான் நேரடியாக அதற்குப் பாத்தியமாக வேண்டும் என்பதற்கு அனுகூலமாக நில பாத்தியத்திற்காக நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு விதிவிலக்கு கொடுத்துவிட்டால் நிச்சயமாக அந்தச் சட்டத்தால் பிரயோசனமில்லாது போய்விடும். நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி பேசும் சர்க்கார், இதைப் பின்னால் செய்ய வேண்டும் என்பதை எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன். ஆகவே இந்தத் திருத்தம் நிச்சயமாக விவசாய வர்க்கத்துக்கு பாதகமானது என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். 11-56 a.m.

11-59 a.m. **SRI M. KALYANASUNDARAM** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்கிற திருத்தத்தை நான் ஆமோதித்துப் பேசுகிறேன். இந்த மசோதாவை சர்க்கார் முதலில் கொண்டுவந்ததாக நான் படித்துப் பார்த்தவுடனே கொஞ்சம் சந்தோஷப்பட்டேன். இன்றைக்கு சபைக்கு வருகிறபோது சந்தோஷத்துடனேயே வந்தேன், நிதி அமைச்சரை பாராட்டி, இவ்வளவு நல்ல திருத்தத்தைக் கொண்டுவந்ததற்காகப் பாராட்டி, நானும் நல்ல யோசனையை சொல்லிவிட்டு இன்றைக்கு இந்த சட்டத்தை நிறைவேற்றுகிறோம் என்கிற சந்தோஷத்தோடு வந்தேன். இப்போது வந்திருக்கக்கூடிய திருத்தத்தைப் பார்க்கிறபோது, எனக்கு இருக்கிற சந்தோஷம் பூராவும் போய் விட்டது. இதற்குக் காரணம் என்ன? ஏதோ இப்படிப் பேசினால்தான் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்குமாகப் பேசுவதாக அர்த்தம் என்று நினைத்து பேசக்கூடிய பைத்தியக்காரன் நான் அல்ல. அரசியல் வாதி என்பதனால், அரசியல் கொள்கை காரணமாக இதைக் கண்டித்தாக வேண்டும் என்ற ஆசையில் நான் இல்லை. ஒரு பிரச்னையில் சிக்கல் இருக்குமானால், சிக்கல் என்ன? அதைத் தீர்க்கவேண்டும் என்பதிலே சர்க்கார் கட்சிக்கும் சர்க்கார் கட்சித் தலைவருக்கும் எவ்வளவு அக்கரை உண்டோ அவ்வளவு அக்கரை எங்களுக்கும் உண்டு என்பதை அவருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் இப்போது இந்தத் திருத்தத்தில், அவர்கள் சொல்லியுள்ள நோக்கம் என்ன? பல சிக்கல்கள் ஏற்பட்டதில் சில ஏழை விவசாயிகளின் நிலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதிலே மாறுபட்ட கருத்து இருக்கமுடியாது. அதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். சற்று நிதி அமைச்சர் பொறுமையாய் இருந்திருந்தால் மும்முரமாக இல்லாமல் இருந்தால், இவ்வளவு நெருக்கடியும் கஷ்டமும் இருக்காது. அந்தக் கருத்து அடிப்படையில்தான் இருக்கிறது கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையும், அறிக்கைகளும். அந்த அறிக்கைகளை படித்துப் பார்த்தால் இந்த நிலச் சீர்த்திருத்தத்தில் சிறு விவசாயிகளின் நலன் களைப் பாதுகாக்கவேண்டும் என்கிற நோக்கத்தோடுதான் எங்களுடைய யோசனை இருக்கிறது என்பதை, அதைப் படித்துப் பார்த்திருந்தால், தெரிந்துக்கொள்ளுவார்கள். இப்பொழுது கொடுத்திருக்கும் திருத்தம் பல விவகாரங்களை ஏற்படுத்திவிட்டது. நிலச்சீர்திருத்தத்தில் மூன்று அம்சங்களை ஒன்றாக சேர்த்திருக்கவேண்டும். (1) நியாய வாரா நிர்ணயிப்பு, (2) நில வெளியேற்றத் தடுப்பு, (3) கடைசியாக, கிராம பகுதியில் தனியாக இருக்கக்கூடிய நிலங்களை ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்து உதவுவது. இந்த எல்லா அம்சங்களையும் ஒன்றாக சேர்த்து, நிலச் சீர்த்திருத்தம் கொண்டுவந்திருப்பார்களானால், அவைகளுக்கு உப்படியான யோசனைகளை சொல்ல, நாம் நிர்ணயித்து இருக்கமுடியும். ஆனால் ஒவ்வொரு அம்சமாகக் கொண்டுவருவதனால்தான் அதில் சிக்கல்கள் அதிகம் ஆகிறது என்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். அதனால்தான் இதைச் செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்பது என்னுடைய யோசனை.

அடுத்ததாக, இந்தத் திருத்தத்தில் பல, அசல் சட்டத்தில் இருப்பதை விட, கொஞ்சம் நல்ல அம்சங்களும் இருக்கின்றன, அதிலே, இப்பொழுது வந்திருக்கக்கூடிய இரண்டாவது திருத்தம், அந்த நல்ல அம்சத்தில் சிலதை எடுத்துவிடும்படியான தன்மையைக் குறிக்கிறது என்பதையும் பரிசீலித்தோம், செலக்ட் கமிட்டுக்கு வருகிறதினால், இதை விவரமாகப் பரிசீலனை செய்யவேண்டும். ஆகையால், நான் விவரத்துக்குப் போகாவிட்டாலும் கூட, சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன், இந்தச் சட்டம் ஒரு வருஷகாலமாக அமுலில் இருந்திருக்கிறது, பல ஜில்லாக்களில், இதை நடை முறையில் கொண்டுவருவதில், நிர்வாக அதிகாரிகள் எப்படி நடந்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை பார்க்கும்பொழுது, ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு திணுசாக நடந்து வருகிறார்கள். ஒரே ஜில்லாவில் Revenue Divisional Officer ஒரு மாதிரியாக நடந்துக் கொள்ளுகிறார். இன்னொரு Revenue Divisional Officer இன்னொரு மாதிரியாக நடந்துக் கொள்ளுகிறார் இதற்கு என்ன காரணம் என்பதை சர்க்கார் ஆலோசனை பண்ணி, இவர்களுக்கு விளக்கமாக உத்தரவு கொடுக்க

வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். எதிர் கட்சித் தலைவர், ஸ்ரீராமமூர்த்தி, சர்க்காரும், போலீஸ் அதிகாரிகளும் விவசாயிகளிடம் நடந்துக்கொள்ளும் விதத்தை பற்றி சொல்லிவிட்டார். நான் அதைப்பற்றி பேசவில்லை Revenue Divisional Officer நடந்துகொள்ளும்படியான முறையைப்பற்றி, உதாரணம் சொல்லுகிறேன். திருநெல்வேலி ஜில்லாவிலிருந்த, நிலையை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். நிலத்திலிருந்து வெளியேற்றப் பட்ட ஒரு குடியானவர் மனுச் செய்ததற்கு சேர்மாதேவி Revenue Divisional Officer போட்டிருக்கக்கூடிய உத்தரவை, நம்முடைய நிதி அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"According to section 3 (1) of the Madras Cultivating Tenants Protection Act, no cultivating tenant shall be evicted from his holding during the continuance of the Act. If he is disturbed of his possession, he can make a complaint to the Police or to a Court of competent jurisdiction for prohibition."

ஒரு ரூபாய் stamp ஒட்டி பத்து ரூபாய் சிலவு செய்து சேர்மாதேவிக்குப் போய் petition போட்டு வந்த விவசாயிகளுக்கு, அந்தச் சட்டத்தில் இருக்கக்கூடிய அதிகாரத்தை உபயோகித்து, petition-ஐ திருப்பி அனுப்பினால், அந்த விவசாயி கதி என்ன ஆகிறது என்பதை ஆராய்விரும்புகிறேன். அவர்களுக்கு Competent Court இதற்குப் பரிகாரம் தேடக்கூடிய அதிகாரம் வாய்ந்த Competent Court Revenue Divisional Officerதான். அந்த வகையில்தான் விவசாயி அவரிடம் மனு கொடுத்திருக்கிறான். இவ்வளவும் செய்த பிறகு, அவர் petition-ஐ திருப்பி அனுப்பினால், அந்த விவசாயியின் கதி என்ன ஆகிறது என்பதை பார்க்க வேண்டும். இன்னொரு உதாரணத்தைக்கொண்டு வருகிறேன். Tuticorin Revenue Divisional Officer இன்னொரு உத்தரவு போட்டிருக்கிறார். இதே மாதிரி இருக்கக்கூடிய மனுவில்.

"Returned to the petitioner for presentation in person. The complaint should be in the form prescribed and necessary process fee should also be affixed.

என்று அதிலே எழுதியிருக்கிறார். இந்த மாதிரி எந்த உத்தரவை வைத்துக்கொண்டு, அவருக்கு உத்தரவு போட்டார் என்று தெரியவில்லை. நேரடியாகப் போகாமல் ஒரு ரூபாய் stamp ஒட்டி, மனு registered post-ல் அனுப்பட்டிருக்கிறது. நேரில் கொண்டு வந்து சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு மட்டும் அல்லாமல், இதற்கு process fees வேறு கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். Perscribed Form-ல் கொடுக்க வேண்டும் என்கிறார். என்ன Prescribed Form? என் அந்த மாதிரி உத்தரவு போட்டார் என்பதை விசாரிக்க வேண்டும். சட்டத்தில், மனு போடுவதில் சர்க்கார் எந்த விதமான Form மும், prescribe பண்ணவில்லை. சாதாரண பேப்பரில் தான் எழுதிக்கொடுக்கிறது வழக்கம். மற்ற ஜில்லாக்களிலும் அப்படித்தான் மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கிறது. இப்போது இந்த மாதிரி உத்தரவைப் பார்ப்போமானால், அதிகாரிகள், இதில் சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய பலனும், விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடாது என்ற நோக்கத்தோடுதான் செய்கிறார்கள் என்பதற்காக, இதைக் கூற வேண்டியிருக்கிறது. இதை நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் நோக்கத்தைப் பற்றி சர்க்கார் அதிகாரிகள் நன்றாகப் புரிந்து கொள்ளாத நிலைமையில் தான், இப்படிச் செய்தார்கள் என்று சொல்கிறேனே தவிர, அதிகாரிகளை அவமானப்படுத்துவதற்காக நான் சொல்லவில்லை. அவர்களைக் குறைக் கூற நான் விரும்பவில்லை. சர்க்கார் திட்டமாக ஒரே விதமாக இந்தச் சட்டத்தை அமுலாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி சர்க்கார் Revenue Divisional Officer-க்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும் ஜில்லா கலெக்டருக்கும், உத்தரவிடுவார்களானால் அதிகாரிகள் தைரியமாக,

[Sri M. Kalyanasundaram] [16th August 1956

இந்தப் பிரச்னைகளில் நடந்து கொள்வதற்கு ஹேதுவாகும். சில இடங்களில், விவசாயிகளுக்குச் சாதகமாக நடந்து விட்டார்கள் என்கிற சந்தேகம் ஏற்பட்டால், அதிகாரிகள் அங்கிருந்து வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டு விடுகிறார்கள். தொந்திரவும் அவர்களுக்கு ஏற்படும் என்று நினைக்கிறேன். இப்படியிருக்கும் நிலையில், எப்படி அதிகாரிகள் விவசாயிகளுக்குச் சாதகமாக, தங்களுடைய அதிகாரத்தைப் பிரயோகப்படுத்த முடியும் என்பதை சிந்தித்துப் பார்த்து, நான் எடுத்துச் காட்டிய இந்தக் குறைகள் நீங்கும்படியான முறையில், சர்க்கார் உத்தரவு இருக்க வேண்டும். இதற்காகச் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியமில்லை. சட்டத்துக்கு உட்பட்டே, சர்க்கார் உத்தரவு அனுப்ப முடியும் என்பதையும் அவர் கவனிக்க வேண்டுமென்று, நான் கேட்டுக்கொண்டு, மற்ற விஷயங்களைச் செலக்ட் கமிட்டி பரிசீலனை செய்து, மசோதாவாக அது சபையின் முன்பு வரக்கூடிய சமயத்தில், அதை எடுத்துக்கொள்ளலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். வாரம் என்றால் என்னவென்பதைப் பற்றியே சில ஜில்லா அதிகாரிகளுக்கு சந்தேகம் இருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பயிர் துரையைப் பற்றி எதிர்க் கட்சித்தலைவர் ஸ்ரீ பி. ராமமூர்த்தி அவர்கள் எடுத்துரைத்தார். வாரம் அடிப்படையில் குத்தகை இருக்குமானால் அந்தக் குத்தகை சாகுபடியாளர் சட்டத்தின்படி குத்தகையாளர் அல்ல என்றும், அந்தச் சட்டத்தின்படி பாதுகாப்பு இல்லை என்றும் தூத்துக்குடி ரெவினியூ டிவிஷனல் ஆபீசர் உத்தரவு போட்டிருக்கிறார். ஒவ்வொரு அதிகாரியும் தங்கள் தங்கள் இஷ்டம்போல் விபரீதமாக அர்த்தம் பண்ணிக்கொண்டு உத்தரவு போடவேண்டிய அவசியம் என்னவென்பதை நிதி மந்திரி அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும். சர்க்காருடைய நோக்கத்தை அதிகாரிகளுக்கு விளக்க வேண்டும். சர்க்காருடைய நோக்கத்தை அதிகாரிகள் திறமையாக நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்ய வேண்டும். சர்க்காருடைய அரசியல் கட்சியை பலப்படுத்திக்கொள்வதற்காகவாவது அதிகாரிகள் சட்டத்தின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு, சரியானபடி அமுல் நடத்துவதற்கான முறையில் சர்க்கார் தகுந்த உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கின்றேன்.

12-07 p.m. * THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker, I was listening to the various speeches and watching the change of tenor of the speeches as the discussion proceeded, with a little bit of amusement.

SRI M. KALYANASUNDARAM : There was no change in the tenor of speeches.

* THE HON. SRI C. SUBRAMANIAM : I am not particularly accusing hon. Member Sri Kalyanasundaram. I am making a general statement. If the cap fits him, he may also take it. I was particularly amused at the speech of the hon. Member Sri Narayana Kurup, especially when he made a charge that we were yielding to the pressure of vested interests. Evidently, he had no time to go through the amending Bill in full. In addition to that, he was speaking with emotion not in favour of those who are in difficulties now. I should say he was speaking with political emotion. He was obsessed with emotion and because of that he seems to have given leave to reasoning also. He imagined that I was yielding to pressure of the professional classes, the mill-owners, industrialists and others who had lands and who would be taking away the lands for personal cultivation. The first pre-requisite for taking advantage of this amendment is that he should not be a person who is assessed to any sales-tax, profession tax

16th August 1956] [Sri C. Subramaniam]

or income-tax under the respective laws relating to the levy of such taxes during 1954–55 and 1955–56. If he had been assessed to any of the taxes, he will not be entitled to take advantage of this exemption clause. Therefore, if the hon. Member thinks that I have brought forward this amendment for the benefit of any of these persons, then I am sure he will be disillusioned if he goes through the amendment in full. If I am yielding to any pressure or I am placing any sympathy towards anybody, I am placing my sympathies in favour of the class that really deserves this exemption. I am not ashamed of it. On the other hand, I have full sympathy for the class of people for whom this exemption is intended. Who is entitled to this exemption? To what extent is he entitled? He is entitled to resume land to the extent of 5 acres of wet land and that too not in full from every tenant only to the extent of not more than half from each tenant. Even then, only if he is already in possession of less than 10 acres of land, he can resume land only to the extent of making up this ten acres. In that, he cannot take more than 5 acres. Even in taking 5 acres, it should not exceed ten acres in his possession either as owner or as tenant.

With all those restrictions, the amendment proposes to give the right to particular persons who have ostensibly no other avocation and who do not pay any sales tax or profession tax or income-tax to take back at least five acres of land for their own personal cultivation. But I was surprised to hear some criticism from a section of the House. I am particularly glad that the hon. Leader of the Opposition who started the debate in a way welcomed this amendment and wanted some more amendments to be moved. But the hon. Deputy Leader of the Opposition said that he was surprised to see such a reactionary amendment and whatever good points that were found in the amending Bill were taken away by the amendment. I respectfully submit that except for political propoganda, I am unable to understand that part of his speech saying that this amendment has taken away all the merits of the amending Bill. 12-10 p.m.

SRI M. KALYANASUNDARAM : What I said was that my happiness had been reduced.

* THE HON. SRI C. SUBRAMANIAM : His happiness has been reduced because he seems to think that this is a reactionary proposal. With all respect, I am prepared to stand by this proposal anywhere before any forum. I have absolutely no doubt that anybody will be justified in making this proposal.

Sir, an hon. Member was good enough to put forward a proposal concerning both the landlord and the tenant and while doing so, he was prepared to say that he would prefer the tenant. But under what circumstances? Only when they are placed in the same situation. Even if the landlord has no other avocation and he is also in the streets, he will prefer the tenant and he will not allow him to take back half of his own land from the tenant!

I do not know under what philosophy he is making such a statement. After all, we are not interested in a particular section of the people. We are only interested in seeing that the tiller should be the owner and if the owner wishes to be the tiller of the land, why should his right to take back the land be taken away? If there is an owner who wants to become a tiller, I do not see why he should be discriminated against. We are prepared to agree that he should not have lands beyond a certain extent and that aspect of the matter is under consideration. That is why we are putting a ceiling that he should not be entitled to resume more than five acres of land for his own personal cultivation. Therefore, it is certainly out of political prejudice that things have been misrepresented in such a way as to show that the Praja Socialist Party is the only Party which cares for the tenants. (Interruption from Sri M. Narayana Kurup.) Yes, Sri Narayana Kuurp belonging to a certain Party thinks that he alone is the champion of the tenants. It is a misconceived championship, if I may say so, arising out of ignorance and in not knowing the conditions prevailing among the peasantry and among the agricultural classes. He may be good enough as a lawyer, but he is not good enough to speak about the agriculturists and tenants. That is the conclusion I have to draw from his speech. This is a problem which is bristling with difficulties and I have already referred to the difficulties involved in it.

Now, we are saying that for two years no tenant shall be evicted. Hon. Members are aware that there are tenants who have taken on lease thousands of acres of land and still they are tenants. So, what we are interested in seeing is that the lower strata in the society, the poorer sections in the society are put on a better ground and their rights protected. They may be tenants or they may be landowners. If they belong to the poorer section of the people and are in the streets without any avocation or profession, they should be encouraged to get back the land and become the tillers of the soil and not the exploiters of labour. I have absolutely no doubt that that should be the philosophy which should hold good in our land. It is only from that aspect this amendment has been proposed. I have already stated that it has been drafted in a hurry and if there are any defects in the drafting of the amendment, I am prepared to look into them. That is why even in the beginning I said that I am prepared to have it scrutinised by a Select Committee. But to attribute motives to the Congress or to say that I am yielding to the pressure of the vested interests, is certainly a flight of the imagination allowed to run riot. That is all I would say in respect of this matter. As I have already stated, I agree to the Bill being referred to the Select Committee.

The Select Committee may consist of the following Members :—

" 1 The Hon. Sri M. A. Manickavelu.
2 The Hon. Sri C. Subramaniam.
3 Sri K. Rajaram.

4 Sri V. K. Palaniswami Gounder.
5 ,, K. S. Ardhanareeswara Gounder.
6 ,, N. Rajagopal.
7 ,, T. P. Elumalai.
8 ,, T. Ananta Pai.
9 ,, R. S. Arumugam.
10 ,, C. Kandasamy.
11 ,, P. Ramamurthi.
12 ,, M. Palaniyandi.
13 ,, K. S. Lakshmipathi Naicker.
14 ,, S. Swayamprakasam.
15 ,, M. Narayana Kurup."

I am sure, Sri Narayana Kurup will bring to bear all his enlightenment and progressive ideas with regard to land legislation when we deal with this matter in the Select Committee and we will try to be benefited by them. I hope that when this Motion is adopted and the Bill comes before this House again, there will be much improvement in the sense that those who need protection will get real protection and those who do not deserve protection will not get it at all. Thank you, Sir.

* SRI M. NARAYANA KURUP : Sir, when the Hon. the Leader of the House abuses his opponents, and he has no other argument, the inference is obvious. He may defend his stand before the public and that is why he is in the Congress Party. I may also defend my stand before the public and that is why I am in the Praja Socialist Party.

MR. SPEAKER : The question is—

" That the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1956 (L.A. Bill No. 10 of 1956), be referred to a Select Committee consisting of the following Members :—

1 The Hon. Sri M. A. Manickavelu.
2 The Hon. Sri C. Subramaniam.
3 Sri K. Rajaram.
4 ,, V. K. Palaniswami Gounder.
5 ,, K. S. Ardhanareeswara Gounder.
6 ,, N. Rajagopal.
7 ,, T. P. Elumalai.
8 ,, T. Ananta Pai.
9 ,, R. S. Arumugam.
10 ,, C. Kandasamy.
11 ,, P. Ramamurthi.
12 ,, M. Palaniyandi.
13 ,, K. S. Lakshmipathi Naicker.

[Mr. Speaker] [16th August 1956

14 Sri S. Swayamprakasam.

15 ,, M. Narayana Kurup."

The Motion was put and carried.

MR. SPEAKER : Under Rule 98 (1) of the Assembly Rules I nominate Sri M. A. Manickavelu as Chairman of the Select Committee.

V.—GOVERNMENT MOTION.

MOTION UNDER RULE 21 (3) OF THE ASSEMBLY RULES re CHANGE IN THE ORDER OF BUSINESS.

* THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" That under Rule 21 (3) of the Madras Assembly Rules the order of business as set in the Agenda for 16th August 1956, be revised, and item Nos. 2 and 3 under Government Bills, viz., the Madras Land Revenue (Surcharge) Amendment Bill, 1956 and Madras Land Revenue (Additional Surcharge) Amendment Bill, 1956 be taken up before item No. 1, viz., the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1956."

MR. SPEAKER : The question is—

" That under Rule 21 (3) of the Madras Assembly Rules the order of business as set in the Agenda for 16th August 1956, be revised, and item Nos. 2 and 3 under Government Bills, viz., the Madras Land Revenue (Surcharge) Amendment Bill, 1956 and Madras Land Revenue (Additional Surcharge) Amendment Bill, 1956 be taken up before item No. 1, viz., the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1956."

The Motion was put and carried.

IV.—GOVERNMENT BILLS—*cont.*

(2) THE MADRAS LAND REVENUE (SURCHARGE) AMENDMENT BILL, 1956.

12-20 p.m. * THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker Sir, I beg to introduce the Madras Land Revenue (Surcharge) Amendment Bill[a] , 1956 and move—

" That the Bill be taken into consideration at once."

Under section 3 of the Madras Land Revenue (Surcharge) Act, 1954, every person paying a land revenue assessment of over Rs. 500 in a fasli will have to pay the Government in respect of any land held by him for that fasli surcharge at the rates mentioned in that section. As ground rent is Public revenue due on land, it comes under the definition of land revenue in Section 2 of the Act and therefore surcharge under the Act is leviable on ground-rents also.

[a] Published in the *Fort St. George Gazette*, dated 6th June 1956.

16th August 1956] [Sri C. Subramaniam]

It has been represented that as the rate of ground-rent is high in some cases especially in Madras the levy of surcharge on it will make the burden heavier. The Government therefore consider that ground-rent Rs. 10 per ground, i.e., Rs. 181–8–0 per acre, should not be taken into account for purpose of computing the surcharge. The Bill is to come into force from 1st July 1954, i.e., from the date on which the main Act came into force. It is expected to give a relief of about Rs. 50,000 per annum to assessees in Madras City.

MR. SPEAKER : Motion moved—

" That the Madras Land Revenue (Surcharge) Amendment Bill, 1956, be taken into consideration at once."

The motion is now before the House for discussion.

* SRI K. PARTHASARATHY : Mr. Speaker Sir, so far as relieving the hardships of persons paying ground-rent at a high rate is concerned, I hope, there will not be any controversy. But, I have a doubt whether the amendment proposed in the Bill will carry out the object of the Government because the amendment proposed will provide relief to those persons also who do not deserve protection. I will explain my point of view by means of an illustration. As it now stands if a person pays a land revenue of Rs. 200 and a ground-rent of Rs. 100, then that person will be assessed under the Land Revenue (Surcharge) Act, taking into account both the land revenue and the ground-rent paid by him, namely Rs. 300. According to the present amendment if the ground-rent is at the high rate he will not be liable to pay land revenue surcharge at all because for computing the surcharge the entire ground-rent is ignored and it will be below the minimum. But the intention of the Government, I presume, is that only the portion of land revenue as can be attributed to ground-rent should not be taken into account for computing the surcharge. I only wish that the object which the Government have in view is carried out properly that is, not levying surcharge only on the ground-rent at the increased rate.

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think I have anything to add to what I have already stated. The point raised by Mr. Parthasarathy will be considered.

MR. SPEAKER : The question is—

" That the Madras Land Revenue (Surcharge) Amendment Bill, 1956, be taken into consideration at once."

The Motion was put and carried, and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

[16th August 1956

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" That the Madras Land Revenue (Surcharge) Amendment Bill, 1956, be passed."

MR. SPEAKER : The question is—

" That the Madras Land Revenue (Surcharge) Amendment Bill, 1956, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(3) THE MADRAS LAND REVENUE (ADDITIONAL SURCHARGE) AMENDMENT BILL, 1956

* THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker Sir, I beg to introduce the Madras Land Revenue (Additional Surcharge) Amendment Bill[a], 1956 and move—

" That the Bill be taken into consideration at once."

Sir, in this measure, it is proposed to amend section 3 of the Madras Land Revenue (Additional Surcharge) Act, 1955. The principle applied in the case of amendment to Section 3 of the Madras Land Revenue (Surcharge) Act, 1954 is also applied here. The limit fixed is Rs. 10 per ground which works out to Rs. 181-8-0 per acre.

MR. SPEAKER : Motion moved—

" That the Madras Land Revenue (Additional Surcharge) Amendment Bill, 1956, be taken into consideration at once."

The motion is now before the House for discussion.

12-25 p.m.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, நிலவரி மீது ரூபாய்க்கு இரண்டணா அதிகப்படியாக சர்சார்ஜ் வசூல் செய்யும் அசல் சட்டம் சபை முன் வந்த காலத்திலேயே நாங்கள் அதை எதிர்த்திருக்கிறோம். அந்த சர்ச்சார்ஜிலிருந்து ஏதாவது விதி விலக்கு கொடுக்கிறதாயிருந்தால் அதை வரவேற்க முடியும். ஏழை விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுப்பதிலே தாங்கள்தான் ரொம்ப அக்கறை உடையவர்கள் என்று உணர்ச்சி வேகத்திலே சற்று முன்பு நிதி அமைச்சரவர்கள் பேசினார்கள். அந்த உணர்ச்சியை ஒரு எக்கர் இரண்டு எக்கர் நிலம் வைத்திருக்கிறவர்கள்பால் அவர் திருப்பவேண்டும். ஏனென்றால் ஐந்து ரூபாய் கிஸ்தி செலுத்துபவர்கள்கூட ரூபாய்க்கு இரண்டு அணா வீதம், பத்தணா அதிகப்படியாக சர்ச்சார்ஜ் செலுத்த வேண்டியிருக்கிறது. இவர்கள் விஷயத்திலாவது மந்திரி அவர்கள் புனராலோசனை செய்யவேண்டும். இந்த மசோதாவிலேயே இல்லாவிட்டாலும் பிறகாவது புனராலோசனை செய்யவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த வருஷத்திலிருந்து அதிகப்படியான சர்ச்சார்ஜ் விதிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு அதிகாரியும் தங்கள் தங்கள் இஷ்டம் போல் சட்டத்தை அர்த்தம் பண்ணிக்கொண்டு, தங்களையும், தொந்தரவு படுத்திக்கொள்கிறார்கள். விவசாயிகளுக்கும் தொந்தரவு கொடுக்கிறார்கள். தண்ணீர் தீர்வையின் மேல் பத்து ரூபாய் வரைக்கும் தான் சர்ச்சார்ஜ் விதிக்காலம் என்பது அசல் சட்டம். ஆனால், அதிகாரிகள் அதற்கு மேலும் ரூபாய்க்கு இரண்டணா வீதம் ரூ. 1-4-0 அடிஷனல் சர்சார்ஜ் வசூல்

[a] Published in the Fort St. George Gazette, dated 13th June 1956.

16th August 1956] [Sri M. Kalyanasundaram]

செய்யலாம் என்று அர்த்தம் பண்ணிக்கொண்டு விவசாயிகளை நிர்ப்பந்தப் படுத்துகிறார்கள். எங்கள் காரியாலயத்திற்கு வராளமான வருஷ ரிபோர்ட்டு களைப் பார்த்தால் இஷ்டப்படி அதிகாரிகள் அர்த்தம் பண்ணிக்கொண்டு 20 ரூபாய் தண்ணீர்த் தீர்வை இருந்தாலும், ரூ. 2-8-0 அடிஷனல் சர்ச்சார்ஜ் கொடுக்கவேண்டுமென்று உத்தரவு போடுகிறார்கள். சட்டப்படி இடம் இல்லையே என்று கேட்டால், " முதலில் கட்டி விடுங்கள், பிறகு வேண்டுமானால் அப்பீல் செய்துகொள்ளுங்கள் " என்று சொல்லப்படுவதாக ரிப்போர்ட்டுகள் வருகின்றன. எப்படியாவது முதலில் வசூல் செய்து விடுகிறார்கள். கட்டிய தொகையை அப்பீல் செய்து பெற வேண்டுமானால், அப்பில் மனுவுக்காக ஸ்டாம்ப் கட்டணத்தோடு போக்குவரத்து செலவும் ஆகிறது. இப்படியாக அப்பீல் செய்து கிடைக்கும் ஆதாயத்தைவிட ஐந்து மடங்கு பணத்தை ஏழை விவசாயிகள் செலவு செய்தால்தான் அப்பீலினால் ஏற்படக்கூடிய சகாயத்தைப் பெறமுடியும். விவசாயிகளுக்கு இம்மாதிரி கஷ்டங்கள் ஏற்பட்டிருப்பது பல அங்கத்தினர்களுக்குத் தெரிந்திருக்கும். கோயமுத்தூர், திருச்சி, சேலம் ஜில்லாக்களிலிருந்து எனக்குப் பல புகார்கள் வந்திருக்கின்றன. ஆகவே, ரெவினியூ இலாகா அதிகாரிகள் சரியானபடி சட்டத்தை அர்த்தம் பண்ணவேண்டுமென்று அரசாங்கம் ஜில்லா அதிகாரிகளுக்கு உத்தரவிடவேண்டும். ஆங்கிலமும் சரியாகப் புரிவது இல்லை, தமிழும் சரியாகப் புரிவதில்லை என்ற நிலைமை சர்க்கார் காரியாலயங்களில் வேலை செய்பவர்களிடையே இருப்பதால், சட்டத்தை தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு தமிழில் மொழி பெயர்த்தாவது அவர்களுக்கு அறிவுறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கலெக்டர் மகாநாட்டிலே யார், யாரை, எப்படி ஒடுக்கலாம் என்பதைப்பற்றி பேசுவதைவிட்டு இப்படிப்பட்ட உபயோகமான விஷயங்களைப் பேசக்கூடாதா ? சட்டங்களின் தன்மையை கலெக்டர்களும் கலெக்டர்களுக்குக்கீழ் இருக்கும் அதிகாரிகளும் சரியானபடி அர்த்தம் பண்ணிக்கொள்ளும்படி கலெக்டர்களுக்கு தெளிவு ஏற்படுத்தி அனுப்பக்கூடாதா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

சர்க்காருக்கு வரி செலுத்துகிற படித்த பணக்காரர்களுக்கே தங்களுடைய நிலத்தின் சர்வே நெம்பர், பட்டா நெம்பர் முதலியவைகள் தெரியாத போது, ஏழை விவசாயிகளுக்கு தாங்கள் எவ்வளவு வரி செலுத்துகிறோம் என்று கூடத் தெரியாது இல்லை. பசலியின் ஆரம்பத்திலேயே ஏழை எளிய விவசாயிகளிடத்திலிருந்து கிஸ்தி பணம் பூராவையும் கிராமதிகாரிகள் வசூலித்துவிட்டு, நான்கு, ஐந்து மாதங்களில் தங்கள் கையிலே பணத்தை வைத்துக்கொண்டு கையாளுகிறார்கள். டெம்பரரி அட்ஜஸ்ட்மெண்ட் செய்து கொள்வதற்கும் வசதியாக இருக்கிறது. வாங்கிய பணத்திற்கு முறையான ரசீது கொடுப்பதும் கிடையாது. எந்த ஜில்லாவிலும், எந்த கிராமத்திலும் கிஸ்தி செலுத்தியதற்கு முறையான ரசீது கொடுப்பதில்லை. விவசாயிகளிடத்திலிருந்து வாங்கப்படும் பணம் எந்த இனத்திற்காக வாங்கப்படுகிறது என்ற விஷயமும் ரசீதிலேயே குறிப்பிடப்படவேண்டும். அப்பொழுதுதான் நில வரி செலுத்தியதினால் ஏற்படக்கூடிய பலன் ஏற்படும். இல்லாவிட்டால் பலன் ஏற்படாது. சரியான ரசீது கொடுக்காமல் கிராமாதிகாரிகள் பணம் வாங்கிக்கொண்டதற்கான பல உதாரணங்களைக் கொடுக்க முடியும். இம்மாதிரி முட்டாள்தனமாக காரியங்களைப் பல கிராமாதிகாரிகள் செய்து விடுகிறார்கள். அவர்களைப் பற்றி சர்க்காருக்கு எழுதினால் வேலை போகக்கூடிய ஆபத்து இருக்கிறதே என்ற மனிதாபிமானத்தினால் அவர்களுடைய பெயர்களை நேரடியாக குறிப்பிட்டு எழுதாமல் விடுகிறேன் யொழிய வேறு ஒன்றும் இல்லை. அல்ப தொகைக்காகவும் அவர்கள் முட்டாள்தனமாக, தவறுதலாக காரியங்கள் செய்கிறார்கள். அதிகப்படியாக அடிஷனல் சர்ச்சார்ஜ் வசூலித்துவிடுகிறார்கள். கேட்டால், அடுத்த கிஸ்தியின் போது, அட்ஜஸ்ட் பண்ணிக்கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது. கட்டினவர் அடுத்த வருஷம் விழித்திருந்தால் பணம் கிடைக்கும், இல்லாவிட்டால் மணியக்காரரோடு பணம் போனதுதான். அச்சடித்தரசீது கொடுத்திருந்தாலாவது அதைக் குறிப்பிட்டு கேட்கலாம். அச்சடித்த ரசீது இல்லாமல் இருக்கும்போது மணியக்காரர்களின் நாணயத்தை நம்பித் தான் இருக்க வேண்டியிருக்கிறது. அச்சடித்த ரசீது கொடுக்காமல்,

[Sri M. Kalyanasundaram] [16th August 1956

மணியக்காரர்களைக்கொண்டு கிஸ்து வசூல் செய்யச் சொல்வது நாணயமற்ற வேலை என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். இதற்கு சர்க்கார்தான் பொறுப்பாளிகள். ஆகவே, அச்சடித்த ரசீது கொடுக்கும் முறையை " இன்ட்ரட்யூஸ் " பண்ணி, முறையாக கிஸ்தி வசூல் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அச்சடித்த ரசீது தயார் செய்துவிட்டாலும் எல்லா மணியக்காரர்களுக்கும் காலாகாலத்தில் கிடைக்குமா என்பது ஒரு பிரச்னை. ரெவினியூ இலாகாவிலே நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பாரங்களே சரிவர கிடைப்பதில்லை என்ற புகார் இருக்கிறது. நான்கணா கொடுத்தால் தான் பாரம் கிடைக்கிறது. சர்க்காருக்குப் பணம் செலுத்தவேண்டுமென்றால்கூட, அதற்காக நான்கணா கொடுத்தால்தான் சலான் கிடைக்கிறது. ஜில்லாக் காரியாலயங்களிலும், தாலூகா காரியாலயங்களிலும் எந்த அளவு ஸ்டேஷனரி சப்ளை செய்யப்படுகின்றன என்பது தெரிந்த விஷயம். அந்த இடங்களுக்குப் போகக்கூடிய ஜனங்கள், சலானுக்காகவும், பாரங்களுக்காகவும் கஷ்டப்படுவதைச் சொல்லத் தேவை இல்லை. சர்க்காருக்குத் தந்தி கொடுத்தாலும் பாரங்கள் கிடைக்கவில்லையே என்று ஜில்லாக்களிலுள்ள அதிகாரிகள் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். அங்குள்ள அதிகாரிகளைக் குறை சொல்வதில் பயன் இல்லை. பாரங்களின் விஷயமே இப்படியிருக்கும்போது அச்சடித்த ரசீதுகள் ஒவ்வொரு கிராமத்திற்கும் வந்து சேருவது என்றால், அதில் என்ன கஷ்டம் இருக்கிறதென்பதும் தெரிந்ததே. அச்சடித்த ரசீது கொடுப்பதை சர்க்கார் கவனிக்கவேண்டியது ஒரு புற மிருக்க, அதுவரையில், கிராமாதிகாரிகள் எழுத்து மூலமாக, கையெழுத்திட்டு வாங்கிய பணத்திற்கு ரசீது கொடுக்க உடனடியாக உத்தரவு போடவேண்டும். அந்த ரசீதில், பணம் வாங்கிக் கொண்டதற்கான காரணங்களும் குறிப்பிடப்படவேண்டும். இம்மாதிரி ரெவினியூ போர்டு மூலமாக சர்க்கார் உடனடியாக உத்தரவு பிறப்பிக்க வேண்டும். இது விஷயத்தில் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்தால் தான் சர்க்கார் என்ன விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்று திருத்தம் கொண்டுவருகிறார்களோ, அதன் பலன் ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தத் திருத்த மசோதாவை நிறைவேற்றுவதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்பதையும் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன்.

12 31 p.m. **Sri K. R. NALLASIVAM :** கனம் சபாநாயகர் அவர்களே, பத்து ரூபாய்க்கு மேல் போகாமல் இருக்கக்கூடிய தண்ணீர்த் தீர்வைக்குத்தான் நிலவரி சர்ச்சார்ஜ் வசூலிக்கவேண்டுமென்று இருக்கிறது. ஆனால், எனக்குத் தெரிந்த வரையில், பல இடங்களில் தண்ணீர் தீர்வை பத்து ரூபாய்க்குமேல் போனாலும், பூரா தண்ணீர்த் தீர்வைக்குமேதான் சர்ச்சார்ஜ் வசூலிக்கப்படுகிறது. தண்ணீர் தீர்வை பத்து ரூபாயாக இருந்தாலும் சரி, 20 ரூபாயாக இருந்தாலும் சரி, அடிஷனல் சர்ச்சார்ஜ் வாங்கிக்கொள்கிறார்கள். சர்க்கார்க்குப் பூராவாக விவரம் தேவையானால் கொடுக்கத்தயாராக இருக்கிறேன். அதிகாரிகள் வேண்டுமென்றேதான் செய்கிறார்களோ என்று நான் சந்தேகப்படுகிறேன். வித்தியாசப்பட்ட முறையிலே தண்ணீர்த் தீர்வை இருப்பதையெல்லாம் கணக்கிட்டுக் கொண்டிருக்க பிரியப்படாமல் அதிகாரிகள் 15 ரூபாய் என்றோ 20 ரூபாய் என்றோ மொத்தமாக கணக்குப் போட்டு தண்ணீர் தீர்வை பூராவுக்கும் ரூபாய்க்கு இரண்டணா வீதம் சர்ச்சார்ஜ் வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். கீழ் பவானி பாசனப் பிரதேசத்தில் இப்படி செய்து கொண்டிருக்கிறார்கள். பத்து ரூபாயாக இருந்தால் கவலை இல்லை. 11, 12, 13 ரூபாயாக இருந்தாலும் இருபது ரூபாய் என்று கணக்குப் போட்டு சர்ச்சார்ஜ் வாங்கிக்கொள்கிறார்கள். இம்மாதிரி வசூல் செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று சர்க்கார் அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டுமென்று வற்புறுத்துகின்றேன்.

தண்ணீர்த் தீர்வைக்கும் சேர்த்து அடிஷனல் சர்ச்சார்ஜ் வசூல் செய்திருந்தால், அப்பீல் செய்தால்தான் திருப்பிக்கொடுக்க முடியும் என்ற முறை

16th August 1956] [Sri K. R. Nallasivam]

இருக்கிறது. இதனால் ஒருவரும் அப்பீல் செய்துகொண்டிருக்க முடியாது. அங்கே போய்ப் பார்த்தால்தான் அப்பீல் பண்ணி பணத்தைத் திருப்பப் பெறுவதில் உள்ள கஷ்டங்கள் தெரியும். இங்கே உட்கார்ந்துகொண்டு, " அப்பீல் செய்து வாங்கிக்கொள்ளலாம் " என்று சுகமாகச் சொல்லிவிடலாம். ஒன்று அதிகமாக வசூல் செய்யாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அப்படி அதிகமாக வாங்கிக்கொண்டிருந்தால், விவசாயிகள் அப்பீல் செய்யாமலேயே அதிகப்படியான வசூல் செய்த பணத்தை திருப்பிக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நிதி மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

Sri S. RAMALINGAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சட்டம் சென்ற ஆண்டு சபை முன்பு வந்தபொழுது, இந்தப் புதிய வரி தேவையில்லை என்று சொன்னோம். சர்க்கார் தரப்பில் கிராமங்களிலே ரோடு வசதி மிகவும் மோசமாக இருப்பதாகவும் பஞ்சாயத்துக்கள் மூலமாக கிராமங்களுக்கு ரோடு வசதிகள் செய்து கொடுப்பதற்காக ரூபாய்க்கு 2 அணா சர்ச்சார்ஜ் விதிக்கப்படுவதாகவும் அப்பொழுது சொல்லப்பட்டது. இப்பொழுது இந்த வரி விதிக்கப்பட்டு ஒரு வருஷம் ஆனபோதிலும்கூட, நூற்றுக்கணக்கான கிராமங்களில் இன்னும் பஞ்சாயத்து போர்டுகள் அமைக்கப்படாமல் இருப்பதை சர்க்கார் கவனத்துக்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டால்தான் இந்த வரி பணத்திலிருந்து அவர்களுக்கு பணம் கொடுத்து கிராமங்களில் ரோடு முதலிய வசதிகளைச் செய்ய முடியும். சென்ற ஆண்டிலே கேரள விஸ்தரிப்புத் திட்டம் ஸ்தல அபிவிருத்தி திட்டம் இவைகளின் கீழ் கிராமங்களிலே கச்சா ரோடுகள் அதாவது மண் ரோடுகள் போட்டு வசதி செய்தார்கள். ஆனால் இந்த ஆண்டிலே அப்படி கச்சா ரோடுகள் போடக்கூடாது என்று விதிகள் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்கள் நேரிடையாக கவனம் செலுத்தி கிராமங்களிலே மண் ரோடுகள் போடுவதற்கும் மெயின் ரோடுகளோடு இணைப்பதற்கும் வேண்டிய வசதிகளை செய்யும்பொருட்டு பஞ்சாயத்து போர்டுகளை துரிதமாக அமைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கிராமத்திலே 1,000 பேர்கள் ஜனத்தொகை இருந்தால்தான் அந்த பஞ்சாயத்து போர்டு ஏற்படுத்தலாம் என்று விதி இருப்பதாகத் தெரிகிறது. பல கிராமங்களிலே 1,000 பேர்கள் ஜனத்தொகை இல்லாததால் அங்கு பஞ்சாயத்துக்கள் ஏற்படாமல் இருக்கின்றன. நான் இது விஷயமாக சர்க்காருக்கு என்ன யோசனை கூற விரும்புகிறேன் என்றால் இரண்டு கிராமங்களை ஒன்றுசேர்த்து 1,000 பேர்கள் ஜனத் தொகை இருந்தால் இரண்டு கிராமங்களுக்கும் சேர்த்து ஒரு பஞ்சாயத்து போர்டு அமைப்பதில் சட்டத்தில் ஒன்றும் இடையூறு இருக்க முடியாது. ஆகவே சர்க்கார் இதை உடனடியாக கவனித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நான் சொல்லியது போல் உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **The Hon. Sri C. SUBRAMANIAM :** Sir, very many useful suggestions with regard to the collection of land revenue have been put forward. Particularly, the hon. Member Sri M. Kalyanasundaram made mention about the illegal collections by some of the village officers and he said he was not passing on the information to the Government, because they were likely to be dismissed from service. May I tell him that it is false sympathy and if really he finds that the injustice has been done by anybody, he would not have that false sympathy and see that in the public interests and in the interests of the ryots for whom he speaks, necessary action is taken in respect of the offending village officials. As a matter of fact, it is this misplaced sympathy in respect of the offending officials which stands in the way of taking definite action by the Government not only in respect of the village officials but the other

[Sri C. Subramaniam] [16th August 1956

officials also and I hope Sri M. Kalyanasundaram will set an example in seeing that he acts without fear or favour and whoever does wrong must be exposed, without caring for the person concerned. I hope he will make up his mind hereafter and give up his attitude that even though a person is doing wrong, he will be screening him because he is likely to be dismissed if he is exposed.

SRI M. KALYANASUNDARAM: Sir, it seems that the Hon. the Leader of the House is trying to make a political capital out of what I have said or he wants to have some joke at my expense. I hate sins but not sinners. I want to correct them. But the policy of the Government gives an opportunity to commit sins and that is why I am attacking the Government. Locally I am doing my best to correct them.

* THE HON. SRI C. SUBRAMANIAM: Then, the hon. Member made a reference to the Collectors' Conference and suggested that these very useful things could be discussed in that Conference, instead of considering measures to put down some people. I do not know wherefrom he got this information about the Collectors' Conference. I may inform him that in the Collectors' Conference, what are discussed are matters relating to the Development Plans, the National Extension Service schemes, Local Development works, the Community Projects works and the Plan schemes and if only he comes to know about what are discussed there, I am sure he would disillusion himself about the ideas he is having about the Collectors' Conference. Apart from that, the hon. Member can send some useful suggestions for consideration at the next Conference.

SRI M. KALYANASUNDARAM: If I am informed about that, I will do so.

* THE HON. SRI C. SUBRAMANIAM: It is a periodical meeting and he need not be informed. If he sends his suggestions and if they are important enough, they will be included in the Agenda and will be discussed.

I do agree that there are certain difficulties in the collection of land revenue because it is an ancient system which is prevailing and in the present context the mutual trust and goodwill, which existed before, have gone. Therefore, some people are misusing the position. The entire matter is under the consideration of the Government and we hope to take decision soon so that these malpractices in the collection of land revenue, if any, are put down and eliminated. As far as the Bill itself is concerned, I think there is no opposition at all and therefore I hope it will be passed.

With regard to the suggestion that this money was not being utilized for the purpose of putting roads in the villages, evidently the hon. Member who spoke about it is not aware of the activities going on in the various villages.

16th August 1956] [Sri C. Subramaniam]

As a matter of fact, construction of roads, schools and provision of various other amenities which have been so far available in villages, are being done particularly under the local development schemes and this money also is being used for the purpose through the district boards and panchayats. Therefore I may assure the hon. Members that so far as this amount is concerned, not only this amount but whatever amount we are trying to collect as tax, we will utilize it to the best advantage of the people. 12-40 p.m.

MR. SPEAKER: The question is—

"That the Madras Land Revenue (Additional Surcharge) Amendment Bill, 1956, be taken into consideration at once."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM: I move—

"That the Madras Land Revenue (Additional Surcharge) Amendment Bill, 1956, be passed."

MR. SPEAKER: The question is—

'That the Madras Land Revenue (Additional Surcharge) Amendment Bill, 1956, be passed."

The motion was put and carried and the Bill was passed.

MR. SPEAKER: The next item is the Presidency Small Cause Courts (Madras Amendment) Bill, 1956. I think there are some amendments.

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir. But, we may adjourn now and take it up on Saturday.

MR. SPEAKER: I may inform the hon. Members that it is now agreed that the House shall now adjourn and meet again on Saturday, the 18th August 1956, between half-past eight and eleven of the clock in the morning and three to five in the afternoon.

The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

Notifications issued with the Government Orders mentioned below regarding amendments to the Madras Motor Vehicles Rules. [Laid on the table of the House under section 133 (3) *of the Motor Vehicles Act*, 1939]—

(45) *G.O. Ms. No.* 303, *Home, dated 28th January* 1946—*Exemption of licence fee for demobilized motor transport drivers.*

(46) *G.O. Ms. No.* 392, *Home, dated 5th February* 1946—*Cancellation of registration fee for Fire Service vehicles.*

[16th August 1956

(47) *G.O. Ms. No.* 400, *Home, dated 5th February* 1946—*Increase of the maximum overhaul.*

(48) *G.O. Ms No.* 91, *Home, dated 10th January* 1946—*Rules 408-U and 408-V, regarding Bench and Road tests for approval of models of producer gas plants.*

(49) *G.O. Ms. No.* 3994, *Home, dated 31st October* 1947—*Rules* 160-*A and* 290—*Empowering the Mica Inspectors and Assistant Mica Inspectors to check contents of goods vehicles which transport mica and for which royalty has not been paid.*

(50) *G.O. Ms. No.* 4672, *Home, dated 18th December* 1947—*Rule* 160-*D—Special condition of permit for goods vehicles by limiting number of trips per day.*

(51) *G.O. Ms. No.* 3625, *Home, dated 23rd September* 1947—*Rule* 266—*Passenger not to sit on left of driver in transport vehicles with left-hand steering control.*

(52) *G.O. Ms. No.* 4626, *Home, dated 16th December* 1947—*Rule* 328—*Increase in the overall width.*

(53) *G.O. Ms. No.* 370, *Home, dated 29th January* 1948—*Delegation of powers to D.Ms., etc., regarding extension of validity of temporary permits in emergencies.*

(54) *G.O. Ms. No.* 1471, *Home, dated 21st April* 1948—*Rule* 278—*Exhibition of destination boards in stage carriage.*

(55) *G.O. Ms. No.* 779, *Home, dated 24th February* 1949—*Reciprocity between the Madras Government and the Orissa State regarding certificate of fitness.*

(56) *G.O. Ms. No.* 2344, *Home, dated 8th June* 1949—*Delegation of powers to the Secretary, Central Road Traffic Board*

(57) *G.O. Ms. No.* 2633, *Home, dated 27th June* 1949—*Withdrawal of exemption of certain ex-servicemen from driving test and payment of fees for driving test and for the issue and renewal of driving licences.*

(58) *G.O. Ms. No.* 3377, *Home, dated 23rd August* 1949—*Fee for registration of transfer of ownership.*

(59) *G.O. Ms. No.* 3127, *Home, dated 2nd August* 1949—*Time for entry of registration mark on permits.*

(60) *G.O. Ms. No.* 700, *Home, dated 19th February* 1949—*Prohibition of painting or marking in certain manner of public service vehicles.*

(61) *G.O. Ms. No.* 2944, *Home, dated 18th July* 1949—*Rules* 49 *and* 68—*Exempting the Deputy High Commissioner for the United Kingdom in Madras and his official employees from payment of fee for issue and renewal of licence.*

(62) *G.O. Ms. No.* 3648, *Home, dated 9th September* 1949—*Rule* 129—*Quorum for Road Traffic Board meetings.*

(63) *G.O. Ms. No.* 2048, *Home, dated 23rd May* 1949—*Rule* 194—*Suspension of cancellation of permits.*

16th August 1956]

(64) *G.O. Ms. No.* 3319, *Home, dated 16th August* 1949—*Rules* 290 *and* 291—*Inspection of goods and public service vehicles.*

(65) *G.O. Ms. No.* 2538, *Home, dated 22nd June* 1949—*Statistics relating to transport services.*

(66) *G.O. Ms. No.* 2100, *Home, dated 8th May* 1950—*Application to the merged territories of Pudukkottai, Banganapalli and Sandur.*

(67) *G.O. Ms. No.* 5162, *Home, dated 4th December* 1950—*Exemptions from payment of fees for driving licences and conductor's certificates.*

(68) *G.O. Ms. No.* 4462, *Home, dated 13th October* 1950—*Interpretation of application of General Clauses Act,* 1897.

(69) *G.O. Ms. No.* 4221, *Home, dated 27th September* 1950—*Rules* 167, 168 *and* 456—*Revision of permit fees, refund of fees.*

(70) *G.O. Ms. No.* 161, *Home, dated 12th January* 1950—*Delegations to the Secretary regarding powers of Transport Authority to grant or refuse temporary permits.*

(71) *G.O. Ms. No.* 1964, *Home, dated 29th April* 1950—*Divisional Engineer concerned to attend as adviser to the Road Traffic Boards meeting in districts having more than one Divisional Engineer (Highways).*

(72) *G.O. Ms. No.* 4147, *Home, dated 21st September* 1950—*Rule* 163 (*b*)—*Extension of time for production of vehicles for permits of stage carriage.*

(73) *G.O. Ms. No.* 4146, *Home, dated 21st September* 1950—*Rule* 294-*A—Exemption from taking out a permit for the vehicles used for publicity work by the Madras Provincial Council of the British Empire Leprosy Relief Association.*

(74) *G.O. Ms. No.* 4957, *Home, dated 21st November* 1950—*Rules* 18, 147, 148 *and* 148-*B—Time-limit to be counted from the date of despatch of the orders in appeals and revision petitions.*

(75) *G.O. Ms. No.* 1654, *Home, dated 15th April* 1950—*Rule 64-A—Levy of fees, etc., under revision petitions.*

(76) *G.O. Ms. No.* 4461, *Home, dated 13th October* 1950—*Rule* 68—*Exemption from payment of registration of fees for the station wagon belonging to the Government Tuberculosis Institute, Madras.*

(77) *G.O. Ms. No.* 3340, *Home, dated 25th July* 1950—*Rules 69 and 80—Issue of duplicate registration certificates to replace certificates completely written up and soiled.*

(78) *G.O. Ms. No.* 3521, *Home, dated 7th August* 1950—*Rule 93—Exhibition of trade certificate.*

(79) *G.O. Ms. No.* 2960, *Home, dated 28th June* 1950—*Rules 119 and 148—Levy of fees for supply of copies of documents relating to appeals.*

[16th August 1956

(80) *G.O. Ms. No.* 2048, *Home, dated 4th May* 1950—*Rule* 123—*Term of office of non-official members of the Regional Transport Authorities.*

(81) *G.O. Ms. No.* 588, *Home, dated 13th February* 1950—*Rule* 126—*Conduct of meetings of the Regional Transport Authority.*

(82) *G.O. Ms. No.* 2781, *Home, dated 16th June* 1950—*Rule* 129—*Quorum for Road Traffic Board meetings.*

(83) *G.O. Ms. No.* 3590, *Home, dated 11th August* 1950—*Delegation to the Secretary, Regional Transport Authority, the power to suspend an endorsement.*

(84) *G.O. Ms. No.* 5114, *Home, dated 30th November* 1950—*Rule* 134-*E*—*Delegation of powers to the Chairman, Regional Transport Authority.*

(85) *G.O. Ms. No.* 5057, *Home, dated 27th November* 1950—*Rule* 136—*Form of submission of appeals against the orders of the Secretary, Regional Transport Authority.*

(86) *G.O. Ms. No.* 589, *Home, dated 13th February* 1950—*Rules* 136, 147 *and* 148—*Time-limit to be counted from the date of receipt of the order in appeals.*

(87) *G.O. Ms. No.* 956, *Home, dated 6th March* 1950—*Rule* 200—*Enhancement of fee for transfer of permit.*

(88) *G.O. Ms. No.* 2252, *Home, dated 15th May* 1950—*Time-limit for appeals and returns for representation in prescribed manner.*

